ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

ப்ரபந்நஜந கூடஸ்தரான நம்மாழ்வார்

திருவாய் மலர்ந்தருளிய

திருவாய்மொழி

மூன்றும்பத்து.

இதற்கு

* தெள்ளாரும் ஞானத்திருக்குருகைப்பிரான் பிள்ளான்

அருளிச்செய்த ஆறாயிரப்படியும்,

* அன்போடழகிய மணவாளச்சீயரருளிச் செய்த

பன்னீராயிரப்படி உரையும்

* தெள்ளியதா நம்பிள்ளை செப்புநெறிதன்னை

வள்ளல் வடக்குத்திருவீதிப் பிள்ளை அருளிச்செய்த

ஈடு ப்ரதி திருவாய்மொழியின்

ப்ரவேசங்களும்

ப்ரதி பாசுரங்களின் அவதாரிகைகளும்

ஸபாபண்டிதரான

ஸ்ரீமான், புதுப்பட்டு-திருவேங்கடாசார்யரால்

பரிசோதிக்கப்பட்டு

ஸ்ரீவைஷ்ணவ கிரந்த முத்ராபக சபையாரால்

சென்னை:

ஸ்ரீ நிகேதன முத்ராக்ஷர சாலையில்

அச்சிட்டு ப்ரசுரம் செய்யப்பட்டது.

குரோதன௵

1926.

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

திருவாய்மொழி.

மூன்றாம் பத்து.

முதல்திருவாய்மொழி—முடிச்சோதி ப்ரவேஶம்.

பன்னீராயிரப்படி.

மூன்றாம்பத்தில், கீழிரண்டுபத்தாலும் - ப்ராப்யமான ப்ரஹ்மஸ்வரூபத்தினுடைய ஶேஷித்வஸித்தமான ரக்ஷகத்வ போக்யத்வங்கள் சொல்லிற்றாய், அநந்தரம் மூன்றாம்பத்தாலும் நாலாம்பத்தாலும் - ப்ராப்தாவான ப்ரத்யகாத்மஸ்வரூபத்தினுடைய பகவதேகஶேஷத்வஸித்தமான ததேகாநுபவத்வமும் ததேகப்ரியத்வமும் சொல்லுகிறது. அதில் ததேகாநுபவத்வபரமான இம்மூன்றாம்பத்தில்-பகவச்சேஷித்வபாரம்யஸித்தமான ஆத்மஶேஷத்வத்தினுடையஸ்வாபாவிகத்வத்தையும், அதுக்கு விரோதியான தேஹஸம்பந்தாதி நிவர்த்தநீயமென்னுமிடத்தையும், நிவ்ருத்தவிரோதிகனுக்கு ஶேஷவ்ருத்திப்ரகாரம் ப்ரார்த்தநீயமென்னுமிடத்தையும், ஶேஷியினுடையஸர்வாத்மபாவப்ரயுக்தமானசேதநனுடைய அப்ருதக்ஸித்தப்ரகாரத்வம் ஶேஷத்வவேஷமென்னுமிடத்தையும், ஏவம்வித ஶேஷத்வரஸத்தால் வந்த ப்ரேமவிகாரத்தையும், ஶேஷத்வப்ரதிஸம்பந்தி அர்ச்சாவதாரபர்யந்தமென்னுமிடத்தையும், தச்சேஷத்வாபி வ்ருத்தி (ஷி) ரூபமான ததீயஶேஷத்வ காஷ்டையையும், ததீயபாரதந்த்ர்ய நிதாநமான ததநுபவாபி நிவேஶத்தையும், அநுபவவிஶேஷமான வாசிகாநுபவ வைலக்ஷண்யத்தையும், ஸர்வப்ரகாராநுபவ ஸித்தமான ஸமஸ்தவிரோதிநிவ்ருத்தியையும் அருளிச்செய்து, இச்சேதநனுடைய பகவதேகாநுபவத்வத்தை ப்ரதிபாதிக்கிறார்.

இதில், முதல் திருவாய்மொழியில் - ஶேஷத்வத்தினுடைய ஸ்வாபாவிகத்வத்துக்கு மூலமான ஶேஷியினுடைய ஸர்வப்ரகாரபாரம்யத்தை ப்ரதிபாதிப்பதாக, தெற்குத் திருமலையிலே கைங்கர்ய ப்ரதிஸம்பந்திதயா ஸந்நிஹிதரான அழகருடைய திவ்ய ஸௌந்தர்யத்தை அபரோக்ஷித்து ஆபரணவயவ ஶோபையினுடைய ஸுகடிதத்வத்தையும், உஜ்ஜ்வலமான ஸௌந்தர்யத்தினுடைய உபமாநராஹித்யத்தையும். ஸர்வப்ரகார ஔஜ்ஜ்வல்யத்தாலுண்டான ஸர்வேஶ்வரத்வத்தையும், அந்தப் பாரம்யத்தினுடைய போக்யதாதிஶயத்தையும், இந்த வைலக்ஷண்யத்தினுடைய வாசாமகோசர மாஹாத்ம்யத்தையும், ஸமஸ்த வேதங்களாலும் ஸாகல்யோக்தி பண்ணவொண்ணாமையையும், அதிஶயிதஜ்ஞாநரான ப்ரஹ்மருத்ராதி தேவதாவர்க்கமும் சொல்லநினைத்தாலும் அவ்வௌஜ்ஜ்வல்யத்துக்கு மாலிந்யாவஹமென்னுமிடத்தையும், அபூர்வனாய் அதிஶயிதஜ்ஞாநனாயிருப்பானொரு ப்ரஹ்மா தலைப்படிலும் அதேஜஸ்கரமென்

னுமிடத்தையும், ஆஸ்ரித வாத்ஸல்யாதி ஸமயத்துக்கு ஸங்கல்ப முகத்தாற் பண்ணும் ஸம்ஸ்ரிதரக்ஷண பாரம்யமும் திரஸ்காரகரமென்னுமிடத்தையும், ஏவம்விதமான பாரம்யத்தை அறிந்து ஈஸ்வராபிமானிகளும் ஆஸ்ரயிக்கை ஏற்றமல்லவென்னுமிடத்தையும் அருளிச்செய்து, பரமசேஷியான ஈஸ்வரன் ஸந்நிதியிலே தச்சேஷத்வத்தினுடைய ஸ்வாபாவிகத்வத்தை உபபாதித்தருளுகிறார்.

ஈடு; அவ;—* “பொருளென்றிவ்வுலகம் படைத்தவன் புகழ்மேல் மருளில் வண்குருகூர் வண்சடகோபன்” என்று அவன் கல்யாணகுணவிஷயமாக அஜ்ஞானமில்லையென்றார் கீழில் திருவாய்மொழியில்; அந்த குணாதிகவிஷயந்தன்னில் ஓரஜ்ஞானம் அநுவர்த்திக்கிறபடி சொல்லுகிறார் இதில். கீழ்ச்சொன்ன அஜ்ஞானத்துக்கு அடி கர்மமாயிருக்கும்; இங்குத்தை அஜ்ஞானத்துக்கு அடி விஷயவைலக்ஷண்யமாயிருக்கும். நித்யஸூரிகளுக்கும் உள்ளதொரு ஸம்ஶயமாயிற்று இது. ஸ்வரூபாநுபந்தியாயிருப்பதொரு ஸம்ஶயமாகையாலே, ஸ்வரூபமுள்ளதனையும் நிற்பதொன்றிறே இது. திருமலையை அநுபவித்துக்கொண்டு வாராநிற்கச்செய்தே, (க) “வடமாமலையுச்சியை” என்னுமாபோலே திருமலையில் ஏகதேசமென்னலாம்படியாய், கல்பகதரு பஹுஶாகமாகப் பணைத்துப்பூத்தாற்போலே நிற்கிற அழகருடைய ஸௌந்தர்யத்தை அநுபவித்தார்; வேதங்களோடு வைதிகபுருஷர்களோடு ப்ரஹ்மருத்ராதிகளோடு வாசியற ஸ்வயத்நத்தால் காணுமன்று காணவொண்ணாதபடியிருக்கிற இருப்பையும், தானேகொடுவந்து காட்டுமன்று ஜந்மவ்ருத்தாதிகளால் குறையநின்றார்க்குங் காணலாயிருக்கிற இருப்பையும் அநுஸந்தித்து விஸ்மிதராகிறார்.

ஈடு; அவ—முதற்பாட்டில், அழகருடைய திவ்யாவயவங்களுக்கும் திருவணி கலன்களுக்குமுண்டான ஸுகடிதத்வத்தைக் கண்டு விஸ்மிதராகிறார்.

முடிச்சோதியாயுனது முகச்சோதிமலர்ந்ததுவோ *
அடிச்சோதிநீநின்ற தாமரையாயலர்ந்ததுவோ *
படிச்சோதியாடையொடும் பல்கலனாய் * நின்பைம்பொன்
கடிச்சோதிகலந்ததுவோ திருமாலேகட்டுரையே. (க)

ப;—முதற்பாட்டில், ஸ்ரியப்:பதியான சேஷியினுடைய ஆபரணவயவஶோபைகளினுடைய ஸுகடிதத்வத்தாலே விவேகாயோக்யமாம்படி பிறந்த

(க) தி-மொ-௭-௧௦-௨.

ஸம்ஶயத்தைத்தீர வருளிச்செய்ய வேணுமென்று அவன்தன்னை அபேக்ஷிக்கிறார்.

உந்து—உன்னுடைய
முகம்—திருமுகத்தின்
சோதி—ஒளியானது
முடி—திருவபிஷேகத்தின்
சோதியாய்—ஒளியாய்
மலர்ந்ததுவோ—மேலேகிளம்பிற்றோ?
அடி—திருவடிகளின்
சோதி—ஒளி
நீ நின்ற—நீ நின்ற
தாமரையாய்—ஆஸநபத்மமாய்
அலர்ந்ததுவோ—கீழேபரம்பிற்றோ?
பை—பரந்த
பொன்—அழகையுடைய
நின்—உன்
கடி—கடியின்
சோதி—சோதியானது
படி—ஸ்வாபாவிகமான
சோதி—ஒளியையுடைய
ஆடையொடும்—திருப்பரிவட்டத்தோடே
பல்கலனாய்—பல திவ்யாபரணங்களுமாய்
கலந்ததுவோ—கீழும்மேலுங்கலந்ததோ?
திருமாலே—ஸ்ரிய:பதியாகையாலே
(க)“ஸுமே-ராவிஷ-ணாரியம்வாணீ-அர்த்தோவிஷ்ணுரியம்வாணீ”
என்கிறபடியேஸப்தார்த்தங்களிரண்டுக்கும் கடவனே!
கட்டுரை—இத்தை ஸம்ஶயமற அருளிச் செய்யவேணும்.

ஸம்ஶயம் இரண்டு கோடியிலுங் கிடக்கையாலே, முடிமுதலான ஆபரணாதி ஶோபை முகம்முதலான அவயவஶோபையாயிற்றோ? என்றுங் கொள்வது. படி-ஸ்வபாவம். கடி-அரைக்கட்டு. பை-விரிவு. (க)

ஆறு;—திருமலையை அநுபவித்துச் செல்லாநிற்கச் செய்தே, திருமலையிலே அழகரைக்கண்டு ப்ரீதயதிஶயத்தாலே அழகருடைய திருவணிகலன்களுக்கும் திவ்யாவயவங்களுக்கு முண்டான சேர்த்தியழகாலுள்ள அழகை விஸ்மிதராய்க்கொண்டு பேசுகிறார். (க)

ஈடு;அவ — இரண்டாம்பாட்டு. அழகருடைய ஸௌந்தர்யத்துக்கு ஸத்ருஶமில்லாமையாலே லோகத்தார்பண்ணும் ஸ்தோத்ரம் அங்குத்தைக்கு அவத்யமா மித்தனை யென்கிறார்

கட்டுரைக்கில் தாமரை நின் கண்பாதம்கையொவ்வா *
சுட்டுரைத்தநன்பொன்னுன் திருமேனியொளியொவ்வாது *
ஒட்டுரைத்திவ்வுலகுன்னைப் புகழ்வெல்லாம்பெரும்பாலும் *
பட்டுரையாய்ப்புற்கென்றே காட்டுமால்பரஞ்சோதி. (உ)

(க) வி-பு-க-அ-கஅ

ப ;—அநந்தரம், உத்தமான வடிவழகினுடைய உபமாந ராஹித்யத்தை அருளிச்செய்கிறார்.

பரஞ்சோதி - பரஞ்ஜ்யோதியானவனே!	ஒளி—ஸமுதாயசோபையை
கட்டுரைக்கில்—நிர்ணயித்துச் சொல்லில்	ஒவ்வாது—ஒவ்வாது ; (ஆகையால்)
தாமரை—தாமரையானவை	இ உலகு—இந்தலோகம்
நின்—உன்னுடைய	ஒட்டு—உவமைச்செறிவை
கண்பாதம்கை—திருக்கண்கள் திருவடிகள் திருக்கைகளை	உரைத்து—சொல்லி
ஒவ்வா—ஒவ்வா ;	உன்னை—உன்னை
சுட்டு—ஓடவைத்து	புகழ்வு எல்லாம்—புகழுமது எல்லாம்
உரைத்த—ஒப்பமிட்ட	பெரும்பாலும்—ப்ராயேண
நன்பொன்—நல்லபொன்னானது	பட்டுரையாய்—தோற்றிற்றுச் சொல்லிற்றாய், (தார்ஷ்டாந்திகமானவாச்யத்தை
உன்—உன்னுடைய	புற்கென்றே—புல்லியதாகவே
திருமேனி — (அப்ராக்ருதமான) திருமேனியின்	காட்டும்—காட்டாநிற்கும்.

புற்கு - புன்மை. ஒட்டு - உவமைச்செறிவு. தாமரையும் பொன்னும் ஒவ்வாமை - ஆகந்துகவைலக்ஷண்ய யுக்தமானவை; ஸ்வபாவதோ விலக்ஷண வஸ்துவுக்குத் தகுதியல்லாமையாலே. பெரும்பாலும் - மிகவு மென்றுமாம். (உ)

ஆறு ;—மெய்சொல்லில், தாமரை-கண்பாதங்கைகளுக்கு ஸத்ருசமாகமாட்டாது. சுட்டுரைத்த நன்பொன் உன் திருமேனிக்கு ஸத்ருசமாகமாட்டாது. இப்படியிருக்கச்செய்தே, இவற்றை த்ருஷ்டாந்தமாகச்சொல்லி இந்தலோகம் உன்னைப் புகழாநிற்கும்; அத் த்ருஷ்டாந்தமாகச் சொல்லுகிறவை யெல்லாம் த்ருஷ்டாந்தமாகமாட்டாமையன்றியே, உனக்கு நிகர்ஷத்தை ஆவஹிக்குமென்று கொண்டு இவ்யாவயவகதமான அழகைப் பேசுகிறார். (உ)

ஈடு ; அவ—மூன்றாம்பாட்டு. நம்பக்கல் முதலடியிடாத வெளஙி கரைவிடும் ; வ்யாவ்ருத்தரே நீர் ; பேசினாலோவென்ன;—என்னாலேதான் பேசப்போமோ வென்கிறார்.

பரஞ்சோதிநீபரமாய் நின்னிகழ்ந்துபின் * மற்றோர்
பரஞ்சோதியின்மையின் படியோவிநிகழ்கின்ற *
பரஞ்சோதிநின்னுள்ளே படருலகம்படைத்த * எம்
பரஞ்சோதிகோவிந்தா பண்புரைக்கமாட்டேனே. (ங)

ப ;—அநந்தரம், ஸர்வப்ரகாரௌஜ்ஜ்வல்யாதிஶயத்தையுடைய உன் ஸ்வபாவம் எனக்குச் சொல்ல முடியாதென்கிறார்.

பரமாய்—ஸர்வஸ்மாத்பரனாய்க்கொண்டு
பரஞ்சோதி—நிரதிஶயதேஜோரூபன்
நீ—நீ ;
நின்—உன்னை
இகழ்ந்து—ஒழிந்து
பின்மற்று ஓர்பரஞ்சோதி—வேறு பரமாயிருப்பதொரு உஜ்ஜ்வலவஸ்து
இன்மையின்—இல்லாமையாலே
படி ஓவி—உபமாநமில்லாதபடி
நிகழ்கின்ற—வர்த்தியாநிற்கிற
பரஞ்சோதி—பரஞ்ஜ்யோதிஶ்ஶப்தவாச்யனை
நின்னுள்ளே—உன் ஸங்கல்பத்துக்குள்ளே
படர்—விஸ்தீர்ணமான
உலகம்—லோகத்தை
படைத்த—ஸ்ருஷ்டித்து
எம் பரஞ்சோதி—ஸ்ருஷ்டமான லோகத்தினுடைய ஸ்வபாவம் உனக்குத் தட்டாதபடி நிற்கிற நிரதிஶயௌஜ்ஜ்வல்யத்தை எனக்கு ப்ரகாஶிப்பித்தவனாய்
கோவிந்தா—அந்தப் பரத்வத்திலுங்காட்டில் கோபாலநாதிஸ்ரீ லௌஜ்ஜ்வல்யத்தையுடையவனே!
பண்பு—உன்னுடைய விலக்ஷண விக்ரஹ பாரம்யத்தாலும் உபமாநராஹித்யாதிஶயத்தாலும் ஜகத்காரணத்வ பாரம்யத்தாலும் ஸ்ரீலாதிஶயத்தாலும் உன்னுடைய ஔஜ்ஜ்வல்யஸ்வபாவத்தை
உரைக்க—பாசுரமிட்டுச்சொல்ல
மாட்டேன்—ஶக்தனல்லேன். (௩)

ஆறு ;—நீ இப்படி அழகினால் எல்லாரிலும் மேற்பட்டு வர்த்தியாநின்று, பின்புமற்று உன்னைப்போலே அழகியாரில்லாமையாலே படியோவி வர்த்திக்கையாலே பரஞ்ஜ்யோதிஶ்ஶப்தாபிதேயனாய், ஸர்வ ஜகத்காரணத்வ ப்ரயுக்த நிரவதிக தேஜஸ்ஸை யுடையனாய், நிரவதிகஸௌஶீல்ய விஶிஷ்டனாயிருந்த உன்னுடைய இந்தக்குணங்கள் எனக்குச்சொல்ல நிலமல்லவென்கிறார். (௩)

ஈடு ; அவ—நான் காம்பாட்டு, தாம் "உரைக்கமாட்டேன்" என்றார் ; இவனுடைய போக்யதாதிஶயம் இருந்தபடியால் சிலராலே கிட்டலாயிருந்ததில்லை ; இனிஸம்ஸாரிகள் இழந்துநோவுபட்டுப்போமித்தனையாகாதேயென்று அழகருடையஅழகின்மிகுதி பேசுவிக்கப் பேசுகிறார்.

மாட்டாதேயாகிலு மிம்மலர்தலைமாஞாலம் * நின்
மாட்டாயமலர்புரையும் திருவுருவம்மனம்வைக்க *
மாட்டாதபலசமய மதிகொடுத்தாய் * மலர்த்துழாய்
மாட்டேநீமனம்வைத்தாய் மாஞாலம்வருந்தாதே. (௪)

ப ;—அநந்தரம், இந்த வைலக்ஷண்யத்தினுடைய போக்யதையிலே நீ அந்யபரனானல், அறிவில்லாத ஜகத்து க்லேஶியாதோ ? என்கிறார்.

மலர்—திருநாபீகமலத்தை
தலை—(தனக்குக்) தலையாகவுடைய
இமா ஞாலம்—இந்தப்பெரியஜ கத்தானது
நின்—(ப்ராப்தனான) உன்னுடைய
மாட்டு ஆய—ஸ்வரூபத்திலேயாய்
மலர்புரையும்—புஷ்பம்போலே ஸுகுமாரமான
திருவுருவம்—திருமேனியை
மனம்—நெஞ்சிலே
வைக்க—வைக்கைக்கு
மாட்டாதேயாகிலும்—(அநாதியாக) மாட்டாதிருக்கச்செய்தேயும்
மாட்டாத—(விக்ரஹாநுஸந்தாநத்துக்கு) யோக்யமல்லாத
பலசமயமதி—பல சமயஜ்ஞாநங்களை
கொடுத்தாய்—கொடுத்தாய் ;
நீ—நீதான்
மலர்—விகஸிதமான
துழாய்மாட்டே—திருத்துழாயினிடத்திலே
மனம்வைத்தால்—நெஞ்சைவைத்து போக (வ்யாமோஹ) ப்ரஸக்தனானல்
மாஞாலம்—இந்த மஹாலோகம்
வருந்தாதே—(அந்யபரமாய்) க்லேஶியாதோ ?

க்லேஶிக்கை விடுமிறேயென்று கருத்து. மாடு-இடம். மலர்த்தலை-மலர்மேலென்றுமாம். (௪)

ஆறு ;—இப்படி போக்யனாயிருந்த வெம்பெருமானை இந்தலோகம் இழந்துபோகிறபடிகாணென்றுகொண்டு இன்னாதாகிறார். (௪)

ஈடு ;. அவ—அஞ்சாம்பாட்டு. மூன்றாம்பாட்டுக்கும் இப்பாட்டுக்கும் நேரே ஸங்கதி ; நாட்டாரிழவு நடுவு ப்ரஸங்காத் ப்ரஸ்துதமித்தனை. "கோவிந்தா பண்புரைக்கமாட்டேனே" என்று சொல்லுவானென் ? நாட்டார்பேரிழவு கிடக்கிடீர் ; மயர்வற மதிநலம் பெறுகையாலே நீர் வ்யாவ்ருத்தரே ; நாட்டாரில் வ்யாவ்ருத்தரான அளவேயோ ? விண்ணுளாரிலும் வ்யாவ்ருத்தரே ; நீர்நம்மைப் பேசமாட்டீரோவென்ன, "என்னை வ்யாவ்ருத்தனாக்கினாயித்தனையல்லது உன்னை ஸாவதியாக்கிற்றில்லையே" என்கிறார்

வருந்தாதவருந்தவத்த மலர்கதிரின்சுடருடம்பாய் *
வருந்தாதஞானமாய் வரம்பின்றிமுழுதியன்றாய் *
வருங்காலம்நிகழ்காலம் கழிகாலமாய் * உலகை
ஒருங்காகவளிப்பாய்சீ ரெங்குலக்கவோதுவனே (ரு)

ப ;—அநந்தரம், ஏவம்வித வைலக்ஷண்யயுக்தனை உன்குணகணங்களை எங்ஙனே முடியச் சொல்லுவேனென்கிறார்.

வருந்தாத—யத்நஸாத்யமன்றியிலே
அரு—பெறுதற்குஅரிய
தவத்த—தபஸ்ஸினுடையபலமென்னலாம்படி
மலர்—விகஸிதமான
கதிரின்—ப்ரபையையுடைத்தான
சுடர்—தேஜஸ்தத்வத்தை
உடம்பு ஆய்—வடிவாக வுடையவனாய்
வருந்தாத—யத்நஸித்தமன்றியே ஸ்வாபாவிகமான
ஞானமாய்—ஜ்ஞாநத்தையுடையையாய்க்கொண்டு
வரம்புஇன்றி — பரிச்சேதம் இல்லாதபடி
முழுது—ஸர்வபதார்த்தத்திலும்
இயன்றாய்—வர்த்திப்பானாய்
வருங்காலம் நிகழ்காலம் கழிகாலம் ஆய் } காலத்ரயத்திலும்ஸந்நிஹிதனாய்
உலகை—லோகத்தை
ஒருங்காக—ஒருபடிப்பட
அளிப்பாய்—ரக்ஷிக்குமவனே !
சீர்— உன்னுடைய ஸௌசீல்ய ஸௌலப்ய ஸௌந்தர்யாதி...

உலக்க—முடிய. (ரு)

ஆறு ;—'இப்படி என்ன தபஸ்ஸுபண்ணிப் பெற்றதோ?' என்னும்படி அதிகல்யாணமாய் ஸ்வாபாவிகமாய் நிரதிசயதேஜோமயமாயிருந்த திருவுடம்பையுடையவனாய், ஸ்வாபாவிகாஸங்குசித திவ்யஜ்ஞாந விசிஷ்டனாய் ஸர்வகாலமும் ஒருபடியே ஸர்வாத்மரக்ஷணைக ஸ்வபாவனாயிருந்த உன்னுடைய குணங்களை நான் எங்கே முடியச்சொல்லுவது ? என்கிறார். (ரு)

ஓதுவாரோத்தெல்லாமெவ்வுலகத்தெவ்வெவையும் *
சாதுவாய்நின்புகழின் தகையல்லால்பிறிதில்லை *
போதுவாழ்புனந்துழாய் முடியினாய்பூவின்மேல் *
மாதுவாழ்மார்பினாயென்சொல்லியான்வாழ்த்துவனே. (சு)

ப ;—அநந்தரம், ஸர்வவேதங்களும் கூடிச்சொல்லப்புக்காலும் முழுக்கச் சொல்லவொண்ணாத உன்னை என்னபாசுரமிட்டுச் சொல்லுவேனென்கிறார்.

ஓதுவார்—நியதஸாகரான அதிகாரிகளுக்கு அத்யேதவ்யமாய் ருக்யஜுஸ்ஸாமாதி பேதத்தை யுடைத்தான
ஓத்து எல்லாம்—வேதங்களெல்லாம்
எவ்வுலகத்து—எல்லாலோகங்களிலுமுண்டான
எவ்வெவையும்—ஸாகாபேதங்களெல்லாவற்றையுமுடைத்தாய்
சாதுவாய் — (யதாவதர்த்தபோதகத்வமாகிற) நன்மையையுடைத்தாய்க்கொண்டு
நின்புகழின்—உன் குணகணங்களினுடைய
தகையல்லால் — ப்ரகாராந்வயமாத்ரத்திலே பர்ய வஸிக்குமதொழிய
பிறிது—முழுக்கச்சொல்லுதல் புறம்புபோதல்செய்கை
இல்லை—இல்லை ;
போது—பூவையுடைத்தான
புனம்—தன்னிலத்தில்
வாழ்துழாய்—செவ்வித்துழாயாலே அலங்க்ருதமான
முடியினாய் – திருவபிஷேகத்தையுடையையாய், (அவ்வொப்பனையழகை அநுபவிக்கைக்கு)
பூவின்மேல் — தாமரைப்பூவின்மேலே நித்யவாஸம் பண்ணுகிற
மாது—லக்ஷ்மியானவள்
வாழ்—(அத்தைவிட்டு உகந்து) நித்யவாஸம்பண்ணுகிற
மார்பினாய் – திருமார்பையுடையவனே!
என்சொல்லி—போக்யதைக்குப் பாசுரமிட்டுச் சொல்லுவேனோ? ப்ரணயித்வத்துக்குப் பாசுரமிட்டுச் சொல்லுவேனோ ; எத்தைச்சொல்லி
யான்—யான்
வாழ்த்துவன்—வாழ்த்துவது ?
சாதுவாய்— நன்றாய்
தகை—ப்ரகாரம். (௯)

ஆரு ;— ஸர்வலோகங்களிலுமுள்ள அத்யேதாக்களெல்லாராலும் ஓதப்படுகிற ஸர்வவேதங்களாலும் அளவிடமுடியாத கல்யாணகுணங்களை யுடையனாய், நிரதிஸயஸௌந்தர்யாதி கல்யாணகுணகணநிதியாய், ஸ்ரிய:பதியாயிருந்த உன்னை நானொருவன் எத்தைச் சொல்லிப் புகழ்வது? என்கிறார். (௯)

ஈடு ;—அவ ;—ஏழாம்பாட்டு. "வேதங்கள் கிடக்கிடும் ; வைதிக புருஷர்களென்று சிலருண்டே, அவர்கள் நம்மை யேத்தக் குறை யென் ?" என்ன,—"அதுவும் உனக்கு நிறக்கேடு" என்கிறார்.

வாழ்த்துவார்பலராக நின்னுள்ளேநான்முகனை *
மூழ்த்தநீருலகெல்லாம் படையென்றுமுதல்படைத்தாய் *
கேழ்த்தசீரரன்முதலாக் கிளர்தெய்வமாய்க்கிளர்ந்து *
சூழ்த்தமரர்துதித்தா லுன்தொல்புகழ்மாசூணாதே. (எ)

ப ;—அநந்தரம், அதிஶயிதஜ்ஞாநரான ருத்ராதிகளெல்லாரும் திரண்டு ப்ரயோஜநத்திலே சொல்லப்பார்த்தாலும், உன்னுடைய ஸ்வாபாவிக குணங் களுக்கு மாலிந்யாவஹ மென்கிறார்.

வாழ்த்துவார் — (ஸ்தவப்ரியனுகையாலே உன்னை) வாழ்த்துவார்
பலர் ஆக—பலர் உண்டாகைக்காக
நின்னுள்ளே—உன் ஸங்கல்ப ஸ்வரூபத்துக்குள்ளே
நான்முகனை—சதுர்முகனை
மூழ்த்தநீர்—காரணஜலமான ஏகார்ணவத்துக்குள்ளே
உலகெல்லாம் — ஸமஸ்த லோகத்தையும்
படை—ஸ்ருஷ்டி
என்று—என்று
முதல்—ப்ரதமனுக
படைத்தாய்—படைத்தவனே ! (அவனாலே ஸ்ருஷ்டமாய்),
கேழ்த்த—கெழுமின
சீர்—ஜ்ஞாநாதி குணங்களையுடைய
அரன்—ருத்ரன்
முதலா—முதலாக
கிளர்—கிளர்ந்த திவ்ய ஶக்தியுக்தராய்க் கொண்டு
அமரர்—நித்யத்வவிஶிஷ்டரான
தெய்வம் ஆய் — தேவர்கள் யாவதாயுஷம்
கிளர்ந்து—உத்யுக்தராய்
சூழ்ந்து—(ப்ரயோஜநங்களாலே குணங்களை) வளைத்து
துதித்தால்—ஸ்தோத்ரம்பண்ணினுல்
உன்—உன்னுடைய
தொல் புகழ் — ஸ்வாபாவிகமான குணௌஜ்ஜ்வல்யம்
மாசூணாதே—மாசேறாதோ ?
மூழ்த்த—நிரம்பின
கேழ்த்த—செறிந்த. (எ)

ஆறு ;—நீர் ஒருவராகையாலே "வாழ்த்த முடியாது" என்கிறீராகில், பலரோடே நின்று வாழ்த்தினுலோ வென்னில்,—வாழ்த்துவார் பலராகவாகிறார், நீ படைத்த ப்ரஹ்மாவாலே ஸ்ருஷ்டரான ருத்ராதி தேவதைகளிறே ஏத்துவார் ; அவர்களும் உன்னுடைய குணங்களை முடிய ஏத்தவல்லரோ ? ஏத்துகைக்குத்தான் அர்ஹரோ ? அல்லரிறே யென்கிறார். (எ)

ஈடு ; அவ ;—எட்டாம்பாட்டு. கீழ்ப்பாட்டில், ருத்ரன் தொடக்கமானார் ஏத்தமாட்டார்களென்றதாய், இப்பாட்டில் - "அவன்தனக்குங்கூட ஜநகனான ப்ரஹ்மா ஸ்தோத்ரம்பண்ணினால் அதுவும் உனக்கு அவத்யமாம்" என்பாருமுண்டு; "அவனையும் கீழ்ப்பாட்டிலே சொல்லிற்றாய், இதில் உபயபாவனையுமுடைய இவனைப்போலன்றியே கேவலம் ப்ரஹ்ம பாவனையேயாயிருப்பானொரு ப்ரஹ்மாவை உத்ப்ரேக்ஷித்து, அவன் ஏத்தினாலும் தேவர்க்கு அவத்யமாமித்தனையன்றோ? வென்கிறார்" என்று பட்டர் அருளிச்செய்யும்படி.

மாசூணாச்சுடருடம்பாய் மலராதுகுவியாது *
மாசூணாஞானமாய் முழுதுமாய்முழுதியன்றாய் *
மாசூணாவான்கோலத் தமரர்கோன்வழிப்பட்டால் *
மாசூணாவுனபாத மலர்ச்சோதிமழுங்காதே. (அ)

ப ;—அநந்தரம், அதிஶயிதஜ்ஞாநனாய்க் கொண்டு ஒரு ப்ரஹ்மா திருந்தி, அவன் ஸ்துத்யாதிகளிலே தலைப்பட்டாலும் உன் ஔஜ்ஜ்வல்யம் மழுங்காதோ? என்கிறார்.

மாசூணா—அவத்யஸ்பர்ஶமின்றியிலே
சுடர்—தேஜோரூபமான
உடம்பாய்—வடிவையுடையையாய்
மலராது குவியாது—ஸங்கோசவிகாஸ ரஹிதமாய்
மாசூணா — ஸம்ஶயவிபர்யயாதிஹேய கந்தரஹிதமான
ஞானமாய்—ஜ்ஞாநத்தை ஸ்வபாவமாக வுடையையாய்
முழுதுமாய்—ஸமஸ்தகுணவிபூதிகளையும் ப்ரகாரமாக வுடையையாய்க்கொண்டு
முழுது—அவையெல்லாம்
இயன்றாய் — உன்பக்கலிலே வர்த்திக்கும்படி ஆஶ்ரயமானவனே!
மாசூணா—மாலிந்யரஹிதமான
வான்கோலத்து—விலக்ஷணஜ்ஞாநாதி பூஷணனாயுள்ள
அமரர்கோன்—தேவ ஸேவ்யனான ப்ரஹ்மாவானவன்
வழிப்பட்டால் — ஸ்தோத்ரரூபபரிசர்யையிலே ஒருப்பட்டால்
மாசூணா—ஹேயப்ரதிபடமாயிருக்கிற
உன பாதமலர் — உன் திருவடித்தாமரைகளுடைய
சோதி—தேஜஸ்ஸானது
மழுங்காதே—மஸ்ருணமாகாதோ?

ஸ்வாபாவிகௌஜ்ஜ்வல்யத்தை யுடைய திருவடிகளுக்கு ஆக்கனான ப்ரஹ்மா கிட்டுகை அதேஜஸ்கரமென்று கருத்து. (அ)

ஆறு ;— "அந்த தேவதைகளோடே கூட ஸர்வாதிபதியாய் நிர்த்தோஷஜ்ஞாநனான சதுர்முகன் நின்றேத்தினனோ" என்னில்,- ஹேயப்ரத்யநீகமாய், தேஜோமயமாய், வ்ருத்திக்ஷயாதிவிகாரரஹிதமான திவ்யரூபத்தை யுடையையாய், ஹேயப்ரத்யநீக ஸார்வஜ்ஞாத்யசேஷ கல்யாண குணங்களையுடையையா யிருந்த உன் திருவடிமலர்களை அந்தச் சதுர்முகன்தான் ஏத்தவல்லனோ? யோக்யனோ? இப்படியிருக்கிற உன்னை நான் எத்தைச்சொல்லி வாழ்த்துவது" என்கிறார். (அ)

ஈடு ;—அவ ;— ஒன்பதாம்பாட்டு. மேன்மைதானே பேசவொண்ணாதென்கைக்கு நீர்மைதானோ பேச்சுக்கு நிலமாயிருக்கிறது? என்கிறார்.

மழுங்காதவைந்நுதிய சக்கரநல்வலத்தையாய்த் *
தொழுங்காதற்களிறளிப்பான் புள்ளூர்ந்துதோன்றினையே *
மழுங்காதஞானமே படையாகமலருலகில் *
தொழும்பாயார்க்களித்தால் உன்சுடர்ச்சோதிமறையாதே.

ப ;—அநந்தரம், உன்னுடைய ஆஸ்ரித வாத்ஸல்யாதிஸயத்துக்கு ஸங்கல்ப மாத்ரத்தாலே ஸமாஸ்ரிதரக்ஷணம் பண்ணுகையாகிற மேன்மை திரஸ்கார ஹேது வென்கிறார்.

மழுங்காத—மழுங்குதலில்லாத
வை—கூர்மையையுடைத்தான
நுதிய—வாயையுடைய
சக்கரம்—திருவாழியை
நல்—தர்ஸநீயமான
வலத்தை ஆய்—வலத்திலேயுடையையாய்
தொழும்—பரிசர்யைபண்ணுகையிலே
காதல்—அபிநிவேஸத்தையுடைய
களிறு—ஆனையை
அளிப்பான்—ரக்ஷிக்கைக்காக
புள்—பெரியதிருவடியை
ஊர்ந்து—அதித்வரையோடே நடத்தி
தோன்றினையே—அதின்முன்னே வந்துதோன்றினையே: (இப்படியிருக்க)

மழுங்காத—அமோகமான
ஞானமே—ஸங்கல்பரூபஜ்ஞாநமே
படையாக—பரிகரமாக
மலர்—விகஸிதமான
உலகில்—லோகத்திலே
தொழும்பு ஆயார்க்கு—(உனக்குத்) தொழும்பானார்க்கு
அளித்தால்—உபகரித்தால், (ஆர்த்தரக்ஷணம்பண்ணுகைக்கு மடுவின் கரையிலே த்வரித்து வந்தாயென்கிற)
உன்—உன்னுடைய
சுடர்—அத்யுஜ்ஜ்வலமான
சோதி—தேஜஸ்ஸு
மறையாதே—திரஸ்க்ருதமாகாதோ?

ஆறு;— பின்னையும் அவனுடைய குணங்களை யேத்தியல்லது தரிக்கமாட்டாமையாலே அவனுடைய குணங்களைச் சொல்லி ஏத்துகிறார்.

உன்னுடைய ஆஶ்ரித வாத்ஸல்யமாகிற மஹாகுணத்தை ஒருவருமறியாத தொருபடி ஸங்கல்பஜ்ஞாநத்தாலே ஆஶ்ரிதனை ஸ்ரீகஜேந்த்ராழ்வானை ரக்ஷித்தருளாதே, அந்த ஆஶ்ரிதவாத்ஸல்யம் ஸர்வலோக விதிதமாம்படி திருவாழியை யேந்திக்கொண்டு பெரிய திருவடிமேலே வந்து தோன்றியருளி என்னை யுண்டாக்கி யருளினை யென்கிறார். (௯)

ஈடு;—அவ;— பத்தாம்பாட்டு. வேதைகஸமதிகம்யனாய் ஸர்வேஶ்வரனாயிருந்த உனக்கு, த்வத்ஸ்ருஷ்டராய் உன்னாலே லப்தஜ்ஞாநரான ப்ரஹ்மாதிகள் "ஈஶ்வரன்" என்று அறிந்தேத்த இருக்குமது விஸ்மயமோ வென்கிறார்.

மறையாயநால்வேதத் துள்நின்றமலர்ச்சுடரே *
முறையாலிவ்வுலகெல்லாம் படைத்திடந்துண்டுமிழ்ந்தளந்தாய் *
பிறையேறுசடையானும் நான்முகனும்இந்திரனும் *
இறையாதலறிந்தேத்த வீற்றிருத்தலிதுவியப்பே. (௧௦)

ப;—அநந்தரம், ஈஶ்வராபிமாநிகளும் உன் ஶேஷித்வத்தை யறிந்து ஆஶ்ரயிக்க விருக்கிற விருப்பு ப்ராப்தமாகையால் ஆஶ்சர்யமல்ல வென்கிறார்.

மறையாய — (ரஜஸ்தமஃ ப்ரசுரர்க்கு ஸ்வார்த்தத்தை) மறைப்பதாய்
நால்வேதத்து — (ஸத்வ ப்ரக்ருதிகளுக்கு அர்த்த ப்ரகாஶகமான ருகாதி) சாதுர்வித்யத்தை யுடைத்தான வேதங்களுக்கு,
உள்நின்ற — ஆந்தரமான தாத்பர்யமாய் நின்ற
மலர் — விகாஸத்தை யுடைத்தான
சுடரே — ஜ்யோதிரூபனாய்
முறையால் — பர்யாயந்தோறும்
இ — இந்த
உலகெல்லாம் — லோகங்களை யெல்லாம்
படைத்து — ஸ்ருஷ்டித்து
இடந்து — (ப்ரளயத்திலே புக்கு) இடந்தெடுத்து
உண்டு — (மஹாப்ரளயத்திலே) உண்டு
உமிழ்ந்து — உமிழ்ந்து
அளந்தாய் — (அந்யாபிமாநம் கழியும்படி) அளந்து போந்தவனே!
இறையாதல் — (இப்படி வேதைகவேத்யதையாலும் ஜகத்ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரங்களாலும்) ஶேஷியாக
அறிந்து — (உன்னை) அறிந்து
பிறையேறு — சந்த்ர கலாதாரணத்தாலும்

சடையானும் — ஜடாதாரணத்தாலும் போகத பஸ்ஸாகளிலே தத்பரனான ருத்ரனும்
நான்முகனும் — (ஸர்வதோமுகமான ஸ்ருஷ்ட்யாதி ஶக்தியையுடைய) ப்ரஹ்மாவும்
இந்திரனும் — (த்ரை லோக்யேஶ்வரனை இந்த்ரனும்
ஏத்த—(ஸ்துத்யாதிமுகத்தாலே) ஆஶ்ரயிக்க
வீறு — ஆஶ்ரயணீயத்வாகாரத்தாலே வ்யாவ்ருத்தனாய்
இருத்தல் இது—இருக்கிற இந்த இருப்பு
வியப்பே—ஆஶ்சர்யமோ ?

ப்ரமாணோபபத்தி ஸித்தமான இது ப்ராப்தமென்று கருத்து. முறையாலென்று - உடையவனாகையாலே என்றுமாம். மலர் - மலர்த்தியாய், விகாஸம்.

ஆறு ;—பக்திஹீநர்க்கு உன்னை அறியவொண்ணாதபடி மறைத்துக்கொண்டிருக்கிற ஸர்வ வேதங்களினாலும் ப்ரதிபாத்யனாய், ப்ராப்தியாலே ஜகத் ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாராதி ஹேதுபூதனாயிருந்த உன்னுடைய ஸர்வேஶ்வரத்வத்தை அறிந்து உன்னை யேத்துகைக்கு விஷயமாக உன்னைக் கொடுத்துக்கொண்டிருக்கிற விருப்பு உனக்கு ஓரேற்றமோ? அன்றிறே. இப்படி யிருக்கிற உன்னை நான் எத்தைச்சொல்லி ஏத்துவது? என்கிறார். (க0)

ஈடு ;—அவ ;—நிகமத்தில், இத்திருவாய்மொழி தானே இது கற்றாரை உஜ்ஜீவிப்பித்துப் பின்னை ஸாம்ஸாரிகமான ஸகல துரிதத்தையும் போக்குமென்கிறார்.

வியப்பாயவியப்பில்லா மெய்ஞ்ஞானவேதியனைச் *
சயப்புகழார்பலர்வாழும் தடங்குருகூர்ச்சடகோபன் *
துயக்கின்றித்தொழுதுரைத்த வாயிரத்துளிப்பத்தும் *
உயக்கொண்டுபிறப்பறுக்கும் ஒலிமுந்நீர்ஞாலத்தே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்

ப ;—அநந்தரம், இத்திருவாய்மொழிக்கு பலமாக ஸாம்ஸாரிகஜந்ம ராஹித்யத்தை அருளிச்செய்கிறார்.

வியப்பாய — (ஏகதேஶ ஸம்பந்தத்தாலும் புறம்புள்ள விடத்தில்) ஆஶ்சர்யாவஹமான குணசேஷ்டிதாதிகள்
வியப்பில்லா — (ஸ்வவிஷயத்தில்) ஆஶ்சர்யமாகையன்றியே (தன்னைப்பற்றியவை தான் மினுங்கும்படி)யான

மெய்ஞ்ஞானம் — இந்த யாதாத்ம்ய ஜ்ஞாநத்தை ப்ரதிபாதிக்கிற

வேதியனை — வேதங்களாலே வேத்யனானவனை

சயம் — (ஸம்ஸார) ஜயத்தால்வந்த

புகழார் — (ஜ்ஞாந வைராக்ய) ப்ரதையை யுடையாரான

பலர்—பலரும்

வாழும் — (இவருடைய வைலக்ஷண்யத்தை யநுபவித்து) வாழ்கிற

தடம்—பேரிடமுடைத்தான

குருகூர்—திருநகரிக்கு நிர்வாஹகரான

சடகோபன்—ஆழ்வார்

துயக்கு—(ஸம்ஶயவிபர்யயரூபமான) மனந்திரிவு

இன்றி—அற்று

தொழுது — (யதார்த்தஜ்ஞாந கார்யமான) ஶேஷவ்ருத்தியோடே

உரைத்த—அருளிச்செய்த

ஆயிரத்துள் இப்பத்தும் — ஆயிரத்துளிப்பத்தும்

ஒலி—கோலாஹலோத்தரமாய்

முந்நீர்—ஆற்றுநீர் ஊற்றுநீர் வர்ஷஜலம் ஆகிறமூன்றுநீருங் கூடின கடலை யுடைத்தான

ஞாலத்து—பூமியிலே

உயக்கொண்டு — (ஜ்ஞாந ப்ரதாநாதிகளாலே) உஜ்ஜீவிப்பித்து

பிறப்பு—ஜந்மஸம்பந்தத்தை

அறுக்கும்—அறுக்கும்.

வியப்பு - ஆஶ்சர்யம். துயக்கு - மனந்திரிவு. இது - நாலடித்தாழிசை ; கலிவிருத்தமென்பாருமுளர். (௧௧)

ஆறு ;—லோகத்தில் விஸ்மயநீயமானவற்றை விஸ்மய நீயமாக வுடையனன்றியே, யதாபூதவாதியான ஸர்வ வேதங்களாலும் ப்ரதிபாத்யனாயிருந்தவனை, பகவத் கைங்கர்ய ரதித்வமாகிற கல்யாணமான புகழை யுடையார் பலர் வாழுந் தடங்குருகூர்ச் சடகோபன், ஓரஜ்ஞாநகந்தமில்லாதபடி ஸாக்ஷாத் கரித்துத் தொழுது உரைத்த இத்திருவாய்மொழி, பகவத் ஸாக்ஷாத்கார விரோதி ஸம்ஸாரத்தைப் போக்குமென்கிறார். (௧௧)

முதற்பாட்டில் - அழகருடைய திருவணி கலன்களுக்கும் திருமேனிக்குமுண்டான ஸௌகுமார்யத்வத்தை அநுஸந்தித்தார் ; இரண்டாம்பாட்டில் - அதுக்கு நாட்டார் த்ருஷ்டாந்தமிட்டுச் சொல்லுமவையெல்லாம் உனக்கு அவத்யத்தை விளைக்குமென்கிறார் ; மூன்றாம்பாட்டில் - 'நாட்டாரைவிடும். மயர்வறமதிநலம் அருளப்பெற்ற நீர் சொல்லீர்' என்ன, 'என்னாற் சொல்லி முடியாது' என்கிறார் ; நாலாம்பாட்டில் - 'இப்படி விலக்ஷணனாய் நிரதிஶயபோக்யனாயிருக்

கிற உன்னை நாட்டார் இழந்துபோம்படி அவர்களை மதிவிப்ரமங்களைப் பண்ணினாய்' என்றார் ; அஞ்சாம் பாட்டில் - 'நாட்டாரில் வ்யாவ்ருத்தரல்லீரோ? உம்மால் பேசவொண்ணாமைக்குக் குறையென்?' என்ன. 'என்னை வ்யாவ்ருத்தனாக்கினவோபாதி உன்னை ஸாவதியாக்கிற்றில்லையே' என்றார் ; ஆறாம் பாட்டில் - 'வேதங்களும் நீரும் கூடப் பேசினாலோ?' என்ன, 'அவையும் உன்னைப் பரிச்சேதிக்கமாட்டாது' என்றார் ; ஏழாம் பாட்டில் - 'வேதங்கள் கிடக்கிடும் ; வைதிக புருஷர்களென்று சிலருண்டே. அவர்கள் ஏத்தக்குறையென்?' என்ன, 'அதுவும் உனக்கு நிறக்கேடு' என்றார் ; எட்டாம்பாட்டில் - கர்மபாவனை யின்றிக்கே ப்ரஹ்மபாவனையேயாயிருப்பானொரு ப்ரஹ்மாவை உத்ப்ரேக்ஷித்து அவனேத்திலும் தேவர்க்கு அவத்யம்' என்றார் ; ஒன்பதாம்பாட்டில் - 'மேன்மைபேசவொண்ணாது' என்கைக்கு 'நீர்மையோதான் பேசலாயிருக்கிறது' என்றார் ; பத்தாம்பாட்டில்- 'உன்னாலே ஸ்ருஷ்டனான ப்ரஹ்மாவாலே ஸ்ருஜ்யரான இவர்கள் உன்னை யேத்துகையாவது உனக்கு அவத்யமன்றோ?' என்றார் ; நிகமத்தில் - 'இத்திருவாய்மொழிதானே ப்ராப்யத்தைத் தரும்' என்றார். (௧௧)

வடக்குத் திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்.

மூன்றாம்பத்து முதற்றிருவாய்மொழி

வ்யாக்யாநங்கள் முற்றுபெற்றன.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

இரண்டாந்திருவாய்மொழி - முந்நீர்ஞாலம் ப்ரவேசம்.

ஆறு ;—(முந்நீர்ஞாலம்.) இப்படி ஸாக்ஷாத்க்ருதனான எம்பெருமானோடு தம்முடைய ப்ரக்ருதி ஸம்பந்தத்தாலே யதாமநோரதம் ஸம்ஶ்லேஷிக்கப் பெறாமே நிர்மர்யாத வ்யஸநஸாகராந்தர்நிமக்நராய்க்கொண்டு கூப்பிடுகிறார். *

ப ;—இரண்டாந் திருவாய்மொழியில், இப்படி ஸ்வாபாவிகமான ஶேஷத்வத்துக்கு ப்ரதிஸம்பந்தியான ஶேஷியினுடைய திவ்ய ஸௌந்தர்யாதிகளை அநுபவிக்க ப்ராப்தமாயிருக்க, அது ஸித்தியாதொழிகிறது தத்விரோதியான ஶரீரஸம்பந்தாதிகளடியாக வென்று அநுஸந்தித்து, தந்நிவ்ருத்தியில் அபேக்ஷையாலே, அது அவன் தனக்கு விதேயமாம்படியான ஸ்ரஷ்ட்ருத்வத்தையும், ஸ்ருஷ்டமான ஜகத்தை அநந்யார்ஹமாக்கின அபதாநத்தையும், ஆஶ்ரித விரோதி நிரஸநஸ்வபாவத்தையும், ஆஶ்ரித ஸம்ரக்ஷணார்த்தமான வ்யாப்தியையும், அநுபவித்தல்லது நிற்கவொண்ணாத விலக்ஷண விக்ரஹ யோகத்தையும், ஸமஸ்த சேதநரும் ஸ்வாதீநராம்படியான பாரம்யத்தையும், வ்யாப்தியிலும் கார்யகரமான ஸௌலப்யத்தையும், அந்த ஸௌலப்யமடியாகவந்த குணவிக்ரஹௌஜ்ஜ்வல்யத்தையும், ஜ்ஞாநாஜ்ஞாநவிபாகமில்லாதபடியான உபகாரகத்வத்தையும், அதுக்கு ப்ரகாஶகமான ஸகலவேத வேத்யத்வத்தையும் அநுஸந்தித்துச் சொல்லிக் கூப்பிட்டு, ஸ்வஸந்நிதியாலே ஆர்த்திஶமிப்பித்த ஸுலபனான ஈஶ்வரனை அபரோக்ஷித்து ப்ரதிஷ்டிதராகிறார். *

ஈடு ;—அவ ;—பட்டர் திருக்கோட்டியூரிலே எழுந்தருளியிருக்கச்செய்தே, சீராமப்பிள்ளை "இவர் பரத்வாநுபவத்தை யாசைப்பட்டு, அது ஒரு தேஶவிஶேஷத்திலே போனால் அநுபவிக்குமதாய் நோவுபடுகிறாரல்லர்; அவதாரங்களில் அநுபவிக்க ஆசைப்பட்டு, 'பிற்பாடரானோம்' என்று நோவுபடுகிறாரல்லர்; உகந்தருளின நிலங்களிலேயாய், அதுதன்னிலும் திருமலையிலேயாகில் அநுபவிக்க இழிந்தது; பின்னை மேன்மேலென அநுபவிக்குமதொழிய இவர் இழந்து நோவுபடுகைக்குக் காரணமென்?" என்று கேட்க, 'பரவ்யூஹவிபவங்களோடு அர்ச்சாவதாரத்தோடு வாசியற தர்மியைக்யத்தாலே விஷயம் எங்குமொக்கப் பூர்ணமாயிருக்கும்; குறைந்து தோற்றுகிற விடம் ப்ரதிபத்தாக்களுடைய ப்ரதிபத்தி தோஷத்தாலே. கடலருகே போகாநின்றால் தன்கண்ணாலே முகக்கலாமளவிறே காண்பது; அப்படியே அழகருடைய ஸௌந்தர்யாதிகளை

அநுபவிக்கப் புக்கவிடத்தில் விளாக்குலைகொண்டு அநுபவிக்கலாயிருந்ததில்லை; பெருவிடாய்ப்பட்டவன், சேர்ந்த குளிர்ந்த தண்ணீர் ஸந்நிஹிதமா யிருக்க, ஆஸ்யம் பிஹிதமானால் துடிக்குமாபோலே விஷயமும் ஸந்நிஹிதமாய் விடாயும் மிக்கிருக்கச்செய்தே, அபரிச்சிந்நவிஷய மாகையாலே பரிச்சேதித்து அநுபவிக்க வொண்ணாதொழிய, 'இது விஷயதௌர்ஜந்யத்தாலே வந்தது' என்று அறியமாட்டாதே, தம்முடைய கரணஸங்கோச நிபந்தநமாக வந்ததென்று அநுஸந்தித்து, அவன் தான் முதலிலே இத்தைக்கழித்துத் தன்னையநுபவிக்கைக்கு உறுப்பாக ஜகத்ஸ்ருஷ்டியைப் பண்ணினான்; ஸ்ருஷ்டமான ஜகத்திலே தான்வந்து அவதரித்தான்; அதுக்குமேலே அந்தர்யாமிரூபேண நின்று ஸத்தாதிகளை நிர்வஹித்தான்; அவன் இப்படி உபகார பரம்பரைகளைப் பண்ண, நான் அவற்றையெல்லாம் அஸத்ஸமமாக்கிக்கொண்டேன்; இனி நான் அவனைக் கிட்டுகையென்று ஒன்று உண்டோ?' என்று நிர்மர்யாத வ்யஸநஸாகராந்தர்நிமக்நராய் 'முடிந்தேனே யன்றே' என்று இவர் சோகிக்க, 'நீர் கரணஸங்கோசத்தாலே வந்ததென்று சோகிக்கவேண்டா; கரணஸங்கோசமில்லாதாரும் நம்மை அநுபவிக்குமிடத்தில் இப்படியே காணும் படுவது' என்று இவரிழவைப் பரிஹரிக்கக்கோலி, 'நீர் நினைத்த வகைகளெல்லாம் பரிமாறுகைக்கு ஈடாக வடக்கில் திருமலையிலே நின்றோம்; அங்கே கிட்டி அநுபவியும்' என்று தான் அங்குநிற்கிற நிலையைக் காட்டி ஸமாதாநம்பண்ண, ஸமாஹிதராய்த் தலைக்கட்டுகிறார்.

தெற்குத்திருமலையிலே நிற்கிற நிலையை அநுபவிக்கக் கோலிப் பெறாதே நோவுபட்ட இவரை வடக்குத் திருமலையில் நிற்கிற நிலையைக் காட்டி ஸமாதாநம் பண்ணினபடி என்னென்னில்; - முலை வேண்டியழுத ப்ரஜைக்கு முலையைக் கொடுத்துப் பரிஹரிக்குமித்தனையிறே; 'இன்னமுலையைத் தரவேணும்' என்று அழுதால் அம்முலையையே கொடுத்து ஆற்றவேண்டாவோ?, என்னில்;-வேண்டா; இவர்தாம் வழிதிகைத்த லமருகையாலே 'அதுவே வேணும்' 'அதுவன்று இது' என்கிற தெளிவில்லையாயிற்று. இன்னமுந்தான், ஒரு வஸ்துதானே ஒருபோது தாரகமாய், மற்றைப்போது அதுதானே பாதகமாகக் காணாநின்றோமிறே; ஆமத்தில் பாதகமான சோறுதானே அதுகழிந்தவாறே தாரகமாகாநின்றதிறே; 'இவர்க்கு இன்

னது இன்னபோது தாரகமாம், இன்னது இன்னபோது பாதகமாம்' என்று தெரியாது; குணாவிஷ்காரத்தாலே தரிப்பித்துக்கொண்டு போருகிற ஈஶ்வரனுக்கும் தரித்த இவருக்குமே தெரியுமத்தனை இதுதான். ஆரியர்களிழந்த ம்லேச்சபூமியிலுள்ளார்க்கு முகங்கொடுத்துக்கொண்டிருக்கிற நீர்மையிறே அங்கு; கானமும் வானரமும் வேடுமானவற்றுக்கு முகங்கொடுத்த நீர்மையுண்டிறே இங்கு.

ஈடு;—அவ;—முதற்பாட்டில்—ஜகத் ஸ்ருஷ்டியைப் பண்ணி, உன்னை வழிபடுகைக்கு உடலாகக் கரணகளேபரங்களைக் கொடுத்துவிட்டாய் நீ; நான் அவற்றை இதர விஷயப்ராவண்யத்துக்கு உடலாக்கி அநர்த்தப்பட்டுப் போனேன்; இங்ஙனேயிருக்கிற நான் உன்னைவந்து கிட்டுவதொரு நாள் சொல்லவேணு மென்கிறார்.

முந்நீர்ஞாலம்படைத்த வெம்முகில்வண்ணனே *
அந்நாள்நீதந்த வாக்கையின்வழியுழல்வேன் *
வெந்நாள்நோய்வீய வினைகளைவேரறப்பாய்ந்து *
எந்நாள்யானுன்னை இனிவந்துகூடுவனே. (க)

ப;—முதற்பாட்டில், ஸகல ஜகத் ஸ்ரஷ்டாவான நீ ஆஶ்ரயணார்த்தமாகத் தந்த ஶரீரத்தின் வழியே அலமருகிற நான் தத்தேதுக்களைப் போக்கி உன்னை ப்ராபிப்பது என்றோ வென்கிறார்.

முந்நீர் — மூன்றுவகைப்பட்ட நீரையுடைய
ஞாலம்—ஜகத்தை
படைத்த எம் முகில்வண்ணனே — ஸ்ருஷ்டித்து (அத்தாலே ஜல ஸ்தல (விபாகமில்லாத) மேகத்தின் ஸ்வபாவத்தையுடையனாய்க் கொண்டு எனக்குஉபகாரகனானவனே!
அந்நாள்—அந்த ஸ்ருஷ்டிகாலத்திலே; (க்ஷயமாந மநாவாய்க் கொண்டு)
நீ—நீ
தந்த—(ஆஶ்ரயணார்த்தமாகத்) தந்த
ஆக்கையின்—ஶரீரத்தினுடைய
வழி—பந்தகத்வமார்க்கத்திலே போய்
உழல்வேன்—(கர்ப்ப நரகாதிகளிலே போய்) அலமருகிற நான்
வெம்—(ஜ்ஞாநம்பிறந்தபின்பு) பரிதாபஹேதுவான
நாள்—நாளிலே
நோய்—(அஹங்காரார்த்த காமாதிரூபமான) வ்யாதிகள்
வீய—நசிக்கும்படி
வினைகளை—(தத்தேதுவான) கர்மங்களை
வேர்—ஸவாஸநமாக

அறப்பாய்ந்து—கொத்தியெடுத்துப் போகட்டு
யான்—(அநுகூலிக்கத்தந்த காணங்களை ப்ரதிகூலிக்கைக்கு உறுப்பாக்கின) நான்
உன்னை—(ப்ரதமோபகாரகனை) உன்னை
இனி—இப்படி க்ருதக்நனைபின்பு
வந்து—(இந்நிலையைவிட்டு) வந்து
கூடுவன்—கூடுவது
எந்நாள்—எந்நாளாயிருக்கிறது?
நாள் அறுதியிடிலும் தரிக்கலாமிறே யென்று கருத்து. (க)

ஆறு; — ஸம்ஸாரியாத்மாக்களெல்லார்பக்கலிலும் சென்று வெள்ளங்கொள்ளும்படி கரைபுரண்டு பெருகுகிற உன்னுடைய நிரவதிககாருண்ய வெள்ளத்தாலே, உன்திருவடிகளைச் சேர்கைக்கு உபாயமாகக் கரணகளேபராத்யுபகரணங்களை ஸர்வாத்மாக்களுக்கும் கொடுத்தருளினவனே! அன்று நீ எனக்குத்தந்தருளின அந்த உபகரணத்தைக்கொண்டு உன்திருவடிகளைச் சேரமாட்டாதே பின்னையும் ஸம்ஸார ஸமுத்ரத்திலே போய்விழுந்தேன்; இப்படி உன்னைப்பிரிந்திருக்கிற இந்தக்காலமாகிற காலாக்நி ஸந்துஷமான நோய் விடும்படி உன்னைப் பிரிந்திருக்கைக்கு ஹேதுவான என்னுடைய வினைகளை வேரறப்பாய்ந்து என்று நான் உன்னைவந்து கூடுவது? என்கிறார். (க)

ஈடு;—அவ;—இரண்டாம்பாட்டு. "உம்முடைய உடம்புகொண்டு நாம் இருந்தவிடத்தேவந்து கிட்டமாட்டிற்றிலீராகில், நம்முடம்பைக்கொண்டு நீர் இருந்தவிடத்தே வந்து கிட்டினோமே; வாமநவேஷத்தைக்கொண்டு மஹாபலிமுன்னேவந்து நின்றோமே; அங்கே கிட்டமாட்டிற்றிலீரோ?" என்ன, "அதுக்கும் தப்பினேன்" என்கிறார்.

வன்மாவையமளந்த வெம்வாமனா * நின்
பன்மாமாயப் பல்பிறவியில்படிகின்றயான் *
தொன்மாவல்வினைத் தொடர்களைமுதலரிந்து *
நின்மாதாள்சேர்ந்து நிற்பதென்றுகொலோ. (உ)

ப;—அநந்தரம், அர்த்தியாய்வந்து ஜகத்தை அநந்யார்ஹமாக்கின உன் ஸ்லாக்யமான திருவடிகளைச் சேருவது என்றோ வென்கிறார்.

வல்—காடிந்யத்தாலே சிக்கென்ற
மா—பெரிய
வையம்—ப்ருதிவியை
அளந்த — (ஸுகுமாரமான திருவடிகளாலே) அளந்து
எம் — அத்தாலே என்னை அநந்யார்ஹமாக்கின

வாமன—வாமநனே!
நின்—உனக்கு லீலோபகரணமாய்
பல்—(குணபேதத்தாலும் கார்யபேதத்தாலும்) பலவகையாய்
மா—துரத்யயையான
மாயம் — மாயையாகிற ப்ரக்ருதி யடியான
பல்பிறவியில்—(தேவாதி) பஹுவித ஜந்மத்திலே
படிகின்ற—பொருந்திவர்த்திக்கிற
யான்—நான்
தொல்—அநாதியாய்
மா—அபரிச்சேத்யமாய்
வல்—விடுவிக்க அரிதான
வினை—பாபங்களினுடைய
தொடர்களை—அநுபந்தங்களை
முதல்—ஸமூலமாக
அரிந்து—அறுத்து
நின்—(ப்ராப்தனுன) உன்னுடைய
மா — (பெறுதற்கரிய) பெருமையையுடைத்தான
தாள்—திருவடிகளை
சேர்ந்து—சேர்ந்து
நிற்பது—(கதாகதம் பண்ணுதே) நிற்பது
என்றுகொல் — எக்காலமாயிருக்கிறதோ? (உ)

ஆரு;—(வன்மா.) இப்படி நீதந்த உபகரணத்தைக்கொண்டு பின்னையும் நான் ஸம்ஸார ஸமுத்ரத்திலே போய் விழுமளவில் என்னை எடுத்தருளுகைக்காக இங்கே புகுந்தருளினுய்; பின்னையும் உனக்கு எட்டாததொருபடி நான் அந்த ஸம்ஸாரமாகிற கடலி னுள்ளே போய் அழுந்தாநின்றேன். இப்படி இக்கடலிலே அழுந்து கைக்கு ஹேதுவாய் அநாதிஸித்தமாய் மஹா பலமாயிருந்த என்னு டைய பாப பரம்பரைகளை முதலரிந்து உன்னுடைய நிரவதிகபோக் யமான திருவடிகளை நான் சேர்ந்து, பின்னை ஒருகாலமும் பிரியாதே நிற்பது என்றோ வென்கிறுர். (உ)

ஈடு;—அவ;—மூன்றும்பாட்டு. "வாமநாவதாரம் முற்காலத் திலே யாகையாலும், நீர் பிற்பாடராகையாலும் இழந்து அங்குக் கிட்டப்பெற்றிலீராகில், ஒருத்தியுடைய மங்களஸூத்ரத்துக்காகப் பாண்டவர்களுக்குச் சொல்லிற்றுச்செய்து திரிந்தோமே; அங்கே வந்து கிட்டமாட்டிற்றிலீரோ?" என்ன,—"அங்குந் தப்பினேன்" என்கிறுர்.

கொல்லாமாக்கோல் கொலைசெய்துபாரதப்போர் *
எல்லாச்சேனையு மிருநிலத்தவித்தவெந்தாய் *
பொல்லாவாக்கையின் புணர்வினையறுக்கலறு *
சொல்லாய் யானுன்னைச் சார்வதோர்சூழ்ச்சியே. (ரு)

ப ;—அநந்தரம், ஆஶ்ரித விரோதி நிரஸநஶீலனுன உன்னை நான் கிட்டு கைக்கு ஒருவிரகு அருளிச்செய்யவேணு மென்கிறார்.

கொல்லா — கொல்லுகைக்குக் கருவி யன்றியே
மா—குதிரையை நடத்துவதான
கோல்—முட்கோல் கருவியாக
(க) "ஊ௵௸௵ஏ௵௵ திஹ தாரூ-மயைவே௸த நிஹதா:" ஸங்கல்ப என்றுமாத்ரத்தாலே
கொலைசெய்து—கொலையைச்செய்து
பாரதப்போர்—பாரதயுத்தத்திலே
எல்லாச்சேனையும் — (ஶத்ரு ஸேனையோடு பாண்டவஸேனையோடு வாசியற பூபாரமான) ஸமஸ்த ஸேனையையும்
இருநிலத்து—(தர்மக்ஷேத்ரமான) பெரிய பூமியிலே
அவித்த—நசிப்பித்த
எந்தாய்—என்னுடைய ஸ்வாமியே!
பொல்லா—அநர்த்தஹேதுவான
ஆக்கையின்—ஶரீரத்தோடு உண்டான
புணர்வினை—ஸம்பந்தத்தை
அறுக்கல்—அறுக்க உத்யோகித்தாலும்
அறா—(என்னால்) அறுக்கலாம்படி யல்ல ;
யான்—(இதிலே அகப்பட்ட) நான்
உன்னை—(விரோதியை யழித்துக்கொடுக்கவல்ல) உன்னை
சார்வது—கிட்டலாம்படி
ஓர்சூழ்ச்சி — அத்விதீயமாயிருப்பதொரு நல்விரகு
சொல்லாய்—(அர்ஜுநனுக்குச் சொன்னாற்போலே) சொல்லவேணும்.

ஆறு ;—(கொல்லா.) இப்படி ஸ்ரீவாமநனுய் வந்து புகுந்தருளின வதுவும் எனக்குக் கார்யகரமன்றியே யொழிந்தவாறே, பின்னையும் என்பக்கலுள்ள அபிநிவேஶத்தாலே ஸ்ரீவஸுதேவர் திருமகனுய் வந்து பிறந்தருளி, ஸர்வவஶீகரணமாய் நிரதிஶயாஶ்சர்யமான திவ்யசேஷ்டிதங்களைப் பண்ணியருளா நின்றுகொண்டு ஸர்வஸுலபனுப் நின்றருளின வன்றும் உன் திருவடிகளைச் சேரப்பெற்றிலேன் ; இப்படி அநர்த்தகரமாய் உன்னாலல்லது அறுக்க முடியாதிருக்கிற இந்த ப்ரக்ருதி ஸம்பந்தத்தை நீயே அறுத்து நான் உன்னைச் சேருவதொரு விரகு பார்த்தருளா யென்கிறார். (௩)

ஈடு; — அவ ;—நாலாம்பாட்டு. "இப்படி நீர் இருந்தவிடத்தே நாம் வரச்செய்தேயும் இழந்தீராகில், அவதாரங்களைப்போலே ஒரு காலவிஶேஷத்திலேயாகாதே எல்லாக் காலத்திலும் அந்தர்யாமித்வேந உகவாதார்பக்கலிலும் விடமாட்டாமையாலே புகுந்து நின்றோமே ; அங்கே அநுகூலித்து உம்முடைய அபேக்ஷிதம் பெற்றுப் போகமாட்டிற்றிலீரோ?" என்ன, அதுக்கும் தப்பினே னென்கிறார்.

(க) கீதை-கக-௩௩.

சூழ்ச்சிஞானச் சுடரொளியாகி * என்றும்
ஏழ்ச்சிக்கேடின்றி எங்கணும்நிறைந்தவெந்தாய் *
தாழ்ச்சிமற்றெங்கும் தவிர்ந்து நின்தாளிணைக்கீழ்
வாழ்ச்சி * யான்சேரும்வகை யருளாய்வந்தே. (௪)

ப ;—அநந்தரம், ரக்ஷணார்த்தமான வ்யாப்தியையுடைய உன் திருவடிகளை நான் கிட்டும் ப்ரகாரம் என்முன்னேவந்து முகந்தோன்றிநின்று அருளிச்செய்ய வேணு மென்கிறார்.

சூழ்ச்சி—(எல்லாவற்றையுஞ்) சூழ்ந்திருக்கிற
ஞானம்சுடர்—ஜ்ஞாநப்ரபையையுடைத்தான
ஒளிஆகி—ஸ்வயம்ப்ரகாஶஸ்வரூபனாய்
என்றும்—ஸர்வகாலத்திலும்
ஏழ்ச்சி—விகாஸமும
கேடு—ஸங்கோசமும்
இன்றி—இன்றிக்கே
எங்கணும்—ஸர்வப்ரதேஶத்திலும்
நிறைந்த—பரிபூர்ணமாகவ்யாபித்து
எந்தாய்—(ஊரைவளைந்து ஒருவனைப் பிடிக்கு.ாபோலே) என்னை யங்கீகரித்த ஸ்வாமியே!
மற்று—(உன்னை) ஒழிந்த
எங்கும்—ஸமஸ்தவிஷயங்களிலும்
தாழ்ச்சி—கால்தாழ்கை
தவிர்ந்து—தவிர்ந்து
நின்—(ப்ராப்தனான) உன்னுடைய
தாள்—(போக்யமான) திருவடிகள்
இணை—இரண்டின்
கீழ்—கீழே
வாழ்ச்சி—(பாரதந்த்ரனாய்) வாழும் வாழ்க்கையை
யான்—(இதுக்குமுன் அந்வயித்தறியாத) நான்
சேரும்—ப்ராபிக்கும்
வகை—ப்ரகாரத்தை
வந்து—(அவதாரமுகத்தாலே) என்முன்னே வந்து நின்று
அருளாய்—அருளிச்செய்யவேணும்.
வ்யாப்தமான ஸ்வரூபத்தால் போராது என்றுகருத்து. (௪)

ஆறு ;—(சூழ்ச்சி) ஸர்வாத்மாக்களையும் உன்கருத்தில் வர்த்திப்பிக்க வற்றாய் நித்யஸித்தமாய் ஸர்வகதமாயிருந்த உன்னுடைய திவ்யஜ்ஞாநமும் எனக்குக் கார்யகரமன்றியே யொழிந்தது ; இப்படி உன்னுடைய ஜகத்ஸ்ருஷ்டி திவ்யாவதாரசேஷ்டித திவ்யஜ்ஞாநாதிகளை எனக்குக் கார்யகரமாகாமே ப்ரதிபந்திக்கிற ஸமஸ்த ப்ராக்ருத விஷயப்ராவண்யத்தையுந் தவிர்ந்து, நின்தாளிணைக்கீழ் வாழ்ச்சி யான்சேரும்படி சக்ரவர்த்தி திருமகனையும் ஸ்ரீவஸுதேவர் திருமகனையும் வந்து பிறந்தருளினாற்போலே இன்னமும் வந்து பிறந்தருளியே செய்தருளவேணு மென்கிறார். (௪)

ஈடு ;—அவ ;—அஞ்சாம்பாட்டு. 'நீர் வந்தே யருளவேணுமெ ன்று நின்றீர் ; இது நமக்குத் தட்டுப்படும் ; ஒருவிசை பதினோரா யிரமாண்டு இருந்தோம் ; ஒருவிசை நூறாண்டு இருந்தோம்; வருகை நமக்குப் பணியுண்டோ காணும்' என்ன, 'எனக்கும் அவைபோலே சில நாளிருந்து உபகரித்தருளப்பெறில் அழகியது ; அதுசெய்யத் திரு வுள்ள மல்லவாகில், ஆனைக்குத் தோற்றினாற் போலேயும் ப்ரஹ்லா தனுக்குத் தோற்றினாற் போலேயும் எனக்கும் ஒருதோற்றரவு தோற்றியே யாகிலும் உதவவேணும்' என்கிறார்.

வந்தாய்போலேவந்து மென்மனத்தினைநீ *
சிந்தாமல்செய்யா யிதுவேயிதுவாகில் *
கொந்தார்காயாவின் கொழுமலர்த்திருநிறத்த
எந்தாய் * யானுன்னை எங்குவந்தணுகிற்பனே. (ரு)

ப ;—அநந்தரம், விலக்ஷண விக்ரஹயுக்தனான நீ வந்து என்னெஞ்சை தரிப்பியாயாகில் உன் அழகை நான் இழக்குமித்தனையிறே யென்கிறார்.

வந்தாய்போலே—(ப்ரஹ்லாத கஜேந்த்ரர்களுக்கு) வந்தாற் போலே	ஆகில்—நடக்குமாகில்
	கொந்து—கொத்துக்களாலே
	ஆர்—நிறைந்த
	காயாவின்—காயாவினுடைய
வந்தும்-(ஒருப்ராதுர்ப்பாவம்பண்ணி) வந்தாகிலும்	கொழுமலர்—செவ்விப்பூவின்
	திருநிறத்த—நிறத்தையுடையனாய்
என்—(உன்னைக்கிட்ட ஆசைப்பட்ட) என்னுடைய	எந்தாய்—(அவ்வழகைக்காட்டி என்னை யடிமைகொண்ட) ஸ்வாமியே !
மனத்தினை—நெஞ்சை	
நீ—(ஆபத்திலேயுதவின) நீ	யான்—(உன்னழகு ஒழியச்செல்லாத) நான்
சிந்தாமல் — (விரோத்யநுஸந்தாநத்தாலே)சிதிலமாகாதபடி	உன்னை — (இவ்வழகைக் காட்டின) உன்னை
செய்யாய்—பண்ணுகிறிலை ;	
இதுவே — (உதவாமையாகிற) இதுவே	எங்கு—எங்கே
	வந்து—வந்து
இது—(ஸ்வபாவமென்னும்) இதுவாய்	அணுகிற்பன்—கிட்டவல்லேனாவது ?

ஆறு ; — (வந்தாய்.) அப்படிவருகை திருவுள்ள மன்றாகில், ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்கு வந்தாற்போலே யாகிலும் வந்து என் மன த்தினை நீ சிந்தாமற் செய்கிறிலை. நீ செய்யாதொழிந்தால் நான் என்னுடைய யத்நத்தால் உன்னை வந்து சேருகையென்று ஒரு

பொருளில்லை ; இனி உன்னுடைய அழகைக் காணப்பெறாதே இழந்துபோ மித்தனையாகாதே நான் என்கிறார். (௫)

ஈடு ;— அவ; — ஆறும்பாட்டு என்னைப் பார்த்தால் கிட்ட விரகில்லை ; உன்னைப்பார்த்தால் தப்பவிரகில்லை ; ஆனபின்பு, நிரதிசய போக்யமான உன் திருவடிகளைக் கிட்டுவது என்று? என்கிறார். விதிநிஷேதங்களுக்கு வச்யனன்றிக்கே இதரவிஷய ப்ரவணனாய்க் கைகழிந்துபோன நான் உன் திருவடிகளைக் கிட்டுவது என்று? என்கிறார்.

கிற்பன்கில்லே னென்றிலன் முனநாளால் *
அற்பசாரங்களவை சுவைத்தகன்றொழிந்தேன் *
பற்பல்லாயிர முயிர்செய்தபரமா * நின்
நற்பொற்சோதித்தாள் நணுகுவதென்றென்றே? (௬)

ப ;— அநந்தரம், அநாதிகாலம் விஷயப்ரவணனாய் அகன்ற நான், எல்லாவற்றையும் நினைத்தபடி செய்யவல்ல நிரவதிக ஶக்தி யுக்தனான உன்னைக் கிட்டுவது என்று? என்கிறார்.

முனநாளால்—முற்காலமெல்லாம்,
கிற்பன் என்றிலன்—"[illegible]-குர்யாத்" என்று நன்மை செய்ய அடுக்குமென்றால்) வல்லேனென்று இசைந்திலேன் ;
கில்லேன்என்றிலன்—'[illegible]-ந குர்யாத்' என்று தீமை செய்யலாகாதென்றால்) மாட்டேனென்று தவிர்ந்திலேன் ; இப்படி விதிநிஷேதங்களுக்கு அவிஷயபூதனாய்க் கொண்டு
அற்பம்—அத்யல்பமான
சாரங்கள்—பசையையுடைத்தான
அவை—நாநாவித துர்விஷயங்களை
சுவைத்து—(பசையுண்டாக ப்ரமித்து எதிர்ப்பசை கொடுத்து) புஜித்து
அகன்று ஒழிந்தேன்—(அதடியாக) தூரஸ்தனாய்விட்டேன்?
பற்பல—நாநாவிதமாய்,
ஆயிரம்—அஸங்க்யாதமான
உயிர்—ப்ராணிஜாதங்களை
செய்த—(நினைத்தபடி)உண்டாக்கவல்ல
பரமா—ஶக்திபாரம்யத்தை யுடையவனே !
நின்—(வகுத்தஸ்வாமியான) உன்னுடைய
நல்—அப்ராக்ருதமாய்
பொன்—அதிரமணீயமாய்
சோதி—தேஜோமயமான
தாள்—திருவடிகளை
நணுகுவது—கிட்டுவது
என்றுஎன்று—எக்காலம் ?

ஸக்திமானை நீ கிட்டுமதொழிய, என்னைப்பார்த்தால் கிட்ட விரகில்லையென்று கருத்து. (சு)

ஆறு ;— (கிற்பன்.) இதுக்கு முன்புள்ள காலமெல்லாம், உன் திருவடிகளைச் சேருகைக்கு ஈடாயிருப்பதொரு ஸுக்ருதத்தைச் செய்வோமென்று செய்தல், அதுக்கு விரோதியான துஷ்க்ருதத்தைத் தவிருவோமென்று தவிர்தல் செய்திலேன் ; எடுத்தபடி செய்து திரிந்தேன் ; இப்படிசெய்து திரிந்து அதிக்ஷுத்ரமான விஷயரஸத்தை புஜித்து உன் திருவடிகளைச் சேருகைக்கு அர்ஹனன்றிக்கே அகன்று போனேனென்று நசையற்றுப்போய்த் துவளப்புக்கவாறே, பின்னையும் அவனுடைய ஸர்வாத்ம நிர்மாணநுகுண நிரதிஶய ஶக்தியோகத்தை அநுஸந்தித்துப்போய் உஜ்ஜீவித்து, இந்த அபர்யந்தமான ஆத்மாக்களெல்லாரையும் ஸ்ருஷ்டித்தருளின உனக்கு என்னை யொருவனையும் உன் திருவடிகளுக்கு ஈடாம்படி பண்ணியருளுகை, ஒருபொருளோ ? ஆனபின்பு, உன் திருவடிகளை என்று நான்சேர்வது ? என்கிறார். (சு)

ஈடு ;—அவ ;—ஏழாம்பாட்டு. “நின்நற்பொற்சோதித்தாள்” என்று திருவடிகளின் போக்யதையை அநுஸந்தித்தவாறே திருவுள்ளம் பதறத்தொடங்கிற்று ; கெடுவாய் ! உன்படி ஆராயாதே நல்லத்தை ஆசைப்பட்டால் கிடைக்குமோவென்கிறார்.

எஞ்ஞான்று நாமிருந்திருந் திரங்கிநெஞ்சே *
மெய்ஞ்ஞானமின்றி வினையியல்பிறப்பழுந்தி *
எஞ்ஞான்று மெங்குமொழிவற நிறைந்துநின்ற *
மெய்ஞ்ஞானச் சோதிக்கண்ணனை மேவுதுமே. (எ)

ப ;—அநந்தரம், வ்யாப்தனானவன் ஸுலபனானானென்றால், ப்ராப்திஸாதநமில்லாதார் புக்குக் கிட்டப்போமோவென்கிறார்.

நெஞ்சே—நெஞ்சே !
எஞ்ஞான்றும்—எப்போதும்
இருந்து இருந்து—இருந்திருந்து
இரங்கி—(ப்ராப்யாகாங்க்ஷையாலே) து:கித்து
மெஞ்ஞானம் — (தத்ஸாதநமான) தத்த்வஜ்ஞாநம்
இன்றி—இன்றியே
வினை — (தத்விரோதியான) பாபத்தாலே
இயல்—ப்ரவ்ருத்தமான
பிறப்பு—ஜந்மங்களிலே
அழுந்தி—அழுந்தி
நாம்—(இதுவே யாத்ரையான) நாம்

எஞ்ஞான்றும்—என்றுமொக்க	மெய்ஞ்ஞானம்—நித்யஜ்ஞாநமான
எங்கும்—எல்லாவஸ்துக்களிலும்	சோதி—தேஜஸ்ஸையுடையனாய்
ஒழிவு அற—ஒன்றுஞ்சோராதபடி	கண்ணனை—(ஆஶ்ரித ஸௌலப்யார்த்தமாக வந்து அவதரித்த) க்ருஷ்ணனை
நிறைந்து—பரிபூர்ணமாக வ்யாபித்து	மேவுதுமே—எக்காலங்கூடக்கடவோம்
நின்ற—நின்ற	

ஆறு ;—(எஞ்ஞான்றும்.) பகவத் ப்ராப்த்யுபாயமான தத்ஸ்வரூபரூபகுண விபூதி விஷய யாதாத்ம்ய ஜ்ஞாநஹீநராய், தத்ப்ராப்திவிரோதி ஸம்ஸாரத்திலே ப்ரவணருமாயிருப்பது; ஸர்வஜ்ஞனாகையாலே நம்முடைய இந்த அநர்ஹதையை அவன் அறிவது; எஞ்ஞான்று நாம் இருந்து இருந்து அவனைக் காணவேணுமென்று வ்யஸநப்படுகை? அவனைக் காண்கைக்கு நமக்கு எங்கே உபகரணமென்கிறார். (எ)

ஈடு ;—அவ ;—எட்டாம்பாட்டு. ஸாதநாநுஷ்டாநம் பண்ணினார் பலம் தாழ்த்துக் கூப்பிடக்கடவ கூப்பீட்டை, பேற்றுக்கு ஈடாயிருப்பதொரு கைம்முதலில்லாத நான் எங்கே வந்து கிட்டக் கூப்பிடுகிறேனென்கிறார்.

> மேவுதுன்ப வினைகளை விடுத்துமிலேன் *
> ஓவுதலின்றி யுன்கழல் வணங்கிற்றிலேன் *
> பாவுதொல் சீர்க்கண்ணா ! என்பரஞ்சுடரே ! *
> கூவுகின்றேன் காண்பான் எங்கெய்தக்கூவுவனே. (அ)

ப ;—அநந்தரம், ஸௌலப்யகாரிதமான குணவிக்ர ஹௌஜ்ஜ்வல்யத்தை அநுஸந்தித்து, நிஸ்ஸாதநனான நான் எங்கே காணக் கூப்பிடுவதென்கிறார்.

மேவுதுன்பம் — அவிநாபூததுஃகத்தையுடைத்தான	உன் — (ப்ராப்தனான) உன்
வினைகளை—பாபங்களை	கழல்—திருவடிகளை
விடுத்துமிலேன் — (தந்நிவர்த்தகமான தபோஜ்ஞாந ஸாதிகளாலே) போக்குவதுஞ் செய்திலேன் ;	வணங்கிற்றிலேன் — (வணக்குடைத்தவநெறியாலே) வணங்குவதுஞ் செய்திலேன் ;
ஓவுதல் இன்றி—நிரந்தரமாக	பாவு—(எங்குமொக்கப்) பரம்பி
	தொல்—ஸ்வாபாவிகமான

சீர்—ரக்ஷணை காந்தகுணங்களையுடைய
கண்ணா—க்ருஷ்ணனாய்
என்—எனக்கு ஆஸ்ரயஜநகமான
பரஞ்சுடரே—நிரவதிக தேஜோரூபனானவனே!
காண்பான்—காணவேணுமென்று

கூவுகின்றேன் — (ஸாதநாநுஷ்டாநம் பண்ணி யிழந்தார் கூப்பிடுமா போலே) அழைத்துக் கூப்பிடாநின்றேன்;
எங்கு—எங்கே
எய்த—கிட்டுவதாக
கூவுவன்—கூப்பிடுவேன். (அ)

ஆறு;—(மேவு) கர்மயோகமாதல், பக்தியோகமாதல், ஜ்ஞாந யோகமாதல் ஒன்றும் செய்கிறிலேன்; செய்யாதிருந்துவைத்து, ஸௌஸீல்ய வாத்ஸல்ய காருண்யாத்ய ஸங்க்யேய திவ்யாத்ம குணங்களாலும் நிரதிஸயௌஜ்ஜ்வல்ய ஸௌந்தர்ய ஸௌகந்த்யாத்ய ஸங்க்யேய திவ்யரூப குணங்களாலும் பரிபூர்ணனாயிருந்த உன்னைக் காணவேணு மென்றென்று கூப்பிடாநின்றேன்; இப்படி கூப்பீடு உன்னைக் காண்கைக்கு எங்கே கார்யகரமாகிறதென்கிறார். (அ)

ஈடு;—அவ;— ஒன்பதாம்பாட்டு. வரையாதே எல்லார்க்கு மொக்க முகங்கொடுத்த அவதாரங்களுக்குத் தப்பின நான் இனி உன்னைக் கிட்டுகையென்று ஒருபொருளுண்டோ? என்று நிராஸராகிறார்.

கூவிக்கூவிக் கொடுவினைத் தூற்றுள்நின்று *
பாவியேன் பலகாலம் வழிதிகைத்த லமருகின்றேன் *
மேவியன்று நிரைகாத்தவ னுலகமெல்லாம்
தாவியவம்மானை * எங்கினித் தலைப்பெய்வனே. (கூ)

ப;—அநந்தரம், அறிவில்லாதாரோடு அறிவுடையாரோடு வாசியறும்படி உபகரித்த உபகாரத்துக்குத் தப்பின நான் கிட்டுவது எங்கே? என்கிறார்.

கொடு—க்ரூரமான
வினை—பாபங்களுக்கு ஆகரமாய்
தூற்றுள்—(புக்கால் புறப்படவொண்ணாத ஸம்ஸாரமாகிற) தூற்றில் அகப்பட்டு
நின்று—நின்று
பலகாலம்—அநேக காலம் புறப்பட
வழி திகைத்து—வழி அறியாதே ப்ரமித்து

அலமருகின்றேன்— (அதுக்குள்ளே) அலமாநிற்கிற
பாவியேன்—மஹாபாபியான நான்
அன்று—(கோபவ்ருத்தர்கள் பசுமேய்க்கக்) கோலைக்கொடுத்த அன்று
மேவி — (கார்யப்பாடாகவன்றியே) நெஞ்சுபொருந்தி

ஆநிரை—பசுக்களை	அம்மானை - ஸர்வஸ்வாமியை
காத்தவன்—ரக்ஷித்தவனும்	இனி—அன்றைக்குத்தப்பினபின்பு
உலகமெல்லாம்—(இப்படி ப்ராதேசிக மன்றியே) ஸர்வலோகவிஷயமான	கூவிக்கூவி — (ஆர்த்தியாலே) பலகாலும் கூப்பிட்டுக் கூப்பிட்டு
தாவிய — த்ரைவிக்ரமாய தாநத்தையுடைய	எங்கு—எங்கே (கூ)
	தலைப்பெய்வன்—கிட்டுவேன்.

ஆறு;—(கூவிக்கூவி.) அஸங்க்ய நிஷ்க்ரமணமாய் நிரதிஶய து:காஸ்பதமாயிருந்த கொடுவினைத்தூற்றுள்ளே நின்று பாவியேன் பல காலமும் கூவிக்கூவி, எம்பெருமான் திருவடிகளிற்சென்று சேர் வழி யறியாதே திகைத்து அலமருகின்றேன்; திருவாய்ப்பாடியிலே ஸர்வ ஸுலபனாய்க்கொண்டு வர்த்தித்தருளினவன் திருவடிகளைச் சேரமாட்டிற்றிலேன்; அன்று ஒருதேஶவிஶேஷத்திலே வர்த்திக்கையாலே சேரப்பெறுதொழியவும் ஸம்பவிக்கு மன்றோவென்னில்,—ஸர்வ தேஶவர்த்திகளான ஸர்வாத்மாக்களும் தன் திருவடிகளினுள்ளே அகப்படும்படி உலகமெல்லாம் தாவி யருளினவன்று உன் திருவடிகளைச் சேரப்பெற்றிலேன். அன்று சேரப்பெறாத நான் என்று சேரவிருக்கிறேன்? சேராதொழியில் இவ்வாத்மா முடிகை நிஶ்சிதம். இனி அவனுடைய ஈஶ்வரத்வம் விகலமாகவாகாதே புகுகிறது; இனி ஆத்மாவதிகமாக அவன் திருவடிகளைச் சேருகையென்று ஒரு பொருளில்லை யென்று நசையற்றுக் கூப்பிடுகிறார். (கூ)

ஈடு ;—அ ;— ந்தார் பாட்டு. இவர் நசையற்றவாறே 'க்ரமப்ராப்தி பற்றுதுபோலே யிருந்தது' என்று "நீர் ஒரு பெருவிடாயருண்டு" என்று அறிந்து, "உமக்காக வன்றோ வடக்குத் திருமலையிலே நிற்கிறது?" என்று அந்நிலையைக் காட்டித் தரிப்பிக்கத் தரித்து இனியராகிறார்.

தலைப்பெய்காலம் நமன்தமர் பாசம்விட்டால் *
அலைப்பூணுண்ணு மவ்வல்லலெல் லாமகலக் *
கலைப்பல்ஞானத் தென்கண்ணனைக் கண்டுகொண்டு *
நிலைப்பெற் றென்னெஞ்சம் பெற்றது நீடுயிரே. (கO)

ப ;—அநந்தரம், "எங்கினித்தலைப்பெய்வன்" என்கிற நைராஶ்யத்தைக் கண்ட க்ருஷ்ணன் தான் பிறபாடர்க்கு உதவும்படி ப்ரமாணஸித்தமான ஆஸத்தியை ப்ரகாஶிப்பிக்க, அத்தாலே க்லேஶநிவ்ருத்தி பிறந்து ஸந்துஷ்டராகிறார்.

நமன் தமர்—நமன் தமர்
தலைப்பெய் காலம்—தலைப்படுங் காலம்
பாசம்—பாசத்தை
விட்டால்—வீசினால்
அலைப்பூண்—(அவர்களால்) அலைக்கப்படுமையை
உண்ணும் — அநுபவிக்குமா போலே (விரோதி தர்ஶநத்தால்) வந்த
அ—அந்த
அல்லலெல்லாம்—துக்கமெல்லாம்
அகல—விட்டுப்போம்படியாக
பல்—பலவகைப்பட்ட

கலை—வேதங்களாலே
ஞானம்—அறியப்பட்டு
என்—எனக்கு ஸுலபனை
கண்ணனை—க்ருஷ்ணனை
கண்டுகொண்டு – கண்டுகொண்டு
என் நெஞ்சம் — (ஶிதிலமான) என் நெஞ்சு
நிலை—ஸ்தைர்யத்தை
பெற்று—பெற்று
உயிர் — (ஆர்த்தியாலே முடியப்புக்க) ஆத்மாவும்
நீடு—நித்யதையை
பெற்றது—பெற்றது.

ஆறு ;—(தலைப்பெய்) உத்க்ராந்திவ்யஸநம்போலே அதிகோரமாய் அதிதுஸ்ஸஹமாயிருந்த என்னுடைய அந்த பகவத்விஶ்லேஷஜநித நிரவதிகவ்யஸநமும் 'அவனுடைய ஸர்வேஶ்வரத்வத்துக்கு வைகல்யம் வருகிறதென்றுள்ள மஹாபயமும் நிஶ்ஶேஷமாக எல்லாம் போய், என் நெஞ்சும் நிலைநின்று என்னுடைய ஆத்மாவும் நித்யமாம்படி ஶாஸ்த்ரைகஸமதிகம்யனான எம்பெருமானைத் திருமலையிலே கண்ணாலே காணப்பெற்றேனென்கிறார். (௧௦)

ஈடு ;—அவ ;—நிகமத்தில் * இத்திருவாய்மொழி, அப்யஸித்தார்க்கு ஶரீரஸம்பந்தத்தை அறுத்துக் கொடுக்குமென்கிறார் ; தம்முடைய ஆர்த்தியெல்லாம் போம்படி அவன்வந்து முகங்காட்ட, 'நிலைப்பெற் றென்னெஞ்சம் பெற்றது நீடுயிர்' என்றார் இவர் ; அவன் முகத்தைப்பார்த்தவாறே அவனுயிர்நீடுபெற்றதாயிருந்தது.

உயிர்களெல்லா வுலகமு முடையவனைக் *
குயில்கொள் சோலைத்தென் குருகூர்ச்சடகோபன் *
செயிரில்சொல் லிசைமாலையாயிரத்து ளிப்பத்தும் *
உயிரின்மே லாக்கையூனிடை யொழிவிக்குமே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ப ;—அநந்தரம், இத்திருவாய்மொழிக்குப் பலமாக, தாம் அபேக்ஷித்த ஶரீரஸம்பந்த நிவ்ருத்தியை அருளிச்செய்கிறார்.

எல்லாவுயிர்கள்—எல்லாவுயிர்களையும்
எல்லாவுலகமும் — எல்லாலோகங்களையும்
உடையவனை—உடையவனை
குயில்கொள்—குயில்களையுடைத்தான
சோலை—சோலைகளையுடைய
தென்—அழகிய
குருகூர்ச் சடகோபன் — திருநகரிக்கு நிர்வாஹகரான ஆழ்வார் அருளிச்செய்த
செயிர்—லக்ஷணக்குறை
இல்—அற்ற
சொல்— சொல்லையுடைத்தாய்
இசை— இசையோடுங்கூடின
மாலை—தொடையையுடைத்தான
ஆயிரத்துள்—ஆயிரத்துள்
இப்பத்தும்— இப்பத்தும்
உயிரின்மேல்—ஆத்மாவுக்கு வந்தேறியாய் பந்தகமான
ஊன் ஆக்கையிடை — மாம்ஸாதிமய ஶரீரத்தினிடை நின்றும்
ஒழிவிக்கும்—கழியும்படி பண்ணும்
செயிர்—குற்றம்
இது கலிவிருத்தம். (கக)

ஆறு ;—(உயிர்கள்.) இப்படி ஆழ்வார் உளராகையாலே எம்பெருமானுடைய ஸர்வேஶ்வரத்வமும் அவிகலமாய், திருநகரியும் அடங்க ஸம்ருத்தமாயிற்று என்கிறது - 'உயிர்களெல்லா வுலகமுமுடையவனைக் குயில்கொள்சோலைத் தென்குருகூர்' என்கிறவிடம். இனிமேல் இத்திருவாய்மொழி பகவதநுபவவிரோதியான ப்ரக்ருதி ஸம்பந்தத்தைப் போக்குமென்கிறது. (கக)

ஈடு ;—முதற்பாட்டில் - 'நீ தந்த கரணங்களைக்கொண்டு அநர்த்தத்தை விளைத்துக்கொண்ட நான் உன்னை வந்துகிட்டுகையென்று ஒன்றுண்டோ?' என்றார் ; இரண்டாம்பாட்டில் - 'இப்படி சூழ்த்துக்கொண்ட பாபங்களைப் போக்கித் தேவரீரை நான் எப்போது வந்து கிட்டக்கடவேனென்றார் ; மூன்றாம்பாட்டில் - 'இதுக்கு முன்பு உன்னைப்பெறுகைக்குத்தந்த கரணகளேபரங்களைக்கொண்டு நான் சூழ்த்துக்கொண்ட பாபங்கள் நான்போக்கிவர வென்றால் அது செய்யப்போகாது ; இனி நான் அறியாததாய் நீ அறிந்திருப்பதொரு உபாயத்தை அருளிச்செய்யவேணும்' என்றார் ; நாலாம் பாட்டில் - 'உன்னை யொழிந்த வ்யதிரிக்தங்களிலே என்னுடைய தாழ்ச்சியைத் தவிர்த்து உன்திருவடிகளிலே வாழ்ச்சியேயாம்படி பண்ணவேணும்' என்றார் ; அஞ்சாம்பாட்டில் - 'அப்படி செய்யப் பார்த்திலையாகில் உன்போக்யதையை எனக்கென்றிய வறிவித்தாய்?' என்றார் ; ஆறாம்பாட்டில் - 'இல்லாதவன்று உண்டாக்கின அருமை

யுண்டோ உண்டாக்கின விதுக்கு ஒரு குறைதாநம் பண்ண ? என்றார் ; ஏழாம்பாட்டில் - ' நம்படியறியாதே நாம் அவனை வெறுக்கிறதென் ?' என்றார் ; எட்டாம்பாட்டில் - ' தீரக்கழிய ஸாதநாநுஷ்டாநம்பண்ணினேனோ, நான் இங்ஙனங் கூப்பிடுகைக்கு ?' என்றார் ; ஒன்பதாம்பாட்டில் - ' அந்த த்ரைவிக்ரமபதாநத்துக்குத் தப்பின நான் இனி எங்கே கிட்டப்போகிறேன் ?' என்றார் ; பத்தாம்பாட்டில் - அவ்வளவிலே வந்து அவன் முகங்காட்டித் தரிப்பிக்கத் தரித்தார் ; நிகமத்தில் - பலஞ்சொல்லித் தலைக்கட்டினார். (கக)

வடக்குத்திப்பிள்ளை திருவடிகளே சரணம்.

இரண்டாந்திருவாய்மொழி வ்யாக்யாநங்கள் முற்றுபெற்றன.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

மூன்றும் பத்து.

மூன்றாந்திருவாய்மொழி—ஒழிவில்காலம் - ப்ரவேஶம்.

ஈடு ;—"நிலைப்பெற்றென் னெஞ்சம்பெற்றது நீடுயிர்" என்று அவனைக்கிட்டித் தம்முடைய ஸ்வரூபம் பெற்றவாறே, ஸ்வரூபாநுரூபமான அடிமை பெறவேணுமென்று பாரிக்கிறார் இத்திருவாய்மொழியில்

ப்ராக்ருதிஸம்பந்தத்தாலே வந்த கரணஸங்கோசத்தை அநுஸந்தித்து நினைத்த வகைகளெல்லாம் பரிமாறப்பெறாமையாலே நொந்து, "அவன் முதலிலே இத்தைத் தவிர்த்துத் தன்னை யநுபவிக்கைக்கு உறுப்பாக அநேக முபாயங்களைப் பார்த்துவைத்தான்; அவற்றைத் தப்பினேன்; அவதாரங்களைத் தப்பினேன்; அந்தராத்மதையைத் தப்பினேன்; இப்படி அவன் பார்த்துவைத்த வழிகளடையத் தப்பின நான் இனிக் கிட்டி யநுபவிக்கையென்று ஒரு பொருளுண்டோ? இழந்தேனே யன்றோ" என்று நைராஶ்யத்தோடே முடியப்புக, "வாரீர் ஆழ்வீர்! நாம் உமக்காகவன்றோ திருமலையிலே வந்துநிற்கிறது; உம்மை இவ்வுடம்போடே அநுபவிப்பிக்கைக்காக இங்கே வந்துநின்றோமே; நீர்போய்க் காணக்கடவ காட்சியை நாம் இங்கேவந்து காட்டினோமே; இனித்தான் உமக்கு இவ்வுடம்பு நம்மோட்டை யநுபவத்துக்கு விரோதியுமன்றுகாணும்; நீர்தாம் கரண ஸங்கோசாநுஸந்தாநத்தாலே நோவு படுகிறீராகில், முதலிலே இதில்லாதாரும் நம்மை யநுபவிக்கும்போது படும்பாடு இதுகாணும்; அவர்களும் வந்தநுபவிக்கிற விடங்காணும் இவ்விடம்; ஆனபின்பு, நீரும் இவ்வுடம்போடே நினைத்த வடிமைகளெல்லாம் செய்யும்" என்று தான் திருமலையிலே வந்து நிற்கிற நிலையைக் காட்டி ஸமாதாநம்பண்ண, ஸமாஹிதராய், 'தர்மியொன்றே யாகையாலே விஷயம் எங்குமொக்கப் பூர்ணமானபின்பு, ஒருதேஶவிஶேஷத்திலே போனால் செய்யக்கடவ அடிமைகளெல்லாம் இந்நிலத்திலே செய்யலாம்படிக்கு ஈடாகக் குறையற்றிருந்ததாகில், நமக்குத்தான் இவ்வுடம்பு விரோதியாகையுமன்றிக்கே அடிமைசெய்கைக்குப் பாங்

காயிருந்ததேயாகில், இனித்தான் அங்குப்போனாலும் (க) "ஸோ ஶ்நுதே ஸர்வாந் காமாந்" - ஸோஶ்நுதே ஸர்வாந்காமாந்" என்கிறபடியே குணாநுபவமிறே பண்ணுகிறது; அந்த ஸீலாதிகுணங்கள்தான் ஸ்பஷ்டமாயிருக்கிறதும் இங்கேயாகில், இனி அங்குள்ளாரும் வந்து அடிமை செய்கிறதும் இங்கேயாகில், நாமும் அங்கே போய்ப்புக்கு அடிமைசெய்வோம்; என்றுகொண்டு, பசியுமுண்டாய்க்கையிலே சோறுமுண்டாயிருக்குமவன் நீரும் நிழலுங்கண்டால் உண்ணப் பாரிக்குமாபோலே இவரும் அடிமைசெய்யப் பாரிக்கிறார். இவ்விஷயத்தில் அடிமைசெய்ய ஒருப்படுவார்க்கெல்லாம் உள்ளதொன்றாயிற்று, முன்பே பாரித்துக்கொண்டு இழியுமது; (உ)"அஹம் ஸர்வம் கரிஷ்யாமி - அஹம் ஸர்வம் கரிஷ்யாமி" என்றிறே இளைய பெருமாள் படி. போஜநபரனாயிருக்குமவன் ஊணத்யாயம் படிக்குமாபோலே இருப்பதொன்றாயிற்று, இவருடைய கைங்கர்ய மநோரதம். *

ப: — மூன்றாந்திருவாய்மொழியில், இவர் "ஶேஷத்வ விரோதியான தேஹஸம்பந்தாதிகளை நிவர்த்திப்பிக்கவேணும்" என்று அபேக்ஷிக்க, "நிவ்ருத்தவிரோதிகளைக் கொள்ளும் ஶேஷவ்ருத்தியைக் கொள்ளுகைக்கன்றோ நாம்ஸந்நிஹிதராயிற்று?" என்று பெரிய திருமலையில் நிற்கிற நிலையை ப்ரகாஶிப்பித்த ஈஶ்வரனுக்கு "ஸர்வப்ரகார ஶேஷவ்ருத்தியும்பண்ணுகையே ஶேஷபூதனுக்கு ஸ்வரூபம்" என்று அறுதியிட்டு அதிலே உத்யோகத்தைப் பண்ணுவதாக, கைங்கர்யப்ரதிஸம்பந்தியினுடைய ஸர்வாதிகஶேஷித்வத்தையும், ஶேஷியினுடைய குணவிக்ரஹாதி வைலக்ஷண்யத்தையும், ஸர்வப்ரகார விலக்ஷணனுடைய ஸௌரிஸேவ்யத்வத்தையும், இப்படி ஸர்வாதிகனுடைய ஸீலாதிஶயத்தையும், ஸீலவானுடைய போக்யதையையும், போகார்த்தமான ஆஶ்ரயண ஸௌகர்யத்தையும், அவன் நிற்கிற திருமலைதானே பரமஸாம்யப்ரதமென்னுமிடத்தையும், அதுதன்னை அநுபவிக்கவே ப்ரதிபந்தகம் ஸ்வயமேவ நிவ்ருத்தமாமென்னுமத்தையும், அந்த தேஶஸம்பந்தத்தாலே தேஶிகனான ஈஶ்வரனும் அநிஷ்ட நிவர்த்தகனென்னுமத்தையும், அவன் தேஶமான திருமலை தானே பரமப்ராப்யமென்னுமிடத்தையும் அருளிச்செய்து, ஏவம்வித தேஶவர்த்தியான ஈஶ்வரன்பக்கல் கைங்கர்யமே ஸ்வரூபாநுரூப புருஷார்த்தமென்று உத்யுக்தராகிறார்.

(க) தை - ஆந - க.
(உ) ரா - அயோ - ஙக - உரு.

ஈடு ;—அவ ;—முதற்பாட்டில் " திருவேங்கடமுடையான் திருவடிகளிலே ஸர்வதேஶ ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் எல்லா வடிமைகளும் செய்யவேணும்" என்கிறார்.

ஒழிவில்காலமெல்லா முடனுய்மன்னி *
வழுவிலாவடிமை செய்யவேண்டும்நாம் *
தெழிகுரலருவித் திருவேங்கடத்து *
எழில்கொள்சோதி எந்தைதந்தைதந்தைக்கே. (க)

ப ;—முதற்பாட்டில், "ஸர்வாதிகஶேஷியான திருவேங்கட முடையானுக்கு ஸர்வப்ரகார விஶிஷ்டமான ஶேஷவ்ருத்தியைப் பண்ணவேணும்" என்று ஸ்வஸம்பந்தி ஜநங்களோடே ஒருப்பட்டுப் பாரிக்கிறார்.

தெழிகுரல்—மஹாத்வநியாம்படி ஶப்திக்கிற

அருவி— அருவியையுடைய

திருவேங்கடத்து — திருவேங்கட மாகிற திருமலையில் நிலையாலே

எழில் கொள்—அழகையுடைத்தான

சோதி — தேஜோமய விக்ரஹத்தை யுடையனுன

எந்தை தந்தை தந்தைக்கு — நம்முடைய குலக்ரமாகதனுன நாதனுக்கு

நாம் — (அஸாதாரண ஶேஷபூதரான) நாம்

ஒழிவில் காலமெல்லாம்—ஒழிவில்லாதகாலமெல்லாம்

உடனுய் — (ஸர்வதேஶத்திலும்) உடனுய்

மன்னி — (ஸர்வாவஸ்தையிலும்) பிரியாதுநின்று

வழுஇலா—ஒன்றும் நழுவாதபடி

அடிமை—ஸர்வஶேஷவ்ருத்திகளையும்

செய்யவேண்டும் — பண்ணவேணும்.

ஶேஷவ்ருத்தியில்நித்யாபேக்ஷையேசேதநனுக்கு ஸ்வரூபமென்று கருத்து.

எழில்கொள் சோதியென்று — (க) "ஈடு ஜயம ஹிதமே தஜா யஸாஜநகா த்மஜா - அப்ரமேயம் ஹிதத்தேஜோ யஸ்யஸா ஜநகாத்மஜா" என்கிற படியே ஸௌந்தர்ய ரூபையான லக்ஷ்மியோட்டை ஸம்பந்தத்தைச் சொல்லுவாருமுளர். தெழித்தல் - முழங்குதல். (க)

ஆறு ;—(ஒழிவில்காலம்.) இப்படி நிரவதிகஸௌந்தர்யாதி கல்யாணகுண விஶிஷ்டனுன திருவேங்கட முடையானைக் கண்டு லப்தாத்ம ஸஞ்ஜீவநராய் அவனுடைய குணங்களாலே தாஸ்யமுபாகதராயிருந்த ஆழ்வார், " திருவேங்கடமுடையானை புஜிக்கவேணும்" என்று தம்முடைய திருவுள்ளத்திலே கோலி அதுக்குத் துணையா

(க) ரா - ஆர, ௩எ-கக.

கத் தம்முடைய திருவுள்ளத்தையும் தம்முடைய திருவுள்ளம் போலே பகவதேகபோகரா யிருப்பாரையுங் குறித்து "திருவேங்கடமுடையானை புஜிக்க வாருங்கள்; அவனை புஜிக்கையாவது - அவன் திருவடிகளிலே ஸர்வதேஶ ஸர்வகால ஸர்வா வஸ்த்தோசித ஸர்வ ஶேஷவ்ருத்தியையும் பண்ணுகை" என்கிறார். (௧)

ஈடு;—அவ;—இரண்டாம் பாட்டு. "பரிபூர்ண கைங்கர்யத்தைப் பெறவேணுமென்று மநோரதியா நின்றீர்; அது பின்னை இஶ்ஶரீர ஸம்பந்தமற்று அர்ச்சிராதி மார்க்கத்தாலே ஒரு தேஶ விஶேஷத்திலே போனால் பெறுமதொன்றிறே" என்ன, - "அங்குள்ளாரெல்லாரும் வந்து அடிமைசெய்கிறது இந்நிலத்திலே யாகையாலே, இங்கே பெறக் குறையில்லை" என்கிறார்.

எந்தைதந்தைதந்தை தந்தைதந்தைக்கும்
முந்தை * வானவர் வானவர்கோனொடும் *
சிந்துபூமகிழும் திருவேங்கடத்து *
அந்தமில்புகழ்க் காரெழிலண்ணலே. (௨)

ப;—அநந்தரம், இப்படி ஸர்வாதிகஶேஷியினுடைய குண விக்ரஹாதி வைலக்ஷண்யத்தை அருளிச்செய்கிறார்.

எந்தை தந்தை தந்தை தந்தை தந்தைக்கும் முந்தை — நமக்கு உத்பாதகபாரம்பர்யத்தில் ப்ரதமோத்பாதகனை பந்தத்தை யுடையவன்
வானவர்—பரமபதவாஸிகள்
வானவர் கோனொடும் — (தங்களுக்கு நிர்வாஹகரான) ஸேனை முதலியாரோடே
சிந்து—தூவின
பூ—விடுபூக்கள்
மகிழும் — (ஸ்வஸ்பர்ஶத்தாலே) விகஸிதமாம்படியான
திருவேங்கடத்து—திருமலையில் வாஸத்தாலே
அந்தம் இல்—முடிவு இல்லாத
புகழ்—குணப்ரதையையுடையனாய்
கார் எழில் — ஶ்யாமமான வடிவழகையுடைய
அண்ணல் — ஸர்வாதிகன்.
குணத்தாலும் அழகாலும் ஸர்வாதிகனென்று கருத்து.
கார்—மேகமுமாம். (௨)

ஆறு;—(எந்தைதந்தை) திருநாட்டிற்சென்று எம்பெருமானுக்கு அடிமைசெய்வதன்றோ எல்லார்க்கும் பரமப்ராப்யமென்னில்;- திருநாட்டிலுள்ள நித்யஸித்தபுருஷர்களும் திருவேங்கட முடை

யான் குணங்களிலே அகப்பட்டு அவன் திருவடிகளிலே யன்ரு வந்து அடிமைசெய்கிறது; ஆதலால், தன்னுடைய நிரவதிக கல்யாணகுணங்களாலே தன்னடியார்க்கு என்னை ஆட்படுத்தியருளின திருவேங்கட முடையானுக்கு அடிமைசெய்யு மதுவே நமக்குட் பரமப்ராப்யம்; அவனுக்கு அடிமை செய்யவேண்டும் நாம்; வாருங்களென்கிருர். (உ)

ஈடு;—அவ;—மூன்ருபாட்டு. "நாம் இங்ஙனே அடிமைசெய்ய வேணுமென்று மநோரதிக்கு மிதுவேயோ வேண்டுவது? அவன் தான் நமக்கு அநுபவஸம்ருத்தியைத் தருமோ?" என்ன, "நிரபேக்ஷரானவர்களுக்குத் தன்னைக் கொடுத்துக்கொண் டிருக்கிறவன், ஸாபேக்ஷரான நமக்குத் தரச்சொல்லவேணுமோ?" என்கிருர்.

அண்ணல்மாய னணிகொள்செந் தாமரைக்
கண்ணன் * செங்கனி வாய்க்கருமாணிக்கம் *
தெண்ணிறைச்சுனை நீர்த்திருவேங்கடத்து *
எண்ணில்தொல்புகழ் வானவரீசனே. (ங)

ப;—அநந்தரம், 'இப்படி விக்ரஹாதி வைலக்ஷண்யத்தை யுடையவன் நித்யஸூரி ஸேவ்யன்' என்கிருர்.

அண்ணல்—வடிவுதன்னிலே ஸ்வாமியென்று தோற்றும்படியாய்
மாயன்—தத்நுரூபமான ஆஸ்சர்யகுண விபூதியுக்தனாய்
அணி—(அந்த ஐஸ்வர்ய ஸூசகமான) அழகை
கொள்—உடைய
செந்தாமரைக்கண்ணன்—புண்டரீகாக்ஷனாய், (அப்பார்வைக்குத் தோற்றாரை ஸாந்த்வநம் பண்ணுகைக்கு உறுப்பாய்)
செம்—சிவந்த
கனி—கனிபோன்ற
வாய்—திருப்பவளத்தையுடையனாய்
கருமாணிக்கம்—(இவ்வவயவசோபையிலே அகப்பட்டாரை யநுபவிப்பிக்கைக்கு) நீலரத்நம்போலே உஜ்ஜ்வலமான விக்ரஹத்தை யுடையவன்;
தெள்—(அவன்தன் நிறம்போலே) தெளிந்து ப்ரகாஸமான
நிறம்—நிறத்தையுடைய
சுனைநீர்—சுனைநீரையுடைத்தான
திருவேங்கடத்து—திருமலையிலே நிற்கையாலே
இல்—எண்ணிறந்து

தொல்—ஸ்வாபாவிகமான
புகழ்—குணப்ரதையையுடையவனாய்
வானவர் — (அப்புகழை யநுபவிக்க வந்த) பரமபத வாஸிகளுக்கு
ஈசன் — (போகப்ரதாநம் பண்ணி நிற்கிற வேற்றத்தையுடைய) ஸ்வாமியானவன்.
அண்ணல்—குறிஞ்சிநிலத்துத் தலைவனாகவுமாம். (௩)

ஆறு ;—(அண்ணல்.) ஏவம்ரூபமான ஸ்வாநுபவ ரூபஸம்ருத்தியைத் தந்தருளுமோ? என்னில்,—நித்யநிரவத்ய நிரதிஶயௌஜ்ஜ்வல்ய ஸௌந்தர்யாத்ய ஸங்க்யேய கல்யாண குணகண மஹோததியாயிருந்த தன்னை அஸங்க்யேயரான நித்யஸித்த புருஷர்களெல்லாருக்கும் புஜிக்கக் கொடுத்துக்கொண்டிருக்கிறவொரு பரமோதாரனல்லனோ அவன்? ஆதலால், உங்களுக்குந் தன்னை புஜிக்கத் தந்தருளுமென்கிறார். (௩)

ஈடு ;—அவ ;—நாலாம்பாட்டு. 'நித்ய ஸூரிகளுக்குத் தன்னைக்கொடுத்தவன்' என்றார், கீழ் ; அத்யந்தஹேயனான என்பக்கலிலே ஸங்கத்தைப் பண்ணினவனுக்கு 'நித்யஸூரிகளுக்குத் தன்னைக் கொடுத்தா'னென்னுமிது ஓர் ஏற்றமோ வென்கிறார்.

ஈசன்வானவர்க் கென்பனென்றால் * அது
தேசமோதிரு வேங்கடத்தானுக்கு *
நீசனேன்நிறை வொன்றுமிலேன் * என்கண்
பாசம்வைத்த பரஞ்சுடர்ச்சோதிக்கே. (௪)

ப ;—அநந்தரம், நித்யஸூரி ஸேவ்யத்வமாகிற ஆதிக்யம் என்னை அங்கீகரித்த அப்ஶீலத்தை யுடையவனுக்குத் தேஜஸ்ஸோ வென்கிறார்.

வானவர்க்கு—நித்யஸூரிகளுக்கு
ஈசன்—நிர்வாஹகன்
என்பன்—என்றுசொல்லாநிற்பன் ;
என்றால்—இப்படிச்சொன்னால்
நீசனேன் — (ஹேயகுணங்களால் பூர்ணனாகையாலே) தண்ணியனாய்
நிறைவு—(ஸத்குணங்களாலே வரும்) பூர்த்தி
ஒன்றும் இலேன் — ஒன்றுமின்றியேயிருக்கையாலே
என்கண்—'தன்னுடைய ஹேயப்ரத்யநீக கல்யாணைகதாநத்வத்துக்கு ப்ரதிபட ஸ்வபாவனான) என் பக்கலிலே
பாசம்—நிரவதிகஸங்கத்தை

வைத்த—வைத்து	திருவேங்கடத்தானுக்கு — (இந்நீர்மைக்குச் சிரமஞ்செய்த) திருமலையில் நிலையையுடையவனுக்கு
பாஞ்சுடர்—(அத்தாலே) நிரதிசயௌஜ்ஜ்வல்யவிசிஷ்டமான	
சோதிக்கு—தேஜோமய திவ்யவிக்ரஹயுக்தனாய்	அது—(வானவர்க்கீசனென்ற) அது
	தேசமோ—தேஜஸ்ஸோ ? (௪)

ஆறு ;—(ஈசன்.) ஸ்வரூபத்திலும் ஸ்வபாவத்திலும் மற்றும் ஸர்வப்ரகாரத்திலும் 'இனியில்லை' என்னும்படி தண்ணியனாயிருந்த என்பக்கலிலே ஸங்கத்தைப்பண்ணி எனக்குத் தன்னை போக்யமாகத் தந்தருளின மஹாகுணத்தை யுடையவனுக்கு, அயர்வறும் அமரர்களுக்குத் தன்னைக் கொடுக்குமென்னுமிது ஓரேற்றமோவென்கிறார். (௪)

ஈடு ;—அவ ;—அஞ்சாம்பாட்டு. "நித்யஸூரிகளுக்கும் தன்னைக்கொடுத்தானென்றது ஓரேற்றமோ எனக்குத் தன்னைத் தந்தவனுக்கு?" என்றார் கீழ் ; 'எனக்குத் தன்னைத் தந்தானென்கிற விது தான் ஓரேற்றமோ, என்னிலும் தாழநின்றாரைத் தேடிப்பெறாதேயிருக்கிறவனுக்கு ?' என்கிறார் இதில்.

சோதியாகியெல்லா வுலகும்தொழும் *
ஆதிமூர்த்தியென் றளவாகுமோ *
வேதியர்முழு வேதத்தமுதத்தைத் *
தீதில்சீர்த்திரு வேங்கடத்தானையே. (௫)

ப ;—அநந்தரம், ஶீலவானென்கிற இவ்வளவோ ? அந்த ஶீலத்தேயுடே நிரதிசய போக்ய பூதனானவனுக்கு ஸர்வேஶ்வரனென்றால் பெருமையோவென்கிறார்.

வேதியர்—வைதிகருடைய	அமுதத்தை — போக்யதாதிசயத்தையுடையனாய்
முழுவேதத்து — ஸமஸ்த வேதங்களிலும (௧) "ஆநந்தோ ப்ரஹ்ம—ஆநந்தோப்ரஹ்ம:" (௨) "ரஸோ வை ஸ: - ரஸோ வைஸ:" என்று ப்ரதிபாதிக்கப்பட்ட)	தீது — (போக்தாக்களுடைய யோக்யதையைப் பார்த்து அநுபவிப்பிக்கை யாகிற) தீது
	இல்—இன்றியே

---

(௧) தை - ஆந. (௨) தை - ஆந.

சீர்—(கானமும் வானரமும் வேடுமான தாழ்ந்தாரை அநுபவிப்பிக்கும்) குணத்தையுடையனை	எல்லாவுலகும் — உத்கர்ஷாபகர்ஷ விபாகமற எல்லாரும்
திருவேங்கடத்தானை — திருவேங்கடமுடையானை	தொழும்—ஆஶ்ரயிக்கும்படியாய்
சோதியாகி — உஜ்ஜ்வலவிக்ரஹ விஶிஷ்டனாய்க்கொண்டு	ஆதி—ஸமஸ்தகாரணபூதனை
	மூர்த்தி—ஸர்வேஶ்வரன்
	என்றால்—என்றால்
	அளவாகுமோ—பெருமையோ.

மேன்மையும் ஆஶ்ரயணீயத்வமும் நீர்மையோடு கூடின போக்யதைக்குத் தகுதியல்லவென்று கருத்து. அளவு - பெருமை. (ரு)

ஆறு ;—(சோதியாகி) எனக்குங்கூடத் தன்னைத் தந்தருளினுனென்னு மிதுதான் ஓரேற்றமோ, தன் படியைப் பார்த்தால் அவனுடைய ஔதார்யாதி குணங்களைச் சொல்லுமிடத்தில் அந்த வேதங்களை சொல்லவேண்டாவோ? நமக்கு நிலமோ?; ஆதலால், இப்படி பரமோதாரனை திருவேங்கட முடையான் தன் திருவடிகளில் அடிமைசெய்கையாகிற ஸம்பத்தை உங்களுக்குத் தந்தருளுமென்கிறார். (ரு)

ஈடு ;—அவ ;—ஆறும்பாட்டு. கீழ் திருமந்த்ராந்தத்தை அருளிச்செய்தார் ; அதிலே அருளிச்செய்யா தஶோரர்த்த முண்டிறே நமஶ்ஶப்தார்த்தம். * (அதாவது - அவித்யாதிகளும் கழிகை.) அத்தை அருளிச்செய்கிறார். அவன் ரக்ஷ்யவர்க்கத்திலே பெற்ற வளவால் பர்யாப்தனன்றிக்கே யிருந்தாலும், நாம் அபிநிவிஷ்டரானாலும், ஶரீரஸம்பந்த நிபந்தமாக அநாதிகாலம் நாம் பண்ணிவைத்த பகவத்ப்ராப்தி ப்ரதிபந்தக கர்மங்கள் செய்வதென்? என்ன, நாம் இதிலே துணியவே அவையெல்லாம் தன்னடையே நசிக்கு மென்கிறார்.

வேங்கடங்கள்மெய்ம் மேல்வினைமுற்றவும் *
தாங்கள் தங்கட்கு நல்லனவேசெய்வார் *
வேங்கடத்துறை வார்க்குநமவென்ன
லாங்கடமை * அது சுமந்தார்கட்கே. (௬)

ப ;—அநந்தரம், அநிஷ்ட நிவ்ருத்தி பூர்வகமான பகவதநுபவ போகத்துக்கு உறுப்பான ஆஶ்ரயண ஸௌகர்யத்தை அருளிச்செய்கிறார்.

வேங்கடத்து—திருமலையிலே

உறைவார்க்கு—(ஸர்வஸமாஶ்ரயணீயனும்படி வந்து) நித்யவாஸம் பண்ணுகிற ஸ்வாமிக்கு அநந்யார்ஹமாம்படி

நமவென்னலாம் — (ஸ்வஸ்வாதந்த்ர்ய நிவ்ருத்தி யுக்தமான அத்யந்த பாரதந்த்ர்ய ஸூசகமாய் ஸுலபமாய்ஸ்வரூப ப்ராப்தமான நமோ வாசகமாகிற

அதுகடமை—(க) "ஸுஹவிஷா ॰ தேநம உக்திம் விதேம - பூயிஷ்டாந்தேநம உக்திம் விதேம" என்றுஶ்ருதிஸித்தமான) அந்த வ்யாபாரத்தை

சுமந்தார்கட்கு — (அதிகார விஶேஷத்யோதகமாம்படி) தங்கள் தலையிலே சுமந்தவர்களுக்கு

கடங்கள்—(அநுபவ விநாஶ்யமாய்ப் பழ) ருணரூபமான பூர்வார்ஜிதபாபங்கள்

மேல்வினை — (ஆஶ்ரயணாநந்தர பாவியான) உத்தராகங்கள்

முற்றவும் வேம்—(உ) "தீயினில் தூசாகும்" என்கிறபடியே) தக்தங்களாம்.

மெய் — (இது நிர்த்தோஷ வேதாந்த ஸித்தமாகையாலே) ஸத்யம்; (இப்படி அநிஷ்டம் ஸ்வயமேவ நிவ்ருத்தமானதால்

தாங்கள்—(ஆஶ்ரிதரான) தாங்கள்

தங்கட்கு—தங்கள் ஸ்வரூபத்துக்கு

நல்லனவே — இனிமையை விளைப்பதான பகவத்ஸ்வரூபாத்யநுபவத்தையே

செய்வார்—செய்வார்கள்.

கடமென்று—ருணத்ரயத்தையும் மெய்ம்மேல்வினையென்று—தேஹாநுபந்தி கர்மங்களையுஞ்சொல்லுவர்.

உத்தராகத்தைவேமென்றது — பலப்ரோஹமில்லாத ஸாமயத்தாலே

சுமந்தாரென்றது— (ங) "க்ஷேமி ஜஹா ௮ - "அஞ்சலிபரம்" என்னுமாபோலே, ஸ்ரீவராஹ்ருதயத்தாலே கனத்திருக்கை. (௩)

ஆறு;—(வேங்கடங்கள்.) இந்த ப்ராப்யத்தைப் பெறுகைக்கு உபாயம் ஏதென்னில், ஸர்வாதிகாரமாய் அத்யந்த ஸுகரமாயிருந்த "வேங்கடத் துறைவார்க்கு நம:" என்கிற விச்சொல்லைச் சொல்லவே அந்தக் கைங்கர்ய ப்ரதிபந்தகமான பாபங்களும் கரிஷ்யமாணமான பாபங்களுமெல்லாம் நிஶ்ஶேஷமாக தக்தமாய்ப்போம்; பின்னைத் தங்காமுகந்தபடியெல்லாம் செய்யப்பெறலாம் என்கிறார். (௩)

(க) யஜு - கா - க, ப்ர - ௪. (உ) திருப்பாவை - ரு.
(ங) ஸ்ரீகுணரத்ந.

ஈடு ;—அவ ;—ஏழாம்பாட்டு. முதற்பாட்டில் ப்ரார்த்தித்த கைங்கர்யத்தைத் திருமலை தானேதரு மென்கிறார். ப்ராப்திபலமாய் வருமதிறே கைங்கர்யம்.

சுமந்துமாமலர் நீர்சுடர்தூபங்கொண்டு *
அமர்ந்துவானவர் வானவர்கோனொடும் *
நமன்றெழும் திருவேங்கடம் நங்கட்குச்
சமன்கொள்வீடுதரும் தடங்குன்றமே. (எ)

ப ;—அநந்தரம், ப்ரஸ்துதமான ஆஶ்ரயணத்தினுடைய காஷ்டாஸூசநார்த்தமாக அவன் நின்றருளின திருமலைதானே பரமஸாம்யாபத்தியைத் தரும் என்கிறார்.

மா—ஶ்லாக்யமான
மலர்—புஷ்பங்களையும்
மா—நன்றான
நீர்—ஜலத்தையும்
மா—விலக்ஷணமான
சுடர்—தீபத்தையும்
மா தூபம்—அகுருதூபத்தையும்
சுமந்துகொண்டு — ஸாதரமாக வஹித்துக்கொண்டு
அமர்ந்து — (ப்ரயோஜநாந்தரங்களில் பரகு பரகற்று) அநந்யப்ரயோஜநராய் அமர்ந்து
வானவர்—நித்யஸூரிகள்
வானவர் கோனொடும் — (தங்களுக்கு நிர்வாஹகரான) ஸேனை முதலியாரோடே கூட
நமன்று—(அத்யந்த பாரதந்த்ர்ய ப்ரகாஶகமான) நமநத்தைப் பண்ணி
எழும் — (ஸ்வரூபலாபம்பெற்று) க்ருதார்த்தராம்படியாய்
திருவேங்கடம்— திருவேங்கடமென்று திருநாமத்தை யுடைத்தாய்
தடம்—(லக்ஷ்மீஸஹாயனான ஸர்வேஶ்வரன் ஸ்வைர விஹாரம்பண்ணும்படி) ஸுவிஸ்தீர்ணமான
குன்றம்—திருமலை
நங்கட்கு—(ப்ராப்யருசியையுடைய) நமக்கு
சமன்—பரமஸாம்யாபத்தியை
கொள்—உடைத்தான
வீடு — மோக்ஷாநந்தத்தை
தரும்—தரும்.

பகவச்சேஷதைகரஸமான ஸ்வஸாம்யத்தை மோக்ஷரூபபலமாகத் தருமென்றுமாம். நமன்று - வணங்கி. 'வானவர் வானவர்கோனொடுமென்று - ப்ரஹ்மாதிகளோடு கூடின தேவர்கள்' என்றுஞ் சொல்லுவர். (எ)

ஆறு ;—(சுமந்து) இஸ்ஸம்ருத்தி பெறுகைக்குத் திருவேங்கடமுடையானை இப்படி வருந்தவேணுமோ ? பரமப்ராப்யபூத பகவத் கைங்கர்யாபேக்ஷராயிருந்த நம்பக்கல் குணநிரூபண பூர்வகமாக

நமக்கு அந்த ப்ராப்யத்தைத் தவிருகையாகிற இப்பழுதொன்றும் வாராதபடி நிர்ஹேதுகமாகத் திருமலைதானே அயர்வறு மமரர்களுக்குக் கொடுத்தாற்போலே திருவேங்கட முடையான் திருவடிகளிலே தான்செய்யும் சேஷவ்ருத்தியெல்லாம் நமக்குத்தரு மென்கிறார்.

ஈடு ;— அவ:— எட்டாம்பாட்டு. "வேங்கடங்கள்" என்கிற பாட்டிற் சொன்ன விரோதி நிவ்ருத்தியையும் திருமலையாழ்வார் தாமே பண்ணித்தருவ ரென்கிறார். ஒரு புருஷார்த்தத்தைத் தரவேணுமோ? திருமலைதானே நமக்கு உத்தேஶ்யம்; சேஷிக்கு உத்தேஶ்யமானது சேஷபூதனுக்கு உத்தேஶ்யமாகச் சொல்லவேணுமோ? என்கிறாராகவுமாம்.

குன்றமேந்திக் குளிர்மழைகாத்தவன் *
அன்றுஞால மளந்தபிரான் * பரன்
சென்றுசேர் திரு வேங்கடமாமலை *
ஒன்றுமேதொழ நம்வினையோயுமே. (அ)

ப ;— அநந்தரம், ஏவம்பூதமான திருமலையை அநுபவிக்க, ப்ராப்தி ப்ரதிபந்தகங்கள் ஸ்வயமேவ நஶிக்கு மென்கிறார்.

குளிர்மழை— கல்மாரியாலே (கோகோபீஜநங்கள் ஈடுபட்டவன்று)
குன்றம்— ஒருமலையை
ஏந்தி— சுமந்து
காத்தவன்— காத்தவனாய்
அன்று— (மஹாபலியாலே அபஹ்ருதமான) அன்று
ஞாலம்— பூமியை
அளந்த— அளந்து வ்யாபரித்து
பிரான் — (அநந்யார்ஹ மாக்கிக்கொண்ட) உபகாரகனான
பரன் — பரமசேஷியானவன், (ஒருமலையை மேற்கொண்டு ரக்ஷிக்கலா மென்றும், நின்ற விடத்தே நின்று ரக்ஷிக்கலாமென்றும்)
சென்று— சென்று
சேர்— சேர்ந்த
திருவேங்கடம்— திருவேங்கடமாகிற
மா— பெரிய
மலை— திருமலை
ஒன்றுமே— ஒன்றையுமே, (தேசிகனளவுஞ் செல்லவேணு மென்கிற நிர்ப்பந்த மற்று)
தொழ— அநுபவிக்க
நம்— நம்முடைய
வினை — (தேசிகாநுபவ) ப்ரதிபந்தக பாபங்கள்
ஓயும்— (தன்னடையே) கழலும். (அ)

ஆறு ;—(குன்றமேந்தி.) 'ஸ்வரூப குண சேஷ்டிதாதிக ளெல்லாவற்றாலும் ஸ்வஸ்ய பரஸ்யச நிரதிஶய போக்யபூதனான எம்பெருமானுக்குங் கூடப் பரமப்ராப்யமான திருமலை தான் வேறொன்றைத் தரவேணுமோ? தானே பரமப்ராப்யமன்றோ? ஆதலால், திருமலைதன்னையே அநுபவிக்க, நம்முடையக்லேஶமெல்லாம்போம்' என்கிறார். (அ)

ஈடு ;—அவ ;—ஒன்பதாம்பாட்டு. நம் விரோதியையும் போக்கி ப்ராப்யத்தையும் திருமலையாழ்வார் தாமே தருவர் என்றார், கீழ் இரண்டுபாட்டாலே; இப்படி விரோதிபாபங்களைப் போக்கி ப்ராப்யத்தைத் தருகைக்குத் திருமலை யாழ்வாரெல்லாம் வேணுமோ? திருமலையாழ்வாரில் ஏகதேசம் அமையாதோ? என்கிறார் இதில். * ('ஏகதேஶம்' என்கிறது, அப்பனை:) (க) "வடமாமலையுச்சி" என்னக்கடவதிறே, திருவேங்கட முடையானை

ஓயுமூப்புப் பிறப்பிறப்புப்பிணி *
வீயுமாறுசெய் வான்திருவேங்கடத்
தாயன் * நாண்மலராம் அடித்தாமரை *
வாயுள்ளும்மனத்துள்ளும் வைப்பார்கட்கே. (கூ)

ப ;—அநந்தரம், தேஶிகனான திருவேங்கட முடையானுக்கும் விரோதி நிவர்த்தகத்வம் தேஶஸம்பந்தத்தாலே யென்கிறார்.

நாண்மலராம் — ("நாட்பூ மலர்ந்தது" என்னலாம்படி) ஸுகுமாரமான
அடித்தாமரை—திருவடித்தாமரைகளை
வாயுள்ளும்—வாக்குள்ளும்
மனத்துள்ளும்—நெஞ்சினுள்ளும்
வைப்பார்கட்கு—வைக்குமவர்களுக்கு
ஓயும் — பல ஹாநியைப் பிறப்பிக்கக் கடவ
மூப்பு—மூப்பு
பிறப்பு—(அந்த ஶரீரத்துக்கு அடியான) பிறப்பு
இறப்பு—(அதின்) விநாஶம்
பிணி—(மூப்போடு பிணைந்துவருகிற) வ்யாதிகள் (இவற்றை)
வீயுமாறு—நஶிக்கும்படி
செய்வான்—பண்ணுமவன்
திருவேங்கடத்து—திருமலையிலே வர்த்திக்கிற
ஆயன்—க்ருஷ்ணன். (கூ)

ஆறு ;—(ஓயுமூப்பு.) திருவேங்கட முடையானன்றோ ப்ராப்யம்; திருமலையே ப்ராப்யமென்று சொல்லுவானென் னென்னில்;—

(க) தி - மொ - எ - கO - ங.

திருவேங்கட முடையானுடைய ப்ராப்யத்வமும் திருமலையோ டுள்ள ஸம்பந்தத்தாலே வந்ததாதலால் திருமலையே ப்ராப்யமென் கிறார். (௯)

ஈடு ;—அவ ; - பத்தாம்பாட்டு. ஆக திருமலையாழ்வார் எல்லார்க்குமொக்க உத்தேஶ்ய மானபின்பு எல்லாரும் ஒக்கத் திருமலையாழ்வாரை ஆஶ்ரயியுங்கோளென்கிறார்.

வைத்தநாள்வரை எல்லைகுறுகிச்சென்று *
எய்த்திளைப்பதன் முன்னமடைமினோ *
பைத்தபாம்பணை யான்திருவேங்கடம் *
மொய்த்தசோலைமொய் பூந்தடந்தாழ்வரே. (௧௦)

ப ;—அநந்தரம், நிரதிஶயபோக்யமான திருமலையைப் பரமப்ராப்யமாகப் பற்றுங்கோளென்று ஸ்வஜநத்தைக் குறித்து உபதேஶிக்கிறார்.

பைத்த—விரிகிற பணங்களையுடைய	நாள்—நாளினுடைய
பாம்பு—அநந்தனை	வரை—அவதியான
அணையான்—அணையாக வுடையனான ஸர்வேஶ்வரன்	எல்லை—முதலெல்லையானது
	குறுகி—உங்களைக்கிட்டி
திருவேங்கடம்—(தத்ஸாரூப்யத்தாலே ஆதரிக்கிற) திருமலையில்	எய்த்து—(கரணங்களுக்கு) பலஹாநி பிறந்து
	இளைப்பதன் முன்னம்—(அதடியாக நெஞ்சு) இளைப்பதற்குமுன்னே
மொய்த்த—செறிந்த	
சோலை—சோலையினுடைய	
மொய்—அழகிய	சென்று—(க) ("போமினூரருளீர் புரிந்து" என்கிறபடியே) சென்று
பூ—பூக்களையுடைத்தான	
தடம்—இடமுடைய	
தாழ்வர்—திருத்தாழ்வரையை	அடைமின்—ப்ராபியுங்கோள்.
வைத்த—(உங்களுக்கு) ஸங்கல்பித்து வைத்த	தாழ்வர்—தாழ்வரை
	மொய்—செறிவும், அழகும். (௧௦)

ஆறு ;—(வைத்த.) 'ஆதலால் ஈண்டெனச்சென்று திருமலையை அநுபவியுங்கள்' என்கிறார். (௧௦)

(க) ௪ - திருவ - ௪௪.

ஈடு ;— அவ ;— நிகமத்தில், இத்திருவாய்மொழி அப்யஸிக்க வல்லார் ஆழ்வார் ப்ரார்த்தித்தபடியே திருவேங்கட முடையான் திருவடிகளிலே எப்பேர்ப்பட்ட அடிமைகளும் செய்யப் பெறுவ ரென்கிறார்.

தாள்பரப்பிமண் தாவியவீசனை *
நீள்பொழிற்குருகூர்ச்சடகோபன்சொல் *
கேழிலாயிரத் திப்பத்தும்வல்லவர் *
வாழ்வர்வாழ்வெய்தி ஞாலம்புகழவே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ப ;— அநந்தரம், இத் திருவாய்மொழிக்குப் பலமாகக் கைங்கர்யைஶ்வர்ய லாபத்தை அருளிச்செய்கிறார்.

(படிக்களவாக)
தாள் — திருவடிகளை
பரப்பி — பரப்பி
மண் — பூமியை
தாவிய — அளந்துகொண்ட
ஈசனை — ஸர்வேஶ்வரனை
நீள் — உயர்ந்த
பொழில் — பொழிலையுடைத்தான
குருகூர் — திருநகரிக்கு நிர்வாஹகரான
சடகோபன் — ஆழ்வார்
சொல் — அருளிச்செய்த
கேழ் இல் — ஒப்பு இல்லாத
ஆயிரத்து — ஆயிரத்து
இப்பத்தும் — இப்பத்தையும்
வல்லவர் — (அர்த்தாநுஸந்தாநத்தோடே அப்யஸிக்க) வல்லார்கள்
வாழ்வு — (இவர் ப்ரார்த்தித்த) கைங்கர்யஸாம்ராஜ்யத்தை
எய்தி — பெற்று
ஞாலம் — லோகமடங்க
புகழ — கொண்டாடும்படி
வாழ்வர் — அடிமைசெய்து வாழப்பெறுவர்.
இது — கலிவிருத்தம். (கக)

ஆறு :— (தாள்பரப்பி.) ஸர்வாத்மாக்களுக்கும் புஜிக்கலாம்படி திருவடிகளைப் பரப்பி இந்தலோகத்தை அளந்தருளின திருவேங்கட முடையானைச் சொன்ன இத்திருவாய்மொழியை வல்லார், லோகமெல்லாம் புகழும்படி எல்லாவற்றிலும் மேற்பட்ட திருமலையாகிற மஹாஸம்பத்தைப் பெற்று வாழ்வ ரென்கிறார். (கக)

ஈடு ;— நிக ;— முதற்பாட்டில் - திருவேங்கடமுடையான் திருவடிகளிலே ஸர்வதேஶ ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் எப்பேர்ப்பட்ட அடிமைகளும் செய்யவேணுமென்று மநோரதித்தார் ; இர

ண்டாம் பாட்டில் - 'அது ஒரு தேசவிசேஷத்திலே போனல் பெறுமதன்றே?' என்ன, 'அங்குள்ளாரும் இங்கேவந்து அடிமை செய்கிற தேசமன்றோ? நமக்கு இங்கேபெறத் தட்டில்லை' என்றார்; மூன்றாம்பாட்டில் - 'நிறைவாளர்க்குத் தன்னைக்கொடுத்தவன் குறைவாளர்க்குத் தன்னைத் தரச்சொல்லவேணுமோ?' என்றார்; நாலாம் பாட்டில் - 'அவர்களுக்குத் தன்னைக் கொடுத்தானென்றது ஒரேற்றமோ? எனக்குங்கூடத் தன்னைத் தந்தவனுக்கு?' என்றார். அஞ்சாம்பாட்டில் - 'எனக்குத் தன்னைத் தந்தானென்றது ஒரேற்றமோ, என்னிலும் தண்ணியாரைத் தேடக்கிடையாமே நிற்கிறவனுக்கு?' என்றார்; ஆறாம்பாட்டில் - 'இவ்வடிமையிலே இழிய, விரோதிகளும் தன்னடையேபோம்' என்றார்; ஏழாம்பாட்டில் - 'இக்கைங்கர்யத்தைத் திருமலையாழ்வார் தாமே நமக்குத் தருவர்' என்றார்; எட்டாம்பாட்டில் - 'அத்திருமலையாழ்வார் தாமே நம் விரோதிகளைப் போக்கித் தம்மையும் தருவர்' என்றார்; ஒன்பதாம்பாட்டில் - 'திருமலையாழ்வாரெல்லாம் வேணுமோ நமக்கு ப்ராப்யத்தைத் தருகைக்கு? அவரோட்டை ஸம்பந்தமுடையார் அமையும்' என்றார்; பத்தாம்பாட்டில் - 'சேஷிக்கு உத்தேஸ்யமாகையாலே சேஷபூதரானவரெல்லாரும் திருமலையாழ்வாரை ஆஸ்ரயியுங்கோள்' என்றார்; நிகமத்தில் - பலஞ்சொல்லித் தலைக்கட்டினார். (கக)

வடக்குத் திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்.

மூன்றாம்பத்து மூன்றாம் திருவாய்மொழி வ்யாக்யாநங்கள் முற்றிற்று.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

நான்காந் திருவாய்மொழி—புகழுநல்லொருவன் ப்ரவேசம்.

ஆறு;—(புகழும்.) இப்படி திருவேங்கட முடையானை புஜிக்க வாருங்களென்று தம்முடைய திருவுள்ளத்தையும், திருவுள்ளம் போலே பகவத் கைங்கர்யைக ரதிகர்களா யிருப்பாரையும் அழைத்து, அவனை புஜிக்கையிலே ப்ரவ்ருத்தராய்ச் செல்லாநிற்க, நடுவே திருமலையினுடைய போக்யதையைக் கண்டு திருமலையை அநுபவித்து, பின்னையும் திருவேங்கடமுடையானுடைய ஸர்வவஸ்து ஶரீரித்வத்தையும், ஸர்வவஸ்து கதாஶேஷ தோஷை ரஸம்ஸ்ப்ருஷ்டத்வத்தையும், திவ்யரூப பூஷணாயுத மஹிஷீ பரிஜநாஸ்தாந விஶிஷ்டத்வத்தையும் சொல்லி புஜிக்கிறார். *

ப;—நாலாந் திருவாய்மொழியில், கீழ் ப்ரஸ்துதமான கைங்கர்யத்துக்கு ப்ரதிஸம்பந்தி ஸகல சேதநாசேதந விஶிஷ்டனான நாராயணனாகையாலே அவனுடைய ஸர்வப்ரகார விஶிஷ்டத்வத்தையும் அநுஸந்தித்து, பூதபௌதிகாத்மக ஸகல ப்ரகாரத்வத்தையும், பூதகார்யவிஶேஷ ப்ரகாரத்வத்தையும், அஸாதாரண விக்ரஹயோகத்தையும், ரத்நாதி விலக்ஷண பதார்த்த ப்ரகாரத்வத்தையும், ஸரஸமான போக்யவஸ்து ப்ரகாரத்வத்தையும், வேத வைதிகரூபமான காலபர்யந்த ஶப்தாஶப்ரகாரத்வத்தையும், போகமோக்ஷரூபமான புருஷார்த்த ப்ரகாரத்வத்தையும், லோகப்ரதாநரான ப்ரஹ்மாதி ஶரீரகத்வத்தையும், இப்படி ஸமஸ்த சேதநாசேதந ப்ரகாரத்வத்தையும், தத்கததோஷை ரஸம்ஸ்ப்ருஷ்டத்வத்தையும் அநுஸந்தித்து, ப்ரகாரவாசக ஶப்தங்களாலே ப்ரகாரியான தன்னைச் சொல்லும்படியான அவிநாபாவத்தை ப்ரகாஶிப்பிக்கையாலே அவனுக்கு ப்ரகாரதயா ஶேஷபூதராயிருக்கிற இவர், ப்ரகாரவாசக ஶப்தங்களும் அஸாதாரண திவ்ய நாமங்களோபாதி அங்குத்தைக்கு வாசகமாகையாலே தத்தச்சப்தங்களாலே தம்முடைய ஸ்வரூபாநுரூபமான வாசிக கைங்கர்யம் பண்ணுகிறார்.

ஈடு;—கீழே "ஒழிவில் காலமெல்லா முடனாய்மன்னி வழுவிலாவடிமை செய்யவேண்டும் நாம்" என்று - அடிமைசெய்யப் பாரித்தார்; இவர்பாரித்த பாரிப்புக்கெல்லாம் போரும்படி ஈஶ்வரனும் தன்னுடைய ஸர்வாத்மபாவத்தைக் காட்டிக்கொடுத்தான். இருவரும் இலையகலப்படுக்கு மித்தனைபோக்கி அவனும் அடிமைகொள்ள மாட்டான், இவரும் அடிமைசெய்யமாட்டார்; (க) "நவெளஹ தீஜ

(க) பார - உத்யோ - அசு - கரு.

நாரூந: - நசேச்சதிஜநார்த்தந:” என்கிறபடியே ஸ்வாராதனுய் இத்தலையில் பெற்றதுகொண்டு த்ருப்தனுமவனே அவன்; இவரது தானே * ஆராதகாதலிறே; இவருடைய பாரிப்புக்கு ஈடாக அவன் ஸர்வாத்ம பாவத்தைக் காட்டிக்கொடுத்த விடத்தில் அடிமை செய்கையின்றிக்கே, அவனுடைய குணங்களை அநுஸந்தித்து ஶிதிலாந்த:கரணராய், (௧) “காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும்” என்னும் ஸ்வபாவரே இவர்; (௨) “புனையுங்கண்ணி யெனதுடைய வாசகஞ்செய்மாலையே வான்பட்டாடையுமஃதே” என்று - இவருடைய உக்திமாத்ரத்தை எல்லாமாகக் கொள்ளும் ஸ்வபாவனிறே அவனும். அவன் ஸ்வரூபத்தோடு குணத்தோடு விபூதியோடு சேஷ்டிதங்களோடு வாசியின்றிக்கே எல்லாம் உத்தேஶ்யமாயிருக்குமிறே இவருக்கு.

அவைதன்னைக் கண்டகண்ட விடங்களிலே அநுபவிக்கை யன்றிக்கே, மாணிக்கத்தையும் வயிரத்தையும் முத்தையும் ஓராரத்திலே சேர்த்து அநுபவிப்பாரைப்போலே, அவற்றையுடைய அவன் பக்கலிலே சேர்த்து அநுபவிக்கிறார். இவர்க்கு அவன் குணங்களோடு விபூதியோடு வாசியின்றிக்கேயிறே இருப்பது. குணங்களுக்குப்பிரித்து ஸ்திதியாதல் உபலம்பமாதலில்லாதாப்போலே, விபூதிக்கும் அவனையொழிய ஸ்திதியாதல் உபலம்பமாதலில்லாத படியும். இன்னமும் முக்தனுக்கு லீலாவிபூதியும் அநுபாவ்ய மாகாநின்றதிறே ததீயத்வாகாரத்தாலே; (௩) “நோபஜநஂ ஸ்மரந்நிதம் ஶரீரம்” என்கிற விடத்தில் கர்ம நிபந்தநமான ஆகாரத்தை ஸ்மரியானென்கிற வித்தனையிறே. கர்மநிபந்தநமான ஆகாரம் ஸ்ம்ருதி விஷய மாகாதபடியான பாகம் பிறந்தால், ததீயமாயே தோற்றி எல்லாமொக்க அநுபாவ்யமாக விருக்குமிறே. இவ்விபூதி தன்னிலே (௪) “எண்ணுத மானிடத்தை யெண்ணுதபோதெல்லா மினியவாறே” என்று சிலரைச்சொல்லி, (௫) “பேராளன் பேரோதும் பெரியோரை யொருகாலும் பிரிகிலேனே” என்று சிலரை ஒருகாலும் மறக்கவொண்ணுதபடி யாகவும் சொல்லாநின்றதிறே; ஜ்ஞாநம் பிறந்த தஶையிலே யிருக்கும்படியாயிற்று இது; ப்ராப்தி ஸமயத்

(௧) பெரியதிருவ - ௩௬.
(௨) ௪ - ௩ - ௨.
(௩) சாந்தோ - அ - ௧௨.
(௪) தி - மொ - ௧௧ - ௬ - ௭.
(௫) தி - மொ - ௭ - ௪ - ௯

தில் வந்தால் இவ்வாசியின்றிக்கே எல்லாமொக்க அநுபாவ்யமாகா நின்றதிறே. ஈஶ்வர விபூதியாயிருக்கச் செய்தேயிறே சிலரை (க) "பொல்லாத தேவரைத் தேவரல்லாரைத் திருவில்லாத்தேவரைத் தேறேன்மின்" என்கிறது ; நின்ற நின்ற நிலைகளிலே ஹேயோபாதேயவிபாகம் பண்ணி யநுஸந்திக்க வேண்டிவருமிறே, ஶாஸ்த்ரங்களெங்குமொக்கச் சேரக்கிடக்கும்படி பார்க்கும்போது இவர்க்கு அவன் குணங்களோடு விபூதியோடு வாசியற அநுபாவ்யமாம்படியிறே மயர்வற மதிநல மருளிற்று ;

கர்மநிபந்தநமான ஸ்ம்ருதி பின்னாடாதபடியிறே இவர்க்கு ஈஶ்வரன் வெளிச்சிறப்புப் பண்ணிக்கொடுத்தது. இவர்க்குத் தன் ஸ்வரூபரூப குணாதிகளை அடையக் காட்டிக்கொடுக்கக் கண்டு, விபூதிகாரணமான பூதங்கள் பௌதிகங்கள் அவற்றில் உஜ்ஜ்வலமான மாணிக்யாதிகள் ரஸ்யமான பதார்த்தங்கள் செவிக்கினிய கானாதிகள் மோக்ஷாதி புருஷார்த்தங்கள் இஜ்ஜகத்துக்கு ப்ரதாநரான ப்ரஹ்மாதிகள் இவற்றுக்கு அடையக் காரணமான ப்ரக்ருதி புருஷர்கள் இவற்றையடைய விபூதியாகவுடையனாய், இதினுள்ளே அந்தராத்மதயா அநுப்ரவேசித்து இவற்றோடே கலசி நிற்கச்செய்தேயும் தத்கததோஷை ரஸம்ஸ்ப்ருஷ்டனாய், (உ) "அநஶ்நந்நந்ய:- அநஶ்நந்நந்ய:" என்கிற ப்ரமாண பலத்தாலே இச்சேதநனுக்கு வரக்கடவதான ஸுகித்வது:கித்வாதிகள் தன்பக்கல் தட்டாதபடி நிற்கையேயன்றிக்கே நியாமகத்வத்தால் வந்த புகரையுடையவனுமாய், விபூதியில் அவ்வோபதார்த்தங்களுக்கு வாசகமான ஶப்தங்கள் அசித்தையும் அசித்துக்கு அபிமாநியான ஜீவனையும் காட்டுகிற அளவிலே ததந்தர்யாமியான பரமாத்மாவையும் காட்டி, இஸ்ஸங்காதத்துக்கு வாசகங்களாய் அவன் பக்கலிலே பர்யவஸித்திருக்கையாலே, அஸாதாரணமான நாராயணாதி ஶப்தங்களோடு விபூதிவாசகமான ஶப்தங்களோடு வாசியற ஸர்வ ஶப்தங்களும் அவனையே சொல்லுகிறனவா யிருக்கிறபடியையும், இவ்விபூதி தான் புறம்பாய் விஞ்சிக் காட்டுகையன்றிக்கே தோளில் தோள்மாலையோபாதி தகுதியாய் அநுபாவ்யத்திலே அந்தர்ப்பூதமா யிருக்கிற படியையும் அநுஸந்தித்து க்ருதார்த்தராய், பாரித்தபடியே எல்லாவடிமையும் செ

(க) ச - திருவ - ரு.   (உ) முண்ட - ரு - க.

ய்யமாட்டாமையாலும், அவன்தான் * கோவைவாயா ளிற்படியே ஒன்றையே எல்லாவடிமையுமாகக் கொள்ளும் ஸ்வபாவ னுகையா லும் வாசிகமான அடிமையிலே ப்ரவ்ருத்தராய், மஹாவாதத்தில் பலோபாதாநம் பண்ணுவாரைப் போலே, அத்தைச் சொல்லு வேனே? இத்தைச் சொல்லுவேனே? என்று இங்ஙனே அலமரு கிறார். ஆக, இத்தால் - "வழுவிலா வடிமை செய்யவேண்டும் நாம்" என்று தாம் பாரித்தபடியே அடிமைசெய்து தலைக்கட்டுகிறார்.

ஈடு ;—அவ ;— முதற்பாட்டில் - அவனுடைய குணங்களையும், விபூதிகாரணமான பூதபஞ்சகங்களையும் சேரப்பிடித்து, இத் திரு வாய்மொழியிலே மேல் பரக்கச்சொல்லுகிற அர்த்தத்தை ஸங்க்ர ஹேண அருளிச்செய்கிறார்.

புகழுநல்லொருவனென்கோ? பொருவில்சீர்ப்பூமியென்கோ? *
திகழுந்தண்பரவையென்கோ? தீயென்கோ? வாயுவென்கோ? *
நிகழுமாகாசமென்கோ? நீள்சுடரிரண்டுமென்கோ? *
இகழ்விலிவ்வனைத்துமென்கோ? கண்ணனைக்கூவுமாறே. (க)

ப ;—முதற்பாட்டில், பூதபௌதிகாத்மக ஸகல ப்ரகாரத்வத்தை ஸங்க்ர ஹேண அருளிச்செய்கிறார்

கண்ணனை—(ஸர்வாத்மபாவ ப்ரகாசக னுன) க்ருஷ்ணனை
கூவுமாறு—சொல்லும்ப்ரகாரம்
புகழும்—(வேதங்களாலும் வைதிகபுரு ஷர்களாலும்) புகழப் பட்ட
நல் — விலக்ஷணகுண விக்ரஹவிபூதி யுக்தனுன
ஒருவன்—அத்விதீயன்
என்கோ—என்பேனே?
பொரு இல்—ஒப்பு இல்லாத
சீர் — (தாரகத்வாதி) குண பூர்த்தியை யுடைய
பூமியென்கோ—பூமியென்கோ?
திகழும்—ப்ரஸந்நதையாலே உஜ்ஜ்வல மாய்
தண்—சீதளஸ்வபாவமான
பரவையென்கோ-ஜலராசியென்கோ?
தீயென்கோ—(ஜாட்யநிவர்த்தகமான) அக்நியென்கோ?
வாயுவென்கோ—(ப்ராணநாதி ஹேது வான) வாயுவென்கோ?
நிகழும்—(ஸ்வகார்யவஸ்துக்களை ஆவ ரித்து) ஸந்நிஹிதமான
ஆகாசமென்கோ—ஆகாசமென்கோ?
நீள் — (கிரணத்வாரத்தாலே) எங்கும் போய் ப்ரகாசகமான
சுடரிரண்டுமென்கோ — சந்த்ராதித்யர் களாகிற இரண்டுதே ஜஸ்ஸுமென்கோ?
இகழ்வில்—ஒன்றொழியாமல்
இ அனைத்துமென்கோ—இவையெல் லாமென்கோ?
'இகழ்வில்' என்றது—த்யஜிக்கப்படா த உபாதேய மென்று மாம்.

ஆறு ;—ஸர்வைச்வர்யஸம்ஸ்தாயாநனாய் ஸகல கல்யாணகுண விசிஷ்டனாய் நிருபமனா யிருந்தவனென்று சொல்லுவேனோ? க்ஷமாதி குணயுக்தமான ப்ருதிவ்யாதி பூதங்களுக்கு அந்தராத்மபூதனென்று சொல்லுவேனோ? ப்ரக்ருஷ்டதேஜோ விசிஷ்டரான சந்த்ரஸூர்யாதிகளுக்கு அந்தராத்மபூதனென்று சொல்லுவேனோ? அன்றியே ஒன்று ஒழியாமே இந்த ஸர்வ பதார்த்தங்களுக்கும் அந்தராத்மபூதனென்று சொல்லுவேனோ? இவனை எங்ஙனே சொல்லுவேன்? என்கிறார். (க)

ஈடு ;—அவ ;—இரண்டாம்பாட்டு. கீழ்ச்சொன்ன பூதபஞ்சகங்களுடைய காரியங்களை க்ரமத்திலே பேசுகிறார்.

கூவுமாறறியமாட்டேன் குன்றங்களனைத்துமென்கோ ? *
மேவுசீர்மாரியென்கோ ? விளங்குதாரகைகளென்கோ ? *
நாவியல்கலைகளென்கோ ? ஞானநல்லாவியென்கோ ? *
பாவுசீர்க்கண்ணனெம்மான் பங்கயக்கண்ணனையே. (உ)

ப ; —அநந்தரம், உக்தமான மஹாபூதங்களினுடைய கார்யவிசேஷத்தை அருளிச்செய்கிறார்.

குன்றங்களனைத்தும் என்கோ — காடிந்யத்தாலே பூமி கார்யமான எல்லாப் பர்வதங்கள் என்கோ
மேவுசீர் — ஸகலஜீவநத்வரூபகுணோந்மேஷத்தை யுடையதாய் ஜலகார்ய விசேஷமான
மாரியென்கோ — வர்ஷம்,
விளங்கு — (ஔஜ்ஜ்வல்யத்தாலே) தேஜ:கார்யமான
தாரகைகளென்கோ — நக்ஷத்ராதிகள், (வாயுகார்யமான)
நா — நாவில்
இயல் — இயற்றியையுடைத்தான
கலைகளென்கோ — வித்யாஸ்தாநங்கள்,
ஞானம் — அர்த்தஜ்ஞாநத்துக்கு
நல்லாவியென்கோ — சரீரமாய் ஆகாசகார்யமான சப்தவிசேஷங்களென்று சொல்வேனோ?
பா — பரந்த
சீர் — குணவிபூதிகளையுடையனாய்
கண்ணன் — எனக்கு ஸுலபனாய்
பங்கயம் — பங்கயம்போன்ற
கண்ணனை — கண்ணழகாலே
எம்மான் — என்னைத் தோற்பித்துக்கொண்ட ஸ்வாமியை
கூவுமாறு — சொல்லும்ப்ரகாரம்
அறியமாட்டேன் — அறியமாட்டுகிறிலேன்.

'நல்லாவி' என்றது ஜ்ஞாநத்துக்கு அவ்யவதாநேந உத்பாதகமாகை. (உ)

ஆறு ;—(கூவுமாறு.) மஹீதரவர்ஷ நக்ஷத்ர ஶ்ருதிஸ்ம்ருதி திஹாஸ புராணாதிரூப ஸப்ததஜ்ஜந்யஜ்ஞாநாதிகளுக்கு ஆத்மபூத னென்கிறது. (௨)

ஈடு ;—அவ ;—மூன்றாம்பாட்டு. ஜகச்சரீரனாய் நின்றத்தோடு அஸாதாரண விக்ரஹ யுக்தனாய் நின்றத்தோடு வாசியற்றிருக்கை யாலே, ஜகதாகாரனாய் நின்ற நிலையோடே அஸாதாரண விக்ரஹத் தையும் சேர்த்தநுபவிக்கிறார்.

பங்கயக்கண்ணனென்கோ? பவளச்செவ்வாயனென்கோ? *
அங்கதிரடியனென்கோ? அஞ்சனவண்ணனென்கோ? *
செங்கதிர்முடியனென்கோ? திருமறுமார்பனென்கோ? *
சங்குசக்கரத்தனென்கோ? சாதிமாணிக்கத்தையே. (௩)

ப ;—அநந்தரம், இந்த ப்ரகாரங்களினுடைய ஆநுரூப்ய ஸூசநார்த்தமாக மத்யே அஸாதாரண விக்ரஹத்தை அநுஸந்திக்கிறார்.

சாதி—ஆகரஜமான
மாணிக்கத்தை—மாணிக்கம்போலே அத்யுஜ்ஜ்வலமான விக்ரஹத்தை யுடையவனை
பங்கயம்—பங்கயம்போலும்
கண்ணனென்கோ—கண்ணை யுடையவன்
பவளம்—பவளம்போலும்
செம்—சிவந்த
வாயனென்கோ—வாயன்
அம்—தர்ஶநீயமாய்
கதிர்—ஒளிவிடுகிற
அடியனென்கோ—திருவடிகளையுடையவன்
அஞ்சனம்—அஞ்சநம்போலும்
வண்ணனென்கோ—நிறத்தையுடையவன்
செம்—சிவந்த
கதிர்—ப்ரபையையுடைத்தான
முடியனென்கோ—திருவபிஷேகத்தையுடையவன்
திரு—லக்ஷ்மீஸ்தாநமான
மறு—(ஸ்ரீவத்ஸத்தாலே) சிஹ்நிதமான
மார்பனென்கோ—திருமார்பையுடையவன்
சங்குசக்கரத்தனென்கோ—(அங்க: புரத்துக்குக் காவலென்னலாம்படியான) ஆயுதபூர்த்தியையுடையவனென்று சொல்லுவேனோ?

ஆறு ;—(பங்கயக்கண்ணன்.) அஶேஷதோஷ ப்ரத்யநீகமாய்க் கல்யாணைகதாநமாய் நிரதிஶய தேஜோமயமாய் நிரதிஶயதீப்தியுக்த திவ்யபூஷணாயுத விஶிஷ்டமான திவ்யரூபத்தை யுடையவனென்று சொல்லுகிறது. (௩)

ஈடு ;—அவ ;—நாலாம்பாட்டு. நம்முதலிகளிலே ஒருவரை ஒருவன் "எனக்கு எம்பெருமானை நினைக்க விரகு சொல்லவேணும்" என்ன, 'நான் உனக்கு அது சொல்லுகிறேன் ; நீ எனக்கு அவனை மறக்க ஒருவிரகு சொல்லவல்லையே ?" என்றாராம். அதுக்குக் கருத்து - பகவத்வ்யதிரிக்த ஸமஸ்த பதார்த்தங்களுக்கும் அவனையொழிய வஸ்துத்வநாமபாக்த்வங்கள் இல்லாமையாலே, ஏதேனுமொரு பதார்த்தம் தோற்றும்போதும் அவனை முன்னிட்டுக்கொண்டாயிற்றுத் தோற்றுவது. ஜாதிகுணங்களுக்குப் பிரித்து ஸ்திதியாதல் உபலம்பமாதல் இல்லாதாப்போலே, த்ரவ்யமாயிருக்கச் செய்தேயும் அவனையொழியப் பிரித்து ஸ்திதியாதல் உபலம்பமாதல் இல்லையாம்படியிருக்கிறதிறே ப்ரமாணபலத்தாலே. அல்லாதார்க்கு விஶேஷணம்ஶம் தோற்றுகிற வோபாதி விஶேஷ்யம் தோற்றும்படியாயிருக்கிறதிறே இவர்களுக்கு.

விஶேஷணம்ஶத்திலே தாத்பர்யமின்றிக்கே யிருக்குமதுவுமன்றிக்கே, விஶிஷ்டத்திலும் விஶேஷ்யமே தோற்றுகிறதாயிற்று, விஶேஷ்ய ப்ராதாந்யத்தாலே. * (விஶேஷ்யமே அதிஸ்புடமாயிருக்குமென்றபடி.) இதிறே வேதாந்த ஶ்ரவணமுடையாருக்கு இருக்கும்படி. (க) "[illegible] - வேதாந்த ஶ்ரவணேநஹி வ்யுத்பத்தி:பூர்யதே" என்றுநின்றதிறே. இத்தால் ஸமஸ்தவஸ்துக்களும் ப்ரகாரமாகத் தான் ப்ரகாரியாயிருக்கும்படியைச் சொல்லுகிறது. இதுதன்னிலும் (௨) "[illegible] - யத்யத்விபூதிமத்ஸத்த்வம் ஸ்ரீமதூர்ஜ்ஜிதமேவவா - தத்ததேவாவகச்சத்வம் மமதேஜோம்ஶஸம்பவம்" என்கிறபடியே - எல்லாம் தனக்கு விபூதியாயிருக்கச் செய்தேயும் உத்க்ருஷ்டமான பதார்த்தங்கள் விஶேஷித்து என்னுடைய விபூதியென்றானிறே ; அப்படியே இவரும் உஜ்ஜ்வலமான மாணிக்யாதி பதார்த்தங்கள் அவனுக்கு விபூதியாயிருக்கிறபடியை அநுபவிக்கிறார்.

சாதிமாணிக்கமென்கோ ? சவிகொள்பொன்முத்தமென்கோ ? *
சாதிநல்வயிரமென்கோ ? தவிவில்சீர்விளக்கமென்கோ ?
ஆதியஞ்சோதியென்கோ ? ஆதியம்புருடனென்கோ ? *
ஆதுமில்காலத்தெந்தை அச்சுதனமலனையே. (௪)

(க) ஶ்ரீபாஷ்யம். (௨, கீதை - ௧௦ - ௪௧.

ப ;—அநந்தரம், உஜ்ஜ்வலமான ரத்நாதி ப்ரகாரத்வத்தை அருளிச்செய்கிறார்.

ஆதும்—ஒன்றும்
இல்—இல்லாத
காலத்து—ஸம்ஹ்ருதிகாலத்தில்
எந்தை — நிருபாதிக ஸம்பந்தமடியாக அவிபக்த நாமரூப சித சிச்சரீரியாய்
அச்சுதன் — (ஸ்வஸ்வரூபாதிகளுக்கு) ப்ரச்யுதியின்றியே
அமலனை — ஶரீரபூத சிதசித்தோஷம் தட்டாத ஹேயப்ரத்ய நீகனை
சாதி—ஆகரோத்பத்தி வைலக்ஷண்யத்தையுடைய
மாணிக்கம் என்கோ—மாணிக்கம்,
சவிகொள்—ஒளியையுடைய
பொன்—பொன்,
முத்தம் என்கோ—முத்துக்கள்,
சாதி—ஆகரஜமாய்
நல்—ரத்நாந்தரவிலக்ஷணமான
வயிரம் என்கோ—வயிரம்,
தவிவு இல்—விநாஶரஹிதமாய்
சீர்—ப்ரகாஶ குணவிஶிஷ்டமான
விளக்கம் என்கோ—தீபம்,
ஆதி—ப்ரதமபாவியாய்
அம்—ஸௌந்தர்ய குணயுக்தமான
சோதிஎன்கோ — தேஜோமய திவ்ய விக்ரஹவிஶிஷ்டன்,
ஆதி—ப்ரதாநபூதனாய்
அம்—ஆநந்தாதி குண விஶிஷ்டனை,
புருடன் என்கோ—பரம புருஷனென்றுசொல்வேனோ?

'* ஆதிவிக்ரஹம்' என்றது-பரமபதநிலய விக்ரஹத்தை. 'ஆதிபுருடன்' என்றது - திவ்யாத்மஸ்வரூபத்தை. இவற்றினுடைய ஔஜ்ஜ்வல்யத்தோபாதி உஜ்ஜ்வலரத்நாதிகளும் அஸாதாரண ப்ரகாரமென்று கருத்து. சவி-ஒளி. தவிவு-விநாஶம். விளக்கம்-ப்ரகாஶகத்வ மாகவுமாம். (௪)

ஆறு ;—(சாதிமாணிக்கம்.) ஏவம்வித திவ்யரூபத்தை யுடையனாய்க்கொண்டு திருநாட்டிலே எழுந்தருளியிருக்குமென்கிறது. (௪)

ஈடு ;—அவ ;—அஞ்சாம்பாட்டு. ரஸவத் பதார்த்தங்களை விபூதியாக வுடையனாயிருக்கிற படியை அருளிச்செய்கிறார்.

அச்சுதனமலனென்கோ ? அடியவர்வினைகெடுக்கும் *
நச்சுமாமருந்தமென்கோ ? நலங்கடலமுதமென்கோ ? *
அச்சுவைக்கட்டியென்கொ ? அறுசுவையடிசிலென்கோ ? *
நெய்ச்சுவைத்தேறலென்கொ ? கனியென்கோ ? பாலென்கேனோ.(ரு)

ப ;—அநந்தரம், விலக்ஷண ரஸவத்பதார்த்த விபூதித்வத்தை அருளிச்செய்கிறார்.

அச்சுதன்—போக்தாக்களை நழுவவிடாத இனிமையையுடையவன்
அமலன் என்கோ—(தன்பேறாக அநுபவிப்பிக்கும்) நைர்மல்யத்தையுடையவன்
அடியவர்—உறவுடையாரை
வினை—போகாலாப(ஹ) க்லேசத்தை
கெடுக்கும்—போக்குமதாய்
நச்சும்—ஸாரஸ்யத்தாலே) நச்சப்படுவதான
மாமருந்தம் என்கோ—பசுமருந்து
நல்—(க்ஷீராத்மகதையால்வந்த) வைலக்ஷண்யத்தையுடைத்தாய்
அம் — (பகவத்ஸம்பந்தத்தாலே) தர்ஶநீயமான
கடல்—கடலில்
அமுதம் என்கோ—(அவன் கடைந்தெடுத்த) அம்ருதம்,
அ—அந்த அம்ருதத்தினுடைய
சுவை—ரஸத்தையுடைத்தான
கட்டி என்கோ—கருப்புக்கட்டி,
அறுசுவை — (மதுராம்ல லவணகடு கஷாய திக்தாத்மக) ஷட்ரஸ யுக்தமான
அடிசில் என்கோ—அடிசில்,
நெய்—நெய்யின்
சுவை—சுவையையுடைத்தான
தேறல் என்கோ—மது,
கனிஎன்கோ — (பக்வமாய் புஜித்தல்லது நிற்கவொண்ணாத) கனி,
பால் என்கேனோ — ஸ்வாபாவிக ரஸவத்தான பாலென்று சொல்லுவேனோ?

பசுமருந்தென்று - விக்ரஹம். மருந்தென்கிறது - க்லேஶநாஶகத்வத்தாலே; கடையவேண்டாத கடலில் கிடந்த அம்ருதமென்றுமாம். நெய்த்தலையுஞ் சுவையையுமுடைத்தான தேறலென்றுமாம். (ரு)

ஆறு;—(அச்சுதன்) அஶேஷதோஷப்ரத்யநீகனாய் ஆஶ்ரிதரோடு நித்யஸம்ஶ்லேஷ ஸ்வபாவனாய் ஆஶ்ரித ஜநஸமஸ்ததுக்கநிரஸந ஸ்வபாவனாய்ப் பரமபோக்யனாயிருக்குமென்கிறது. (ரு)

ஈடு ;—அவ ;—ஆறும்பாட்டு. வேதம் தொடக்கமான இயலும் இசையுமான ஶப்தராஶியை விபூதியாக வுடையனா யிருக்கிறபடியைப் பேசுகிறார்.

பாலென்கோ? நான்குவேதப் பயனென்கோ * சமயநீதி
நூலென்கோ? நுடங்குகேள்வி யிசையென்கோ * இவற்றுள்நல்ல
மேலென்கோ? வினையின்மிக்க பயனென்கோ? * கண்ணனென்கோ?
மாலென்கோ? மாயனென்கோ? வானவராதியையே. (௬)

ப ;—அநந்தரம், வேதவைதிகாத்மகமாய் காநபர்யந்தமான ஶப்தராஶி ப்ரகாரத்வத்தை அருளிச்செய்கிறார்.

வானவர்—ஸமஸ்ததேவர்களுக்கும்
ஆதியை — ஸத்தாதி ஹேதுபூதனானவனை
(நான்குவேதம்)—வேதங்களினுடைய
பால் என்கோ—ஸாராதிவிபாகங்கள்,
நான்குவேதம்—ததாவிதசதுர்வித வேதங்களின்
பயன் என்கோ—ப்ரயோஜநம்.
சமயம்—அர்த்தவ்யவஸ்தாபகமான
நீதி—ந்யாயத்துக்குப்ரதிபாதகமாயுள்ள
நூல்என்கோ—மீமாம்ஸாஸாஸ்த்ரம்,
நுடங்கு—(ஸ்ரோதாக்களை) ஈடுபடுத்தும்
கேள்வி—கேள்வியையுடைத்தான
இசை என்கோ—கீதம்
இவற்றுள் — (உத்தமமான) இவற்றுக்குள்ளே
நல்ல—விலக்ஷணமாய்
மேல்என்கோ—(அநவதிகாதிஸயமான) போக்யம்,
வினையில்—ஸாதநத்தினளவன்றியே
மிக்க—அதிஸயிதமான
பயன்என்கோ—பலம்
கண்ணன் என்கோ—(அந்தப் பலரூபனாய் ஆநந்தாத்மகனான) க்ருஷ்ணன்,
மால்என்கோ — (தன்னை புஜிக்குமவர்களை) வ்யாமுக்தனாய் புஜிக்குமவன்
மாயன்என்கோ—(ததநுரூபமான)ஆஸ்சர்ய சேஷ்டிதாதியுக்தனென்பேனோ?
பாலென்று — பகுதியாய், ஸாராதி விபாகம்.

ஆறு ;—(பாலென்கோ.) பாலென்று சொல்லுவேனோ? ஸர்வ வேதங்களாலும், ஸர்வ வேதார்த்த நிர்ணபகமாய் ஹேதுமத்தாயிருந்த ப்ரஹ்மஸூத்ர பதங்களாலும் பரமபுருஷார்த்ததயா ப்ரதிபாத்யமானனென்று சொல்லுவேனோ? போக்யதையால் அவன் நுடங்குகேள்வி யிசையென்று சொல்லுவேனோ? இங்குச் சொல்லப்பட்ட போக்ய பதார்த்தங்களெல்லாவற்றிலும் மேற்பட்ட போக்யமென்று சொல்லுவேனோ? ஸகல புண்யபலமென்று சொல்லுவேனோ? ஆஸ்ரித ஸுலபனென்று சொல்லுவேனோ? ஆஸ்ரித வத்ஸலனென்று சொல்லுவேனோ? ஆஸ்சர்யபூதனென்று சொல்லுவேனோ? வானவராதியை எங்ஙனே சொல்லுவேனென்கிறார். (சா)

ஈடு ;—அவ ;—ஏழாம்பாட்டு. ஐஸ்வர்யாதி புருஷார்த்தங்களெல்லாம் தனக்கு விபூதியாகவுடையனா யிருக்கிறபடியைப் பேசுகிறார்.

வானவராதியென்கோ? வானவர்தெய்வமென்கோ? *
வானவர்போகமென்கோ? வானவர்முற்றுமென்கோ? *
ஊனமில்செல்வமென்கோ? ஊனமில்சுவர்க்கமென்கோ? *
ஊனமில்மோக்கமென்கோ? ஒளிமணிவண்ணனையே. (எ)

ப ;—அநந்தரம், போகமோக்ஷவிபூதித்வத்தை அருளிச்செய்கிறார்.

ஒளி—உஜ்ஜ்வலமான
மணி—மாணிக்கம்போலேயிருக்கிற
வண்ணனே—வடிவையுடையவனே
வானவர்—(போகஸக்தரான) தேவர்களுக்கு
ஆதி என்கோ—உத்பாதகன்,
வானவர்—அவர்களுக்கு
தெய்வம் என்கோ—ஆராத்யதைவதம்
வானவர்—அவர்களுக்கு
போகம் என்கோ—(ஆராதந பலமான) போகம்
வானவர்—அவர்களுடைய
முற்றும் என்கோ—ஸர்வவிதரக்ஷணம்
ஊனம் இல்—அநஸ்வரமான
செல்வம் என்கோ—ஐஸ்வர்யம்
ஊனம் இல்—ஆகல்பாவஸாநஸ்தாயியான
சுவர்க்கம் என்கோ—ஸ்வர்க்கஸ்தாநம்..
ஊனமில்—(இந்தப்பாகத்துக்கு அவ்வருகுபட்ட கைவல்யம்போலன்றியே) அஸங்குசிதமான
மோக்கம் என்கோ—மோக்ஷாநந்தமென்பேனோ?

'வானவரென்கிற விடம் - ஸூரிகளைச் சொல்லுகிறது' என்பாருமுளர்

ஆறு ;—(வானவர்.) வானவருடைய தாரகமென்று சொல்லுவேனோ? அவருடைய தைவமென்று சொல்லுவேனோ? அவர்களுடைய போகமென்று சொல்லுவேனோ? அவர்களுடைய ஸர்வஸ்வமென்று சொல்லுவேனோ? ஐஹிகமான பூர்ணஸம்பத்துக்கு ஆத்மபூதனென்று சொல்லுவேனோ? பூர்ணஸ்வர்க்க புருஷார்த்தத்துக்கு ஆத்மபூதனென்று சொல்லுவேனோ? பரமபுருஷார்த்த லக்ஷண மோக்ஷத்துக்கு ஆத்மபூதனென்று சொல்லுவேனோ? இவனை எங்ஙனே சொன்னால் பூர்ணமாகச் சொல்லிற்றாவது? என்கிறார். (எ)

ஈடு ;—அவ ;—எட்டாம்பாட்டு. ஜகத்தில் ப்ரதாநரான ப்ரஹ்ம ருத்ராதிகளை விபூதியாகவுடையனானபடியைப் பேசுகிறார்.

ஒளிமணிவண்ணனென்கோ ? ஒருவனென்றேத்தநின்ற *
நளிர்மதிச்சடையனென்கோ ? நான்முகக்கடவுளென்கோ *
அளிமகிழ்ந்துலகமெல்லாம் படைத்தவையேத்தநின்ற *
களிமலர்த்துளவனெம்மான் கண்ணனைமாயனையே. (அ)

ப ;—அநந்தரம், லோகப்ரதாந காரணேஸ்வர விபூதித்வத்தை அருளிச்செய்கிறார்.

அளி—ரக்ஷணோபகாரநிமித்தமான
மகிழ்ந்து — உகப்பையுடையனாய்க்கொண்டு
உலகமெல்லாம்—ஸமஸ்த லோகங்களையும்
படைத்து — ஸ்ருஷ்டித்து, (உபகாரஸ்ம்ருதியாலே)
அவை—அவை
ஏத்த—ஸ்தோத்ரம்பண்ண
நின்ற—அத்தாலே (க்ருதக்ருத்யனாய்) நிற்பானாய்
களி—மதுஸ்யந்தியாய்
மலர்—விகஸிதபுஷ்பமான
துளவன் - திருத்துழாய்மாலையழகாலே
எம்மான் — என்னை அநந்யார்ஹனாக்கின
மாயனை — நவநீதசௌர்யாத்யாஶ்சர்யசேஷ்டிதயுக்தனானை
கண்ணனை—க்ருஷ்ணனை, (உ) “(ஆயர்கொழுந்தாயவரால் புடையுண்ணும் மாயப்பிரானையென் மாணிக்கச்சோதியை” என்கிறபடியே அவர்கள் கட்டியடிக்க)
மணி—(சாணையிலேறிட்ட) மாணிக்கம்போலே
ஒளி—ஒளிபெற்று ஶ்லாக்யமான
வண்ணன் என்கோ—வர்ணத்தையுடையவன்,
ஒருவன் என்று—(க) “[illegible] - ஏகஏவருத்ர:” என்கிறபடியே ஸ்வாஶ்ரிதர் ஒருவனென்று
ஏத்த—ஸ்துதிக்கும்படி
நின்ற—நிற்குமவனாய்
தளிர்—குளிர்ந்த
மதி—சந்த்ரகலாதாரணத்தாலும்
சடையன்என்கோ — ஜடாதரத்வத்தாலும் போகதப:பரனான ருத்ரன்,
நான்முகன்— தேவதாவர்க்கம் கையெடுக்கும்படி) சதுர்முகனை
கடவுள் என்கோ — தைவமென்பேனோ?

ஆறு;—(ஒளிமணிவண்ணன்.) ஸர்வலோக ஸம்ரக்ஷணைகபோகனாய் ஸர்வஜகத்ஸ்ரஷ்டாவாய் சதுர்முகாதி ஸர்வ ஜநைஸ்ஸம்ஸ்துயமானனா யிருக்கும் களிமலர்த்துளவன் எம்மான் கண்ணனைமாயனை, நிரவதிக ஸௌந்தர்ய மஹோததியென்று சொல்லுவேனோ? லோகமெல்லாம் ஐஶ்வர்யத்தினாலே அத்விதீயனென்றுசொல்லி யேத்தும்படி ருத்ரனுக்கு ஐஶ்வர்யத்தைக் கொடுத்து அவனுக்கு ஆத்மபூதனானவனென்று சொல்லுவேனோ? சதுர்முகாந்தராத்மபூதனென்று சொல்லுவேனோ? எங்ஙனேசொல்லுவேன்? என்கிறார். (அ)

ஈடு;—அவ;—ஒன்பதாம்பாட்டு. அவனுடைய விபூதி விஸ்தாரங்கள் தனித்தனியே பேசமுடியாது, கார்ய காரணரூபமான சேத

(க) அதர்வஶி. (உ) க - எ - ந.

நாசேதநங்கள் அவனுக்கு விபூதி யென்று ப்ரயோஜநத்திலே சொல்லலா மித்தனை என்கிறார்.

கண்ணனைமாயன் தன்னைக் கடல்கடைந்தமுதங்கொண்ட *
அண்ணலையச்சுதனை யனந்தனையனந்தன் தன்மேல் *
நண்ணிநன்குறைகின்றானை ஞாலமுண்டுமிழ்ந்தமாலை *
எண்ணுமாறறியமாட்டேன் யாவையும்யவருந்தானே. (௧)

ப ;—அநந்தரம், உக்தவிபூதிமாத்ரமன்றியே ஸகல சேதநாசேதநங்களும் தானேயானவனைப் பரிச்சேதிக்கும் ப்ரகாரம அறியேனென்கிறார்.

யாவையும்—எல்லாவகைப்பட்ட அசேதநமும்
யவரும் — எல்லாவகைப்பட்ட சேதநரும்
தான்—தானேயாய்வைத்து
கண்ணனை—ஆஸ்ரிதஸுலபனாய்
மாயன் தன்னை — ஆஸ்சர்யாவஹமான குணசேஷ்டித நிரூபணீயனாய், (அர்வாசீந ப்ரயோஜ நார்த்திகளுக்கும்)
கடல்—கடலை
கடைந்து—கடைந்தும்
அமுதம்கொண்ட—கார்யஞ்செய்யும்
அண்ணலை—ஸர்வஸ்வாமியாய்
அச்சுதனை—ஆஸ்ரிதரை நழுவவிடாதவனாய்
அனந்தனை — அபரிச்சிந்நஸ்வரூபாதி வைபவத்தை யுடையனாய்
அனந்தன் தன்மேல் — (அந்தனையும் தனக்குள்ளே யடங்கும்படியான) திருவனந்தாழ்வான்மேலே
நண்ணி—பொருந்தி
நன்கு உறைகின்றானை—உகந்து கண் வளராநிற்குமவனாய்
ஞாலம்—ரக்ஷ்யத்துக்கு ஆபத்துவந்தால்
உண்டு—வயிற்றிலேவைத்து நோக்குவது
உமிழ்ந்த—வெளிநாடு காட்டுவதான
மாலை—வாத்ஸல்யத்தை யுடையனானவனை
எண்ணும் ஆறு—பரிச்சேதித்து நினைக்கும்படி
அறியமாட்டேன்—அறிகிறிலேன். (௧)

ஆறு ;—(கண்ணனை.) ஆஸ்ரித ஸுலபத்வார்த்தமாக ஸஜாதீயதயா அவதீர்ணனாய், ஆஸ்சர்யாதிமநோஹர திவ்ய சேஷ்டிதங்களை யுடையனாய், ஆஸ்ரிதரைக் கைவிடாத ஸ்வபாவனாய், அநந்த கல்யாணகுண விஸிஷ்டனாய், அநந்தகல்யாணகுண மஹாநதியான திருவநந்தாழ்வானை திவ்யஸய்யாஸநாதிகளாக வுடையனாய், ஸர்வலோக பரிபாலகனாய், ஸர்வாந்தராத்மபூதனான எம்பெருமானை இங்ஙனே சொல்லுவேனென்று அறிகிலேனென்கிறார். (௧)

ஈடு;—அவ;—பத்தாம்பாட்டு. சேதநாசேதநங்களுக்கு அந்தராத்மதயா வ்யாபித்து நின்றால் தத்கததோஷை: அஸம்ஸ்ப்ருஷ்டனென்கிறார்.

யாவையும்யவருந்தானாய் அவரவர்சமயந்தோறும் *
தோய்விலன்புலனைந்துக்குஞ் சொலப்படானுணர்வின்மூர்த்தி *
ஆவிசேருயிரினுள்ளா லாதுமோர்பற்றிலாத *
பாவனையதனைக்கூடி லவனையுங்கூடலாமே. (௧௦)

ப;—அநந்தரம், இப்படி ப்ரகாரபூத சித்சித்துக்களின்படி அவன் தனக்குத்தட்டாத படியை அநுஸந்திக்கிறார்.

யாவையும்—எல்லா அசேதநமும்
யவரும்—எல்லாச்சேதநரும்
தானாய்—தானேயாய்
அவரவர்—அந்தந்தச்சேதநருடைய
சமயந்தோறும் — (அசித்ஸம்ஸர்க்கநிபந்தநமான) தேவாதி வ்யவஸ்தைகளில்
தோய்விலன்—(அவர்களைப்போல் தனக்கு) ஸங்கமில்லாதவனாய்
புலனைந்துக்கும்—இந்த்ரியபஞ்சகத்துக்கும்
சொலப்படான் — விஷயமாகச்சொல்லப்படாதவனாய்,
உணர்வின்மூர்த்தி—ஸ்வயம்ப்ரகாசஜ்ஞாநஸ்வரூபனாயிருக்கும்; (ஆதலால்)
ஆவி—ப்ராணாச்ரயமான சரீரத்தோடு
சேர்—சேர்ந்த
உயிரின்—ஆத்மாவினுடைய
உள்—ஸ்வரூபத்தில்
ஆதும் — (சரீரகதமான) ஜடத்வபரிணாமித்வாதிஸ்வபாவங்கள்
ஓர்—ஒன்றிலும்
பற்று இலாத—தொற்று இல்லாத
பாவனை—ப்ரதிபத்தியானது
அதனை—அந்தஸ்வரூபத்தை
கூடில்—கிட்டுமாகில்
ஆதும் ஓர்பற்றிலாத பாவனை — (ஸமஸ்தசேதநாசேதநஸ்வபாவங்களிலும்) ஒரு தொற்றில்லையென்கிற ப்ரதிபத்தி
அவனையும்—(கீழ்ச்சொன்ன ஸ்வயம்ப்ரகாசஜ்ஞாநஸ்வரூபனான) ஈச்வரனையும்
கூடலாம்—சேரலாம்;
ஏ—நிச்சிதம். (௧௦)

ஆறு;—(யாவையும்.) இப்படி ஸர்வவஸ்துக்களோடும் ஆத்மதயா ஸம்பந்தமுண்டாயிருக்கச்செய்தே, ஹேயப்ரத்யநீகதயா ஸ்வேதரஸமஸ்தவஸ்துவிஸஜாதீயனாய் ஜ்ஞாநஸ்வரூபனாயிருக்கையாலே ஸ்வசரீரபூத ஸமஸ்தவஸ்துகத ஸர்வதோஷைரஸம்ஸ்ப்ருஷ்டனாயிருக்கும். இது கூடுமோவென்னில்,—இந்த சரீரத்திலே வர்த்

திக்கிற இந்த ப்ரத்ய காத்மாவுக்கு இந்த ஶரீரகத தோஷங்களினால் அஸம்ஸ்ப்ருஷ்டனாயிருக்கையாகிற இஸ்ஸ்வபாவம் கூடுமாகில் எம்பெருமானுக்கும் இது கூடுமென்கிறார். (௧௦)

ஈடு;—நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றவர்கள் நித்யகைங்கர்யத்தைப்பெற்று அயர்வறு மமரர்களாலே விரும்பப்படுவார்கள் என்கிறார்.

கூடிவண்டறையுந்தண்தார்க் கொண்டல்போல்வண்ணன்தன்னை *
மாடலர்பொழில்குருகூர் வண்சடகோபன்சொன்ன *
பாடலோராயிரத்து ளிவையுமொருபத்தும்வல்லார் *
வீடிலபோகமெய்தி விரும்புவரமரர்மொய்த்தே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ப;—அநந்தரம், இத் திருவாய்மொழிக்குப் பலமாக அவிச்சிந்ந பகவதநுபவத்தை அருளிச்செய்கிறார்.

வண்டு—வண்டுகள்
கூடி—கூடி
அறையும் — மதுபாநப்ரீதியாலே ஶப்திக்கிற
தண்—குளிர்ந்த
தார்—திருமாலையையுடையவனாய்
கொண்டல்போல் — காளமேகம் போலேயிருக்கிற
வண்ணன்தன்னை —நிறத்தையுடையனானவனை
மாடு—சுற்றும்
அலர்—அலர்ந்த
பொழில்—சோலைகளையுடைத்தான
குருகூர்—திருநகரிக்கு நிர்வாஹகரான
வண் சடகோபன்—ஆழ்வார்
சொன்ன—அருளிச்செய்த
பாடல்—இசையோடுகூடின
ஓர்—அத்விதீயமான
ஆயிரத்துள்—ஆயிரத்துக்குள்ளும்
இவையும் — அஸாதாரண விக்ரஹத்தோபாதியாக அகில விபூதி ப்ரகாரத்வத்தை ப்ரதிபாதித்த
ஒரு —அத்விதீயமான
பத்தும்—இப்பத்தையும்
வல்லார்—அப்யஸிக்கவல்லவர்கள்
வீடு இல—அவிச்சிந்நமான
போகம்—பகவதநுபவத்தை
எய்தி—பெற்று
அமரர்—நித்யஸூரிகள்
மொய்த்து —மொய்த்துக்கொண்டு
விரும்புவர்—விரும்பும்படியாவர்கள்.
இது —அறுசீராசிரியவிருத்தம் (௧௧)

ஆறு;—(கூடி.) இத்திருவாய்மொழி வல்லார் ஸர்வகாலமும் பகவத் கைங்கர்யத்தைப்பெற்று அயர்வறுமமரர்களுக்குப் பரமபோக்யராவரென்கிறார். (௧௧)

ஈடு ;—நிகமநம் ; — மூதற்பாட்டில் - இத்திருவாய்மொழியில் பரக்க அருளிச்செய்த அர்த்தத்தை ஸங்க்ரஹேண அருளிச்செய்தார் ; இரண்டாம்பாட்டில் - கீழ்ச்சொன்ன பூதங்களினுடைய கார்யத்தை க்ரமத்திலே பேசினார் ; மூன்றாம்பாட்டில் - ஜகதாகாரனாய் நின்ற நிலேயோடே அஸாதாரண விக்ரஹத்தைச் சேர்த்தநுபவித்தார் ; நாலாம்பாட்டில் - உஜ்ஜ்வலமான மாணிக்யாதி பதார்த்தங்களை விபூதியாகவுடையவனென்றார் ; அஞ்சாம்பாட்டில் - ரஸவத்பதார்த்தங்களை விபூதியாகவுடையனாயிருக்கிறபடியை அருளிச்செய்தார் ; ஆறாம்பாட்டில் - வேதம்தொடக்கமான இயலும் இசையுமான ஶப்த ராஶியை விபூதியாகவுடையனென்றார் ; ஏழாம்பாட்டில் - ஐஶ்வர்யாதி புருஷார்த்தங்களை விபூதியாகவுடையனென்றார் ; எட்டாம் பாட்டில் - ஜகத்தில் ப்ரதாநரான ப்ரஹ்ம ருத்ராதிகளை விபூதியாக வுடையனென்றார் ; ஒன்பதாம்பாட்டில் - அவனுடைய விபூதி விஸ்தாரங்கள் தனித்தனியே பேசமுடியாமையாலே சேதநாசேதநங்களை விபூதியாகவுடையனென்று ப்ரயோஜகத்திலே அருளிச்செய்தார் ; பத்தாம்பாட்டில் - இவற்றுக்கும் அந்தராத்மாவாய் வ்யாபித்து நின்றால் தத்கததோஷை ரஸம்ஸ்ப்ருஷ்டனென்றார் ; நிகமத்தில் - இது கற்றார்க்குப் பலஞ்சொல்லித் தலைக்கட்டினார். (கக)

வடக்குத் திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்.

நாலாந் திருவாய்மொழி வ்யாக்யாநங்கள் முற்றிற்று.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஐந்தாந்திருவாய்மொழி—மொய்ம்மாம்பூம்பொழில் ப்ரவேசம்

ஆறு ;—(மொய்ம்மாம்பூம் பொழில்.) ஏவம்பூதனான எம்பெருமானுடைய ஆஸ்ரித வாத்ஸல்யாதி கல்யாண குணங்களை அநுபவித்து, அவ்வநுபவஜநிதமான ப்ரீத்யதிஶயத்தாலே அப்ரக்ருதிங்கதராய்க்கொண்டு அக்குணங்களைச் சொல்லிப் பிதற்றி * ஊர்பல புக்கும் புகாதும் உலோகர் சிரிக்க நின்றாடி ஆர்வம்பெருகிக் குனிக்குமவர்களுடைய மாஹாத்ம்யத்தையும்; இப்படி செய்யாதாருடைய அவஸ்துத்வத்தையும் சொல்லுகிறார். *

ப ;—அஞ்சாந்திருவாய்மொழியில், கீழ்ச்சொன்ன பகவத் ப்ரகாரதயா ஶேஷத்வத்தில் தமக்குப் பிறந்த ரஸாதிஶயத்தாலே அத்யந்த ஹ்ருஷ்டராய் ; ப்ரதிஸம்பந்தியான ஶேஷியினுடைய ஆபந்நிவாரகத்வத்தையும், அஸுரநிரஸந ஸாமர்த்ய்யத்தையும். ஆர்த்தஸம்ரக்ஷணத்தையும், அபிமதவிரோதி நிவர்த்தகத்வத்தையும், அவதார ப்ரயோஜநத்தையும், அதிஶயித போக்யதையையும், ஆஸ்ரித பக்ஷபாதத்தையும், அர்ச்சாவதார ஸௌலப்யத்தையும், உபயவிபூதி நாதத்வத்தையும். விலக்ஷண விக்ரஹயோகத்தையும் அநுஸந்தித்து ப்ரீதி ப்ரகர்ஷத்தாலே ஸம்ப்ராந்தராகாதாரை நிந்தித்தும், உகந்தாடுவது பாடுவதாவாரை உகந்தும் இந்த ஶேஷத்வ ஸாரஸ்யத்தை உபபாதிக்கிறார். *

ஈடு ; — * புகழுநல்லொருவனிலே - பகவதநுபவத்தைப் பண்ணி, அத்தால்வந்த ஹர்ஷப்ரகர்ஷத்தாலே களித்து, அதில்லாதாரை நிந்தித்து உடையாரைக் கொண்டாடிச் சொல்லுகிறது - மொய்ம்மாம்பூம்பொழில். இவர்க்கு * முந்நீர்ஞாலத்தில் - ப்ரக்ருதி ஸம்பந்தத்தை அநுஸந்தித்தும், இதரவிஷய ப்ராவண்யத்தை அநுஸந்தித்தும் ஶோகித்த ஶோகம் சிலர்க்கு நிலமாகிலாயிற்று, இத்திருவாய்மொழியில் பகவதநுபவத்தாலே ஹ்ருஷ்டரான இவருடைய ஹர்ஷம் சிலர்க்கு நிலமாவது. இவரும் பகவதநுபவம்பண்ணுகிறாராகில் நாமும் அவ்விஷயத்திலே கைவைத்தோமாகில், இவர்க்கு இங்ஙனிருப்பானென் ? நமக்கு இங்ஙன் இராதொழிவானென், என்னில் ;—நாயாகிறோம் கண்டார்க்கு ஒளிக்கவேண்டுமவையாய்? ஶாஸ்த்ரங்களெல்லாம் ஒருமுகஞ் செய்து நிஷேதிக்கிறவையாய், முதல்தன்னிலே கிடையாதவையாய், கிடைத்தாலும் நிலைநில்லாத

வையாய், அநந்தரம் நரகத்திலே மூட்டி அநர்த்தத்தை விளைக்க கடவதான இதரவிஷயங்களுடைய லாபாலாபங்களில் பிறக்கு சோகஹர்ஷங்களே யாயிற்று அறிவது. வீதராகராய் ஸாத்விகாக்ரேஸரராயிருக்கிற இவர்க்கு சாஸ்த்ரங்கள் 'ஆகாது' என்று நிஷேதித்த சோகஹர்ஷங்கள் கூடினபடி எங்ஙனே யென்னில்,—இவர் சாஸ்த்ரங்களிலே நிஷேதித்த சோகஹர்ஷங்களன்று; ஸமஸ்த கல்யாண குணாத்மகனான ஸர்வேச்வரனை அநுபவித்து அவ்வநுபவ ஜநித ப்ரீதியாயிற்று இவர்க்கு ஹர்ஷமாகிறது; "இப்படி வகுத்த விஷயத்தை அநாதிகாலம் இழந்து இதர விஷயப்ரவணராய் அநர்த்தப்படுவோமே" என்னுமதாயிற்று சோகம். "காமம் ஆகாது' என்று நிஷேதியா நிற்கச்செய்தேயும் (க) "விஜிஜ்ஞாஸிதவ்ய: நிதித்யாஸிதவ்ய:" என்றுகொண்டு பகவத்காமத்தை சாஸ்த்ரங்கள் விதியாநின்றதிறே;

இனி முக்தரும் பகவதநுபவத்தாலே (௨) "ஹாவு ஹாவு ஹாவு அஹமந்நமஹமந்நமஹமந்நம்" என்று களியாநிற்பர்களிறே (௩) "ஸர்வஸம்சய நிர்ச்சேத்தா நாராயணபராயண:- ஸர்வஸம்ப நிர்முக்தோ நாரதஸ்ஸர்வகர்மவித்" என்று சொல்லப்படுகிற நாரதாதிகளும் பகவத்ஸந்நிதியிலே வந்தவாறே ஆடுவது பாடுவதாக நிற்பர்களிறே; விரக்தரில் தலையான திருவடியும் பிராட்டியைக்கண்டு வந்த ஹர்ஷத்தாலே முதலிகளைப்பார்த்து "நீங்கள் மதுவநத்தை யழித்து புஜியுங்கோள்; (௪) "அஹமாவாரயிஷ்யாமி யுஷ்மாகம் பரிபந்திந: - அஹமாவாரயிஷ்யாமி யுஷ்மாகம்பரிபந்திந:" என்று காத்திருந்த ததிமுகாதிகளை நான் தொட்டுத்தருகிறேனென்றுனிறே; மஹாராஜர்க்கு 'உம்முடைய காவற்காடு அழிந்தது' என்று அறிவிக்க, 'நம்மோடு பண்ணிப்போன ஸமயமுந்தப்பி, நாந்தாம் தீக்ஷண தண்டரென்று அறியச்செய்தேயும் இவர்கள் காவற்காட்டை யழிக்கும்போது (௫) "நைஷாமக்ருதக்ருத்யாநாமீத்ருசஸ்ஸ்யாத்வ்யதிக்ரம: - நைஷாமக்ருதக்ருத்யாநாமீத்ருசஸ்ஸ்யாதுபக்ரம:" என்று ஸர்வதா பிராட்டியைத் திருவடிதொழுதார்களாக வேணுமென்று

(க) ப்ருஹ - ௪ - ௪.
(௨) தை - ப்ருகு - ௧௦.
(௩) பாரத - ராஜ -
(௪) ரா - ஸு - ௬௨ - ௨.
(௫) ரா - ஸு - ௬௩ - ௧௫.

அப்போது பிறந்த ஹர்ஷம் இருந்தவிடத்தி லிருக்கவொட்டாமே, வாலானது ருஶ்யமூகபர்வதத்தின் கொடுமுடியிலே சென்று அறைந்ததாயிற்று; நடுவே 'காவற்காடு' என்று ஒன்று உண்டாயிற்று ராஜபுத்ரர்களுடைய ஜீவநாத்ருஷ்டமாயிற்று; அன்றாகில்; முதலிகளுடைய ஹர்ஷம் ராஜபுத்ரர்கள் முதுகோடே போமாயிற்று. அல்பம் வெற்றிலைச்சாறு மிடற்றுக்குக்கீழே யிழிந்தவன் தன்னைத்தான் அறிகிறிலன்; உள்கலந்தார்க்கு ஓரமுதமாய் அமுதிலுமாற்ற வினியனாய் "எனக்கே தன்னைத்தந்த கற்பக மென்னமுதம்" என்று தாமே முற்றூட்டாக இவ்வம்ருதத்தை புஜித்த இவர்க்கு ஹர்ஷமுண்டாகச் சொல்லவேண்டாவிறே;

இப்படிப்பட்ட பகவதநுபவத்தால்வந்த ப்ரீதிப்ரகர்ஷத்தாலே-முதலிலே இதில் அறிவில்லாதாரையும், அறிவுண்டாய்ப் புறம்பே அந்யபரராயிருப்பாரையும், ஶிஷ்டாபிமாநங் கொண்டாடி "அநுஷ்டாநகாலங்களில் திருநாள் சேவிக்கலாகாது" என்று இருப்பாரையும், அறிவுண்டாயே புறம்பே பரபரக்கற்று 'அதுக்கும் இதுக்கும் வாசியேன்?' என்று ஸமாநபுத்தி பண்ணியிருப்பாரையும், தங்களை ஆஸ்திகராகபுத்திபண்ணி அவ்வாஸ்திக்யத்துக்கு 'புறம்பே விநியோகம்' என்று இருப்பாரையும், ரஜஸ்தமஸ்ஸுக்களுக்கு அநுரூபமான க்ஷுத்ர பலங்களைக்கொண்டு போவாரையும், ததர்த்தமாகத் தாமஸ தேவதைகளை ஆஶ்ரயிப்பாரை எடுத்து, அவர்களுக்குப் புறம்பே எல்லா நன்மைகளு முண்டேயாகிலும் பகவத் குணங்களை அநுஸந்தித்தால் அவிக்ருதராகில் 'அவர்கள் அவஸ்துக்கள்' என்று அவர்களை நிந்தித்து, ஒரு ஜந்மவ்ருத்த ஜ்ஞாநங்களின்றிக்கே யிருக்கச் செய்தேயும் பகவத் குணாநுபவம்பண்ணி விக்ருதராமது உண்டாகில் அவர்களுக்கு நான் அடிமையென்று அவர்களைக் கொண்டாடி ப்ரீதராகிறார். *

ஈடு ;—அவ :—முதற்பாட்டில், ஆஶ்ரிதன் இடர்ப்பட்ட மடுவின்கரையிலே, கலங்காப் பெருநகரில் நின்றும் அரைகுலையத் தலைகுலைய வந்துவிழுந்த நீர்மையை அநுஸந்தித்தால் விக்ருதராகாதார் அவஸ்துக்க ளென்கிறார்.

மொய்ம்மாம்பூம்பொழில்பொய்கை முதலைச்சிறைப்பட்டுநின்ற *
கைம்மாவுக்கருள்செய்த கார்முகில்போல்வண்ணன்கண்ணன் *
எம்மானைச்சொல்லிப்பாடி எழுந்தும்பறந்துந்துள்ளாதார் *
தம்மால்கருமமென்சொல்லீர் தண்கடல்வட்டத்துள்ளீரே. (௧)

ப ;—முதற்பாட்டில், ஆபந்நமான ஆனைக்கு உதவினபடியை அநுஸந்தித்து ஹர்ஷவிகாரம் பிறவாத அங்கத்தை யுடையரால் என்ன ப்ரயோஜநமுண்டு? என்று லௌகிகரைப்பார்த்து அருளிச்செய்கிறார்.

மொய்—செறிந்து
மா—உயர்ந்து
பூ—பூத்த
பொழில்—பொழில்களையுடைத்தான
பொய்கை—பொய்கையிலே
முதலை—முதலையாலே
சிறைப்பட்டு—சிறைப்பட்டு
நின்ற—(கரையேறமாட்டாமல்) நிஶ்சேஷ்டமாய் நின்ற
கைம்மாவுக்கு—ஆனைக்கு
அருள்செய்த—(அதன்கையிற் புஷ்பயாமலயாகிற) அருளைப் பண்ணினவனும் (அது தன் ஆர்த்தி தீரக்கண்டு உகக்கும்படியாய்)
கார்—ஶ்ரமஹரமாய்
முகில்போல்—காளமேக நிபமான
வண்ணன்—வடிவையும்
கண்ணன்—(உள்ளே யிழிந்தெடுத்துக் கரையேற்றும் படியான) ஸௌலப்யத்தையும்
எம்மானை—(இரண்டுக்கும் அடியான) உறவையுமுடையவனை
சொல்லி—வாயாலேபேசி
பாடி—உகப்பாலே பாடி
எழுந்தும் பறந்தும்—இருந்த விடத்திலிராதே தரையில் கால்பாவாதபடி பறந்து
துள்ளாதார்தம்மால்—ஸம்ப்ரமந்ருத்தம் பண்ணாதாருடைய ஸத்பாவத்தால்
என் கருமம்—என்ன கார்யமுண்டு?
தண்—குளிர்ந்த
கடல்—கடலாலே சூழப்பட்ட
வட்டத்து—பூமியிலே
உள்ளீரே—(பகவதநுபவார்த்தமாக) உள்ளீரே
சொல்லீர்—சொல்லுங்கோள்.

இங்கு 'கைம்மா' என்று ஆனையைச் சொல்லிற்று - துதிக்கையொழிய அழுந்தினபடியை நினைத்து. (௧)

ஆறு ;—முதலைச்சிறையிலே யகப்பட்டுத் தன்னால் ஒரு செயலின்றிக்கே நின்ற கைம்மாவுக்குத் தன்னளவிலே அருள்செய்த நிரவதிகாஶ்ரித வாத்ஸல்யத்தை யுடையனை எம்பெருமானைச்

சொல்லிப்பாடி யெழுந்தும் பறந்தும் துள்ளாதார் தம்மால் என்ன ப்ரயோஜநமுண்டு? என்று அவர்களை நிந்திக்கிறார். (க)

ஈடு ;— அவ ;—இரண்டாம்பாட்டு. ஸ்ரீ கஜேந்த்ராழ்வானுக்கு உதவினது ஸம்ஸாரிகளுக்கு உதவிற்றென்னலாம்படியன்றோ; 'தங்களுக்கு இடருண்டு' என்றறியாத ஸம்ஸாரிகள் விரோதியைப் போக்கும் நீர்மையை அநுஸந்தித்தால் அவிக்ருதராயிருப்பார், மஹாபாபம் அபிபவிக்கப் பிறக்கிறவர்களென்கிறார்.

தண்கடல்வட்டத்துள்ளாரைத் தமக்கிரையாத்தடிந்துண்ணும் *
திண்கழற்காலசுரர்க்குத் தீங்கிழைக்குந்திருமாலைப் *
பண்கள் தலைக்கொள்ளப்பாடிப் பறந்துங்குனித்துழலாதார் *
மண்கொளுலகிற்பிறப்பார் வல்வினைமோதமலைந்தே. (உ)

ப ;—அநந்தரம், விபூதியையழிக்கும் ஆஸுரப்ரக்ருதிகளை நிரஸிக்கும் ஸாமர்த்த்யத்தை அநுஸந்தித்து விக்ருதராகாதவர்கள் ஸம்ஸாரத்தில் மஹாபாபம் மேலிடப் பிறந்தவர்கள் என்கிறார்.

தண் — குளிர்த்தியைக் குணமாகவு
கடல்—கடலசூழுந்த
வட்டத்து—பூமியில்
உள்ளாரை—உண்டானவர்களை
தமக்கு இரையா—தங்கள் ஶரீரபோஷணமே ப்ரயோஜநமாக
தடிந்து—கொன்று
உண்ணும்—ஜீவிப்பாராய்
(இந்தப்பாத(ய)கத்வத்துக்கு இட்ட)
திண்—திண்ணிய
கழல்—வீரக்கழலை
கால்—காலிலேயுடையரான
அசுரர்க்கு—அஸுரர்க்கு
தீங்கு—(விநாஶமாகிற) தீமையை
இழைக்கும்—நிரூபித்து
திருமாலை—அத்தாலே பிராட்டியுகப்புக்கு விஷயமானவனை
பண்கள்—பண்கள்
தலைக்கொள்ள—மேலாம்படி
பாடி—பாடி
பறந்தும்—ஆகாசத்தே கிளம்பி
உழலாதார்—எங்குந்திரியாதார்
மண்கொள்—மண்மிகுந்தின
உலகில்—லோகத்திலே
வல்வினை — கழிக்கவரிய மஹாபாபங்கள்
மலைந்து—மேலிட்டு
மோத—தரையோடே எற்றும்படி
பிறப்பார்—பிறக்குமவர்கள்.
தடிதல்—கொல்லுதல். (உ)

ஆறு ;—(தண்கடல்) பரது:கஸஹிஷ்ணுதையாலே பரதுக்கநிரஸநைகஸ்வபாவனாயிருந்தவனைப் பண்கள் தலைக்கொள்ளப்பாடிப் பறந்தும் குனித்து உழலாதார் நித்யஸம்ஸாரிகளென்கிறார். (உ)

ஈடு ;—அவ ;—மூன்றாம்பாட்டு. உபகாரமறியாத பசுக்களுக்கும் தத்ப்ராயார்க்கும் வந்த ஆபத்தை நீக்கின மஹாகுணத்தை அநுஸந்தித்து அவிக்ருதரா யிருக்குமவர்கள் நித்யஸம்ஸாரிகளாய்ப் போவர்களென்கிறார்.

மலையையெடுத்துக்கல்மாரிகாத்துப் பசுநிரைதன்னைத் *
தொலைவுதவிர்த்தபிரானைச் சொல்லிச்சொல்லி நின்றெப்போதும் *
தலையினோடாதனந்தட்டத் தடுகுட்டமாய்ப்பறவாதார் *
அலைகொள்நரகத்தழுந்திக் கிடந்துழைக்கின்றவம்பரே. (ரு)

ப ;—அநந்தரம், ஆர்த்தங்களான கோக்களை ரக்ஷித்தபடியை அநுஸந்தித்து ஸம்ப்ராந்தராகாதார் நரகவாஸிகளாய் க்லேசிப்பரென்கிறார்.

மலையை—கோவர்த்தநத்தை	நின்று—ஓவாதே நின்று
எடுத்து—எடுத்து	ஆதனத்தோடு தலைதட்ட — தரையோடே தலை தட்டும்படியாக
கல்மாரி—(ஆராதநபங்கமடியாக) இந்த்ரனால்வந்த கல்மாரியை	தடுகுட்டமாய்—கீழது மேலாய்
காத்து—தகைந்து	பறவாதார்—பறவாதார்
பசுநிரைதன்னை — (அபேக்ஷிக்கவும் அறியாத) பசுத்திரளை	அலைகொள்—அநேகது:கங்களை யுடைத்தான
தொலைவு—விநாஶம்	நரகத்து—மஹாநரகத்திலே
தவிர்த்த—(அணுகாதபடி) நீக்கின	அழுந்தி—(கரையேறாதபடி) அழுந்தி
பிரானை — உபகாரகனை	கிடந்து—கிடந்து
சொல்லிச்சொல்லி — பலகாலுஞ்சொல்லி	உழைக்கின்ற— க்லேசிக்கிற
எப்போதும்—ஸர்வகாலமும்	வம்பர்—புதுமைமாறாதவர்கள்.

தொலைவு - நாஶம. ஆதனம் - நிலம். தடுகுட்டம் - கீழது மேலதாகை. வம்பர் - புதியராகை. 'துலைவு' என்றுமாம். (ரு)

ஆறு ;—(மலையை.) உபகாராநபிஜ்ஞ பஶ்வாதிரக்ஷணைக போகத்வமாகிற மஹாகுணத்தை யுடையனானவனை அநுஸந்தித்து அப்ரக்ருதிங்கதராகாதார் யாவர் சிலர், அவர்கள் ரௌரவாதி நரகயாதநையை அநுபவிக்கிறார்களென்கிறார். (ரு)

ஈடு ;—அவ ;—நாலாம்பாட்டு. நப்பின்னைப் பிராட்டிக்காக எருதேழடர்த்து அவளோடே ஸம்ஶ்லேஷித்த ப்ரணயித்வகுணத்தை

அநுஸந்தித்து ஈடுபடாதவர்கள் ஸ்ரீவைஷ்ணவர்கள் நடுவே என்ன ப்ரயோஜனத்துக்காகப் பிறந்தார்கள்? என்கிறார்.

வம்பவிழ்கோதைபொருட்டா மால்விடையேழுமடர்த்த *
செம்பவளத்திரள்வாயன் சிரீதரன்தொல்புகழ்பாடிக் *
கும்பிடுநட்டமிட்டாடிக் கோகுகட்டுண்டுழலாதார் *
தம்பிறப்பாற்பயனென்னே சாதுசனங்களிடையே. (௪)

ப ;—அநந்தரம், அபிமதவிரோதி நிவ்ருத்தியால் வந்த ப்ரணயித்வத்திலே விக்ருதராகாதார் ஜந்மத்தாலே ப்ரயோஜநமென்? என்கிறார்.

வம்பு—செவ்வியையுடைத்தாய்
அவிழ்—மலர்ந்த
கோதை பொருட்டா—மாலையையுடையளான நப்பின்னைப் பிராட்டியைக் கிட்டுகையாகிற புருஷார்த்தமே ஹேதுவாக
மால்—மிகவும்பெரியதான
விடை எழும்—எருது எழையும்
அடர்த்த — நெரித்துக்கொன்ற (அத்தாலே)
செம்பவளம்—சிவந்த பவளம்போலே
திரள்—திரண்ட
வாயன் — அதரத்தின் ஸ்புரத்தையையுடையனுய்க்கொண்டு
சிரீதரன்—(வீரஸ்ரீயோடேநின்ற) க்ருஷ்ணனுடைய
தொல்—ஸ்வாபாவிகமான
புகழ்—குணத்தை
பாடி—பாடி
கும்பிடுநட்டமிட்டாடி — தலைகீழாகக் கூத்தாடி
கோகு உகட்டு உண்டு — அக்ரமமான ஆரவாரத்தைச்செய்து
உழலாதார்தம்—திரியாதார்தங்களுடைய
பிறப்பால்—ஜந்மத்தால்
சாதுசனங்கள்—ஸாத்த்விகஸங்கத்தின்
இடையே—நடுவே
என்பயன்—என்னப்ரயோஜநமுண்டு?
கோகுகட்டுண்கை — ஆரவாரங்கொட்டுகை. 'கோகுகொட்டு' என்றும் பாடம்.

ஆறு ;—(வம்பவிழ்.) சிரீதரனுகையாலே நப்பின்னைப் பிராட்டியோடு ஸம்ஶ்லேஷிக்கைக்காக எருதேழடர்க்கப் பெற்றதினுலுள்ள ப்ரீத்யதிஶயத்தினுலே புதுக்கணித்த திருப்பவளத்தை யுடையவனுடைய இந்த ப்ரணயித்வாதி குணநுஸந்தாந ஜநித ப்ரீத்யதிஶயத்தாலே அப்ரக்ருதிங்கதராகாதார் பகவதேகபோகரான ஸ்ரீவைஷ்ணவர்கள் நடுவே என்ன ப்ரயோஜநத்துக்காகப் பிறந்தார்களென்கிறார். (௪)

ஈடு ;—அவ:—அஞ்சாம்பாட்டு. ஆஶ்ரிதவிரோதிநிரஸநார்த்தமாக அஸாதாரண திவ்யரூபவிஶிஷ்டனாய்க்கொண்டு திருவவதாரம் பண்ணின குணத்தை அநுஸந்தித்தால் விக்ருதராகாதார் அவஸ்துக்களென்கிறார்.

சாதுசனத்தைநலியும் கஞ்சனைச்சாதிப்பதற்கு *
ஆதியஞ்சோதியுருவை அங்குவைத்திங்குப்பிறந்த *
வேதமுதல்வனைப்பாடி வீதிகள்தோறும்துள்ளாதார் *
ஓதியுணர்ந்தவர்முன்னா என்சவிப்பார்மனிசரே ? (௫)

ப ;—அநந்தரம், ஆஶ்ரிதவிரோதி நிரஸநார்த்தமாகிற அவதாரத்துக்கு ஈடுபடாதார் என்ன ஜபாதிகள் பண்ணுவது ? என்கிறார்.

சாதுசனத்தை — ஸாத்விகஜநமான தேவகீ வஸுதேவாதிகளை
நலியும்—நலியும்
கஞ்சனை—கம்ஸனை
சாதிப்பதற்கு—நியமிக்கைக்காக
ஆதி—ப்ரதாநமாய்
அம்—அப்ராக்ருதமான
சோதி—திவ்யதேஜஸ்ஸையுடைய
உருவை—விக்ரஹத்தை
அங்கு — பரமபதத்தில் வைத்த கணக்கிலே
இங்குவைத்து—இவ்விடத்திலும் வைத்துக்கொண்டு
பிறந்த—பிறந்தவனாய்
வேதம்—(க) "ஜாயமாந:-அஜாயமாந:" இத்யாதியாலே வேதப்ரதிபாத்யமான அவதார வைலக்ஷண்யத்தையுடையனான
முதல்வனை — ப்ரதாநபூதனை
பாடி — (இவ் வைலக்ஷண்யத்தைப்) பாடி
வீதிகள்தோறும்—எல்லாவீதியிலும்
துள்ளாதார்—ஆடாதார்
ஓதி—ஶாஸ்த்ராப்யாஸயுக்தரான
உணர்ந்தவர்முன்னா—ஜ்ஞாநாதிகர் ஸந்நிதியிலே
மனிசர் — மனுஷ்யரைப்போலே
என்சவிப்பார் — என்னஜபம்பண்ணுவது?; மநுஷ்யருமல்லர், ஜபமும் நிரர்த்தகமென்று கருத்து. (௫)

ஆறு ;—(சாது.) ஸர்வவேதங்களாலும் ஸர்வேஶ்வரத்வேந ப்ரதிபாத்யமாநனாயிருந்து வைத்து ஆஶ்ரிதஜநவிரோதி கம்ஸாத்யஸுர நிரஸநார்த்தமாக ஸ்வாஸாதாரண திவ்யரூபவிஶிஷ்டனாய்க்கொண்டு இந்தலோகத்திலே மநுஷ்யனாய் வந்துபிறந்த மஹா குணத்தையுடையனாயிருந்தவனைப் பாடி வீதிகள்தோறும் திரியதார் எத்தனை

(க) தை - நா.

யேனும் அறிவுடையாரேயாகிலும் அவர்களால் ஒரு ப்ரயோஜந மில்லை என்கிறார். (ரு)

ஈடு ;—ஆறும்பாட்டு, ஈஶ்வரபோக்யதையை அநுஸந்தித்தால் விக்ருதராவர்களாகில், அவர்கள் எல்லாவறிவின்பலமும் கைவந்தார் என்கிறார்.

மனிசரும்மற்றும்முற்றுமாய் மாயப்பிறவிபிறந்த *
தனியன்பிறப்பிலிதன்னைத் தடங்கடல்சேர்ந்தபிரானைக் *
கனியைக்கரும்பினின்சாற்றைக் கட்டியைத்தேனையமுதை *
முனிவின்றியேத்திக்குனிப்பார் முழுதுணர்நீர்மையினாரே. (கூ)

ப ;—அநந்தரம், அவதாரத்திலும் அவதாரகந்தத்திலு முண்டான போக்யதையை அறிந்து விக்ருதரானவர்களே ஸர்வஜ்ஞ ரென்கிறார்

(ராமக்ருஷ்ணாதி ரூபேணவும் உபேந்த்ராதி ரூபேணவும் மத்ஸ்ய கூர்மாதி ரூபேணவும்),
மனிசரும்—மநுஷ்யரும்
மற்றும்—மற்ற தேவஜாதியும்
முற்றுமாய் — அலலாத திர்யக்ஜாதியுமெல்லாமாய்க் கொண்டு
மாயம் பிறவி பிறந்த தனியன்—ஆஶ்சர்யமான அவதாரங்களைப்பண்ணி ஸஜாதீயனாயிருக்கச்செய்தே அத்யந்தவ்யாவ்ருத்தனான அத்விதீயனாய்
பிறப்பிலிதன்னை—(இந்தவ்யாவ்ருத்திக்கு ஹேதுவான கர்மாதீந) ஜந்மராஹித்யத்தையுடையனாய்,
(இவ்வவதாரார்த்தமாக
தட கடல்—இடமுடைத்தான க்ஷீராப்தியிலே
சேர்ந்த—கண்வளர்ந்தருளும்
பிரானை—உபகாரகனாய்
கனியை—(கண்டபோதே நுகரவேண்டும்) கனியும்
இன்—கோதற்ற இனிய
கரும்பின்சாற்றை—கருப்பஞ்சாறும்
கட்டியை—(ஸர்வதோமுகமான ரஸத்தையுடைய) அதின் கட்டியும்
தேனை—(ஸர்வரஸஸமவாயமான) தேனும்
அமுதை — (போக்தாவை நித்யனாக்கும்) அம்ருதமும்போலே போக்ய பூதனானவனை
முனிவு இன்றி—(அவதாரத்தில் நிகர்ஷபுத்தியாகிற) த்வேஷம் இன்றியே
ஏத்தி—(அவதாரப்ரயுக்த ஶீலஸௌலப்யாதிகளை) ஸ்தோத்ரம்பண்ணி
குனிப்பார்—(அந்தப்ரீதியாலே) ஸஸம்ப்ரமந்ருத்தம் பண்ணுவார்

முழுது உணர்—ஸகல ஶாஸ்த்ரங்களையும் அறிந்த

நீர்மையினர் — ஸ்வபாவத்தை யுடையவர்கள்.

கனியையென்று தொடங்கி - தேனென்னுமளவும், போஜ்யமாயும் பேயமாயும் காத்யமாயும் லேஹ்யமாயுமுள்ள சதுர்வித போஜ்யத்தையும் சொல்லிற்றாகவுமாம். (௬)

ஆறு ;—(மனிதரும்.) ஸ்வேதர ஸம்ஸ்த வஸ்துவிஸஜாதீயனாய், கர்மாதீநஜநநரஹிதனாய், க்ஷீரார்ணவநிகேதநனாய், ஆஶ்ரிதபரித்ராணார்த்தமாக ஸ்வஸங்கல்பத்தினாலே ப்ராக்ருத தோஷங்களொன்றும் தட்டாமே மனுஷ்யாதி ஸர்வயோநிகளிலும் வந்து அவதீர்ணனாய், நிரதிஶயபோக்ய பூதனாயிருந்தவனை அநுஸந்தித்து உகக்களாய்க்கொண்டு ஏத்திக் குனிப்பார் யாவர் சிலர், அவர்களே ஸர்வஜ்ஞராகிறாரென்கிறார். (௬)

ஈடு ;—ஏழாம்பாட்டு. ஆஶ்ரிதபக்ஷபாதமாகிற மஹாகுணத்தில் ஈடுபடாதே ஶரீரபோஷணபரராய்த்திரிகிறவர்கள் வைஷ்ணவர்களுக்கு எதுக்கு உறுப்பாகப் பிறந்தார்கள் ? என்கிறார்.

நீர்மையில்நூற்றுவர்வீய ஐவர்க்கருள்செய்துநின்று *
பார்மல்குசேனையவித்த பரஞ்சுடரைநினைந்தாடி *
நீர்மல்குகண்ணினராகி நெஞ்சங்குழைந்துநையாதே *
ஊன்மல்கிமோடுபருப்பா ரூத்தமர்கட்கென்செய்வாரே ? (௭)

ப;—அநந்தரம், ஆஶ்ரித பக்ஷபாதத்துக்கு ஈடுபடாதார் பாகவதர்க்கு எதுக்கு உறுப்பு? என்கிறார்.

நீர்மை இல்—"பந்துக்களோடே புஜிக்க வேணும்" என்கிற நீர்மை இல்லாத

நூற்றுவர்—துர்யோதநாதிகள் நூற்றுவரும்

வீய—நசிக்கும்படி

ஐவர்க்கு—பாண்டவர்களைவர்க்கும்

அருள்செய்து—நிரவதிக க்ருபையைப் பண்ணி

நின்று—(௧) "க்ருஷ்ணாஶ்ரயா: க்ருஷ்ணபலா: க்ருஷ்ணநாதாஶ்ச பாண்டவா: - க்ருஷ்ணாஶ்ரயா: க்ருஷ்ணபலா: க்ருஷ்ண நாதாஶ்ச பாண்டவா:" என்னும்படி அவர்களுக்கு ஸர்வவிதபந்துவுமாய்) நின்று

பார்மல்கு—பூமிநிரம்பும்படி விஞ்சின

சேனை—சேனையை

அவித்த — (விளக்கு அவித்தாற்போலே நசிப்பித்த)

(௧) பார-

பாஞ்சுடரை — நிரவதிகௌஜ்ஜ்வல்ய யுக்தமான வடிவழகை யுடையவனை
நினைந்து—(இக்குணஸௌந்தர்ய வித்தராய்க்கொண்டு) நினைந்து
ஆடி—(ப்ரேமபரவஶராய்) ஆடி
நீர்மல்கு—ஆநந்தாஶ்ருபூர்ணமான
கண்ணினராகி—கண்களை யுடையராய்
நெஞ்சம்—(நினைத்த) நெஞ்சு
குழைந்து—கட்டுக்குலைந்து
நையாதே — (ரோமாஞ்சாதிகளாலே) ஶிதிலஶரீரராகாதே
ஊன்மல்கி—மாம்ஸோத்தரமாய்
மோடுபெருப்பார்—பிடரியிற்பிசல்பெருக்கும்படி உடம்பை வளர்ப்பார்
உத்தமர்கட்கு—(ஜ்ஞாநாதிகராய்) உத்தமரான பாகவதர்களுக்கு
என்செய்வார்—ஏதுசெய்கைக்கு உறுப்பாவர்? அநுபயுக்த ஸ்வபாவரென்று கருத்து.

ஆறு;—(நீர்மையில்) பாண்டவர்கள் பக்கலுள்ள வாத்ஸல்யத்தாலே தத்விரோதிகளான துர்யோதநாதிகளையும் மற்றுமுள்ள ப்ரதிகூலவர்க்கத்தையும் அடங்க நிரஸித்ததுவே தனக்கு நிரதிஶய தேஜஸ்ஸாக விருந்தருளினவனை நினைத்து நீர்மல்கு கண்ணினராகி நெஞ்சங்குழைந்து நையாதே, கேவலம் ஶரீரபோஷகராயிருப்பார் இந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் வர்த்திக்கிற தேஶத்திலே என்செய்ய உளராணு ரென்கிறார். (௭)

ஈடு; — அவ; — எட்டாம்பாட்டு. திருவேங்கடமுடையானுடைய நீர்மைக்கு ஈடுபடுவாரைக் கொண்டாடுகைக்கு நாம் ஆர்? நித்யஸூரிகளன்றோ அவர்களைக் கொண்டாடுவார்க ளென்கிறார்.

வார்புனலந்தண்ணருவி வடதிருவேங்கடத்தெந்தை *
பேர்பலசொல்லிப்பிதற்றிப் பித்தரென்றேபிறர்கூற *
ஊர்பலபுக்கும்புகாது முலோகர்சிரிக்கநின்றாடி *
ஆர்வம்பெருகிக்குனிப்பா ரமரர்தொழப்படுவாரே. (௮)

ப;—அந்தரம், திருமலையிலே அர்ச்சாவதாரமாய் ஸுலபனான ஸர்வேஶ்வரனுடைய நீர்மைக்கு ஈடுபட்ட ப்ரவ்ருத்திகளையுடையவர்கள் ஸூரிகளாலே ஆதரிக்கப்படுவார்க ளென்கிறார்.

வார் புனல் — வீழாநிற்கிற புனலை யுடைத்தாய்,
அம்—தர்ஶநீயமாய்
தண்—குளிர்ந்த
அருவி—அருவிகளையுடைய [ன
வடக்கு—(தமிழுக்கு) வடவெல்லையா
திருவேங்கடத்து — பெரிய திருமலையில்நிற்கிற

எந்தை—ஸ்வாமியுடைய
பேர்—(ஸ்வரூபரூபகுணவிபூதிவிஷய மான) திருநாமங்களை
பல—பலவும்
சொல்லி—சொல்லி
பிதற்றி — அடைவுகெடப் பிதற்றி, (அத்தாலே)
பிறர்—(பகவத்ப்ரேமமில்லாத) அந்யர்
பித்தரென்று—பித்தரென்று
கூற—சொல்லும்படியாக
பலவூர் — (மநுஷ்யர் நடையாடுகிற) பல ஊர்களிலே
புக்கும்—புக்கும்
புகாதும்—மநுஷ்யர் நடையாடாதவிட ங்களிலும்
உலோகர் சிரிக்க—லௌகிகர் சிரிக்கும் படியாக
நின்று—(பரவசராய்க்கொண்டு) நின்று
ஆடி—நடையாடி
ஆர்வம் பெருகி—அபிநிவேசம் விஞ்சி
குனிப்பார்—ஸஸம்ப்ரம ந்ருத்தம்பண் ணுவார்
அமரர் — நித்யாநுபவபரரான ஸூரிக ளாலே
தொழப்படுவார் — ஆதரிக்கப் படுவார் கள். (அ)

ஆறு ;— (வார்புனல்.) நிரதிசயபோக்யமான திருமலையிலே நின்றருளி என்னை அடிமைகொண்ட திருவேங்கடமுடையானுடைய திருநாமங்களைச் சொல்லிப் பிதற்றி, வைஷ்ணவர்களல்லாதார் பித்தரென்று சொல்லும்படி மநுஷ்யர் ஸந்நிதாநத்தோடு அஸந்நிதாநத்தோடு வாசியின்றிக்கே லௌகிகர் சிரிக்க அதுவே உத்தம்பகமாம்படி ஸஸம்ப்ரமசேஷ்டிதத்தையுடையராய் அபிநிவேசம் மிகுத்து ஆடுமவர்கள், அயர்வறுமமரர்களிலும் ச்ரேஷ்டரென்கிறார். (அ)

ஈடு ;—அவ;—ஒன்பதாம்பாட்டு. கைவல்ய ‡ புருஷார்த்தத்தை எடுத்து, சீலாதிகுண விசிஷ்டமான வஸ்துவைப் பற்றாதே மின் மினிபோலேயிருக்கிற ஆத்மாநுபவமாத்ரத்திலே நிற்பதே ! என்று அவர்களை நிந்தித்து ; அவர்களை யொழிந்தாரையெல்லாம் பகவத் வ்யதிரிக்த லாபங்களை 'புருஷார்த்தம்' என்றிராதே, பகவத்குண ங்களை அநுஸந்தித்து விக்ருதராய் ஆடுவது பாடுவதாகுங்கோள் ; இதுவே கர்த்தவ்ய மென்கிறார்.

அமரர்தொழப்படுவானை யனைத்துலகுக்கும்பிரானை *
அமரமனத்தினுள் யோகுபுணர்ந்தவன்தன்னோடொன்றாக *
அமரத்துணியவல்லார்களொழிய வல்லாதவரெல்லாம் *
அமரநினைந்தெழுந்தாடி யலற்றுவதேகருமமே. (௯)

---

‡ (பா) புருஷார்த்தரை.

ப ;— அநந்தரம், உபயவிபூதி நாதனானவன் விஷயத்தில் யோகஜநிதபக்தி விகார யுக்தரானவர்களன்றியே அது இல்லாத அல்லாதார்க்கும் அவர்களைக் கணிசித்தும் அவர்கள் வ்யாபாரங்களைப் பண்ணுகை கர்த்தவ்ய மென்கிறார்

அமரர்—நித்யஸூரிகளுக்கு
தொழப்படுவானை — நிரதிசயபோக்ய பூதனாய்
அனைத்துலகுக்கும் — ஸமஸ்தலோகத்துக்கும்
பிரானை—சேஷியானஸர்வேஶ்வரனை
அமர—ஸ்திரமாம்படி
மனத்தினுள்—மநஸ்ஸிலே
யோகு புணர்ந்து — யோகமுகத்தாலே செறிந்து
அவன்தன்னோடு ஒன்றாக — பரமஸாம்யாபத்திபெறும்படி
அமர துணியவல்லார்கள்—நிலைநின்ற அத்யவஸாயத்தைப் பண்ணவல்ல பக்திநிக்நர்கள்
ஒழிய—அன்றியே
அல்லாதவர் எல்லாம் — (இந்த யோகஜந்யபக்தி) கைவாராதவர்களெல்லாரும்
அமர—இதிலே அமரவேணுமென்று
நினைந்து—நினைந்து
எழுந்து—உத்யுக்தராய்
ஆடி அலற்றுவதே—(அவர்களைப்போலே) ஆடுவது அலற்றுவதாகையே
கருமம்—கர்த்தவ்யம்.

பக்திபாகம் பிறவாதார்க்கும் நிஷ்பந்நபக்திக ப்ரவ்ருத்தியை அநுவிதாநம் பண்ணுகை ப்ராப்த மென்று கருத்து. (௯)

ஆறு ;—(அமரர்.) அயர்வறுமமரர்கள் அதிபதியாய் ஸர்வலோகேஶ்வரனாயிருந்த எம்பெருமானை கைவல்யார்த்தமாக ஆஶ்ரயிக்கும் அந்த க்ஷுத்ரரானவர்களொழிய அல்லாதாரெல்லாம் இப்படி எம்பெருமானை அநுஸந்தித்து அப்ராக்ருதிங்கதராம்படியாக அவனை ஆஶ்ரயியுங்க ளென்கிறார். (௯)

ஈடு ;—அவ ;—பத்தாம்பாட்டு. கீழே - கேவலரை நிந்தித்தார் ; இதில் - 'அநந்யப்ரயோஜநராய்க்கொண்டு அவன் குணங்களை யநுஸந்தித்து விக்ருதராகுங்கோள், உங்களுக்கு இதுவே புருஷார்த்தமென்கிறார்.

கருமமும்கருமபலனுமாகிய காரணன்தன்னைத் *
திருமணிவண்ணனைச் செங்கண்மாலினைத்தேவபிரானை *
ஒருமைமனத்தினுள்வைத் துள்ளங்குழைந்தெழுந்தாடிப் *
பெருமையும்நாணும்தவிர்த்து பிதற்றுமின்பேதைமைதீர்ந்தே.(௧0)

ப ;—அநந்தரம், கீழ் - விலக்ஷணவிக்ரஹவிஶிஷ்டனானவன் விஷயத்தில் உபாஸகருடைய பக்திபாரவஶ்யத்தை அதில் அந்வயமில்லாதாரும் அநுவிதாநம்பண்ண ப்ராப்த மென்றார் ; இதில் - அநந்யஸாதநரான அநந்யப்ரயோஜநரும் பகவத்ப்ராவண்ய பாரவஶ்யத்தாலே விக்ருதராய் வர்த்தியுங்கோ ளென்கிறார்.

கருமமும் — (ஸாதநரூபமான) கர்மங்களும்
கருமபலனும் — தத்ஸாத்யமான பலங்களும்
ஆகிய காரணன் தன்னை — தானிட்ட வழக்காம்படி ஸமஸ்த காரணபூதனாய்
திரு — (தன்னையே உபாயமாகவும் உபேய மாகவும் பற்றுவார்க்கு) ஸ்ப்ருஹணீயமான
மணி — மாணிக்கம்போன்ற
வண்ணனை — (ஶுபாஶ்ரயமான) வடிவையுடையனாய்
(அவர்களைப்பூர்ணகடாக்ஷம்பண்ணும்)
செம் கண் — சிவந்த கண்களையும்
மாலினை — வாத்ஸல்யத்தையுமுடையனாய்
தேவபிரானை — ஸூரிகளுக்குப் போலே அவர்களுக்கு அநுபாவ்யனானவனை
ஒருமை — (உபாயோபேயங்களில் பேதம்பிறவாதபடி) ஒருமைப்பட்ட
மனத்தினுள் — நெஞ்சிலே
வைத்து — வைத்து
உள்ளம்குழைந்து — (இவ்வாகாரத்வயத்துக்கு ஈடுபட்டு) நெகிழ்ந்தநெஞ்சையுடையராய்
எழுந்து — கிளர்ந்து
ஆடி — ஆடி
பெருமையும் — (துர்மாந கார்யமான) பெருமையையும்
நாணும் — (அகடியான 'மனிசர்முன்னே ஆடும்படியென்?' என்கிற) லஜ்ஜையையும்
தவிர்ந்து — தவிர்ந்து
பேதைமை — (இப்பாரவஶ்யம் நிகர்ஷமாக நினைக்கும்) அறிவுகேட்டையும்
தீர்ந்து — தவிர்ந்து
பிதற்றுமின் — (அவனுடைய குணகணங்களை) அக்ரமமாகப்பிதற்றுங்கோள்.

அநந்யஸாதநர்க்கும் ஶேஷத்வஸாரஸ்ய காரிதமான பாரவஶ்யம் உத்தேஶ்யமென்று கருத்து (௧௦)

ஆறு ;— (கருமமும்.) புண்யபாபகர்மங்களுக்கும் கர்மபலங்களுக்கும் நியந்தாவாய், ஸர்வஜகத்காரணமாய், நிரதிஶயௌஜ்ஜ்வல்ய நீலரத்நஸத்ருஶ திவ்யரூபனாய், பத்மபத்ரேக்ஷணனாய், ஶேஷஶேஷாஶநாத்யபரிமிதபரமஸூரிபிஸ்ஸேவ்யமாநனாயிருந்த எம்பெருமானை அநந்யப்ரயோஜநமநஸ்கராய், நிரதிஶயபக்தியுக்தராய்,

நிரஸ்தாஹங்காராதிதோஷராய், பகவத்வ்யதிரிக்தவிஷயஸங்கரஹிதராய்க்கொண்டு ஏத்துங்க ளென்கிறார். (௧௦)

ஈடு ;—நிகமத்தில்-இத்திருவாய்மொழி கற்றார் பகவத்குணாநுஸந்தாநம் பண்ணினால் அவிச்ருதராயிருக்கைக்கு அடியான மஹாபாபத்தை இதுதானே நிஶ்ஶேஷமாகப் போக்கு மென்கிறார்.

தீர்ந்தவடியவர்தம்மைத் திருத்திப்பணிகொள்ளவல்ல *
ஆர்ந்தபுகழச்சுதனை அமரர்பிரானை எம்மானை *
வாய்ந்தவளவயல்சூழ் தண்வளங்குருகூர்ச்சடகோபன் *
நேர்ந்தவோராயிரத்திப்பத் தருவினைநீறுசெய்யுமே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ப ;— அநந்தரம், இத்திருவாய்மொழிக்குப் பலமாக அநுபவவிரோதி நிவ்ருத்தியை அருளிச்செய்கிறார்

தீர்ந்த — (ஈஶ்வரனுடைய உபாயோபேயத்வங்களில்) வ்யவஸிதரா யிருக்கும்
அடியவர்தம்மை—அடியவர்களை
திருத்தி — (ப்ரதிபந்தக நிவ்ருத்தி பூர்வகமாகப் பரபக்தி பரஜ்ஞாநாதிகளைக் கொடுத்துத்) திருத்தி
பணிகொள்ளவல்ல—நித்யகைங்கர்யத்தைக்கொள்ள வல்ல
ஆர்ந்த புகழ்—(ஸர்வஶக்தியுக்தனாகையாலே) பரிபூர்ணமான குணங்களையுடையனாய்
அச்சுதனை — ஆஶ்ரிதரை நழுவவிடாதவனாய்
அமரர்பிரானை அம்மானை—நித்யஸூரிகளோடொக்க அடிமை கொள்ளும் ஸர்வேஶ்வரனை
வாய்ந்த—நன்றான
வளம்—வளப்பத்தையுடைய
வயல்—வயல்
சூழ்—சூழ்ந்து
தண்—ஶ்ரமஹரமாய்
வளம்—ஸர்வஸம்பத்ஸம்ருத்தமான
குருகூர்—திருநகரிக்கு நிர்வாஹகரான
சடகோபன்—ஆழ்வார்
நேர்ந்த — (பக்திபரவசருடைய உத்கர்ஷத்தையும் அல்லாதாருடைய நிந்தையையும்) நேர்ந்து அருளிச்செய்த
ஓர்—அத்விதீயமான
ஆயிரத்து — ஆயிரத்திலும் வைத்துக்கொண்டு
இ பத்து—இந்தப் பத்தும்

அருவினை—(பகவத்குணாநுஸந்தாநத்தில் விக்நகராகாதபடி பண்ணும்) மஹாபாபங்களை	நீறுசெய்யும்—பஸ்மஸாத்தாம்படி பண்ணும்
	வளங்குருகூர் - வாய்ந்த — சடகோபனென்றுகவுமாம்.

இது—அறுசீராசிரிய விருத்தம்.

ஆறு;—(தீர்ந்த.) தன் திருவடிகளே ப்ராப்யமும் ப்ராபகமுமென்று அத்யவஸித்திருக்கும் ஆஸ்ரிதரை நிரஸ்தப்ரதிபந்தகராக்கி அடிமைசெய்வித்துக் கொள்ளவல்ல ஆர்ந்தபுகழையுடையனாய், அயர்வறுமமரர்களோடே ஸம்ஸ்லேஷிக்குமாபோலே ஆஸ்ரிதரோடு ஸம்ஸ்லேஷிக்கும் ஸ்வபாவனாய், எனக்கு ஸ்வாமியாயிருந்த எம்பெருமானைச்சொன்ன இத்திருவாய்மொழி பகவத்பக்திவிரோதிகளைப் போக்குமென்கிறார். (கக)

வடக்குத் திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்.

மூன்றும்பத்து அஞ்சாந் திருவாய்மொழி வ்யாக்யாநங்கள் முற்றிற்று.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஆறாந்திருவாய்மொழி—செய்யதாமரை ப்ரவேசம்.

ஆறு ;—(செய்யதாமரைக்கண்ணன்.) "பிறகற்றுமின் பேதைமைதீர்ந்து" என்றுகொண்டு எம்பெருமானை ஆஸ்ரயியுங்களென்று முன்பு சொல்லப்பட்டவர்களைக் குறித்து எம்பெருமானுடைய ஸுலபத்வகாஷ்டையை அருளிச்செய்கிறார். *

ப ;—ஆறாந்திருவாய்மொழியில், கீழ் ஸேஷத்வ ஸாரஸ்யத்தால் பிறந்த ப்ரீதிவிகாரம் உத்தேஸ்யமென்று அருளிச்செய்தவர் அந்த இனிமையில்லாமையாலே அவிக்ருதரான ஸம்ஸாரிகளுக்கும் பகவச்சேஷத்வத்தை உபதேசிப்பதாக ஸேஷியினுடைய அர்ச்சாவதார பர்யந்தமான ஸௌலப்யத்தை உபபாதிப்பதாக நினைத்து, அந்த ஸௌலப்யத்துக்கு ஊற்றான ஜகத்ஸ்ரஷ்ட்ருத்வத்தையும், ஸ்ருஷ்டமான ஜகத்தினுடைய ரக்ஷணார்த்தமான அவதாரகந்தத்வத்தையும், அவதீர்ணனுடைய அதிஸயிதசேஷ்டிதத்வத்தையும், ஈஸ்வராபிமானிகளுக்கும் ஆஸ்ரயணீயனான ஸீலாதிஸயத்தையும், அவதாரதசையிலும் அகிலவிபூதித்வம் தோற்றும்படியான ஆதிக்யத்தையும, ஆஸ்ரிதவிஷயத்தில் அதிஸயித வாத்ஸல்யத்தையும், நிரவதிகபோக்யதையையும் பற்றினாரை நழுவவிடாத பக்ஷபாதத்தையும், ஸர்வவிதபந்துவுமாய்க்கொண்டு ஆஸ்ரிதரிட்ட வழக்கான அர்ச்சாவதார பாரதந்த்ர்யத்தையும், ஆஸ்ரிதபாரதந்த்ரனான அவன் பக்கல் தமக்குப் பிறந்த அபிநிவேஸத்தையும் அருளிச்செய்து, பகவச்சேஷத்வத்தை ப்ரதிபாதித்தருளுகிறார். *

ஈடு ;—ஸர்வேஸ்வரன் திருவடிகளில் கைங்கர்ய ருசியுடையார்க்கு அத்தைக்கொடுக்கக் கடவனுமாய் அவ்வடிமைதான் அவன் தனக்கு இனியதா யிருக்கக்கடவதுமாய் அவ்வழியாலே இச்சேதநனுக்கு உத்தேஸ்யமாகக் கடவதுமாயிருக்க, அத்தையிழக்கையாலே சிலரை நிந்திக்கவேண்டும்படியிறே கீழில் திருவாய்மொழியில் நின்றது ; இவ்வடிமையிலே அந்வயித்தாரைக் கூட்டிக்கொண்டு அதில்லாதாரை உபேக்ஷித்தாராய் நின்றார் ; இனி, தாமே விழுவாரைத் தடிகொண்டு அடிக்குமோபாதி யென்றுபார்த்து இவர்கள் பண்டே அறிவுகேட்டாலே வழிதப்பிப்போய் அநர்த்தப்படாநின்றார்கள் ; நாம் இவர்களைக் கைவிடவொண்ணாது ; ஹிதத்தைச் சொல்லுவோ மென்று பார்த்து ஹிதத்தை அருளிச்செய்கிறார்.

ராவணன் பிராட்டிபக்கல் 'ஜநநி' என்னும் ப்ரதிபத்தி யின்றிக்கே திருமுன்பே சிலவற்றை ஜல்பிக்கப் புக்கவாறே, "ஐயோ! இவன் நினைவு இருந்தபடி யென்? இவனுக்கு ஒரு நல்வார்த்தை சொல்லுவாரின்றிக்கே யொழிவதே!" என்றுவெறுத்து, அவன் தனக்கே (க) "மித்ரமௌபயிகம் கர்த்தும்" - மித்ரமௌபயிகம்கர்த்தும்" என்று பிராட்டி ஹிதம் அருளிச்செய்தாற்போலே, (உ) "த்வந்நீசஸம்ஸவத் - த்வந்நீசஸஸஸவத்" என்றுவைத்துப் பின்னையும் அவன் தனக்கே ஹிதம் அருளிச்செய்தாற்போலே யிருப்பரொன்றிறே; இவரும் கீழ்த்திருவாய்மொழியில் அவர்களை நிந்தித்துவைத்து, இங்கு ஹிதஞ் சொல்லுகிற விடமும். [மித்ரமௌபயிகம் கர்த்தும்ராம: - மித்ரமௌபயிகம்கர்த்தும்ராம:] 'பெருமாளை நீ சரணம் புகு' என்றால் அப்பையல் அது தனக்கு எளிவரவாக நினைத்திருக்குமே; அதுக்காகத் "தோழமைகொள்" என்கிறாள். தங்களைச் சரணம்புக்காரை, தங்களிற் காட்டில் குறைய நினைத்திருப்பதில்லையே இவர்கள்; (ங) "மித்ரபாவேந - மித்ரபாவேந" என்றும், "மித்ரமௌபயிகம் கர்த்தும் - மித்ரமௌபயிகம் கர்த்தும்" என்றுமிறே இருவர் படியும். [ஸ்தாநம்பரீப்ஸதா - ஸ்தாநம்பரீப்ஸதா] - வழியடிப்பார்க்கும் தரையிலே கால்பாவிநின்று வழியடிக்கவேணுமே; உனக்கு ஓரிருப்பிடம் வேண்டியிருந்ததாகிலும் அவரைப் பற்றவேணுங்காண். எளிமையாக எதிரிகாலிலே குனிந்து இவ்விருப்பு இருப்பதில், பட்டுப்போக அமையுமென்றிருந்தாயோ? [வதஞ்சாநிச்சதாகோரம் - வதஞ்சாநிச்சதாகோரம்] - அப்படி உன்னை நற்கொலைப்பட விடுவரோ? உன்னைவைத்து உன்முன்னே உன்ஸந்தாநஜாதரை ஹிம்ஸித்துப் பின்னை உன்னைச்சித்ரவதம் பண்ணுகையாகிற இவ்வதத்தை இச்சித்திலையேயாகிலும் அவரைப் பற்றவேணுங்காண்; [த்வயா - த்வயா] - உன்நிலை இருந்தபடியால் விசேஷித்து உனக்கு அவரைப் பற்றவேணும். [அஸௌ - அஸௌ] - உரு வெளிப்பாட்டாலே முன்னிலையா யிருக்குமிறே, இவளுக்கு; அவனுக்கும் தானே மாயாம்ருகத்தின் பின்னே போகிறபோது கண்டகாட்சியாலே அச்சத்தாலே எப்போதும் முன்னிலையா யிருப்பரிறே.

(க) ரா - ஸு - உக - உ०. (உ) ரா - யு - உஉ - கசு.
(ங) ரா - யு - கஅ - ங.

[வ-பா-ஷெஷ-ஃ - புருஷர்ஷப:] 'நான் பண்ணின அபகாரத் துக்கு என்னை அவர் கைக்கொள்ளுவரோ?' என்றிருக்கவேண்டா; இவற்றை ஒன்றாக நினைத்திரார்காண்; அவர் புருஷோத்தமர்காண். [அஸௌ - புருஷர்ஷப: - ராம: - த்வயா-மித்ரம்-கர்த்தும் - ஔ பயிகம்] இப்படி பிராட்டி ராவணனுக்கு ஹிதம் அருளிச்செய்தாற் போலே இவரும் இவர்களுக்கு ஹிதம் அருளிச்செய்கிறார்.

'இவர்கள் தான் வழிதப்பிப்போய் அநர்த்தப்படுகிற முகம் ஏதோ, ப்ராப்தி ஒத்திருக்க' என்று பார்த்தார்; பகவத்குண ஜ்ஞாநமில்லாமையும் அவனுடைய ஸௌலப்யஜ்ஞாநமில்லாமையுமா யிருந்தது. "ஈச்வரனாகிறான் பெரியனொருவனன்றோ? அவன் விசைக்கொம்பு; நமக்கு அவனை எட்டப்போகா தொன்றாயிருந் தது" என்று ஸம்ஸாரிகள் கைவாங்க, "அவனுடைய ஸௌலப்யத் தை உபபாதிப்போம்" என்று பார்த்து, "நீங்கள் அவன் அரியவ னென்று கைவாங்கவேண்டா; அவன் ஆச்ரிதஸுலபன்; அவனை யாச்ரயியுங்கோள்" என்கிறார்.

கீழ் * 'பத்துடையடியவர் தொடங்கி ஸௌலப்யமேயன்றோ சொல்லிக் கொண்டு போந்தது; இப்போதாக ஸௌலப்யஞ்சொல்ல வேண்டுகிற தென்?' என்னில்;—அங்குச்சொன்ன ஸௌலப்யந் தான்பரத்வ மென்னும்படி அர்ச்சாவதார பர்யந்தமான ஸௌலப்ய காஷ்டையை அருளிச்செய்கிறார். (க) [அவ-ஃ - அர்ச்ச்ய:] - ஸம் ஸாரிகளுக்கும் அர்ச்சிக்கலாம்படி அர்ச்சயனாயிருக்கும்: ஸம்ஸாரிக ளாகில் அர்ச்சிக்கிறார்; அவர்கள் அபராதமேபண்ணுவது? என்னில், — [லவ-ஃவஸஹிஷ-ட: - ஸர்வஸஹிஷ்ணு:] - அவற்றை யடையப் பொறுத்துக்கொண்டு நிற்கும்; ஆனாலும், நினைவு இ ண்டா யிராநின்றதே! என்னில், — [அவ-ஃகவொாயீ நா லிஜா த்து லிதி: - அர்ச்சகபராதீநாகிலாத்மஸ்திதி:] - "நமக்கு ஒரு நினைவும் அவர்களுக்கு ஒரு நினைவு மாகி லன்றோ சேராச்சேர்த்தியாவது" என்று அவர்களுக்கு ஈடாகத் தன்னை அமைத்து நிற்கும். (உ) "தமருகந்த தெவ்வுருவ மவ்வுருவந் தானே" இத்யாதி. — (ஈ) "யெய ாரொ வெ வஓ ெட் - யேபதாமாம்ப்ரபத்யந்தே' - யாவர் சிலர்

(க) ர - ஸ்ர - உ - எா. (உ) க - திருவ - ா.

(ஈ) கீதை - ச - கக

அதிகாரிகள் யாதொருபடியாகவேணுமென்று நம்மை பஜிக்கிறார்கள், அவர்களைக்குறித்து அப்படி கிட்டலாய்படிக்கு ஈடாக நம்மை அமைத்துக்கொண்டு நிற்போம்; "யே யதா மாம் ப்ரபத்யந்தே - மமவர்த்மாநுவர்த்தந்தே" இத்யாதி - இப்படி அவர்கள் நினைவே நமக்கு நினைவாம்படி யிருக்கையாலே அவர்களெல்லாம் நம்வழி போருமவர்களிறே.

(க) [ஸ்ரு தல்லக்ஷண்ய நாயக - ஸ்ம்ருதம் ஸங்கல்பநாமயம்] - பரமபதத்தில் அஸாதாரண விக்ரஹத்தோடும் குணங்களோடும் இருக்கும்; விபவங்களில் வந்தால் அது தன்னை இதரஸஜாதீயமாக்கிற்று யிருக்கும்; இங்ஙனன்றிக்கே, ஆஶ்ரிதன் தான் உகப்பது ஏதேனும் ஒரு த்ரவ்யத்தைத் திருமேனியாகக்கோலினால் அத்தையே தனக்குத் திருமேனியாகக் கொண்டு அதிலே அஸாதாரணவிக்ரஹத்தில் பண்ணக்கடவ அபிமாநத்தைப் பண்ணி, இவ்வழியாலே முகங்கொடுக்கும்படியாயிறே இந்நிலை இருப்பது. ஸ்வவ்யதிரிக்த ஸமஸ்தவஸ்துக்களினுடையவும் ஸ்வரூபஸ்திதி ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளுடைய ஸ்வாதீநமாம்படி யிருக்கிறவன், தன்னுடைய ஸ்வரூபஸ்தித்யாதிகள் ஆஶ்ரிதாதீநமாம்படியாய் அவர்களுக்கு க்ருஹக்ஷேத்ராதிகளோபாதி கூறுகொள்ளலாம்படி நின்ற நிலையிறே. இவனுக்கு ருசி பிறந்தபோது மற்றொருவிடத்திலே போகவேண்டாதே இங்கே அநுபவிக்கலாம்படி நிற்கிறநிலையாய், இஶ்ஶரீரஸம்பந்தமற்று ஒருதேசவிஶேஷத்திலே போய் அதுக்கு ஈடாயிருப்பதொரு ஶரீரத்தைப் பெற்றுச் செய்யக்கடவவான அடிமைகளை இதரவிஷயப்ராவண்யத்துக்கு உறுப்பான இவ்வுடம்போடே செய்யலாம்படியாய், இவன் அந்யபரனானவன்றும் இவன்கையையே பார்த்திருக்கக்கடவனாய், இவன்தான் பசித்தபோது புஜிக்கும் த்ரவ்யத்தை 'அமுதுசெய்யவேணும்' என்று அபேக்ஷித்தால் அப்போதே அமுதுசெய்யக்கடவனாய், ஆஸநஶயநஶுஶ்ரூஷணாதிகளெல்லாம் இவனிட்ட வழக்காக்கி, ஶ்ரிய:பதியாய் அவாப்தஸமஸ்தகாமனானவன் ஆஶ்ரிதபராதீநனாய், இவன் ஏதேனும் ஒருத்ரவ்யத்தை யிட்டால் அத்தைத் திருவாய்ப்பாடியில் யஶோதாதிகள் வெண்ணெயோபாதி விரும்பக்கடவனாய், இப்படி தன்னை யமைத்துக்கொண்டு நிற்கிற

(க) வி - பு - ௬ - ௭ - ௭௦.

இடமிறே அர்ச்சாவதாரமாவது. பரத்வமே தொடங்கி அவதாரங்களிலே வர அவன்குணங்களைச் சொல்லிக்கொண்டுபோந்து அர்ச்சாவதாரபர்யந்தமான ஸௌலப்யகாஷ்டையை உபதேசிக்கிறார்.

இப்போது ஸௌலப்யமாகில் உபதேசிக்கப்புகுகிறது, பரத்வமே தொடங்கி உபதேசிக்க வேண்டிவானென்? என்னில்;— "மேன்மையையுடையவன் தாழநின்றான்" என்றாலிறே குணமாவது; தாழ்வுப்ராக்ருதியானவன் தாழநின்றால் ஸ்வரூபமாமித்தனையிறே; இப்படி தாழநிற்கிறவன் மேன்மையையுடையவனென்கைக்காகச் சொல்லிற்று. உபாயங்களில் ப்ரபத்திபோலே ஸௌலப்யங்களில் அர்ச்சாவதார ஸௌலப்யம். ஜநநிக்கும் ஸ்த்ரீ ஸாமாந்யம் ஒத்திருக்கச்செய்தே பண்ணுகிற உபகாரங்களை ப்ரத்யக்ஷிக்கையாலும் ஶாஸ்த்ரஞ் சொல்லுகையாலுமிறே கௌரவிக்கிறது; அப்படியே ப்ராமாணிகனானவனுக்கு ஆஶ்ரயணீயஸ்தலம் அர்ச்சாவதாரம்போக்கி இல்லையென்று இவ்வளவான ஸௌலப்யகாஷ்டையை உபதேசிக்கிறார்.

ஈடு;—முதற்பாட்டில் - ஜகத்காரணத்வ புண்டரீகாக்ஷத்வாதி குணங்களையுடையவன் ஆஶ்ரயணீயன்; அவனை ஆஶ்ரயியுங்கோளென்கிறார். ஜகத்காரணவஸ்துவை உத்தேசித்து அவ்வஸ்துவுக்கே புண்டரீகாக்ஷத்வாதிகளை விதிக்கிறார்.

செய்யதாமரைக்கண்ணனாயுலகேழுமுண்டவவன்கண்டீர் *
வையம்வானம்மனிசர்தெய்வம் மற்றும்மற்றும்மற்றும்முற்றுமாய்*
செய்யசூழ்சுடர்ஞானமாய் வெளிப்பட்டிவையபடைத்தான்* பின்னும்
மொய்கொள்சோதியொடாயினானொருமூவராகியமூர்த்தியே. (௧)

1.1;—முதற்பாட்டில். அப்பயபூர்விகையான ஸ்ருஷ்டி அவனிட்ட வழக்கென்கிறார்.

செய்ய — (ஸர்வஸ்மாத்பரத்வத்தால் வந்த ஐஶ்வர்யஸூசகமாய்ச்) சிவந்த
தாமரை— தாமரைபோலும்
கண்ணனாய் — கண்ணழகையுடையனாய்க்கொண்டு, (ஸம்ஶ்ருதி ஸமயத்திலே (௧) "சுத்தா ஶராசர க்ரஹணாத்" என்கிறபடியே)

(௧) ப்ரஹ்மஸூ - ௧ - ௨ - ௯.

உலகேழும்—ஸகலலோகங்களையும்
உண்ட—தனக்குள்ளே
அவன்கண்டீர்—அவன்கிடீர்
ஒரு—அத்விதீயமான
மூவராகிய மூர்த்தி— ப்ரஹ்மவிஷ்ணு ஶிவாத்மக மூர்த்தித்ரயத்தை யுடையனாய்க் கொண்டு
வையம்—பூமியும்
வானம்— ஊர்த்வலோகங்களும், (தத் வாஸிகளான)
மனிசர்—மநுஷ்யரும்
தெய்வம்—தேவரும்
மற்றும்—மற்றும் திர்யக்குக்களும்
மற்றும்—மற்றும் ஸ்தாவரங்களும்
மற்றும்—மற்றும் பூதபஞ்சகமும்
முற்றும்—மஹதாதி ஸமஷ்டியும்
ஆய்—உண்டாம்படி உபாதாநமாய்

செய்ய—(அமோகமாகையாலே) செவ்விதாய்
சூழ்— (ஸ்ருஜ்யபதார்த்தங்களை யடையச்) சூழ்வதாய்க்கொண்டு
சுடர்—ப்ரகாஶிக்கிற
ஞானமாய்— ஸங்கல்பரூபஜ்ஞாநஸ்வரூபனாய்
வெளிப்பட்டு—ஸ்ருஷ்ட்யபிமுகனாய்க் கொண்டு தோற்றி
இவை—உக்தமான ஸமஸ்தபதார்த்தங்களையும்
படைத்தான்— (நிமித்தமாய்க்கொண்டு) ஸ்ருஷ்டித்து
பின்னும்—அதுக்குமேலே
மொய்கொள்—செறிந்த
சோதியோடு—தேஜோமயமான திவ்ய தேஹத்தோடு
ஆயினான்—கூடியிருந்தவன்.

முற்றுமாயென்கிற ஸாமாநாதிகரண்யம்-கார்யகாரணபாவத்தாலே. ஞானமாயென்கிற இடம்-குணகுணிபாவத்தாலே. மூவரென்று ப்ரஹ்மருத்ரேந்த்ரர்களைச் சொல்லவுமாம். (௧)

ஆறு;— ஸங்கல்ப ஸஹஸ்ரைகதேஶத்தாலே வையம் வானம் மனிசர் தெய்வம் மற்றும் மற்றும் மற்றும் முற்றுமாய்க்கொண்டு தோற்றுகிற இவற்றுக்கு ஸ்ரஷ்டாவாய், பின்னையும் தேஜ:ப்ரப்ருத்யஸங்க்யேய கல்யாணகுண விஶிஷ்டனாய், ப்ரஹ்மருத்ராந்தராத்மதயாவஸ்தாய ஸர்வஜகத்ஸ்ருஷ்டி ஸம்ஹார ஹேதுபூதனாய், ஸ்வேந ரூபேண அவஸ்தாய ஸர்வஜகத்ரக்ஷகனாயிருந்த ஸர்வேஶ்வரனாகிறான், செய்யதாமரைக்கண்ணனாய் உலகேழும் உண்ட அவன்கண்டீரென்றுகொண்டு, ஸமாஶ்ரயணீய புருஷன் இன்னானென்கிறார். (௧)

ஈடு;—அவ;—இரண்டாம்பாட்டு. ஜகத்காரணத்வபுண்டரீகாக்ஷத்வாதிகளைச் சொல்லி, 'ஆஶ்ரயியுங்கோள்' என்றுநின்றீர்; அவை பரத்வத்துக்கு ஏகாந்தமான லக்ஷணங்களாயிற்று; ஆன

பின்பு, எங்களாலே அவனை ஆஶ்ரயிக்கப்போமோ? என்ன, அப்படிப்பட்டவன் தானே உங்களோடு ஸஜாதியனாய்ச் சக்ரவர்த்தி திருமகனாய் வந்து அவதரித்தான்; அங்கே ஆஶ்ரயியுங்கோளென்கிறார்.

மூவாகிய மூர்த்தியை முதல் மூவர்க்கும் முதல்வன் தன்னைச் *
சாவமுள்ளன நீக்குவானைத் தடங்கடற்கிடந்தான் தன்னைத் *
தேவதேவனைத் தென்னிலங்கையெரியெழச் செற்ற வில்லியை *
பாவநாசனைப் பங்கயத்தடங்கண்ணனைப் பரவுமினோ (உ)

ப;—அநந்தரம், ஸ்ருஷ்டமான ஜகத்தினுடைய ரக்ஷணார்த்தமாய் அவதாரகந்தமான க்ஷீரார்ணவஶாயி ஆஶ்ரயணீயனென்கிறார்.

மூவாகிய மூர்த்தியை—(க) "ஸ ப்ரஹ்மா ஸ ஶிவ ஸ ஹரி: ஸப்ரஹ்மா ஸஶிவஸ்ஸேந்த்ர:" என்கிறபடியே ப்ரஹ்மருத்ரேந்த்ரர்களும் தானென்னலாம்படி அவர்களுக்கு ஶரீரியாயிருப்பானாய்

முதல் மூவர்க்கு—(ஶரீரபூதராய்) லோகப்ரதாநரான அவர்கள் மூவர்க்கும்

முதல்வன் தன்னை—காரணபூதனாய்

சாவம் உள்ளன—(அவர்களுக்கு குருபாதகாதி) ஶாபங்கள் உள்ளவற்றை

நீக்குவானை—போக்குமவனாய், (பின்பு கூப்பிட்டகுரல் கேட்கும்படி)

தட கடல்—இடமுடைத்தான க்ஷீராப்தியிலே

கிடந்தான் தன்னை—கண்வளர்ந்தருளி

தேவதேவனை—ராவணவதார்த்திகளான தேவர்களுக்கு ஆஶ்ரயணீயனாய்க்கொண்டு அவதரித்து

தென் இலங்கை எரி எழ—லங்கையில் செல்வப்பெருத்த அக்நி ஜ்வலையெடுக்கும்படி

செற்ற—ஶத்ருநிரஸநம் பண்ணின

வில்லியை—வில்லையுடையனாய்

பாவநாசனை—(ஸேதுவில் ஸ்நாநாதிமுகத்தாலே) பாபவிநாஶகனை

பங்கயத்தடக்கண்ணனை—புண்டரீகாக்ஷனை

பரவுமின்—ஸ்தோத்ரமுகத்தாலே ஆஶ்ரயியுங்கோள். (உ)

ஆறு;—(மூவாகிய.) இதின்மேல் ஸமாஶ்ரயணீயனான எம்பெருமானுடைய எளிமையைச் சொல்லுகிறது.

இப்படி த்ரிமூர்த்திருபேண அவஸ்திதனாய், ஸர்வலோக நிர்வாஹகரான ப்ரஹ்மருத்ரேந்த்ரர்களுக்கு நிர்வாஹகனாய், அவர்க

(க) தை - நாரா.

ருடைய வேதாபஹாரகுருபாதக தைத்யபீடாத் யாபத்விமோசந கரனாய், க்ஷீரார்ணவநிகேதநனா யிருந்துவைத்து ஆஸ்ரிதஸமாஸ்ரய ணீயத்வார்த்தமாக தஸரதாத்மஜனாய் வந்து அவதீர்ணனாய், இப்படி மநுஷ்யனா யிருக்கச்செய்தே ரூபகுண விபவ சேஷ்டிதாதிகளால் மநுஷ்யரிற்காட்டில் தேவர்கள் யாதொருபடி விலக்ஷணராயிருப்பார்; அப்படியே தேவர்களிற்காட்டிலும் விலக்ஷணனாய், ஆஸ்ரிதவிரோதி நிரஸநைகபோகனாய் தர்ஸநமாத்ரத்தாலே ஸர்வஜந்துநாம் ஸர்வபாபக்ஷபகரனாயிருக்கிற எம்பெருமானைப் பரவுமினோ வென்கிறார். (௨)

ஈடு;—மூன்றாம்பாட்டு. கீழ்ச்சொன்ன ராமாவதாரம் பரத்வ மென்னும்படியான க்ருஷ்ணாவதாரத்திலே ஆஸ்ரயியுங்கோளென் கிறார்.

பரவிவானவரேத்தநின்ற பரமனைப்பரஞ்சோதியைக் *
குரவைகோத்தகுழகனை மணிவண்ணனைக்குடக்கூத்தனை *
அரவமேறியலைகடலமரும் துயில்கொண்டவண்ணலை *
இரவும்நன்பகலும்விடாதென்றுமேத்துதல்மனம்வைம்மினோ. (௩)

ப;—அநந்தரம், அந்த க்ஷீரார்ணவஸாயியினுடைய ராமாவதாரத்திலுங் காட்டில் ஆஸ்ரிதார்த்த ப்ரவ்ருத்திகளையுடைய க்ருஷ்ணாவதார ஸௌலப்யத்தை அநுஸந்தித்து அவனை ஆஸ்ரயியுங்கோளென்கிறார்.

(பூபாரநிர்ஹரணார்த்தமாக)
பரவி — (குணகணங்களைப்) பரக்கச் சொல்லி
வானவர்—தேவர்கள்
ஏத்த—ஸ்தோத்ரம்பண்ண
நின்ற — (அவர்களுக்கு ஸந்நிதிபண்ணி) நின்ற
பரமனை—பாரம்யத்தையுடையனாய்
பரஞ்சோதியை — (அவதீர்ணதசையிலே (க) "தைவதேவஸ - தேவதேவஸ" என்னும் படியான) நிரவதிக ஜ்யோதிஸ்ஸையுடையனாய்

(அவதாரஸௌந்தர்யத்தில் அகப்பட்ட கோபகந்யகைகளுக்கு)
குரவைகோத்த—திருக்குரவைகோத்த முகத்தாலே
குழகனை — இஷ்டவிநியோகார்ஹமாம்படி பவ்யனாய்
மணிவண்ணனை—மாணிக்கம்போலே முடிந்து ஆளலாம்படி ஸுலபமான வடிவையுடையனாய்
(பெண்களேயன்றியே ஊராக அநுபவிக்கும்படி)
குடக்கூத்தனை — குடக்கூத்தாடினவனாய்

(க) வி-பு-ரு-௩-௧௦.

(இப்படி ஆஸ்ரிதகார்யஞ் செய்கைக்காக)
அரவம்—திருவநந்தாழ்வான் மேலே
ஏறி—ஏறி
அலை கடல்—(தன் ஸந்நிதியாலே) கோந்தளித்து அலையெறிகிற கடலிலே
அமரும்—(ரக்ஷணசிந்தையிலே) பொருந்தின
துயில் கொண்ட — நித்ரையை ஸ்வீகரித்த
அண்ணலை—ஸ்வாமியை

நன் — (ஸ்தோத்ரோபயோகத்தாலே) நன்றான
இரவும் பகலும் — அஹோராத்ரவிபாகமின்றியே
விடாது—ஓவாதே
என்றும்—என்றும்
ஏத்துதல் — ஸ்தோத்ரம்பண்ணுகையிலே
மனம் வைம்மின் — நெஞ்சை வையுங்கோள்
விஷயவைலக்ஷண்யத்தாலே அது தனே கொண்டு முழுகுமென்று கருத்து (௩)

ஆறு ;— (பாஷி) அயர்வறுமமரர்களாலே அநவரதஸம்ஸ்துயமாநனுய், நிரதிஶயதேஜோவிஶிஷ்டனுய், காகபர்யங்கஶாயியாயிருந்துவைத்து வஸுதேவக்ருஹே அவதீர்ணனுய், ஆஶ்ரிதஸம்ஶ்லேஷைகஸ்வபாவனுய், ஆஶ்ரிதஸுலபனுய், அதிமநோஹரதிவ்யசேஷ்டிதனுயிருந்தவனை இரவும் நன்பகலும் விடாது என்றும் ஏத்துதல் மனம்வைம்மினே யென்கிறுர். (௩)

ஈடு ;—அவ ;—நாலாம்பாட்டு ; —அபிமாநப்ரசுரரான ப்ரஹ்மருத்ராதிகளுக்கும் தடையின்றிக்கே புக்கு ஆஶ்ரயிக்கலாயிருக்கிற ஶீலவத்தையைப் பேசுகிறுர்.

வைம்மின்நும்மனத்தென்று யானுரைக்கின்றமாயவன்சீர்மையை *
எம்மனோர்களுரைப்பதென் அதுநிற்கநாடோறும் * வானவர்
தம்மையாளுமவனும்நான்முகனும் சடைமுடியண்ணலும் *
செம்மையாலவன்பாதபங்கயம் சிந்தித்தேத்தித்திரிவரே. (௪)

ப ;—அநந்தரம், ஈஶ்வராபிமாநிகளுக்கும் ஆஶ்ரயிக்கலாம்படியான ஶீலாதிஶயத்தையுடையவனை ஆஶ்ரயியுங்கோ ளென்கிறுர்.

‘ நும் மனத்து—உங்கள் நெஞ்சிலே
வைம்மின்—வையுங்கோள்,’
என்று—என்று
யான் உரைக்கின்ற— நான்சொல்லுகிற
மாயவன் — ஆஶ்சர்யகுணசேஷ்டிதங்களையுடையவனுடைய

சீர்மையை—சீரிதான ஶீலவத்தையை
எம் அனோர்கள்—(ப்ரவணரான) எம்போல்வார்
உரைப்பது—சொல்லுவது
என்—என் ?
அது நிற்க—அதுகிடக்க

வானவர்தம்மை ஆளுமவனும்—(தனித் தனியே பதஸ்தரான) வானவர் தங்களையும் (தன்னேவலிலே) ஆளும்படியான இந்த்ரனும்

நான்முகனும் — (ஸர்வதோமுகமான ஸ்ருஷ்ட்யுபதேசாதிகளைப்பண்ணும்) ப்ரஹ்மாவும்

சடைமுடி அண்ணலும்— ஜடாமகுடதாரத்வத்தால் வந்த தபோ மாஹாத்ம்யத்தாலே லோகத்துக்கு ஈஸ்வரனான ருத்ரனும்

செம்மையால் — (தங்கள் அபிமாநத்தால் வந்த அடைவுகேட்டைவிட்டு சேஷசேஷி பாவத்தால் வந்த) ஆர்ஜவத்தாலே

அவன்—(சேஷியான) அவனுடைய

பங்கயம்பாதம்—நிரதிசயபோக்யமான திருவடிகளை

நாடொறும்—நாடோறும்

சிந்தித்து—சிந்தித்து

ஏத்தி—ஸ்தோத்ரம்பண்ணி

திரிவர்—(இதுதானே யாத்ரையாக) வர்த்தியாநிற்பர் ஆதலால், அவனை ஆஸ்ரயியுங்கோளென்று கருத்து. (௪)

ஆறு ;—(வைம்மின்) இப்படி ஆஸ்ரயித்தால் அவன் நம்மை விஷயீகரித்தருளுமோ? என்னில்; —ஐஸ்வர்யப்ரவணராய், அதிக்ஷுத்ரரான ப்ரஹ்மேசாநாதிகளுக்குங்கூட ஒருதடையின்றியே ஆஸ்ரயிக்கலாம்படி தன்திருவடிகளைக் கொடுத்துக்கொண்டிருக்கிற அளவிறந்த நீர்மையையுடையனுமிருந்தவன், அநந்யப்ரயோஜநராய்க்கொண்டு ஆஸ்ரயிக்குமவர்களைக் கைவிடுமோ வென்கிறார்.

ஈடு ;—அஞ்சாம்பாட்டு. வாத்ஸல்யத்தாலே எப்போதும் விபூதியோடே கூடி மயில் தோகைவிரித்தாற்போலே ஸவிபூதிகனாய்க்கொண்டு அவனுடைய தோற்றரவு இருப்பது என்னுதல், (க) *"ஐ-ஹ-தா நாத்மாஸ்வி யஹ - பூதாநாமீஸ்வரோபிஸந்" என்னும்படியாலே ஐஸ்வர்யாதிகளோடே வந்து அவதரிக்கு மென்னுதல்.

திரியுங்காற்றோடகல்விசும்பு திணிந்தமண்கிடந்தகடல் *
எரியுந்தீயோடிருசுடர்தெய்வம் மற்றும்மற்றும்முற்றுமாய்க் *
கரியமேனியன்செய்யதாமரைக்கண்ணன் கண்ணன்விண்ணோரிறை*
சுரியும்பல்கருங்குஞ்சி எங்கள்சுடர்முடியண்ணல்தோற்றமே. (ரு)

ப ;—அநந்தரம், அவனுடைய அவதாரம் அகிலவிபூதியோடும் அவிநாபூத மென்கிறார்.

(க) கீதை-௪-௬.

கரிய மேனியன் — ஶ்யாமளமான வடிவையுடையனாய்
செய்ய தாமரை கண்ணன் — (அதுக்குப் பரபாகமாய்ச்) சிவந்த தாமரைபோன்ற கண்களை யுடையனாய்
விண்ணோர் இறை — நித்ய ஸூரிகளுக்கு நிர்யாநு பாவ்யமான மேன்மையை யுடையனாய்
சுரியும் பல் கருங்குஞ்சி — சுருண்டு வெடித்து அலகலகாய்க் கருகின குழலை யுடையனாய்
எங்கள் — எங்களையும் அடிமைகொள்ளும்
சுடர் — ஔஜ்ஜ்வல்யத்தை யுடைய
முடி — திருவபிஷேகத்தை யுடையனை
அண்ணல் — ஸ்வாமியாயுள்ள
கண்ணன் — க்ருஷ்ணனுடைய
தோற்றம் — ஆவிர்ப்பாவமானது
திரியும் காற்றோடு — ஸதாகதியாயுள்ள வாயுவோடேகூட
அகல் விசும்பு — விஸ்தீர்ணமான ஆகாசம்
திணிந்த மண் — கடினையான பூமி
கிடந்த கடல் — கரைகடவாது கிடந்த கடல்
எரியும் தீயோடு — ஊர்த்வஜ்வலநமான அக்நியோடே கூட (வ்யஷ்டி ஸ்ருஷ்டயந்தர்க்கதமான)
இருசுடர் — சந்த்ராதித்யப்ரமுகமான
தெய்வம் — தேவதாவர்க்கம்
மற்றும் — மற்றும் மநுஷ்யர்
மற்றும் — மற்றும் திர்யக்குக்கள்
முற்றுமாய் — ஸ்தாவரமான முற்றுமாயிருக்கும்.

'முற்றுமாய்' என்ற ஸமாநாதி கரண்யம் — விஶ்வரூபாத்யாய க்ரமத்திலே தார்யதாரகத்வாதி நிபந்தநமான ஶரீராத்ம பாவப்ரயுக்தம். அவனை ஏத்து நல் மனம் வைம்மினென்று அந்வயம். (௫)

ஆறு ; — (திரியும்) ஸ்வஸங்கல்பாதீநமான வாய்வாகாஶாதி ஸகலபதார்த்தங்களையும், சுத்வரத்வஶிஶாலத்வாதி தத்தர்மங்களையுமுடையனாய், இந்தீவரதளஶ்யாமனாய், பத்மபத்ரேக்ஷணனாய், நீலாளகபந்தபந்துரனாய், ஶேஷஶேஷாஶநவைநதேயப்ரப்ருதிய ஸங்க்யேய நித்யஸித்த பரமஸூரிபிஸ்ஸேவ்யமானனாயிருந்த வெம்பெருமானை நான் காணப்பெற்றேனாகாதே யென்கிறார். (௫)

ஈடு ; — ஆறும்பாட்டு. இவர்களைப்போலே கேட்க விராதே, உபதேஶநிரபேக்ஷமாக நித்யஸூரிகளைப்போலே, நிரதிஶயபோக்யனை நரஸிம்ஹத்தையொழிய வேறொருவரை தாரகாதிகளாக உடையேனல்லேன், காலதத்த்வமுள்ளதனையு மென்கிறார்.

தோற்றக்கேடவையில்லவனுடையா னவனொருமூர்த்தியாய் *
சீற்றத்தோடருள்பெற்றவனடிக்கீழ்ப் புகநின்றசெங்கண்மால் *
நாற்றத்தோற்றச்சுவையொலி உறலாகிநின்ற * எம்வானவ
ரேற்றையேயன்றி மற்றொருவரையானிலேனெழுமைக்குமே. (௬)

ப ;—அநந்தரம், ஆஶ்ரிதவிஷயத்தில் அநவதிகவாத்ஸல்யத்தை யுடைய வனை யொழிய எனக்கு ஸர்வகாலமும் ஸர்வப்ரகாரோத்தேஶ்யராயிருப்பார் வேறொருவரை உடையேனல்லே னென்கிறார்.

அவை—இதரஸஜாதீயமான
தோற்றக்கேடு—உத்பத்தி விநாஶங்கள்
இல்லவன்—இல்லாதவனாய்
உடையான் — (கார்ய காலங்களிலே ஆஶ்ரிதார்த்தமான ஆவிர்ப்பாவ திரோபாவங்களை) உடையவனாக
அவன்—ப்ரமாணப்ரஸித்தனானவன்
ஒரு—(லோகத்தில் நடையாடாத) அத்விதீயமான
மூர்த்தியாய் — நரஸிம்ஹமூர்த்தியாய்
சீற்றத்தோடு — (ஹிரண்ய விஷயத்தில்) சீற்றத்தோடே
அருள்பெற்றவன் — (ஸ்வவிஷயத்தில் அருளைப்பெற்ற ப்ரஹ்லாதனானவன்
அடிக்கீழ்—தன் திருவடிகளின்கீழே
புக—ஒதுங்கும்படி
நின்ற — (அவனுக்கு ஸுலபனாய்) நின்ற
செம் கண்—சிவந்த கண்ணையும்
மால் — வாத்ஸல்யத்தையு முடையவனாய்
நாற்றத் தோற்றச்
சுவை யொலி உறலாகி நின்ற — கந்தரூபரஸஶப்த ஸ்பர்ஶங்களை யுடைத்தான வஸ்துக்களுக்கு நியந்தாவாய்க் கொண்டு நின்று
எம்—எங்களுக்கு
வானவரேற்றை — ஸூரிகளை அநுபவிப்பிக்கும் மேன்மையோடொக்க அநுபாவ்யனானவனையே
அன்றி—ஒழிய
யான்—நான்
எழுமைக்கும்—ஸர்வகாலத்திலும்
மற்றொருவரை—வேறொருவரை
இலேன்—(உத்தேஶ்யமாக) உடையேனல்லேன்.

ஆதலால் - தொழுமினென்று மேலே அந்வயம். சீற்றத்தோடு அருள் பெற்றவனென்று - சிசுபாலனைகவுஞ் சொல்லுவர். (௬)

ஆறு ;—(தோற்றம்.) ஜந்மமரணாதிதோஷை ரஸம்ஸ்ப்ருஷ்டனாய், ஜந்ம மரணாதி தோஷயுக்தபதார்த்தங்களுக்கு நியந்தாவாய், ஆஶ்சர்யதம ந்ருஸிம்ஹவேஷபூஷிதனாய் ஹிரண்யவிஷயநிரவதிக க்ரோதத்தினாலே அத்யந்தம் அநபிபவநீயனா யிருக்கச் செய்தே,

ஆச்ரிதனை ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான் கூசாதே சென்று திருவடிகளின்கீழே புகலாம்படி அவனுக்கு ஸுலபனாய், தத்ஸம்ச்லேஷஜநித நிரதிசயப்ரீதியாலே ஆதாம்ராயதலோசனனாயிருந்த எம்பெருமான், அயர்வறுமமரர்களுடைய ஸர்வகரணங்களுக்கும் போக்யமானாப் போலே என்னுடைய ஸர்வகரணங்களுக்கும் போக்யமானான்; இனி ஆத்மாந்தமாக இவனல்லது எனக்கு மற்றொருப்ராப்யமில்லை என்கிறார். (௬)

ஈடு;—ஏழாம்பாட்டு. இப்படி ஸுலபனானவன்பக்கல் துர்லபத்வசங்கையைத்தவிர்ந்து அவனை ஆச்ரயியுங்கோள், உங்களுடைய ஸர்வதுக்கங்களும் போம்படி யென்கிறார்.

எழுமைக்குமெனதாவிக்கின்னமுதத்தினை எனதாருயிர் *
கெழுமியகதிர்ச்சோதியை மணிவண்ணனைக்குடக்கூத்தனை *
விழுமியவமரர்முனிவர்விழுங்கும் கன்னற்கனியினைத் *
தொழுமின்தூயமனத்தராயிறையும்நில்லா துயரங்களே. (௭)

ப;— அநந்தரம், இப்படி நிரதிசயபோக்யனாய்க்கொண்டு ஸுலபனானவனை ஆச்ரயியுங்கோ ளென்கிறார்.

எழுமைக்கும் — ஸர்வாவஸ்தையிலும்
எனது ஆவிக்கு — என் ஆத்மாவுக்கு
இன் அமுதத்தினை — நிரதிசயபோக்யபூதனாய்
எனது உயிர் ஆர் — என்னுடைய ஸ்வரூபத்தோடே செறிய
கெழுமிய கதிர் — கலந்து அத்தாலே ப்ரகாசிதமான
சோதியை — தேஜஸ்ஸை யுடையனாய்
மணிவண்ணனை — (என்னோடு கலக்கைக்கு அடியான) வடிவழகையும்
குடக்கூத்தனை — சேஷ்டிதத்தையுமுடையனாய்
விழுமிய — சீரியரான
அமரர் — வைகுந்தத்தமரரும்
முனிவர் — முனிவரும்
விழுங்கும் — புஜிக்கும்
கன்னல் கனியினை — கன்னல் சேர்ந்த கனிபோலே நிரதிசய போக்யனானவனை
தூய மனத்தராய் — (ப்ரயோஜநாந்தரத்தாலே நெஞ்சை தூஷியாதே) அநந்யப்ரயோஜநராய்க்கொண்டு
தொழுமின் — ஆச்ரயியுங்கோள்.
துயரங்கள் — (அநுபவ ப்ரதிபந்தகமான) துரிதங்கள்
இறையும் — ஏகதேசமும்
நில்லாது — நில்லாது. (௭)

ஆறு;—(எழுமைக்கும்.) எற்றைக்கும் எனக்குப் பரமபோக்யமாய், மத்ஸம்ச்லேஷைகபோகமாயிருக்கையாகிற மஹாகுணத்தை

யுடையனாய், விழுமிய அமரர் முனிவர் விழுங்கும் கன்னற்கனியா யிருந்துவைத்து எனக்கு ஸுலபனாய் அதிமநோஹர திவ்ய சேஷ்டி தனா யிருந்த எம்பெருமானை 'அரியன்' என்று கூசாதே தொழுங் கோள்; தொழ, உங்களுடைய ஸமஸ்த துக்கங்களும்போ மென் கிறார். (எ)

ஈடு ;—எட்டாம்பாட்டு. ஸம்ஸாரிகளுக்கும் ருசிபிறக்கைக்காக, 'நான் சக்கரவர்த்தி திருமகனை யல்லது ஆபத்தநமாகப் பற்றியிரேன்' என்று ஸ்வஸித்தாந்தத்தை அருளிச்செய்கிறார்.

துயரமேதருதுன்பவின்பவினைகளா யவையல்லனாய் *
உயரநின்றதோர்சோதியா யுலகேழுமுண்டுமிழ்ந்தான்தன்னை *
அயரவாங்குநமன்தமர்க்கருநஞ்சினை யச்சுதன்தன்னை *
தயரதற்குமகன்தன்னையன்றி மற்றிலேன்தஞ்சமாகவே. (அ)

ப ;—அநந்தரம், ஆஶ்ரிதரை நழுவவிடாத சக்ரவர்த்திதிருமகனையொழிய வேறு தஞ்சமில்லை யென்கிறார்.

துயரமே தரு—நிஷ்க்ருஷ்ட பரிதாபத்தையே தரக்கடவதான
துன்பம்—துக்கத்துக்கும்
இன்பம் — (து:கஸாத்யத்வ து:கமிஶ்ரத்வ து:கோதர்க்கத்வ விஶிஷ்ட மாகையாலே நிஷ்க்ருஷ்ட பரிதாபகரமான) ஸுகத்துக்கும் ஹேதுவான
வினைகளாய் — பாபரூபமாயும் புண்ய ரூபமாயுமுள்ள கர்மங்களுக்கு நிர்வாஹகனாய்
அவை—அவற்றுக்கு
அல்லனாய்—தான் வஶ்யனல்லனாய்
உயர—(க) "விஶ்வதஃப்ருஷ்டேஷு ஸர்வதஃப்ருஷ்டேஷு — விஶ்வதஃ ப்ருஷ்டேஷு ஸர்வதஃ ப்ருஷ்டேஷு" என்கிற உயர்த்தியை யுடைத்தாய்
நின்றது—நித்யமாய்
ஓர்—அத்விதீயமான
சோதியாய்—தேஜோமய திவ்ய * தேஹத்தையுடையனாய்
உலகேழும் — (கர்மவஶ்யமான) ஸகல லோகங்களுக்கும் ப்ரளயாபத்துவந்தால்
உண்டு—உண்டு
உமிழ்ந்தான் தன்னை—உமிழ்ந்து ரக்ஷிக்குமவனாய்
அயர—மோஹிக்கும்படி
வாங்கும்—ப்ராணாபஹாரம்பண்ணும்

---

* (பா) தேஶத்தை.

(க) சாந்தோ - ௩ - ௧௩.

நமன்தமர்க்கு—யமபடர்க்கு	அன்றி—ஒழிய
அரு—மீட்க அரிய	மற்று — மற்றொரு பகவத்வ்யக்தியும் அகப்பட
நஞ்சினை—நஞ்சாய்க்கொண்டு	தஞ்சமாக இலேன்—தஞ்சமாக வுடையே னல்லேன்.
அச்சுதன்தன்னை—ஆஶ்ரிதரை நழுவ விடாத ஸ்வபாவனை	தஞ்சம்—ஆபத்துக்கு உறுதுணை. (அ)
தயரதற்குமகன்தன்னை — சக்ரவர்த்தி திருமகனை	

ஆறு; — (துயரமேதரு.) ஸ்வாதீந புண்யபாபஸ்வரூபனாய், அகர்மவஶ்யனாய், நிரவதிகதேஜோவிஶிஷ்டனாய், ஸர்வலோகரக்ஷகனாய், ஸ்வாஶ்ரிதஜநங்களை யமகிங்கரர் பாதியாதபடி அவர்களை ரக்ஷித்தருளும் ஸ்வபாவனாய், அவர்களோடு ஆத்மாந்தமாக ஸம்ஶ்லேஷிக்கும் ஸ்வபாவனாயிருந்த தயரதற்கு மகன்தன்னையன்றி மற்றிலேன் தஞ்சமாக; நீங்களும் ஆஶ்ரயியுங்க ளென்கிறார். (அ)

ஈடு;—அவ;—ஒன்பதாம்பாட்டு. பரத்வமே தொடங்கி அவதார ஸௌலப்யத்தளவும் வர உபதேசித்து, 'ஆஶ்ரயியுங்கோள்' என்றுநின்றீர்; பரத்வம் அவாங்மநஸகோசரம்; அவதாரத்துக்குப் பிற்பாடரானோம்; நாங்கள் எங்கே யாரை ஆஶ்ரயிப்பது? என்ன, நீங்கள் உகந்தபடியே உகந்தருளப்பண்ண, அத்திருமேனியையே அப்ராக்ருத திவ்யஸம்ஸ்தாநத்தோடொக்க விரும்பும் அர்ச்சாவதாரத்தை ஆஶ்ரயியுங்கோ ளென்கிறார். இத்திருவாய்மொழிக்கு நிதாநம் இப்பாட்டு.

தஞ்சமாகியதந்தைதாயொடு தானுமாயவையல்லனாய் *
எஞ்சலிலமரர்குலமுதல் மூவர்தம்முள்ளுமாதியை *
அஞ்சிநீருலகத்துள்ளீர்க ளவனிவனென்றுகூழேன்மின் *
நெஞ்சினால்நினைப்பான்யவ னவனாகும்நீள்கடல்வண்ணனே. (௯)

ப;—அநந்தரம், கீழ் உக்தமான பரத்வமும் அவதாரங்களும் அஸ்மதாதிகளுக்கு நிலமன்றென்று இறாயாதே, பிற்பட்டார்க்கும் ஆஶ்ரயிக்கலாம்படி ஸுலபமுமாய் ஸர்வவித பந்துவுமான அர்ச்சாவதாரத்தை ஸம்ஶயரஹிதராய்க் கொண்டு ஆஶ்ரயியுங்கோள் என்கிறார்.

தஞ்சமாகிய—ஓரவஸ்தையிலே பொகட்டுப்போம் தாயுந் தந்தையு மன்றியே இவன்விடுமளவிலும் தான்விடாத) தஞ்சமாய்	தந்தைதாயொடு—(ஹித பாத்வத்தாலும் ப்ரியபாத்வத்தாலும்) தந்தையுந் தாயுமாய் (அவர்களோடுகூட)

தானும் ஆய் — (தனக்கு விநாசகரனன்றித் தஞ்சமாய்த்) தனக்கு நன்மையைப் பார்க்கும் தானுமாய்
அவை அல்லனாய் — அவ்வளவல்லாத ஸர்வவித பந்துவுமாய்
எஞ்சல் இல் — அநுபவஸங்கோச ரஹிதரான
அமரர் குலம் முதல் — நித்யஸூரிஸமூஹத்துக்கு ஸத்தாதி ஹேதுபூதனாய்
மூவர் தம்முள்ளும் — ப்ரஹ்மாதி மூர்த்தித்ரயத்திலும் வைத்துக்கொண்டு
ஆதியை — ப்ரதாநனானவனைப்பற்றி
உலகத்து உள்ளீர்கள் — லௌகிகரான
நீர் — நீங்கள்
அஞ்சி — (மேன்மையைக்கண்டு) கலங்கி
அவன் — (அபரிச்சிந்ந மஹிமனானவன்) அவன்
இவன் — (நாம் நினைத்தது வடிவானவன்) இவன்
என்று — என்கிற உத்கர்ஷாபகர்ஷபுத்தியாலே
கூழேன்மின் — (இவன் ஆஶ்ரயணீயனாகக்கூடுமோ? கூடாதோ? என்று) ஸம்ஶயியாதே
நெஞ்சினால் — நெஞ்சாலே
நினைப்பான் — நினைத்து உகந்தருளுவிக்கப்பட்டவன்
யவன் — யாவனொருவன்
அவன் — அவன்
கடல் — கடல்போலே
நீள் — அளவிறந்த
வண்ணன் — ஸ்வபாவத்தையுடைய ஸர்வேஶ்வரன்
ஆகும் — ஆகும்.

(௧) "தாவேவ த்யேயௌ - தாமர்ச்சயேத்" என்கிற கணக்கிலே ஆஶ்ரயணீயமான இந்த விக்ரஹத்துக்குள்ளே "தாமேவ ப்ரஹ்மரூபிணீம் - தாமேவப்ரஹ்மரூபிணீம்" என்று ப்ராப்யவிக்ரஹமும் அந்தர்ப்பூதமென்று கருத்து. கூழ்ப்பு - ஸம்ஶயம். (௯)

ஆறு ;— (தஞ்சமாகிய) எம்பெருமான் திருவவதாரம் பண்ணி ஸர்வஸுலபனாய் வர்த்தித்தருளுகிற காலத்தில் உதவப் பெற்றிலோம்; ஸ்ரீவைகுண்டத்திலே எழுந்தருளியிருக்கும் இருப்பு நமக்கு கோசரமன்று; ஆனபின்பு, எங்ஙனே அவனை ஆஶ்ரயிக்கும்படி? என்னில்,—ப்ரஹ்மருத்ரேந்த்ரர்களுக்கும் த்யேயனாய், காரணபூதனுமாய், அயர்வறுமமரர்களதிபதியாய் ஆஶ்ரிதர்க்கு ஸர்வாவஸ்தைகளிலும் ரக்ஷகனாய்ப் பிதாவுமாய் மாதாவுமாய்த் தானுமாய் மற்றுமெல்லாமாயிருந்த எம்பெருமானை உகந்தருளப்பண்ணி ஆஶ்ரயிப்பது; நாம் அவனுக்கு ஒருரூபத்தை ஸங்கல்பித்தால் அது அவனு

(௧) விஷ்ணுதர்ம.

க்கு ரூபமோ ? ஸ்ரீவைகுண்டத்தில் யாதொரு ரூபத்தை யுடைய னாய்க்கொண்டு எழுந்தருளியிருக்கும், அதுவன்றோ அவனுக்கு ரூபமென்னில்; — அஞ்சி நீர் உலகத்துள்ளீர்கள் - இப்படி ஸம் ஶயிக்கவேண்டா; யாதொன்றை அவனுக்கு ரூபமாக நினைத்தி கோள், அத்தையே அவன் திவ்யரூபமாகக் கொண்டருளு மென் கிறார். (௯)

ஈடு ;—பத்தாம்பாட்டு. தாம் உபதேசிக்கத்தொடங்கின ஸௌ லப்யத்தை அர்ச்சாவதார பர்யந்தமாக அருளிச்செய்து, அநந் தரம், தன்துறையான க்ருஷ்ணாவதாரத்திலே போய், 'நான் கண் ணாலே கண்டு அநுபவிக்கப் பெறுவது என்றோ ?' என்னும் அந வாப்தியோடே தலைக்கட்டுகிறார். அருமையும் எளிமையும் பாரார் களிறே, ஒரோவிஷயங்களிலே ப்ரவணராயிருப்பார்; பரத்வத்து க்கு உத்கர்ஷமுண்டாய்ப் போவாரும் பலருண்டா யிருக்கச்செய்தே யும் (௧) "ஸாவொ நாந்யத்ரகச்சதி - பாவோநாந்யத்ரகச்சதி" என்றானிறே திருவடி; அப்படி, க்ருஷ்ணாவதாரத்திற் காட்டில் அர்ச்சாவதாரத்துக்கு நீர்மை மிக்கிருந்ததேயாகிலும், இவர் "எத் திறம்!" என்று ஆழங்காற்பட்டது க்ருஷ்ணாவதாரத்திலேயாயிற்று. "தயரதற்குமகன்தன்னை யன்றி மற்றிலேன்" என்றது செய்வ தென்னென்னில், — இவ்வருகில் நீர்மைகாணுமளவுமிறே இது சொல்லுகிறது. ஆனால், அதில் நீர்மை மிக்கவிடமன்றோ அர்ச் சாவதாரமென்னில்; — அதுக்குமுன்பே பரிஹாரஞ் சொல்லிற் றிறே.

கடல்வண்ணன்கண்ணன் விண்ணவர்கருமாணிக்கமெனதாருயிர் *
படவரவினணைக்கிடந்த பரஞ்சுடர் பண்டுநூற்றுவர் *
அடவரும்படைமங்க ஐவர்கட்காகிவெஞ்சமத்து * அன்றுதேர்
கடவியபெருமான்கனைகழல் காண்பதென்றுகொல்கண்களே. (௧௦)

ப ;— அநந்தரம், இப்படி ஆஶ்ரித பாரதீநதைக்குச் ஶ்ரமஞ்செய்த க்ரு ஷ்ணவ்ருத்தாந்தத்தை அநுஸந்தித்து உபதேசாநந்தரம் தாம் அநுபவிக்க ஆசைப்படுகிறார்.

---

(௧) ரா - உத்த

விண்ணவர்—பரமபதவாஸிகளுக்கு
கருமாணிக்கம்—நீலரத்நம்போலே அவிகாராகாரனுய்க் கொண்டு போக்யனாய், (லீலாவிபூதி நிர்வஹணார்த்தமாக)
படம்—(ஸ்வஸ்பர்ஶத்தாலே) விகஸித பணங்களை யுடையனாய்
அரவின்—(ஜாதிப்ரயுக்தமான மென்மை குளிர்த்தி நாற்றங்களையுடைய) அநந்தனுகிற
அணைக்கிடந்த—அணையின்மேலே
பரஞ்சுடர்—(பரபாகத்தால் வந்த தேஜஸ்ஸாலே ஸர்வாதிகனென்று தோன்றும்படியான) பேரொளியையுடையனாய் (அபரிச்சிந்ந மாஹாத்ம்யத்தையுடையனாய்)
கடல்வண்ணன்—கடல்போலே அளவிறந்த குணங்களையுடையனாய்ஶ்ரமஹரமான வடிவையுடைய
கண்ணன்—க்ருஷ்ணன்
எனது—எனக்கு
ஆர் உயிர்—தன்னை யொழியச்செல்லாதபடி தாரகனாய்க் கொண்டு
பண்டு—முற்காலத்திலே
நூற்றுவர்—(துர்யோதநாதிகள்) நூற்றுவராய்
அட வரும் — தன் பக்கலிலே தீங்கு நினைத்து வருகிற
படை—படையானது
மங்க—நசிக்கும்படியாக
ஐவர்கட்கு—பாண்டவர்களைவர்க்கும்
ஆகி—ஸர்வப்ரகாரரக்ஷகனாய்
வெம் சமத்து—வெவ்விதான ஸமரத்திலே
அன்று — (ஶத்ருக்கள்மேலிட்டுவந்த) அன்று
தேர் கடவிய — தேரை (ஸாரதியாய் நின்று) நடத்தின
பெருமான்—ஶீலாதிகனுடைய
கனை கழல்—ஸுஸ்வநமான வெற்றி வீரக்கழல் செறிந்த திருவடிகளை
கண்கள்—கண்கள்
காண்பது—(தம்ஆசைதீரக்) காண்பது
என்றுகொல்—என்றோ ? (கo)

ஆறு ; — (கடல்வண்ணன்.) அபரிச்சேத்ய மாஹாத்ம்யனாய் அயர்வறுமமரர்களுக்கு போக்யமாய் நாகபர்யங்கஶாயியா யிருந்து வைத்து வஸுதேவக்ருஹே அவதீர்ணனாய் எனக்குப்ராணனாய், துர்யோதநாதிகள் ஸைந்யமாக நசிக்கும்படி பாண்டவர்களுக்காக ஸாரத்யேஸ்திதனாயிருந்த எம்பெருமானுடைய திருவடிகளை என்றோ என்னுடைய * கரணங்கள் காண்பது ? என்கிறார். (கo)

ஈடு ; — நிகமத்தில், இத்திருவாய்மொழி அப்யஸிக்கவே பகவத்ப்ரேமம் உண்டாம் ; இத்தை அப்யஸியுங்கோ ளென்கிறார்.

கண்கள்காண்டற்கரியனாய்க் கருத்துக்குநன் றுமெளியனாய் *
மண்கொள்ஞாலத் துயிர்க்கெல்லா மருள்செய்யும்வானவரீசனை *
பண்கொள்சோலைவழுதிநாடன் குருகைக்கோன்சடகோபன்சொல்*
பண்கொளாயிரத்திப்பத்தால் பத்தராகக்கூடும்பயிலுமினே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ப ;—அநந்தரம். இத்திருவாய்மொழிக்கு பலமாக பகவத்பக்திலாபத்தை அருளிச்செய்கிறார்.

கண்கள்—கண்கள்
காண்டற்கு—அபரோக்ஷிக்கைக்கு
அரியனாய்—அரியனாய்
கருத்துக்கு—நெஞ்சுக்கு
நன்றும எளியனாய் — விஶதாநுபவ விஷயபூதனாய்
மண்கொள்ஞாலத்து—ப்ருதிவீப்ரதாநமான லோகத்தில்
உயிர்க்கெல்லாம் — ப்ராணிகளுக்கெல்லாம்
அருள்செய்யும்—(அர்ச்சாவதார முகத்தாலே) உபகரித்துக்கொண்டு
வானவரீசனை—ஸூரிகளுக்குக் கொடுக்கும் அநுபவத்தைப் பண்ணுவிக்கும்ஸ்வாமியானவனை
பண்கொள் —(வண்டுகளொலியாலே) பண்விஞ்சின
சோலை—சோலையையுடைத்தான
வழுதிநாடன் — திரு வழுதிநாட்டுக்கு நிர்வாஹகராய்
குருகைக்கோன்—திருநகரிக்குஸ்வாமியான
சடகோபன்—ஆழ்வார்
சொல்—அருளிச்செய்த
பண்கொள்—பண்ணோடேகூடின
ஆயிரத்து—ஆயிரத்தில்
இப்பத்தால் — (அர்ச்சாவதாரஸௌலப்ய ப்ரகாஶகமான) இப்பத்தாலே
பத்தர் — (க) “ஹஸீஹா ...” என்னும்படி பெறுதற்கரிய பக்தியுடையர்
ஆகக்கூடும்—ஆகை ஸித்திக்கும்
பயிலுமின் – (இத்திருவாய்மொழியை) அப்யஸியுங்கோள்.

ஆறு ; — (கண்கள்.) அயர்வறுமமரர்களுக்கு அருள்செய்யுமா போலே ஸ்வாஶ்ரிதரான மநுஷ்யாதிகளுக்கும் அருள்செய்யும் ஸ்வபாவனாயிருந்துவைத்து என்னுடைய கருத்துக்கு நன்று மெளியனாய், என்கண்கள் காண்டற்கரியனாயிருந்த எம்பெருமான்விஷயமான இத்திருவாய்மொழியை வல்லார் வைஷ்ணவராவர்; இத்தைச் சொல்லுங்க ளென்கிறார்.

ஆறாந்திருவாய்மொழி வ்யாக்யாநம் முற்றிற்று.

(க) கீ - எ - கக.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஏழாந்திருவாய்மொழி—பயிலும் ப்ரவேசம்.

ஆறு ; — (பயிலும்சுடரொளி.) இப்படி எம்பெருமானுடைய நிரவதிக ஸௌலப்ய ஸ்வரூப மஹாகுணாநுபவஜநித நிரவதிகப்ரீதியாலே பகவச்சேஷத்வகாஷ்டாரூப பாகவதசேஷதைகபோகராய், அந்த பாகவதசேஷத்வம் தமக்கு ப்ராப்ய மென்கிறார்.

ப ;—ஏழாந்திருவாய்மொழியில், கீழ்சேஷத்வ ப்ரதிஸம்பந்தியினுடைய சேஷித்வம் அர்ச்சாவதார பர்யந்தமென்று அருளிச்செய்தாராய், அந்த சேஷத்வ ப்ரீத்யபிவ்ருத்தியாலே சேஷத்வமும் தத்விஷயமாத்ரத்திலே நில்லாதே ததீயபர்யந்தமாக அபிவ்ருத்தமாக ; அவர்களுடைய ஜந்மவ்ருத்தாதி நிரபேக்ஷமான பகவத் ஸம்பந்தோத் கர்ஷத்தையே பற்றி, அந்த உத்கர்ஷத்துக்கு அடியான ஸர்வேஸ்வரனுடைய க்ஷீரார்ணவ சாயித்வத்தால் வந்த பாரம்யத்தையும், அவதார விக்ரஹ வைலக்ஷண்யத்தையும், அந்நிலையிலே விபூதித்வயத்துக்கும் அநுபாவ்யமான போக்யதையையும், போக்யதாவர்த்தகமான ஆபரணசோபையையும், ஆஸ்ரிதாபேக்ஷிதார்த்த ப்ரதத்வத்தையும், அநந்யப்ரயோஜநர்க்குத் தன்னைக்கொடுக்கும் உபகாரகத்வத்தையும், கொடுக்குமிடத்தில் ஸ்வரூபாவிர்ப்பாவத்தைப் பிறப்பித்து அடிமைகொள்ளும்படியையும், அடிமைக்கு விஷயமான ஸ்ரிய:பதித்வத்தையும், ஆஸ்ரிததோஷ நிவர்த்தகமானபாவநத்வத்தையும், ஆபத்ஸகத்வத்தையும் அநுஸந்தித்து, இந்தகுணங்களிலே ஈடுபட்ட பாகவதருடைய ஸம்பந்திபரம்பரா பர்யந்த சேஷத்வத்தை அநுபவிக்கிறார்.

ஈடு ;—ஏழாந்திருவாய்மொழியில் - அர்ச்சாவதார ஸௌலப்யத்தை அருளிச்செய்யச்செய்தேயும் நெஞ்சில் நெகிழ்ச்சி யின்றிக்கே விஷயப்ரவணராயிருக்கிற ஸம்ஸாரிகள் ஸ்வபாவத்தை அநுஸந்தித்தார் ; "தேர்கடவியபெருமான் கனைகழல் காண்ப தென்றுகொல் கண்கள்" என்ற இவர்க்கு, எழுலும் அடிதாறுமாயிருக்கிற ஸ்ரீ வைஷ்ணவர்களைக் காட்டிக்கொடுக்க, உபதேச நிரபேக்ஷமாகவேபகவத் விஷயமென்றால் நெஞ்சு பள்ளமடையாயிருக்கிற ஸ்ரீ வைஷ்ணவர்களைக் கண்டார் ; அவர்கள் பக்கலிலே தம் திருவுள்ளம் சென்று, 'இவர்களுஞ் சிலரே' என்று அவர்களைக் கொண்டாடி, 'நான் ஸர்வேஸ்வரனுக்கு அடிமை அன்று ; ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அடிமை; அதுதன்னிலும் நேர்கொடுநேர் இவர்களுக்கு அடிமையாகவே

ணுமோ? இவர்களோடு ஸம்பந்தி ஸம்பந்திகள் அமையாதோ?' என்று இங்ஙனே பாகவத ஶேஷத்வம் உத்தேஶ்யமாய் அவர்களை ஆதரிக்கிறார்.

எம்மாவீட்டிலே, ப்ராப்ய நிஷ்கர்ஷம் பண்ணினார் - "தனக்கேயாக வெனைக்கொள்ளு மீதே" என்று; இங்கே - பாகவத ஶேஷத்வம் உத்தேஶ்ய மென்கின்றார்; ப்ராப்யம் இரண்டாயிருக்கிறதோ பின்னையென்னில், — அன்று: "தனக்கேயாக வெனைக்கொள்ளு மீதே" என்கிற அதினுள்ளேயாயிருக்கிறது இதுவும்; பகவச் சேஷத்வத்தின் எல்லையாகிறது பாகவத ஶேஷத்வத்தளவும் வருகையிறே. நமக்கு ஜ்ஞாதவ்யமான அர்த்தங்களில் திருமந்த்ரத்திற்சொல்லாத தொன்றில்லையிறே; அத்தையறியும் திருமங்கை யாழ்வாரும் இத்தை அதுக்கு அர்த்தமாக அருளிச்செய்தாரிறே; (க) "நின் திருவெட்டெழுத்தும் கற்று நான் - உற்றது முன்னடியார்க்கடிமை" என்றாரிறே; திருமந்த்ரத்துக்கு அர்த்தம்-இவனுடைய அநந்யார்ஹ ஶேஷத்வஞ் சொல்லுகையிறே: அதாவது - ததீயர்க்கு க்ரய விக்ரயார்ஹனாம்படியாகையிறே; (உ) "தத்பக்திநிக்நமநஸாம் க்ரயவிக்ரயார்ஹா:" - தத்பக்திநிக்நமநஸாம் க்ரயவிக்ரயார்ஹ: (ந) "எந்தம்மை விற்கவும் பெறுவார்களே". பிதாவுக்கு ஒரு க்ஷேத்ரம் ஸ்வமானால் அது புத்ரனுக்கும் க்ரயவிக்ரயார்ஹமாயிருக்கும்; அப்படியிராதவன்று பிதாவினுடைய ஸ்வத்திலே கொத்தையாமிறே. (ச) "தத்பக்தைர்வா ஸமாகம: - தத்பக்தைர்வா ஸமாகம:" என்கிற விடத்தில், 'வா' என்றத்தை அவதாரணத்திலேயாக்கி, 'உத்தேஶ்யந்தானே இங்கே ஸித்திக்குங்காண்' என்று எம்பெருமானார் அருளிச்செய்த வார்த்தை. ப்ராப்யத்தில் ப்ரதமாவதி - பகவச் சேஷத்வத்தளவிலே நிற்கை; சரமாவதி - பாகவத ஶேஷத்வத்தளவிலே வருகை.

(ரு) "மஹாகா-கச்சதா"-இதுக்கு எம்பெருமானார் * பயிலும் சுடரொளியிலும் நெடுமாற்கடிமையிலும் சொல்லுகிற அர்த்தத்தை ஸ்ரீ ஶத்ருக்நாழ்வான் அநுஷ்டித்துக் காட்டினானென்று அருளிச்

(க) தி - மொ - அ - கO - ந.   (உ)
(ந) பெரி - தி - ச - ச - கO.   (ச)
(ரு) ரா - அ - க - க.

செய்வர்; இவ்வர்த்தத்துக்கு அடி திருமந்த்ரமாயிற்றே; அது மூலமாக அநுஷ்டிக்கவே இதிற்சொன்னத்தைச் செய்ததாமிறே. ஆசார ப்ரதாநமான அவதாரமாய், அதில் பெருமான், 'பிதாசொல்லிற்றுப் புத்ரன்செய்யக்கடவன்' என்கிற மர்யாதை குலையாதே அத்தை நிலைநிறுத்துகைக்காகப் பித்ருவசந பரிபாலநாதி ரூபமான ஸாமாந்ய தர்மத்தை அநுஷ்டித்தார்; 'இதுதான் ப்ராப்த விஷயத்திலே செய்யக்கடவது' என்னுமிடத்தை அநுஷ்டித்துக்காட்டினார், இளைய பெருமாள்; 'அதுசெய்யுமிடத்தில் அவனுகந்த அடிமைசெய்யக் கடவது' என்னுமிடத்தை ஸ்ரீ பரதாழ்வான் அநுஷ்டித்துக் காட்டினான்; 'அதுதான் பாகவத சேஷத்வ பர்யந்தமாயிருக்கும்' என்னுமிடத்தை ஸ்ரீஶத்ருக்நாழ்வான் அநுஷ்டித்துக்காட்டினான். பெருமாள், 'பிதாசொல்லிற்றுச் செய்யக்கடவது' என்னுமிடத்தை அநுஷ்டித்தார்; அதுதன்னிலும் நேரே பிதாவை யநுவர்த்திக்கக்கடவதென்னுமிடத்தை இளையபெருமாள் அநுஷ்டித்தார்; அதுதன்னிலும் (க) "க-பா-பஷ-குருஷ்வ" என்று நிர்ப்பந்திக்கக் கடவரல்லர்; 'ராஜ்யத்திலே யிரும்' என்னில், அது இன்னாதாகிலும் அதிலிருந்து அடிமைசெய்யக்கடவதென்னுமிடத்தை அநுஷ்டித்தான் ஸ்ரீபரதாழ்வான்; அதினெல்லையை அநுஷ்டித்தான் ஸ்ரீஶத்ருக்நாழ்வான்; அவன்படி சொல்லுகிறது இஶ்ஶ்லோகம்.

[ஸோ-த-பஶக-பஶ்ம் மஹாதாஸ ஜேந நீத:-மாதுலகுலம் கச்சதா பரதேந நீத:] மாதுலகுலம் உத்தேஶ்யமாய்ப் போனான் அவன்; அவன்தான் உத்தேஶ்யமாய்ப் போனான் இவன்; யுதாஜித்து அழைத்தது ஸ்ரீபரதாழ்வானையிறே. [மஹா த்மா-கச்சதா] இவ்வர்த்தமாநிர்த்தேஶத்தால், பூர்வக்ஷணத்திலும் தன்னெஞ்சிலும் இல்லை; பெருமாளுக்கு விண்ணப்பஞ் செய்தமையும் இல்லை; சக்ரவர்த்தியைக் கேள்விகொண்டமையும் இல்லையென்கை. [ஸதேந - பரதேந] பெருமாளும் பொகட்டுப்போய், இளைய பெருமாளும் அவரை அநுவர்த்தித்துப்போய், சக்ரவர்த்தியும் துஞ்சி, ஸ்ரீ ஶத்ருக்நாழ்வானும் தன்னையல்லது அறியாதேயிருக்க, பெருமாளதான ராஜ்யத்தை பரித்துக்கொண் டிருக்கையாலே - பரதனென்கிறது; (க) "ஸ தஜ திராஜ்யஸ்யஸாணாத் - பரத இதிராஜ்யஸ்யபரணாத்" [த்ஹா - ததா] தானும் ராஜபுத்ரனாய் நாளும் வேறு

பட்டிருந்தால், பிரித்துத் தனக்குப் பொருந்தும் முஹூர்த்தத் திலே போக ப்ராப்தமிறே ; அதுசெய்யாதே அவன் புறப்பட்டதே தனக்கு முஹூர்த்தமாகப் போனான். [ஈநவ:-அநக:] அபாப :- அப்படைவீட்டில், அல்லாதாரதெல்லாம் பாபமிஶ்ர ஜீவநம்போலே காணும். அதாவது - ராமபக்தி கலந்திருக்குமே. அத்தைப் பாப மென்னலாமோ ? என்னில், - பாபத்திற் காட்டில் புண்யம் உத்தே ஶ்யமாயிருக்கச் செய்தேயும், இரண்டும் த்யாஜ்ய மாகாநின்றதிறே: மோக்ஷ விரோதித்வாத் ; இங்கும் உத்தேஶ்யவிரோதி யாகையாலே சொல்லலாமிறே. இது பின்னை உத்தேஶ்ய விரோதியோ வென் னில், - ப்ரதமாவதியில் நிலை விரோதியிறே சரமாவதியைப் பற்ற. [ஶத்ருக்ந: - ஶத்ருக்ந:] - பிறந்தபோதே 'எதிரிகள் மண்ணுண் ணும்படி வளரும்' என்று தோற்றியிருக்கையாலே இப்படி திரு நாமஞ்சாற்றினான் வஸிஷ்டன் [நித்யஶத்ருக்ந:-நித்யஶத்ருக்ந:] பாஹ்ய ஶத்ருக்களை வெல்லுகையன்றிக்கே ஆந்தர ஶத்ருக்களான இந்த்ரியங்களை வென்றிருக்கும்; அதாவது (க) "ஸர்வஸத்வ மநோஹாரிணம்-பும்ஸாம்த்ருஷ்டிசித்தாபஹாரிணம்" என்கிற விஷயத்தில் கண் வையாமை ; அங்கும் 'இவனுக்கு இனிது' என்று இவ்வழியாலே புகுமித்தனை. [ஈநவ: - அநக:] என்கிற இதுக் கும், "நித்யஶத்ருக்ந: - நித்யசத்ருக்ந:" என்கிற இதுக்கும் வாசியென்னென்னில், - "பாவநத்வத்தில் ஸ்ரீபரதாழ்வானை யொவ் வார் பெருமாள்" என்கிது - "அநக" என்கிற இத்தால் ; "நித்ய ஶத்ருக்ந" என்கிற இத்தால் - போக்யதைக்கு ஸ்ரீபரதாழ்வானை யொவ்வார் பெருமாள் என்கிறது. [நீத: - நீத:] - ஒருகுற்றுடை வாள் சாயை யுள்ளிட்டவையோபாதியாய்ப் போனான். த்ரவ்யத் துக்கு த்ரவ்யாந்தரஸம்யோகம் உபயநிஷ்டமாயிறே யிருப்பது ; த்ரவ்யமா யிருக்கச்செய்தேயும் ஜாதி குணங்களோபாதி பரதந்த்ர னாய்ப் போனான். [ப்ரீதிபுரஸ்க்ருத: - ப்ரீதிபுரஸ்க்ருத:] 'தம யன்பின்னே தம்பி போகக்கடவன்' என்னும் முறையாலே தேவை போலே யிருக்குமோ வென்னில், - அங்ஙனன்று ; 'படைவீட்டிலே யிருந்தால் ஒருவன்சோற்றைப் பகுர்ந்து உண்ணுமாபோலே படை வீடாகப் பெருமாளுக்கு அடிமைசெய்வர்கள்: 'ஏகாந்தஸ்தலத்

(க) ரா - அயோ - ௩ - உக.

திலே நமக்கு எல்லாவடிமையும் செய்யலாம்’ என்று, (க) “𑌅𑌹𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 - அஹம்ஸர்வம்கரிஷ்யாமி” என்று இளையபெருமாள் காடேறப் போனாற்போலே, இவனும் ‘நமக்கு எல்லாவடிமையும் செய்யலாம்’ என்கிற ப்ரீதி பிடரி தள்ளத் தள்ளப் போனான்.

எம்பெருமானார் இஶ்ஶ்லோகத்துக்கு வாக்யார்த்தமாக, ஸ்ரீ ஶத்ருக்நாழ்வான் பெருமாளுக்கு நல்லனானபடி - பெருமாளைக் காற்கடைக்கொண்டு, பெருமாளுக்கு நல்லனான ஸ்ரீ பரதாழ்வானையல்லது அறியாதபடியானான்’ என்று அருளிச்செய்தார். இது ப்ரயோஜகமானபின்பு, சொன்ன மிகையெல்லாம் பொறுக்குமிறே; அல்லது, ஒருசேதநனுக்கு ஒருசேதநன் உத்தேஶ்யனாகையாவது - ஓட்டையோடத்தோடு ஒழுகலோடமிறே; (உ) “𑌅𑌨𑌨𑍍𑌯𑌾𑌃 - அநந்யா:” என்கிற நிலை இவர்களுக்கு உண்டானால், இவர்களை யநுவர்த்திக்குமது அவனையநுவர்த்தித்ததாமிறே. ப்ராஹ்மணஜாதி ஒன்றாயிருக்கச் செய்தே குலசரண கோத்ராதிகளாலே பிரித்து ஸம்பந்திக்குமாபோலே, வைஷ்ணவர்களுக்கு நிரூபகம் - அவனுடைய குணசேஷ்டிதாதிகளிறே; அவ்வழியாலே, அவனுடைய வடிவழகிலே துவக்குண்டிருக்குமவர்கள், குணங்களிலே துவக்குண்டிருக்குமவர்கள், சேஷ்டிதங்களிலே துவக்குண்டிருக்குமவர்கள் என்று இவ்வழியாலே அவர்களைப்பிரித்து, அவர்களெல்லாரோடும் தமக்கு ஒரு ஸம்பந்தத்தை ஆசைப்பட்டு, அவர்களெல்லாரும் எனக்கு ஸ்வாமிகள் என்கிறார்.

ஈடு ;—அவ ;—முதற்பாட்டில் - வடிவழகிலும் குணங்களிலும் தோற்றிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் எனக்கு ஸ்வாமிகளென்று இத்திருவாய்மொழியினர்த்தத்தை ஸங்க்ரஹேண அருளிச்செய்கிறார்.

பயிலுஞ்சுடரொளிமூர்த்தியைப் பங்கயக்கண்ணனை *
பயிலவினியநம்பாற்கடற்சேர்ந்த பரமனை *
பயிலுந்திருவுடையார் யவரேலுமவர்கண்டீர் *
பயிலும்பிறப்பிடைதோறெம்மையாளும்பரமரே. (க)

(க) ரா - அயோ. (உ) கீதை - க - உஉ,

ப ;—முதற்பாட்டில், விலக்ஷண விக்ரஹ குணவிஶிஷ்டனாய்க்கொண்டு க்ஷீரார்ணவஶாயியான ஸர்வாதிகனை ஸம்ஶ்லேஷிக்கும் ஸம்பத்தையுடைய பாகவதர்கள் ஜந்மவ்ருத்தாதிகளில் தாழநின்றாரேயாகிலும் எனக்கு ஶேஷிகள் என்கிறார்.

பயிலும்—செறிந்த
சுடர் — (ஸௌந்தர்ய லாவண்யாதிகளாகிற) சுடரையுடைத்தான
ஒளிமூர்த்தியை — தேஜோமய திவ்ய விக்ரஹத்தை யுடையனாய்
பங்கயக்கண்ணனை—(ஸர்வஸ்மாத் பரத்வஸூசகமான) புண்டரீகாக்ஷத்வத்தை யுடையனாய்
பயில இனிய—(இவ்வடிவழகிலே) செறிந்தார்க்கு நிரதிஶயபோக்யனாய்க்கொண்டு
நம்—ஆஶ்ரிதார்த்தமாக
பாற்கடல்—திருப்பாற்கடலிலே
சேர்ந்த—கண்வளர்ந்தருளின
பரமனை — விக்ரஹ குணபோக்யதா பாரம்யத்தை யுடையவனை
பயிலும் — நிரந்தராநுபவம்பண்ணிச் செறிகையாகிற
திரு—ஸம்பத்தை
உடையார்—உடையவர்கள்
யவரேலும்—(அபிஜந வித்யாவ்ருத்தங்களால் எத்தனையேனும்) குறைய நின்றாரேயாகிலும்
அவர்—அந்நிலையிலே
பயிலும் — (எங்களுக்கு மேன்மேலெனச்)செறிந்துவருகிற
பிறப்பிடைதோறு — ஜந்மாவகாஶங்கள் தோறும்
எம்மை—எங்களை
ஆளும்—அடிமையாகக்கொள்ளும்
பரமர்கண்டீர்—பரமஶேஷிகள்கிடீர்.
அவனுடைய பாரம்யாநுபவம் இவர்களுடைய பாரம்யத்துக்கு அடியென்று கருத்து. (க)

ஆறு ;—பிராட்டியுடைய ஜந்மபூமியாகையாலே திருப்பாற்கடலைத் தனக்கு ப்ரியமான தாமமாகவுடையனாய், ஸர்வதா அநுபூதனாலும் அபூர்வவத்போக்யபூதனாய், நிரதிஶயதீப்தியுக்தனாய், திவ்யரூபனாய், பங்கயக்கண்ணனாயிருந்த எம்பெருமானுடைய அநுபவஸம்பூத ப்ரீதிகாரிததாஸ்ய ஸம்பத்தையுடையார் ஆரேனுமாகிலும் அவர்கிடீர் நமக்கு ஸ்வாமிகளென்கிறார். (க)

ஈடு ;—இரண்டாம்பாட்டு. அவனுடைய அவயவ ஶோபைக்குத் தோற்றிருக்குமவர்கள் எனக்கு நாதரென்கிறார்.

ஆளும்பரமனைக்கண்ணனை யாழிப்பிரான்றன்னை *
தோளுமோர்நான்குடைத் தூமணிவண்ணனெம்மான்றன்னை *
தாளுந்தடக்கையுங்கூப்பிப் பணியுமவர்கண்டீர் *
நாளும்பிறப்பிடைதோறெம்மையாளுடைநாதரே. (௨)

ப ;—அநந்தரம், அவதார விக்ரஹ வைலக்ஷண்யத்துக்கு ஈடுபட்டு இறைஞ்சும் பாகவதர் எனக்கு நாதபூதரென்கிறார்.

ஆளும் பரமனை — (ஆஶ்ரிதரை) அடிமை கொள்ளுகைக்கு அடியான ஸீலாதிபாரம்யத்தை யுடையனாய்
கண்ணனை — அதுக்கு ப்ரகாஶகமான அவதார ஸௌலப்யத்தையுடையனாய்
ஆழிப்பிரான் தன்னை — (ஆஶ்ரித ரக்ஷணார்த்தமாக அவதார தசையிலும்) கையும் திருவாழியுமாயிருக்குமவனாய் (அதுக்குமேலே ஆஶ்ரிதர்க்குஒதுங்கநிழலாய்)
ஓர் — அத்விதீயமான
நான்கு தோளும்உடை — நாலு திருத்தோளையுடையனாய்
தூ — (அவர்களுக்கு) அநுபாவ்யமாய்
மணி — (முடிந்தாளலாம்படி) நீலரத்நம் போலே விலக்ஷணமான
வண்ணன் — வடிவையுடையனாய்
எம்மான் தன்னை — (அவ்வடிவைக்காட்டி) என்னையடிமை கொண்ட ஸ்வாமியை
தடம் தாளும் கையும் கூப்பி — தங்களொடுக்கம் தோன்றும்படி காலையும்கையையும் கூட்டி
பணியுமவர் கண்டீர் — ப்ரணாமம் பண்ணுமவர்கள்கிடீர்
நாளும் — என்றும்
பிறப்பிடை தோறு — ஜந்மாவகாஶந்தோறும்
எம்மை ஆள் உடை — எம்மை அடிமையாகவுடைய
நாதர் — நாதபூதர். (௨)

ஆறு ;—(ஆளும்.) திருப்பாற்கடலில் நின்றும் ஆஶ்ரிதபரித்ராணார்த்தமாக சதுர்ப்புஜத்வ ஶங்கசக்ரகதா ஶார்ங்காதி திவ்யாயுத ஸ்வாஸாதாரணாகார விஶிஷ்டனாய்க்கொண்டு வஸுதேவ க்ருஹே அவதீர்ணனாய், ஸமஸ்தஹேய ப்ரத்யநீகனாயிருந்த எம்பெருமானைத் தாளுந்தடக்கையும் கூப்பிப் பணியுமவர்கண்டீர் நமக்கு என்றைக்கும் ஸ்வாமிகள் என்கிறார்.

(௨)

ஈடு ; — மூன்றும்பாட்டு. தோளும் தோள்மாலையுமான அழகிலே தோற்றிருக்குமவர்களுக்கு ஶேஷபூதரானவர்கள் எனக்கு ஸ்வாமிக ளென்கிறார்.

நாதனை ஞாலமும்வானமுமேத்தும் நறுந்துழாய்ப்
போதனை * பொன்னெடுஞ்சக்கரத்தெந்தைபிரான்தன்னை *
பாதம்பணியவல்லாரைப் பணியுமவர்கண்டீர் *
ஓதும்பிறப்பிடைதோறெம்மையாளுடையார்களே. (௩)

ப ;—அநந்தரம், உபயவிபூதியும் மேல்விழுந்தநுபவிக்கும் போக்யதையிலே ஈடுபட்ட பாகவதர்க்கு ஶேஷபூதரானவர்கள் எம்மை அடிமைகொள்ளும் ஸ்வாமிக ளென்கிறார்.

நாதனை—நிருபாதிகஸ்வாமியாய்
ஞாலமும்—(அவிஶேஷஜ்ஞரான)ஸம்ஸாரிகளோடு
வானமும்—(விஶேஷஜ்ஞரான) நித்யஸூரிகளோடு வாசியற
ஏத்தும்—கொண்டாடும்படி
நறுந்துழாய்ப்போதனை—பரிமளப்ரசுரமான திருத்துழாய்த் தாராலே அலங்க்ருதனாய்
பொன்—தர்ஶநீயமாய்
நெடும்—(போக்யதையால்) விஞ்சியிருக்கிற
சக்கரத்து — திருவாழியுங் கையுமான அழகாலே
எந்தைபிரான்தன்னை — எனக்கு நிரவதிகஸ்வாமியானவனை
பாதம்—திருவடிகளிலே
பணியவல்லாரை—தாழவல்லாரை
பணியுமவர் கண்டீர் — தாழ்ந்து அநுவர்த்திக்குமவர்கிடீர்
ஓதும்—(ஶாஸ்த்ரங்களிலே)ஓதப்பட்ட
பிறப்பு இடைதோறு—பிறப்பினுடைய அவகாஶந்தோறும்
எம்மை—எங்களை
ஆளுடையார்கள்—அடிமையாகவுடையவர்கள். (௩)

ஆறு ;—(நாதனை.) ஸர்வஸ்வாமியாய், தேவமநுஷ்யாத்யாஶ்ரிதருடைய உத்கர்ஷாபகர்ஷம் பாராதே அவர்களெல்லார்க்கு மொக்கத் தன்னைக்கொடுத்தருளும் ஸ்வபாவனாய், திருவாழியாழ்வாலே அலங்க்ருதனாயிருந்த எம்பெருமானைப் பாதம்பணியவல்லாரைப் பணியுமவர்கண்டீர் நமக்கு என்றைக்கும் ஸ்வாமிகளென்கிறார். (௩)

ஈடு ;—அவ ;—நாலாம்பாட்டு. அவனுடைய ஆபரண ஶோபையிலே தோற்றிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு ஶேஷபூதரானவர்கள் எனக்கு ஸ்வாமிக ளென்கிறார்.

உடையார்ந்தவாடையன் கண்டிகையனுடைநாணினன் *
புடையார்பொன்னூலினன் பொன்முடியன்மற்றும்பல்கலன் *
நடையாவுடைத்திருநாரணன் தொண்டர்தொண்டர்கண்டீர் *
இடையார்பிறப்பிடைதோறெமக்கெம்பெருமக்களே. (ச)

ப ;—அநந்தரம், அவனுடைய ஆபரண ஶோபையில் ஈடுபட்டு அடிமை புக்கவர்களுடைய அடியார் எங்களுக்குப் பெரிய ஶேஷிக ளென்கிறார்.

உடை ஆர்ந்த—உடையோடு பொருந்தின

ஆடையன் — திருப்பரிவட்டத்தையுடையனாய்

கண்டிகையன் — கண்டாபரணத்தையுடையனாய்

உடை நாணினன் — பரிவட்டத்தின் மேலேசாத்தின கோவை நாணையுடையனாய்

புடை ஆர்—ஒருபக்கத்திலே சேர்ந்த

பொன்நூலினன் — பொற்பூணூலையுடையனாய்

பொன் முடியன்—ஸ்ப்ருஹணீயமான அபிஷேகத்தையுடையனாய்

மற்றும்—மற்றும்

பல் கலன்—பலவகைப்பட்ட ஆபரணங்களையும்

நடையா உடை — ஸ்வாபாவிகமாக உடையனாய்

திரு நாரணன்—ஸ்ரீமானான நாராயணனுக்கு

தொண்டர்—சேஷபூதரானவர்களுக்கு

தொண்டர்கண்டீர் — சேஷபூதரானவர்கள்கிடீர்

இடை ஆர்—நிரந்தரமான

பிறப்பு இடைதோறு—பிறப்பினுடைய அவகாசந்தோறும்

எமக்கு—எங்களுக்கு

எம்பெருமக்கள் — அஸாதாரண பரமஶேஷிகள்.

இந்நாலுபாட்டாலும் — பாகவதருடைய ஶேஷித்வம் சொல்லிற்று.

ஆறு :— (உடையார்ந்த.) நிரதிஶயஸௌகந்தமாய், நிரதிஶயஸௌகஸ்பர்ஶமாய், நிரதிஶயௌஜ்ஜ்வல்யமாய், நித்யஸித்தமாய், அஸங்க்யேயமான திவ்ய பூஷணங்களாலே பூஷிதனாயிருந்த எம்பெருமானுடைய அழகுக்குத் தோற்று அடிமையாயிருப்பார்க்கு அடிமையாயிருப்பார்கிடீர் இடையார் பிறப்பிடைதோறு எமக்கு எம்பெருமக்களென்கிறார். (ச)

ஈடு ;— அவ ;— அஞ்சாம்பாட்டு. ப்ரயோஜநாந்தர பரர்க்கும் அபேக்ஷித ஸம்விதாநம் பண்ணுமவ னௌதார்யத்திலே தோற்ற

வர்கள் ஸ்வபாவத்துக்குத் தோற்றவர்கள் எனக்கு ஸ்வாமிகளென்கிறார்.

பெருமக்களுள்ளவர் தம்பெருமானை * அமரர்கட்கு
அருமையொழிய வன்றாரமுதூட்டியவப்பனை *
பெருமைபிதற்றவல்லாரைப் பிதற்றுமவர்கண்டீர் *
வருமையுமிம்மையும் நம்மையளிக்கும்பிராக்களே. (௫)

ப;—அநந்தரம், ஆஶ்ரிதர் ப்ரயோஜநாந்தரத்தை அபேக்ஷிக்கிலும் அவர்கள் அருமைப்படாமற் கொடுக்குமவனுடைய உபகாரகத்வாதிஶயத்தை ஸ்துதிப்பாரை ஸ்துதிக்குமவர்கள் உபயவிபூதியிலும் தமக்கு உபகாரக ரென்கிறார்.

பெருமக்கள் உள்ளவர் — பரமஸாம்யாபத்தியாலேவரும் பெருமையையுடைய நித்யஸூரிகளுக்கு
தம் பெருமானை — அஸாதாரணனை அதிபதியாய்
அமரர்கட்கு—சாவாமை வேண்டியிருக்கும் தேவர்களுக்கு
அருமை ஒழிய—அருமைப்படாதபடி
அன்று — (துர்வாஸஶ் ஶாபோபஹதரான) அன்று
ஆர் அமுது ஊட்டிய—பூர்ணமாக அம்ருதத்தைப்புஜிப்பித்து
அப்பனை — ஸத்தையை நோக்கினவனை உத்தேசித்து
பெருமை — அவனுபகாரகத்வ மஹத்வத்தை
பிதற்றவல்லாரை —(ப்ரீதிபாரவஶ்யத்தாலே அக்ரமமாகப் பிதற்றவல்லாரை)
பிதற்றுமவர்கண்டீர்—(தாங்களும் ப்ரீதிபரவஶராய்) பிதற்றுமவர்கிடீர்
வருமையும் இம்மையும் —ஐஹிகாமுஷ்மிகங்களில்
நம்மை அளிக்கும்— நம்மை உஜ்ஜீவிப்பிக்கும்
பிராக்கள்—உபகாரகர் (௫)

ஆறு;—(பெருமக்கள்.) ப்ரஹ்மேஶாநாதி ஸர்வதேவர்களுக்கும் ஈஶ்வரனாய், அம்ருத ப்ரதாநாதிகளாலே அவர்களுக்கு ரக்ஷகனாயிருந்த அவனுடைய இப்பெருமையைப் பிதற்ற வல்லாரைப் பிதற்றுமவர்கண்டீர் ஸர்வகாலமும் நமக்கு ரக்ஷகரான ஸ்வாமிகளென்கிறார். (௫)

ஈடு;—அவ;—ஆறும்பாட்டு. கீழ்ச்சொன்ன ஸௌந்தர்யாதிகளைத் திரள அநுபவிக்குமவர்கள் எனக்கு ரக்ஷக ரென்கிறார்.

அளிக்கும்பரமனைக் கண்ணனையாழிப்பிரான் தன்னை *
துளிக்கும்நறுங்கண்ணித் தூமணிவண்ணனெம்மான் தன்னை *
ஒளிக்கொண்டசோதியை யுள்ளத்துக்கொள்ளுமவர்கண்டீர் *
சலிப்பின்றியாண்டெம்மைச் சன்மசன்மாந்தரங்காப்பரே. (௬)

ப ;—அநந்தரம், அநந்யப்ரயோஜநர்க்குத் தன்வடிவழகை அநுபவிப்பிக்கும் உஜ்ஜ்வல ஸ்வபாவனை அநுபவிப்பார் நமக்கு ரக்ஷக ரென்கிறார்.

அளிக்கும் பரமனை—(உபகரிக்கு மிடத்தில்) மேலில்லாத படியாகத் (தன்னை) உபகரிப்பானாய்	ஒளிக்கொண்ட—(அத்தாலே) மிகவும் நிறம்பெற்ற
கண்ணனை—(அவர்களிட்ட வழக்காம் படி) பவ்யனாய்	சோதியை—தேஜஸ்ஸை யுடையனானவனை
ஆழி — கையுந் திருவாழியுமான அழகையும்	உள்ளத்து—நெஞ்சாலே
துளிக்கும் நறுந் தண்ணி — மதுஸ்யந்தியாய்ப் பரிமளோத்தரமான மாலையழகையும்	கொள்ளுமவர்கண்டீர் — அநுபவிக்குமவர்கள்கிடீர்
தூ மணி—அழுக்கற்ற மாணிக்கம்போன்ற	எம்மை—எம்மை
வண்ணம்—வடிவையும்	சலிப்பு இன்றி — (ப்ரயோஜநாந்தரங்களிற்போகாமல்) நிஸ்சலமாக
பிரான் தன்னை—உபகரித்து	ஆண்டு—அடிமைகொண்டு
எம்மான் தன்னை — என்னை யெழுதிக் கொண்ட ஸ்வாமியாய்	சன்மம்—இஜ்ஜந்மத்தோடு
	சன்மாந்தரம் — ஜந்மாந்தரங்களோடு வாசியற
	காப்பர்—ரக்ஷிக்குமவர்கள். (௬)

ஆறு ;—(அளிக்கும்.) தேவமநுஷ்யாதி ரூபேண அவதீர்ணனாய், ஸர்வஜகத்ரக்ஷகனாய், ஶங்கசக்ராதி திவ்யாயுததரனாய், திவ்யமால்யோப ஶோபிதனாய், ஹேயப்ரத்யநீகனாய், நிரதிஶய தேஜோவிஶிஷ்டனாயிருந்த எம்பெருமானை உள்ளத்துக் கொள்ளுமவர் கண்டீர் ஒருசலநமில்லாதபடி ஆண்டு எம்மைச் சன்மசன்மாந்தரம் காப்பாரென்கிறார். (௬)

ஈடு ;—அவ ;—ஏழாம்பாட்டு. ஆஶ்ரித விஷயத்தில் அவன்பண்ணும் மஹோபகாரங்களிலே வித்தரானவர்களுக்குத் தோற்றிருக்குமவர்கள்கிடீர் எனக்கு எற்றைக்கும் ஸ்வாமிக ளென்கிறார்.

சன்மசன்மாந்தரங்காத் தடியார்களைக்கொண்டுபோய் *
தன்மைபெறுத்தித் தன் தாளிணைக்கீழ்க்கொள்ளுமப்பனை *
தொன்மைபிதற்ற வல்லாரைப்பிதற்றுமவர்கண்டீர் *
நன்மைபெறுத்தெம்மை நாளுய்யக்கொள்கின்றநம்பரே. (௭)

ப ;—அநந்தரம், ஸ்வாநுபவம் பண்ணுவாரை ஸ்வரூபாவிர்ப்பாவத்தைப் பிறப்பித்து அநுபவிப்பிக்கு மவனைப் புகழுமவரைப் புகழுமவர்கள் நமக்கு நித்ய புருஷார்த்தப்ரத ரென்கிறார்.

சன்மசன்மாந்தரம்—ஜந்மபரம்பரைகள்
காத்து—(வாராதபடி) பரிஹரித்து
அடியார்களை — ஸேஷத்வஜ்ஞாந முடையவர்களை
கொண்டுபோய்—(ஒருதேச விசேஷத்திலே கொண்டுபோய்
தன்மைபெறுத்தி — ஸ்வரூபாவிர்பாவத்தைப் பிறப்பித்து
தன் தாளிணைக்கீழ்—தன் திருவடிகளின் கீழே
கொள்ளும்—அடிமை கொண்டருளும்
அப்பனை—ஸ்வாமியானவனை
தொன்மை — ஸ்வாபாவிகோபகாரகத்வத்தை
பிதற்ற வல்லாரை — சொல்லி அக்ரமமாகப் புகழவல்லாரை
பிதற்றுமவர்கண்டீர்—தாங்களும் ப்ரேமவித்தராய்ப் புகழுமவர்கள்கிடீர்
எம்மை—நம்மை
நன்மை பெறுத்து — (அந்தமில்பேரின்பத்தடியரோ டிருக்கும்)நன்மையைப் பெறும்படிபண்ணி
நாள்—யாவதாத்மபாவி
உய்யக்கொள்கின்ற—உஜ்ஜீவிப்பித்துக்கொள்வாராக
நம்பர்—விஸ்வஸிக்கப்படுமவர்கள்.
நம்பர்—நம்பப்படுமவர்கள்.
இம்மூன்று பாட்டாலும் — பாகவதருடைய ஸரண்யத்வம் சொல்லிற்று. (எ)

ஆறு ;—(சன்மசன்மாந்தரம்.) ஜன்மங்கள்தோறும் இந்தலோகத்திலே தானும் வந்து பிறந்தருளி ஆஸ்ரிதரை ரக்ஷித்து, பின்னை அவர்களைக் கொண்டுபோய் அஸங்குசித ஜ்ஞாநராக்கித் தன் தாளிணைக்கீழ்க் கொள்ளும் அப்பனுடைய இந்த ஸ்வாபாவிகமான குணத்தைப் பிதற்றவல்லாரைப் பிதற்றுமவர்கண்டீர், ஸ்வஸேஷதைகரதித்வஸம்பத்தை நமக்குத் தந்து அத்தை நித்யஸித்த மாக்குவரென்கிறார். (எ)

ஈடு ;—அவ ;—எட்டாம்பாட்டு. அவனுடைய ஸ்ரிய:பதித்வத்திலே தோற்றிருக்குமவர்கள் எனக்கு நாதரென்கிறார்.

நம்பனைஞாலம் படைத்தவனைத்திருமார்பனை *
உம்பருலகினில்யார்க்கு முணர்வரியான்தன்னைக் *
கும்பிநரகர்க ளேத்துவரேலுமவர்கண்டீர் *
எம்பல்பிறப்பிடைதோ றெங்கொழுகுலந்தாங்களே. (அ)

ப ;—அநந்தரம், ப்ராப்யபூதனான ஸ்ரிய:பதியை ஸ்துதிக்குமவர்கள் எங்களுக்குக் கைங்கர்ய ப்ரதிஸம்பந்திதயா ப்ராப்யர் என்கிறார்.

நம்பனை — (நிருபாதிகமாகத்) தஞ்சமானவனாய்

ஞாலம்படைத்தவனை—(தன்னை யாஸ்ரயித்து அநுபவிக்கைக்கு உறுப்பாக) ஜகத் ஸ்ருஷ்டியைப் பண்ணுமவனாய்

திருமார்பனை—(ஸ்ருஷ்டி தசையோடு ஆஸ்ரயண தசையோடு ப்ராப்யதசையோடு வாசியற அநுவ்ருத்தமான) ஸ்ரிய:பதித்வத்தையுடையனாய்

உம்பருலகினில் - (ஸ்வஸ்ருஷ்டமான) உபரிதநலோகங்களில்

யார்க்கும்—எத்தனையேனும் அதிஸயித ஜ்ஞாநர்க்கும்

உணர்வு அரியான் தன்னை—அறியவரிய பெருமையை யுடையவனை

கும்பிநரகர்களும்—கும்பீபாகநரகவாஸிகளான பாப ப்ரசுரர்களும்

ஏத்துவரேல்—ஏத்துகிறார்களாகில்

அவர் தாங்கள் கண்டீர்—அவர்கள் தாங்கள்கிடீர்

எம் பல் பிறப்பிடைதோறு — எங்கள் பலவகைப்பட்ட ஜந்மாவகாசந்தோறும்

எம் தொழு குலம்—எங்கள் ஸேஷவ்ருத்திக்கு ப்ரதிஸம்பந்தியான குலம் (அ)

இப்பாட்டு - ப்ராப்யபரம். இதினுடைய விவரணம் - “நெடுமாற்கடிமை”.

ஆறு ;—(நம்பனை.) ஸர்வ ஸ்வாமியாய், ஜகத் ஸ்ரஷ்டாவாய், ஸ்ரிய:பதியாய், ப்ரஹ்மாதிகளுக்கு வாங்மநஸாபரிச்சேத்ய மஹிமனாயிருந்தவனை அநந்யப்ரயோஜநராய்க்கொண்டு ஏத்துவார் கும்பீநரகயாதநாநுபவாநுகுணபாபங்களைப் பண்ணினாரேயாகிலும் அவர் கண்டீர் எம்பல் பிறப்பிடைதோறு எம்தொழுகுலம் தாங்களென்கிறார். (அ)

ஈடு ;—அவ ;—ஒன்பதாம்பாட்டு. கையும் திருவாழியுமான அழகிலே தோற்றிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஸேஷபூதரானவர்கள் எனக்கு ஸ்வாமிகளென்கிறார்-

குலந்தாங்குசாதிகள் நாலிலும்கீழிழிந்து * எத்தனை
நலந்தானிலாதசண்டாள சண்டாளர்களாகிலும் *
வலந்தாங்குசக்கரத்தண்ணல் மணிவண்ணற்காளென்றுள்
கலந்தார் * அடியார்தம் மடியாரெம்மடிகளே. (௯)

ப;—அநந்தரம், ஆஶ்ரிதருடைய ஜந்மாத்யபகர்ஷ தோஷநிவர்த்தகமான பரமபாவநத்வத்தை யுடையவனை அநந்யப்ரயோஜநராய் அநுபவிப்பார் த்ரிபுருஷம் எனக்கு ஶேஷிக ளென்கிறார்.

குலம்—(அநுலோம ப்ரதிலோம விவாஹத்தாலே) ஸகலகுலங்களுக்கும்
தாங்கு—ஆகாரபூதரான
சாதிகள்—(ப்ராஹ்மணாதி) ஜாதிகள்
நாலிலும்—நாலிலும்
கீழ் இழிந்து—கீழேபோந்து
எத்தனை நலந்தான் இலாத — மிகவும் (‘நாம் அபக்ருஷ்ட ஜந்மாக்கள்’ என்கிற) அறிவுமின்றியேயிருக்கும்
சண்டாளர் — சண்டாளர் ப்ராஹ்மணஸ்தாநத்திலேயாம்படி
சண்டாளர்கள் ஆகிலும்—(அவர்களுக்கும் அநாதரணீயர்களான) சண்டாளர்களாகிலும்
வலம் தாங்கு—வலத்திலே ஏந்தப்பட்டு
சக்கரத்து—(க)“ஹாணம்வஹி ந்ருஸிம்ஹ-சரணம் பவித்ரம்” என்கிறபடியே பவித்ரபூதனை ஆழ்வானை யுடைய
அண்ணல்—ஸ்வாமியாய்
மணி—(ஸ்வஸம்பந்தத்தாலே எல்லாரையும் பரிசுத்தராக்கும்) ரத்நம்போலே பவித்ரமாய்
வண்ணற்கு — (உஜ்ஜ்வலமான) வடிவை யுடையவனுக்கு
ஆள்—(நாம்) ஶேஷபூதர்
என்று—என்று நினைத்து
உள்கலந்தார் — அநந்யப்ரயோஜநராய்க் கலந்தவர்களுக்கு
அடியார்தம்—அடியார்க்கு
அடியார்—அடியாரானவர்கள்
எம்—எங்களுக்கு
அடிகள்—ஸ்வாமிகள். (க)

ஆறு;—(குலம்.) வலந்தாங்கு சக்கரத்தண்ணல் மணிவண்ணற்கு அடிமைசெய்யுமிதுவே ப்ரயோஜநமாக ஆஶ்ரயிப்பார் ஜாத்யாசாராதிகளால் எத்தனையேனும் தண்ணியரேயாகிலும் அவரடியார் நமக்கு ஸ்வாமிக ளென்கிறார். (௯)

ஈடு;—அவ;—பத்தாம்பாட்டு. அவனுடைய அகடிதகடநா ஸாமர்த்த்யத்திலே தோற்றிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுடைய ஶேஷத்வத்தின் எல்லைநிலம் நானென்கிறார்.

அடியார்ந்தவையமுண் டாலிலையன்னவசஞ்செய்யும் *
படியாதுமில்குழவிப்படி யெந்தைபிரான்தனக்கு *
அடியாரடியார்தம் மடியாரடியார் தமக்கு
அடியாரடியார்தம் * அடியாரடியோங்களே. (௰)

ப ;—அநந்தரம், ப்ரளயாபத்ஸகனான வடதளஸாயிக்கு ஶேஷபூதரானவர்களுடைய ஸம்பந்திபரம்பரையான ஏழுபடிகாலுக்கு நாம் அடிமை யென்கிறார்.

(த்ரைவிக்ரமாபதாநத்திலே)
அடி—தன் திருவடிகளோடு
ஆர்ந்த — சேர்ந்த
வையம்—பூமியை
உண்டு — (ப்ரளயாபத்திலே) அமுது செய்து
ஆலிலை—ஓராலிலையிலே
அன்னவசஞ்செய்யும்—(உண்டது ஜரியாதபடி) கண்வளர்ந்தருளக்கடவனாய்
படி யாதும் இல்—ஒப்பு ஒன்றும் இல்லாத
குழவிப்படி — முக்தஶிஶுவிக்ரஹத்தையுடையனாய்
பிரான் எந்தை தனக்கு — (அந்தஸ்வபாவத்தாலே) எங்களுக்கு ஸ்வாமி யானவனுக்கு
அடியாரடியார்தம் மடியார் ரடியார் தமக்கடியாரடி யார்தம்மடியார் — அடியா ரானவர்களுடையஸம்பந்திபாரம்பர்யத்தின் எல்லைநிலத்துக்கே
அடியோங்கள் — அடியோங்கள் (நாங்கள்).
பாட்டு முடிந்தவாறே ஏழுபடிகாலிலே நின்றுநித்தனை. ஶேஷத்வப்ரீதிக்கு முடிவில்லாமையாலே, ததீயரான ஶேஷிபாரம் பர்யத்துக்கு முடிவில்லையென்று கருத்து.
படி—ஒப்பு
குழவிப்படி—குழவிவடிவு. (௧0)

ஆறு ;—(அடியார்ந்த) இந்தலோகத்தை அளந்தருளி உண்டருளி ஆலிலையிலே கண்வளர்ந்தருளின அவனுடைய காருண்ய ஸௌந்தர்யாதி குணங்களுக்குத் தோற்று அடிமையாயிருப்பார் அடியார்தம் மடியாரடியார் தமக்கு அடியாரடியார் தம்மடியா ரடியோங்க ளென்கிறார். (௧0)

ஈடு ;—அவ ;—நிகமத்தில், பாகவத ஶேஷத்வ ப்ரதிபாதகமான இத்திருவாய்மொழியை அப்யஸிக்கவர்கள் இப் புருஷார்த்தத்துக்கு விரோதியான ஸம்ஸாரத்தைக் கடப்பார்க ளென்கிறார்.

அடியோங்குநூற்றுவர் வீய அன்றைவர்க்கருள்செய்த
நெடியோனை * தென்குருகூர்ச் சடகோபன்குற்றேவல்கள் *
அடியார்ந்தவாயிரத்து ளிவைபத்தவன்தொண்டர்மேல்
முடிவு * ஆரக்கற்கிற்கில் சன்மஞ்செய்யாமைமுடியுமே. (௧௧)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ப ;—அநந்தரம், இத்திருவாய்மொழிக்குப் பலமாக ஜந்மநிவ்ருத்தியை அருளிச்செய்கிறார்.

அடியோங்கு—தங்கள் ராஜ்யப்ரதிஷ்டை உயர்ந்துவரும்படியான

நூற்றுவர்—துர்யோதநாதிகள் நூற்றுவரும்

வீய—முடியும்படி

அன்று—(அவர்களாலே நிரஸ்தரான) அன்று

ஐவர்க்கு—பாண்டவர்களைவர்க்கும்

அருள்செய்த—ஸர்வப்ரகாரோபகாரத்தைப்பண்ணி

நெடியோனை—(பின்பு ஒன்றுஞ் செய்யாதாரைப் போலே) பெரிய பாரிப்பையுடையவனைப்பற்ற

தென்குருகூர்—கட்டளைப்பட்ட திருநகரிக்கு நிர்வாஹகரான

சடகோபன்—ஆழ்வாருடைய

குற்றேவல்கள் — அந்தரங்க வ்ருத்திரூபமாய்

அடி ஆர்ந்த—பாதபந்தாதி லக்ஷணங்களால் பூர்ணமான

ஆயிரத்துள்—ஆயிரத்துள்ளும்

அவன்தொண்டர்மேல் — அவன்தொண்டர்மேல்

முடிவு—முடிவான

இவைபத்து—இவைபத்தையும்

ஆர—(நெஞ்சிலே) பொருந்த

கற்கிற்கில்—அப்யஸிக்கவல்லாராகில்

சன்மம் செய்யாமை — (ததீய ஶேஷத்வ ப்ரதிபந்தகமான) ஜந்மம் உண்டாகாதபடி

முடியும்—முடிந்துபோம்.

இது—கலித்துறை. (கக)

ஆறு ;—(அடியோங்கு) பாண்டவர்பக்கலுள்ள நிரவதிக வாத்ஸல்யத்தாலே, தத்விரோதிகளாய் ஐஶ்வர்ய பலதர்ப்பிதரான துர்யோதநாதிகளை நிரஸித்தருளின எம்பெருமானுடைய வாத்ஸல்ய ஸௌஶீல்ய காருண்ய ஸௌந்தர்ய ஸௌகந்த்ய ஸௌகுமார்யாதி அஸங்க்யேய கல்யாணகுணங்களுக்குத் தோற்று அடிமையாயிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள் ஆரேனுமாகிலும் அவர்களுக்கு அடிமை பரமப்ராப்யமென்று சொன்ன இத்திருவாய்மொழியை ஆரக் கற்க வல்லாராகில் அவர்களுடைய பாகவத ஶேஷத்வைகரதித்வ விரோதிகளெல்லாம் போமென்கிறார். (கக)

எழாந்திருவாய்மொழி வ்யாக்யாநம் முற்றிற்று.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

எட்டாந்திருவாய்மொழி—முடியானே ப்ரவேசம்.

ஆறு ;—(முடியானே.) "தேர்கடவிய பெருமான் கனைகழல் காண்பதென்றுகொல் கண்கள்" என்று பிறந்த அபேக்ஷையானது மிகவும் உத்பூதையாய், அந்த அபேக்ஷாநுகுணமாகக் காணப்பெறாத வ்யஸநத்தாலே அத்யந்தம் அவஸந்நராய்க்கொண்டு, தம்முடைய ஸர்வ கரணங்களாலும் ஸர்வப்ரகாரத்தாலும் எம்பெருமானை அநுபவிக்கவேணுமென்று சொல்லிக்கொண்டு கூப்பிடுகிறார்.

[illegible] ;—எட்டாந்திருவாய்மொழியில், கீழ், இவர் அநுபவித்த பாகவத ஶேஷத்வத்துக்கடியான பகவத்குண வைலக்ஷண்யமானது இவர் திருவுள்ளத்திலே அநுபவாபிநிவேஶத்தை ஜநிப்பிக்க, அத்தாலே ப்ரஸ்துதமான பாகவத ஸம்ஶ்லேஷம் விடாய்க்கு உத்தம்பகமாக, நெஞ்சு முதலான தம்முடைய கரணங்களோடு தம்மோடு வாசியற அநுபவாலாபத்தாலே ஆர்த்தி பிறந்து, அநுபாவ்யனுடைய ஶேஷித்வாத்யாகாரத்தையும், அநிஷ்டத்தைப்போக்கி அநந்யார்ஹமாக்கும்படியையும், ஆஶ்ரிதவ்யாமோஹத்தையும், அவதாரமூலமான அநந்தஶாயித்வத்தையும், ஆஶ்ரிதர்க்கு முகங்காட்டுகைக்கு ஈடான வாஹநவத்தையையும், அவர்களுக்கு அநுபாவ்யமாம்படி கையுந் திருவாழியுமான அழகையும், இவ்வாஹநாயுத விஶிஷ்டவஸ்துவே தாரகாதிகளானபடியையும், அநுபவிப்பிக்கும் ஸௌந்தர்ய ஸ்வபாவத்தையும், அநுபவப்ரதிபந்தக நிவ்ருத்தி ப்ரகாரத்தையும், நிவர்த்தநத்தில் அநாயாஸத்தையும் அநுஸந்தித்து, அநுபவம் கிட்டாத ஆர்த்தியாலே அதிஶயிதமாகக் கூப்பிடுகிறார்

ஈடு ;—அவ ;—"தேர்கடவிய பெருமான் கனைகழல் காண்பதென்றுகொல் கண்கள்" என்று தம்முடைய கண்கள் அவனைக் காணவேணுமென்று விடாய்த்தபடி சொன்னார், செய்யதாமரைக் கண்ணனில்; நிழலும் அடிதாறுமான ஸ்ரீவைஷ்ணவர்களைக் காட்டிக்கொடுக்க, அநந்தரம் ப்ரவ்ருத்தமான பாகவத ஸம்ஶ்லேஷம் * போதயந்த:பரஸ்பரம்பண்ணி தரிக்கைக்கு உடலன்றிக்கே பகவத்குணங்களுக்கு ஸ்மாரகமாய்க் கீழ்ப்பிறந்த விடாய்க்கு உத்தம்பகமாயிற்று. கீழே பாகவதர்களுடைய ஸ்வரூபநிரூபகத்வேந அவனையும் சொல்லிற்றிறே; வேறொன்றுக்காகப் புகுந்தாலும் தன்னையொழியப் புறம்பு ஒன்றுக்கு ஆளாகாதபடி தன் பக்கலிலே துவக்கிக்கொள்ள வற்றாயிறே பகவத்விஷயம் இருப்பது; அத்தாலும் அபி

நிவேஶம் கரைபுரண்டு, "என்றுகொல் கண்கள் காண்பது" என்னு மளவன்றிக்கே மற்றை இந்த்ரியங்களும் விடாய்த்து, ஓரிந்த்ரியத்தி னுடைய வ்ருத்தியை மற்றை யிந்த்ரியங்களும் ஆசைப்பட்டும், மற்றை யிந்த்ரியங்களினுடைய வ்ருத்தியை மற்றை யிந்த்ரியம் ஆசைப்பட்டும், அவையெல்லாவற்றினுடைய வ்ருத்தியையும் தாம் ஆசைப்பட்டும், தம்மிலும் விடாய்த்த கரணங்களும் கரணங்களி லும் விடாய்த்த தாமுமாய்,—க்ஷாமகாலத்திலே பஹுப்ரஜனான வன் தன்பசிக்கு ஆற்றமாட்டாதே ப்ரஜைகள் பசிக்கு ஆற்றமாட் டாதே, அவற்றின் வாயின்சோற்றைத் தான் பறித்து ஜீவிப்பது தன்வாயிற் சோற்றை அவைபறித்து ஜீவிப்பதாய், 'என்பசிக்கு என்செய்வேன்? என் ப்ரஜைகளின் பசிக்கு என்செய்வேன்?' என்னு மாபோலே, தாமும் தம்முடைய கரணக்ராமமுமாக நோவுபட் டுக் கூப்பிடுகிறார்.

(க) "ஶாகெ தெஶாகாஸிகு பிகெதெ-காத்ரைஶ் ஶோகா பிகர்ஶிதை:" என்று சிலர் பட்டினிகிடக்கச் சிலர் ஜீவிக்குமோபாதி, இவ் வுடம்பைக்கொண்டு அணைய ஆசைப்பட்டு இவ்வாசையோடே முடிந்துபோய் இனி ஒரு ஶரீரபரிக்ரஹம்பண்ணி அவரை அநுபவி க்க இராதே, ஆசைப்பட்ட இக்கரணங்களைக்கொண்டே நான் அநு பவிக்கும்படி பண்ணித்தரவேணு மென்றாளிறே பிராட்டியும்; அப் படி இவரும் நோவுபட்டு, ஆயுதங்களையும் ஆபரணங்களையும் அவற் றுக்கு ஆஶ்ரயமான திருமேனியையும் குணங்களையும் சேஷ்டிதங் களையுமுடைய எம்பெருமானைக் காணவேணுமென்று 'முன்புபோ லே ஈஶ்வரனுக்கு ஒரு குணவிஷ்காராதிகளாற் பட்டினி பரிஹரி க்கவொண்ணாது' என்னும்படி, கேட்டாரெல்லாம் நீராம்படி, பெருந் தானத்திலே பெருமிடறுசெய்து கூப்பிடுகிறார். (உ)[ஶங்கஹநவா ய-௰ தஶெக்ஷ்வஸிதெ தாஶிதிவஸாநுவெஹ-ஞ் - குஹேநஸா ர்த்தம் தத்ரைவஸ்த்திதோஸ்மி திவஸாந்பஹூந்] ஸ்ரீகுஹப்பெரு மாளோடேகூட, பெருமாளைப்பிரிந்த விடத்தினின்றும் கால்வாங்க மாட்டாதே நின்றொழிற்று ஸுமந்த்ரன்; அங்குநின்றது ஒன்றிர ண்டுநாளா யிருக்கச்செய்தே "ஸஹூந் - பஹூந்" என்னு நின்றதாயிற்று, பிரிவாலே காலம்நெடுகினபடி.

(க) ரா - ஸு - ௬௦ - ௩.   (உ) ரா - அயோ - ௫௯ - ௩.

'ஸ்ரீ குஹப்பெருமாளோடே நிற்க, காலம் நெடுகுவானென் ?' என்று மிளகாழ்வானைக் கேட்க, 'ஸ்மாரகஸந்நிதியில் ஆற்றாமை இரட்டிக்குமிறே' என்று அருளிச்செய்தாராம். "மேகக் குழாங்கள் காள் காட்டேன்மின் நும்முரு வென்னுயிர்க் கதுகாலன்" என்றாரிறே. சைதந்யப்ரஸ்ருதித்வாரமான கரணங்கள் விடாய்க்கை யாவது என்னென்னில்,—ஆழ்வாருடைய அபிநிவேசாதிசயத்தைச் சொன்னபடி. இந்த்ரியங்களும் தனித்தனியே சேதந ஸமாதியாலே விடாய்க்கும்படியாயிற்று, பகவத்விஷயத்தில் இவர்க்குப் பிறந்த வாஸநை. இதர விஷயங்களில் வாஸநை விடாயைப் பிறப்பியா நின்றால் குணாதிகவிஷயத்திற் சொல்லவேண்டாவிறே. பகவத் விஷயத்தில் வாஸனை பண்ணுகிறது ஸாதநபுத்யாவல்ல, இதரவிஷயங்களோபாதி இவ்விஷயம் ரஸிக்கவேணுமென்று ; (க) [யா ப்ரீதிரவிவேகாநாம் - யாப்ரீதிரவிவேகாநாம்]. ஒரு இந்த்ரியத்தின் வ்ருத்தியை இந்த்ரியாந்தரம் ஆசைப்படக்கூடுமோ? என்னில் ; [சக்ஷுஶ்ஶ்ரவா: - சக்ஷுஶ்ஶ்ரவா:] - கண்ணாலே காண்பதுஞ்செய்து கேட்பதுஞ் செய்யாநின்றதிறே ; அதுவும் அவன் கொடுத்ததே ; அது நமக்குத்தட்டென்ன அவன் தந்தால்? ஒரு தேசவிசேஷத்திலே தன்னை யநுபவிப்பார்க்குக் கொடாநின்றானிறே, தம்மையே ஒக்க அருளவேண்டுகையாலே. * தூதுசெய் கண்கள்கொண்டு ஒன்றுபேசித் தூமொழியிசைகள்கொண்டு ஒன்று நோக்கியிறே அவன்தன்படி. அதாவது - ஆறு கிண்ணகமெடுத்தால் பலவாய்த்தலைகளாலும் போகச்செய்தேயும் கடலில்புகும் அம்சம் குறைவற்றுப்போமாபோலே, இவருடைய அபிநிவேசாதிசயம் இவருடைய கரணங்களாகிற வாய்த்தலைகளாலே பெருகுகிறபடி.

ஈடு ;—அவ ;—முதற்பாட்டு. தம்முடைய திருவுள்ளத்துக்கு அவன்பக்க லுண்டான சாபலாதிசயத்தைச் சொல்லுகிறார்.

முடியானே! மூவுலகுந் தொழுதேத்துஞ்சீ
ரடியானே! * ஆழ்கடலைக்கடைந்தாய்! புள்ளூர்
கொடியானே! * கொண்டல்வண்ணா! அண்டத்தும்பரில்
நெடியானே! * என்றுகிடக்கு மென்னெஞ்சமே. (க)

(க) வி - பு - க - ௨௦ - ௧௧.

ப ;—முதற்பாட்டில், ப்ராப்தமுமாய் ஸரண்யமுமாய் ப்ராப்யமுமான பகவத்விஷயத்திலே தம்முடைய நெஞ்சுக்கு உண்டான அபிநிவேஸத்தை அருளிச்செய்கிறார்.

முடியானே — (உபயவிபூதிக்கும் ஸேஷியானமேன்மைக்கு ஸூசகமான)முடியை யுடையவனே! (அந்த உறவடியாக)
மூவுலகும்—ஸர்வலோகமும்
தொழுது ஏத்தும்—ஆஸ்ரயித்து ஸ்துதிக்கும்
சீர் அடியானே — ஸரண்யத்வைகாந்த குணபூர்ணமான திருவடிகளையுடை யவனே! ஆஸ்ரிதர் ப்ரயோஜநாந்தரங்களை வேண்டிலும்
ஆழ்கடல்—ஆழ்கடலை
கடைந்தாய் — கடைந்து கொடுக்கும் உபகாரகனே!
புள் ஊர் கொடியானே — (ஆஸ்ரிதர் இருந்தவிடத்திலே வருகைக்கும் அவர்கள் தூரத்தில்கண்டு உகக்கைக்கும் அடியான) பெரிய திருவடியை வாஹநமும் த்வஜமுமாகவுடையவனே!
கொண்டல்—(அவர்களுக்கு அநுபாவ்யமாம்படி ஸ்ரமஹரமாய்) காளமேகம் போன்ற
வண்ணா—வடிவையுடையவனே!(இவ்வடிவழகை அநுபவிப்பித்து)
அண்டத்து—பரமபதவாஸிகளான
உம்பரில் — ஸூரிகளுக்கு நிர்வாஹக
நெடியானே—பெரியவனே!
என்று—என்று (தனித்தனியே இந்த ஸ்வபாவங்களை) அநுஸந்தித்து
என்நெஞ்சம்—என்நெஞ்சானது
கிடக்கும்—(ஒருப்ரவ்ருத்திக்ஷமமன்றிக்கேஸிதிலமாய்) கிடவாநின்றது.

அண்டத்தும்பரென்று - ப்ரஹ்மாதிக ளாகவுமாம். (க)

ஆறு ;— ஸர்வலோகாதிபத்ய ஸூசகமாய் நிரதிஸய தீப்தியுக்தமாய் அதிரமணீய தர்ஸநமாயிருந்த திருவபிஷேகத்தாலே அலங்க்ருதனாய், ப்ரஹ்மேஸாநாதிகளுக்கும் ஈஸ்வரனாய்வைத்து அநாலோசித விஸேஷாஸேஷ லோகஸரண்யனாய், ஆஸ்ரித ஜநஸமீஹித நிர்வர்த்தகனாயிருந்தவனே ! பொன்மலையின் மீமிசைக் கார்முகில் போலே பெரிய திருவடி திருத்தோளின்மேலேறியருளி இந்த லோகத்திலே "வந்துதோன்றாய்" என்று எம்பெருமானைக்காண ஆசைப்பட்டபோதே காணப் பெறாமையாலே குறைப்பட்டுக்கிடக்கும் என்நெஞ்சம் என்கிறார். (க)

ஈடு ;—அவ ;—இரண்டாம்பாட்டு. (க) "மநோபூர்வோ வாகுத்தர: - மந: பூர்வோ வாகுத்தர:" என்று மநஸ்ஸுக்கு அநந்தரமானவாக்கு மநோவ்ருத்தியையும் தன் வ்ருத்தியையும் ஆசைப்படாநின்றதென்கிறார்.

நெஞ்சமே நீணகராக விருந்தவென்
தஞ்சனே! * தண்ணிலங்கைக் கிறையைச்செற்ற
நஞ்சனே! * ஞாலங்கொள்வான் குறளாகிய
வஞ்சனே! * என்னுமெப்போது மென்வாசகமே (உ)

ப ;—அநந்தரம், அநிஷ்டத்தைக் கழித்து அநந்யார்ஹமாக்கும்படியை என்வாக்கு எப்போதும் சொல்லாநின்றது என்கிறார்.

என் வாசகம்—என் வாசகமானது
எப்போதும்—ஸர்வகாலமும்
நெஞ்சமே—நெஞ்சையே
நீள் நகராக—பெரிய திவ்ய நகரியாகக்
இருந்த—வர்த்திக்கையாலே
என் தஞ்சனே — எனக்கு நற்றுணையானவனே!
தண் —(குளவிக்கூடுபோலே ராக்ஷஸர் சேர்ந்த) தண்மையையுடைத்தான
இலங்கைக்கு—லங்கைக்கு
இறையை- நிர்வாஹகனான ராவணனை
செற்ற—முடித்த
நஞ்சனே—நஞ்சானவனே! (மஹாபலயபிமாநத்தைக்கழித்து)
ஞாலம்—பூமியை
கொள்வான்—அநந்யார்ஹமாக்கிக் கொள்ளுகைக்காக
குறளாகிய—வாமநவேஷனான
வஞ்சனே — க்ருத்ரிமனே!
என்னும்—என்னாநிற்கும்.

ராவணனை யழித்தாற்போலே இந்த்ரிய பாரவஶ்யத்தைத் தவிர்த்து பூமியைக்கொண்டாற்போலே என்னை அநந்யார்ஹனாக்கவேணுமென்று கருத்து.

ஆறு ; —(நெஞ்சமே.) ஆஶ்ரிதஸமீஹித விரோதிநிரஸந ஸமர்த்தனாய் தத்ஸமீஹித நிர்வர்த்தக னோபாயஜ்ஞனாயிருந்த நீ, நெஞ்சு உன்னை நினைக்க அருள்செய்தாற்போலே நானும் உன்னை நினைக்க அருள்செய்தருளவேணுமென்று எப்போதும் அலற்றாநிற்கும் என் வாசகமென்கிறார். (உ)

ஈடு ; —அவ ; —மூன்றாம்பாட்டு. கைகளானவை வாக்வ்ருத்தியையும் தன் வ்ருத்தியையும் ஆசைப்படாநின்றன வென்கிறார்.

(க) யஜு - எ - கா - ப்ர - ௫.

வாசகமேயேத்த வருள்செய்யும் வானவர்தம்
நாயகனே! * நாளிளந்திங்களைக் கோள்விடுத்து *
வேயகம்பால் வெண்ணெய்தொடு வுண்டவானாயர்
தாயவனே! * என்று தடவுமென் கைகளே. (௩)

ப; —அநந்தரம், ஆஶ்ரிதவ்யாமோஹத்தாலே அவர்கள் பதார்த்தங்களை விரும்பும்படியான க்ருஷ்ணனை என் கைகள் ஆராயாநின்றன வென்கிறார்

வாசகமே—வாசகமே
ஏத்த—ஏத்தும்படி (அதுக்கே)
அருள்செய்யும் — அருளைச்செய்யுமவனாய்
வானவர்தம்—(அத்தாலே ஸூரிகளுங் கொண்டாடும்படி
நாயகனே —நிர்வாஹகனானவனே!
நாள்—அபிநவனாய்
இளம் திங்கள்—இளையனான உதய சந்த்ரனுடைய
கோள் —(அநுரக்தமான) தேஜஸ்ஸை
விடுத்து — (விரிக்குமாபோலே அதர ஶோபாவிஶிஷ்டமான ஸ்மித சந்த்ரிகையை) ப்ரகாசிப்பித்து
வேயகம்பால்—மூங்கிற்குடிலின் அகவாயிலே வைத்த
வெண்ணெய்—வெண்ணெயை
தொடு உண்ட — களவுகண்டு அமுது செய்தத்தாலே
ஆனாயர்—இடையருடைய
தாயவனே —ஸத்தாதிகளுக்கு வர்த்தகனானவனே!
என்று—என்று
என் கைகள்—என் கைகளானவை
தடவும்—(களவுகாணப்புக்கவிடத்தே) தடவிப் பிடிக்கத் தேடாநின்றன.

நாள் - புதுமை. இளமை - உதயாவஸ்தை. கோள் - ஒளி. விடுத்தல் - விரித்தல். நாளிளந்திங்களைக் கோள்விடுத்தென்று - உபமாநமுகத்தாலே உபமேயமான ஸ்மிதத்தை லக்ஷிக்கிறது. (௩)

ஆறு ;—(வாசகமே.) வானவர்தம் நாயகனுப் வைத்து வாசகமேயேத்த அருள் செய்தருளினாற்போலே, அபிநவ பூர்ணசந்த்ரகிரணம்போலே திருமுத்தினொளி புறப்படும்படி திருப்பவளத்தைத் திறந்து, வெண்ணெய் தொடுவுண்ட உன்னுடைய அவ்வழகை நானும் ஏத்தும்படி அருள் செய்யவேணுமென்று தடவும் என்கைகளென்கிறார். (௩)

ஈடு ;—அவ ;—நாலாம்பாட்டு. கண்களானவை கைகளின் வ்ருத்தியையும் ஸ்வவ்ருத்தியையும் ஆசைப்படாநின்றதென்கிறார்.

கைகளாலாரத் தொழுதுதொழுது உன்னை *
வைகலும் மாத்திரைப்போது மோர்வீடின்றிப் *
பைகொள் பாம்பேறி யுறை பரனே! * உன்னை
மெய்கொள்ளக் காணவிரும்புமென் கண்களே. (௪)

ப ;—அநந்தரம், இவ்வவதாரமூலமான அநந்தசாயியைக் காண ஆசைப்படாநின்றது என் கண்களென்கிறார்.

என் கண்கள்—என் கண்களானவை
கைகளால்—கைகளாலே
உன்னை—உன்னை
ஆர தொழுதுதொழுது — பரிபூர்ணமாகப் பலகாலுந் தொழுது
வைகலும்—காலதத்வமுள்ளதனையும்
ஓர் மாத்திரைப்போதும் — ஒரு க்ஷணமாத்ரமும்
வீடு இன்றி—விடாதே
பைகொள் — விரிகிற பணங்களையுடைய
பாம்பு ஏறி உறை—திருவநந்தாழ்வான் மேலே நித்யவாஸம் பண்ணுகிற
பரனே—பரமசேஷியே!
உன்னை—உன்னையே
மெய்கொள்ள காண — அபரோக்ஷித்துக் காணவேணுமென்று
விரும்பும்—ஆசைப்படாநின்றன.

கண்கள் கையாலே தொழுகையாவது - அதினுடைய வ்ருத்தியிலும் அந்வயிக்கத்தேடுகை. பை - பணம். (௪)

ஆறு ;—(கைகளாலார.) பைகொள் பாம்பேறியுறை பரனே! உன்னை ஒரு க்ஷணமாத்ரமும் ஒழியாமே எப்போதும் கைகளாலே ஆரத்தொழுது, மெய்கொள்ளக்காண விரும்பாநிற்கும் என் கண்களென்கிறார். (௪)

ஈடு ;—அவ: ;—அஞ்சாம்பாட்டு. செவிகளானவை கண்ணினுடைய வ்ருத்தியையும் தன்னுடைய வ்ருத்தியையும் ஆசைப்படாநின்றன வென்கிறார்.

கண்களாற் காணவருங்கொலென் றாசையால் *
மண்கொண்ட வாமனனேற மகிழ்ந்துசெல் *
பண்கொண்ட புள்ளின் சிறகொலிபாவித்துத் *
திண்கொள்ள வோர்க்கும்கிடந்தென் செவிகளே. (௫)

ப ;—அநந்தரம், என் செவிகளானவை காணவும் ஆசைப்பட்டு, காட்சிகொடுக்க வரும்போது பெரியதிருவடியின் சிறகொலியைக் கேட்கவும் ஆசைப்படாநின்றன என்கிறார்.

கண்களால் — (காண்கைக்குக் காரணமான) கண்களாலே
காண — அபரோக்ஷித்துக் காணும்படி
வருங்கொல் — வரக்கூடுமோ?
என்று — என்கிற
ஆசையால் — ஆசையாலே,
மண்கொண்ட — (தன் வஸ்துவைப் பிறர்க்குக் கொடாமல் அர்த்தியாய்ச் சென்று) பூமியைக்கொண்ட
வாமனன் — ஸ்ரீவாமநனானவன்
ஏற — (ஆசைப்பட்டார்க்கு முகங்காட்டுகைக்காகத்) தன்னை மேற்கொள்ள
மகிழ்ந்து — (அத்தாலே) ப்ரீதனாய்
செல் — செல்லக்கடவனான
புள்ளின் — பெரிய திருவடியினுடைய
பண்கொள் — ஸா. ஸ்வரத்தை யுடைத்தான
சிறகொலி — சிறகொலியை
பாவித்து — நினைத்து
என் செவிகள் — என்செவிகளானவை
கிடந்து — (பாவசமாய்) கிடந்து
திண்கொள்ள — திண்ணியதாக
ஓர்க்கும் — நிரூபியாநின்றன.
பண்கொண்ட என்று — கலனை யுடைத்தான என்றுமாம்

ஆறு ;—(கண்களால்.) மண்கொண்ட வாமநன் ஏறியருள, மதுபாநம் பண்ணின வண்டுபோலே களித்துக்கொண்டு செல்லும் பெரிய திருவடிமேலே அவன்ஏறியருளி வரும்படியைக் காணவேணுமென்றும், வரும்போது பெரியதிருவடியினுடைய அத் திருச்சிறகினொலி கேட்கவேணுமென்றும் ஆசைப்படாநிற்கும் என்செவிகளென்கிறார். (ரு)

ஈடு ;—அவ ;—ஆறும்பாட்டு. என்னுடைய ப்ராணனானது உன்னுடைய கீர்த்தியைத் தன்செவியாலே கேட்க ஆசைப்படாநின்றது என்கிறார் ; கன்ன மிட்டுக்கொண்டும் கேட்கவேண்டும் படியிறே பகவத்கீர்த்தி இருப்பது.

செவிகளாலாரநின்கீர்த்திக்கனியென்னும்
கவிகளே * காலப்பண் தேனுறைப்பத்துற்றுப் *
புவியின்மேல்பொன்னெடுஞ்சக்கரத்துஉன்னையே *
அவிவின்றியாதரிக்குமெனதாவியே. (சு)

ப ;—அநந்தரம், கையும் திருவாழியுமான அழகை அநுபவிக்கவேணுமென்று என் ப்ராணன் ஆசைப்படாநின்றது என்கிறார்.

எனது — என்னுடைய விளம்பாக்ஷமமான
ஆவி — ப்ராணனானது
நின் — உன்னுடைய
கீர்த்தி கனி — கீர்த்தியின் பக்வபலம்
என்னும் — என்னலாம்படியான

கனிகளே—கனிகளையே
காலம் பண் — காலாநுரூபமான பண்ணுகிற
தேன்—தேனிலே
உறைப்ப—மிகவும்செறிய
துற்று—துற்று
செவிகளால்—செவிகளாலே
ஆர—நிரம்ப அநுபவிக்கைக்காக
புவியின்மேல்—பூமியிலே
பொன்—தர்ஸநீயமாய்
நெடு—நிரதிஶயபோக்யமான
சக்கரத்து—திருவாழியையுடைய
உன்னையே—உன்னையே
அவிவு இன்றி—விச்சேதரஹிதமாய்
ஆதரிக்கும்—ஆதரியாநிற்கும்.

ஆறு ;—(செவிகளாலார) உன்னுடைய கீர்த்திக் கவியென்னும் கனிகளை, காலப்பண்ணுகிற தேனிலே கலந்து என் செவிகளாரத் துற்று, பொன்னெடுஞ் சக்கரத்து உன்னை இந்த லோகத்திலே காணவேணுமென்று அவிவின்றி ஆதரிக்கும் எனது ஆவி என்கிறார்.

ஈடு ;—அவ ;—ஏழாம்பாட்டு. கரணங்களை யொழியத் தம்முடைய இழவு சொல்லுகிறார். ப்ரஜைகளினிழவும் பசியும்சொன்னார்-கீழ் ; தம் இழவும் பசியும் சொல்லுகிறார் - மேல். இப்பாட்டில், 'நான் மஹாபாபியாகையாலே நெஞ்சின்விடாயுந் தீரப்பெற்றிலேன், என்விடாயுந் தீரப்பெற்றிலேன்' என்கிறார்.

ஆவியே! ஆரமுதே! என்னையாளுடைத் *
தூவியம்புள்ளுடையாய்! சுடர்நேமியாய்! *
பாவியேன்நெஞ்சம் புலம்பப் பலகாலும் *
கூவியுங்காணப் பெறேனுனகோலமே. (எ)

ப ;—அநந்தரம், இப்படி ஆஶ்ரிதஸுலபனாய் போக்யனான உன்னை அநுபவிக்கப் பெறுகிறிலேன் என்று கரணங்களோபாதி கரணியான தம்முடைய இழவு சொல்லுகிறார்.

ஆவியே — (வ்யதிரேகத்தில் முடியும்படி தாரகமான) ப்ராணனாய்
ஆர்—பரிபூர்ணமான
அமுதே—நித்யபோக்யபூதனாய்
என்னை ஆளுடை—என்னை அடிமை கொள்ளுகைக்கீடான
அம்தூவி—அழகிய சிறகையுடைய
புள்—பெரியதிருவடியை
உடையாய்—வாஹநமாகவுடையனாய்
சுடர் — (ப்ரதிபந்தகத்தைக் கழிக்கும்) உஜ்ஜ்வலமான
நேமியாய் — திருவாழியை யுடையவனே !
உன—உன்னுடைய
கோலம்—(நிரதிஶயபோக்யமான) வடிவழகை
பாவியேன் — மஹாபாபியான என்னுடைய

நெஞ்சம்—நெஞ்சானது
புலம்ப—ஆசைப்பட்டுக்கூப்பிட (அவ்வாசையடியாக
பலகாலும்—அநேககாலம்
கூவியும் — நான் கூப்பிட்டவிடத்திலும்
காணப்பெறேன் — கண்டநுபவிக்கப் பெறுகிறிலேன்

(க) "தத்தவஸ்வஸ்வரூபம் — தத்தஸ்யஸத்ருஸம்" என்கிற ஸ்வரூபமும் இழந்தேன், அபிமதமும் இழந்தேன் என்று கருத்து.

ஆறு;—(ஆவியே.) என்னுடைய தாரகமே! என்னுடைய போக்யமே! உன்னை விஶ்லேஷித்து நான் அவஸந்நனான இந்த தஶையிலே நான் முடிவதற்கு முன்னே இக்ஷணத்திலே வந்து என்னை அடிமை கொள்ளுகைக்காகப் பெரிய திருவடியை திவ்ய வாஹநமாகவுடையவனே! த்வத்ஸம்ஶ்லேஷவிரோதியான என்னுடைய வினை கடிகைக்காக எப்போதும் கைகழலாநேமியாய்' பாவியேன் நெஞ்சம் புலம்பப் பலகாலும் கூவியுங் காணப்பெறுகிறிலேன் உன்னழகை என்கிறார்.

ஈடு ;—அவ ;—எட்டாம்பாட்டு. உம்முடைய அபேக்ஷிதம் செய்கைக்கு ஒரு காலமில்லையோ ? அது வருங்கிடீரென்ன ; அதுவும் நீயிட்ட வழக்கன்றோ ? என்கிறார்.

கோலமே! தாமரைக்கண்ணதோரஞ்சன
நீலமே! * நின்றுஎனதாவியையீர்கின்ற
சீலமே! * சென்றுசெல்லாதனமுன்னிலாங்
காலமே! * உன்னையெந்நாள்கண்டுகொள்வனே ? (அ)

ப ;—அநந்தரம், அநுபாவ்யமான ஸௌந்தர்யாதிகளையுடைய உன்னை எந்நாள் கண்டு அநுபவிக்கப் பெறுவது? என்கிறார்.

கோலமே—(ஒப்பனை ரூபம் தரித்தாற்போலே) தர்ஶநீயனாய்
தாமரை—தாமரைபோன்ற
கண்ணது—கண்களையுடைத்தாய்
ஓர்—அத்விதீயமான
அஞ்சனம்—அஞ்சநத்ரவ்யத்தினுடைய
நீலமே — நீலநிறந்தான் வடிவானவனாய், (இந்த ரூபகுணத்தளவன்றியே)
நின்று—ஸ்திரமாய் நின்று
எனது ஆவியை—என் ஆத்மாவை
ஈர்கின்ற—ஈராநிற்கிற
சீலமே—சீலமேநிரூபகமானவனாய்
சென்று—சென்றபூதகாலமும்
செல்லாதன — செல்லாத பவிஷ்யத்காலமும்

(க) ரா - ஸு - ௩௧ - ௩௦.

முன்னிலாம் காலமே—முன்னே வர்த்தமாநமாயுள்ள காலமும் நீயிட்ட வழக்காம்படியானவனே!
உன்னை—(ஏவம்விதனான) உன்னை
எந்நாள்—என்று? †
கண்டு கொள்வன்—கண்டு அநுபவிப்பது?
கோலமேய்ந்த தாமரைக்கண்ணனென்றுமாம்! (அ)

ஆறு ;—(கோலமே.) கோலமே! தாமரைக்கண்களையுடையதொரு அஞ்சனநீலமே! இப்படியிருந்துவைத்து என்னுடைய நிகர்ஷம்பாராதே என் நெஞ்சமே நீள்நகராக இருந்த நிரவதிகஸௌஶீல்யத்தாலே என்னை மயக்குகிறவனே! உன்னை என்று நான் காண்பது? என்றுசொல்ல, எம்பெருமானும் ‘காணக்கடவிய காலம் வந்தாலன்றோ காணலாவது’ என்று அருளிச்செய்ய, “அக்காலந்தான் நீயிட்ட வழக்கன்றோ? ஆனபின்பு, “இக்காலந்தன்னையே அந்தக் காணக்கடவிய காலமாக்குவோம்” என்றால் உன்னால் ஆக்க முடியாதோ?’ என்கிறார். (அ)

ஈடு ; — அவ ; — ஒன்பதாம்பாட்டு. ரக்ஷணோபாயஜ்ஞனுமாய் விரோதிநிரஸந ஶீலனுமான உன்னை நான் கிட்டுவது என்று? என்கிறார்.

கொள்வன்நான்மாவலி! மூவடிதாவென்ற
கள்வனே! * கஞ்சனைவஞ்சித்துவாணனை
உள்வன்மைதீர * ஓராயிரந்தோள்துணித்த
புள்வல்லாய்! * உன்னைஎஞ்ஞான்றுபொருந்துவனே? (கூ)

ப ;—அநந்தரம், ஸமஸ்தப்ரதிபந்தக நிவர்த்தகனான உன்னை நான் ப்ராபிப்பது என்று? என்கிறார்.

மாவலி—மாவலி!
நான்—நான்
மூவடி கொள்வன்—மூவடி கொள்வன்
தா—தா
என்ற — என்று (முக்தோக்தியாலே அவனை வஶீகரித்த)
கள்வனே—க்ருத்ரிமனாய்
கஞ்சனை வஞ்சித்து — கம்ஸனுடைய வஞ்சநம் அவன் தன்னோடே போம்படிபண்ணி
வாணனை—வாணனை
உள் வன்மை தீர — நெஞ்சுவலி அழியும்படி
ஓர் தோள் ஆயிரம் — அத்விதீயமான தோள் ஆயிரத்தையும்
துணித்த—துணித்துப்பொகட்ட
புள்வல்லாய்—கருடவாஹநனே
உன்னை — (இப்படி ஆஶ்ரிதவிரோதி நிவர்த்தந ஸமர்த்தனான) உன்னை
எஞ்ஞான்று பொருந்துவன் — என்று சேர்வது? (கூ)

---

† (பா) எங்கே.

ஆறு ;—(கொள்வன் நான்.) கோவினைவை முடிக்க விரகறிவானொருவனாய், ஆஶ்ரிதவிரோதி நிரஸநஸ்வபாவனாய், விரோதிநிரஸந ஸமர்த்தனாயிருந்த உன்னை எஞ்ஞான்று பொருந்துவன்? என்கிறார்.

ஈடு ;—அவ ;—பத்தாம்பாட்டு. உன்னைக் காணப்பெறாத வ்யஸநத்தாலே க்லேசப்படுகிற நான் இன்னம் எத்தனைகாலம் கூப்பிடக்கடவேன்? என்கிறார்

பொருந்திய மாமருதினிடை போய எம்
பெருந்தகாய்! * உன்கழல்காணிய பேதுற்று *
வருந்தி நான்வாசகமாலை கொண்டு * உன்னையே
இருந்திருந் தெத்தனைகாலம் புலம்புவனே? (௧௦)

ப ;—அநந்தரம், ப்ரதிபந்தகத்தை அநாயாஸேந போக்கும் உன் திருவடிகளைக் காண ஆசைப்பட்டு எத்தனைகாலம் கூப்பிடக்கடவே னென்கிறார்.

பொருந்திய—(தன்னில்தான்) செறிந்து நிற்கிற
மா மருதின் இடை — பெரிய மருதுகளின் நடுவே
போய—(அநாயாஸேந) போய் அத்தை முறித்து
எம்பெருந்தகாய்—(உன்னை) எங்களுக்கு ஸ்வாமியாகத்தந்த பெரியவனே
உன்—உன்னுடைய
கழல்—(அக்காலத்திலே மறியவிட்ட) சிவந்த திருவடிகளை
காணிய—காணவேணுமென்கிற
பேது—ஈடுபாட்டை
உற்று—உடையேனாய்
வருந்தி—க்லேஶித்து
நான்—(விளம்பாக்ஷமனான) நான்
வாசகம்—(உன்னுடைய) குணவாசகமான
மாலைகொண்டு—ஶப்த ஸந்தர்ப்பத்தைக்கொண்டு
உன்னையே— (நிரதிஶயபோக்யனான) உன்னையே நோக்கி
இருந்துஇருந்து—இளைத்திருந்திருந்து
எத்தனைகாலம்—எத்தனைகாலம்
புலம்புவன்—கூப்பிடக்கடவேன்
காணிய—காண்கைக்கு. (௧௦)

ஆறு ;—(பொருந்திய.) பொருந்தின மாமருதினிடை யகப்படாதே போய் என்னை ரக்ஷித்தருளின பரமகாருணிகனே! உன் திருவடிகளைக் காண ஆசைப்பட்டுப் பெறுதொழிந்து இப்படி முடியவும்பெறாதே யிருந்து பெரிய வருத்தத்தோடே உன் குணங்களைச் சொல்லிக்கொண்டு நான் இன்னம் எத்தனை காலம் கிடந்து அலற்றக்கடவேன் என்கிறார். (௧௦)

ஈடு ;—அவ ;—நிகமத்தில், இத்திருவாய்மொழியில் ஶப்தமாத்ரத்தாலே இதில் ப்ரார்த்தித்தபடியே அநுபவிக்கலான பரமபதத்தைச் செல்லப்பெறுவர் என்கிறார்.

புலம்புசீர்ப் பூமியளந்த பெருமானை *
நலங்கொள்சீர் நன்குருகூர்ச் சடகோபன் * சொல்
வலங்கொண்ட வாயிரத்து ளிவையுமோர்பத்து *
இலங்குவான் யாவருமேறுவர் சொன்னாலே. (கக)

ப ;—அநந்தரம், இத்திருவாய்மொழிக்குப் பலமாகப் பரமபதப்ராப்தியை அருளிச்செய்கிறார்.

புலம்பு சீர் — (எல்லாரும்) கொண்டாடும்படியான குணங்களை யுடையனைக்கொண்டு
பூமி—பூமியை
அளந்த— அளந்த
பெருமானை —ஸர்வேஶ்வரனை
நலம் கொள் — (அநுபவாபி நிவேசமாகிற) நன்மையை யுடைய
சீர்—ஜ்ஞாநாதிகுண விஶிஷ்டராய்
நல்—நன்றான
குருகூர்—திருநகர்க்கு நிர்வாஹகரான
சடகோபன்—ஆழ்வார்
சொல்—அருளிச்செய்த
வலங்கொண்ட — அர்த்த ப்ரதிபாதந பலத்தையுடைத்தான
ஆயிரத்துள் —ஆயிரந்திருவாய்மொழிக்குள்ளும்
ஓர் — அத்விதீயமான
இவைபத்தும்—இப்பத்தையும்
சொன்னால்—சொன்னால்
யாவரும்—எல்லாரும்
இலங்குவான்—அத்யுஜ்ஜ்வலமானபரமபதத்திலே
ஏறுவர்—ஏறப்பெறுவர்கள்.
இது—கலிவிருத்தம். (கக)

ஆறு ;—(புலம்புசீர்) எல்லாராலும் ஏத்தப்படுங் குணங்களை யுடையனை பூமியளந்த எம்பெருமானை, குணைகதாரகத்வமாகிற கல்யாணகுணத்தை யுடையனாயிருந்த நன்குருகூர்ச் சடகோபன் சொன்ன இத்திருவாய்மொழியைச் சொன்னாரெல்லாரும் திருநாட்டிலே புகப்பெறுவர் என்கிறார். (கக)

எட்டாந்திருவாய்மொழி வ்யாக்யாநம் முற்றிற்று.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஒன்பதாந் திருவாய்மொழி சொன்னல் ப்ரவேஸம்.

ப;— ஒன்பதாந்திருவாய்மொழியில், இப்படி தாமும் கரணக்ராமமுங் கூப்பிட்டபடியைக் கண்ட ஈஸ்வரன் 'லோகமடங்க இதரஸ்தோத்ரம்பண்ணி அநர்த்தப்படாநிற்க, நீர் நம்மை ஸ்தோத்ரம்பண்ணும்படி பண்ணினோம்' என்று இவருடைய பேற்றை ப்ரகாஸிப்பிக்கக் கண்டு ஸந்துஷ்டராய்; அவனுடைய ஸ்துத்யத்வத்துக்கு ஏகாந்தமான ஸௌலப்யாதிஸயத்தையும், ஸாலப்யனுடைய ஸம்பந்தோத்கர்ஷத்தையும், நித்யஸூரிநிர்வாஹகத்வத்தையும், ஸ்துத்யதைக்கு அநுரூபமான ஸேஷித்வத்தையும், அபேக்ஷிதபலப்ரதத்வமான ஔதார்யாதிஸயத்தையும், அதுக்கு ஏகாந்தமான ஸ்ரியப்பதித்வத்தையும், ஸ்துதிவிஷயமான குணகாமபூர்த்தியையும், அவனுடைய ப்ராப்யபாவத்தையும், புருஷார்த்தப்ரதத்வத்தையும், ஜகத்ஸ்ரஷ்ட்ருத்வத்தையும் அநுஸந்தித்து 'ஏவம்பூதவிஷயத்தை ஸ்தோத்ரம்பண்ணாதே, நிஷ்ப்ரயோஜநமான இதரஸ்தோத்ரங்களைப் பண்ணி அநர்த்தப்படுகிறீர்களே' என்று லௌகிகரைக் குறித்து ஸ்வநிஷ்டையை உபதேஸித்தருளுகிறார்.

ஈடு;—இப்படி தம் இழவுக்குக் கூப்பிடுகிற விது தவிர்ந்து தங்களிழவுக்குக் கூப்பிடும்படி பண்ணினார்கள் ஸம்ஸாரிகள். தாமும் தம்முடைய கரணக்ராமமுமாய்க் கேட்டாரெல்லாம் நீராம்படி கூப்பிட்டார்-கீழில் திருவாய்மொழியிலே; "பருகிக்களித்தேனே": என்று 'பகவதநுபவம்பண்ணிக் களித்து, அநந்தரம் * போதயந்த' பரஸ்பரம் பண்ணுகைக்கு "அடியார்கள் குழாங்களை உடன்கூடுவ தென்றுகொலோ" என்று நித்யஸூரிகள் திரளிலே புகத் தேடுமா போலே, இவர் இழவாலே கூப்பிட்ட அநந்தரம் 'இவ்விழவுக்குக் கூட்டாவர்களிறே' என்று ஸம்ஸாரிகளைப் பார்த்தார்; அவர்கள் பேற்றுக்குக் கூட்டல்லாதாப்போலே இழவுக்கும் கூட்டன்றிக்கே யிருந்தார்கள்; (க) "அறியார் சமணர் அயர்த்தார் பவுத்தர், சிறியார் சிவப்பட்டார்" என்கிறபடியே அநுபபந்நங்களைச்சொல்லுவாரும், ப்ரத்யக்ஷைகப்ரமாணமாம்படி ஒரு சேதநனைக் கொள்ளாதே ஜ்ஞாநஸந்தாநத்தைக் கொள்ளுவாரும், தன்னோட்டையா னொருக்ஷேத்ரஜ்ஞனையே 'ஈஸ்வரன்' என்று இருப்பாரும், தேவதாந்தரங்களைப்பற்றி

(க) ச - திருவ - சூ.

யிருப்பாரும், அவர்கள் தாங்கள் 'ஸர்வஜ்ஞர்' என்னும்படி ஸம்பதாதிகளைப்பற்றி அவற்றைப் பெறுகைக்காகப் பிறரைக் கவிபாடித் திரிவாருமா யிருந்தார்கள்; அவர்களைக் கண்டவாறே, வாளேறுகாணத் தேளேறு மாயுமாபோலே தம் இழவை மறந்தார்; பராநர்த்தங்கண்டால் அத்தைப் பரிஹரித்துப் பின்பு தம் இழவு பரிஹரிக்க நினைப்பா ரொருவ ராகையாலே, 'இவர்க ளநர்த்தத்தைப் பரிஹரித்து இவர்களையுங் கூட்டிக்கொண்டு போவோம்' என்று அவர்களுக்குப் பரமஹிதமான நல்வார்த்தை அருளிச்செய்ய, அவர்கள் அதுகேளாதே பழையபடியே நிற்க, அவர்களைவிட்டுத் தம் நிலையிலே போருகிற இவர், அவர்களில் தமக்கு உண்டான வ்யாவ்ருத்தியைப் பேசிக்கொண்டு போருகிறார்.

அவர்கள் தாங்கள்—ஸமஸ்த கல்யாண குணாத்மகனுய், ஶ்ரிய:பதியாய், அத்யந்த ஸௌந்தரனுகையாலே கவிபாடுகிறது பொய்சொல்லிற்றுகாதே கவிக்கு விஷயம் போரும்படியாய், இவன்பாடின கவியைக் கேட்பித்துக் கொண்டாடுகைக்கு ஈடாக * "கேட்டாரார் வானவர்கள்" என்றும், "தொண்டர்க்கமுதுண்ணச் சொன்மாலைகள்" என்றும் சொல்லுகிற பரிஜநங்களையுடையனுய், கவிபாடினார்க்கு வழங்குகைக்கு "வேண்டிற்றெல்லாம் தருங் கோதிலென் வள்ளல்" என்கிறபடியே பரமோதாரனுய், அவர்களுக்குக் கொடுக்கைக்கு உபயவிபூத்யைஶ்வர்யத்தை யுடையனுய், "வல்லதோர் வண்ணஞ் சொன்ன லதுவே யுனக்காம் வண்ணம்" என்கிறபடியே இவன் ஏதேனுமொன்றைச் சொன்னலும் தன்னையே சொல்லிற்றும்படி ஸர்வஶப்தவாச்யனுய், பாடின கவி கேட்பிக்க இருந்தவிடம் தேடிப்போய் அருமைப்பட வேண்டாதே "எங்குமுளன் கண்ணன்" என்கிறபடியே ஸர்வத்ர ஸந்நிஹிதனுய், ஸுலபனுமாய், கவிபாடினவர்களுக்கு போகமோக்ஷாதி ஸகல புருஷார்த்த ப்ரதனுய், அவை கொடாவிடிலும் தன்னைக் கவிபாடுகைதானே ப்ரயோஜநம் போரும்படி யிருக்கிற ஸர்வேஶ்வரனை விட்டு, கவிபாடுகைக்கு ஈடான நன்மைகளொன்று மின்றியே, தலையில் மயிரில்லாதானெருவனை 'பனியிருங்குழலன்' என்றும், இளிகண்ணனை 'புண்டரீகாக்ஷன்' என்றும் இப் புடைகளிலேயாயிற்றுக் கவிபாடுவது; கவிபாடினல் தான் தருவதொன்றில்லாமையாலே * நூறுகற்றையாதல்

ஒரு பொய்க்தரவாதலாயிற்று எழுதுவது ; இவன்தான் நெடுநாள் கூடி நெஞ்சுகன்றக் கவிபாடி ஸஹகாரிகளையுங்கூட்டிக்கொண்டு கேட்பிக்கச் செல்லுங்காட்டில் (க) "அவரே மாண்டார்" என்று எதிரே வரும்படி நிலைநில்லாதாருமாய், ஆக, இருந்தும் இழவாய் போயும், இழவாய், இப்படி அவனுக்கு இழவோடே தலைக்கட்டும்படியாய், கவிபாடி ஒரு ப்ரயோஜநம் பெறுதொழிகை யன்றிக்கே, கவிபாட்டுண்கிறவனுக்கு இல்லாத நன்மைகளை யிட்டு 'இருமருங்குந் துய்யன்' என்னுமாபோலேயிறே கவிபாடுவது.

ஆனால், வருவதென் னென்னில்,—உத்பத்தியிலே சில குறைகள் உண்டாயிருக்குமே இவன்தனக்கு: மறந்தவற்றையிறே இது கேட்ட நாட்டார் நினைப்பது ; அவனுடைய தோஷங்களை வெளியிட்டு அவ்வழியாலே அவத்யாவஹராய், அப்ராப்த விஷயத்தைக் கவிபாடுகையாலே மேல் நரகமாய், 'இன்னானைக் கவிபாடினவனன்றோ இவன்' என்று 'தீண்டாதே கடக்கப்போ' என்னும்படியாயிருக்கிற க்ஷுத்ரரைக் கவிபாடித் திரிகிறபடியைக் கண்டு "ஆத்மா ஈச்வரசேஷமாயிருக்க, அநந்யார்ஹமான உங்களுடைய கரணங்களைக்கொண்டு பிறரை ஸ்துதிக்கை ஈடல்ல" என்று ஹிதத்தை அருளிச்செய்ய, ராவணனுக்கு ஸ்ரீவிபீஷணாழ்வான் சொன்ன ஹிதம் போலே அது பலியாதொழிய, "ஹிதஞ் சொல்லச் செய்தேயும் செவிதாழாத இவர்களோடொத்த ப்ராப்தியிறே நமக்கு உள்ளது" என்று பார்த்து, 'இவர்கள் நடுவே இத்தேசத்தில் இத்தேஹத்தோடே வர்த்திக்கிற நாம் முந்துற முன்னம் பகவதர்ஹகரணராகப் பெற்றோமிறே' என்று, வழி பறிக்குமிடத்துத் தன்கையிற் பொருள்கொண்டு தப்பிப்போனார் உகக்குமாபோலே தமக்கு உண்டான வ்யாவ்ருத்தியை அநுஸந்தித்து ஸ்வலாபத்தைப் பேசி ப்ரீதியோடே தலைக்கட்டுகிறார். *

ஈடு ;—அவ ;—முதற்பாட்டில் க்ஷுத்ர விஷயங்களைக் கவிபாடுகை உங்களுக்கு ஹிதமல்லவென்று உபதேசிக்கையிலே ப்ரவ்ருத்தரானவர், அவர்களுக்கு ருசிபிறக்கைக்காக, நானிருக்கிறபடி கண்டீரோளேயென்று தம்முடைய மதத்தை அருளிச்செய்கிறார்.

(க) தி - மொ - சு - உ - ரு.

சொன்னால்விரோதமிது ஆகிலும்சொல்லுவன்கேண்மினோ *
என்னாவிலின்கவி யாமொருவர்க்குங் கொடுக்கிலேன் *
தென்னாதெனாவென்று வண்டுமுரல் திருவேங்கடத்து *
என்னானையென்னப்ப னெம்பெருமா னுளனாகவே. (க)

ப ;—முதற்பாட்டில், என்னை ஸ்துதிப்பிக்கைக்காகத் திருமலையிலே ஸந்நிதிபண்ணின உபகாரகனை யொழிய வேறொருவரை ஸ்தோத்ரம்பண்ணே னென்று ஸ்வமதத்தை அருளிச்செய்கிறார்.

இது — (நீங்கள் இதரஸ்தோத்ரம் தவிருகைக்கு உறுப்பான) இந்தஹிதம்
சொன்னால்—சொன்னால்
விரோதம் — (உங்களபிமதத்துக்கு) விரோதம்;
ஆகிலும்—ஆயிருக்கிலும்
சொல்லுவன் —(உங்களநர்த்தம் பொறுக்கமாட்டாமையாலே சொல்லக்கடவேன்;
கேண்மின்—(நீங்கள் செவிதாழ்த்துக்) கேளுங்கள்;
வண்டு—வண்டுகளானவை
தென்னாதெனாவென்று — (மதுபாநப்ரீதியாலே) தென்னா தெனாவென்று
முரல் — (ஆளத்தி வைப்பாரைப்போலே) ஶப்திக்கிற
திருவேங்கடத்து—திருமலையிலே ஸந்நிஹிதனாய்
என் ஆனை—எனக்குக்கவிபாடுகைக்கு விஷயம்போந்து
என் அப்பன்—(கவிக்குப் பரிசிலாகத்) தன்னைத்தரும் உபகாரகனாய்
எம்பெருமான் — ப்ராப்தனான ஸ்வாமியானவன்
உளன் ஆக — (இக்கவிபாட்டாலே) தான் உளனாயிருக்க
என் நாவில்—என் நாவினுடைய ஸத்தைக்கு ப்ரயோஜநமாய்
இன் கவி—(கவிபாட்டுண்கிற ஈஶ்வரனுக்கு) இனிதான கவியை
யான்—(அவனுக்கு அநந்யார்ஹஶேஷபூதனான) நான்
ஒருவர்க்கும்— வேறொருவர்க்கும்
கொடுக்கிலேன் — கொடுக்கஶக்தனல்லேன்.

ஆறு —;(சொன்னால்) இப்படி தம்முடைய ஸர்வகரணங்களும் தனித்தனியே ஸ்வேதரகரணங்களினுடைய வ்ருத்திகளை எம்பெருமான் திறத்திலே ஆசைப்பட்டபடியே பெருமையாலே அத்யந்தம் அவஸந்நரான ஆழ்வார், இந்தசையில் தமக்குத் துணையாகைக்காக, ‘ இந்தலோகத்திலே ஸ்ரீவைஷ்ணவர்கள் உளரோ ?’ என்று பார்த்தவிடத்தில், இந்தலோகமெல்லாம் பகவத்வ்யதிரிக்தவிஷய ப்ரவணமாய் பகவத் பராங்முகமாய் மநுஷ்யாதிகளைக் கவிபாடிக்கொண்டு திரிகிறபடியைக் கண்டார்; கண்டு, தம்முடைய இழவெல்லாம்

மறந்து 'எம்பெருமானுக்கு அர்ஹமான † அருமந்தகரணங்களை அவஸ்துபூத மநுஷ்யாதிகள் பக்கலிலே விநியோகிக்கிறபடி என்ன காண்?'' என்று இன்னாதாய், அவர்களைக் குறித்து, கல்யாணமாய் பகவதநுரூபமான கவிகளை க்ஷுத்ர மநுஷ்யாதிகள் பக்கலிலே விநியோகிக்கலாகாதென்று பார்த்து, 'நிஷேத்யதயாவும் சொல்லுகை ஈடன்று; ஆகிலும், எம்பெருமானுக்கீடான அழகிய கவிகளை இழக்கமாட்டாமையாலே சொல்லுகிறேன் கேளுங்கள்' என்று வைத்து, 'இப்படி பகவத் பராங்முகமான லோகத்திலே நான் எம்பெருமானையல்லது மற்றொருவரைக் கவிபாடுகைக்கு ஈடல்லாத ப்ரக்ருதியாகப் பெற்றேனே' என்றுகொண்டு ஸ்வலாபத்தைப் பேசுகிறார். (க)

ஈடு ;—அவ ;—இரண்டாம்பாட்டு. ஸத்யமுமாய் ஸமக்ரமுமான ஐஶ்வர்யத்தையுடையனாய், ஸ்வரூபரூபகுணங்களால் பூர்ணனுமாய், ப்ராப்தனுமான ஸர்வேஶ்வரனை விட்டு, ஒருசொல்லுக்குப் பாத்தமில்லாத ஐஶ்வர்யமுமாய், அதுதான் நிரூபித்தால் நிலைநில்லாமையாலே அஸத்யமுமாய், அதுதனக்கு ஆஶ்ரயமும் தேடிப் பிடிக்க வேண்டும்படியாயிருக்கிற க்ஷுத்ரரைக் கவிபாடி என்ன ப்ரயோஜநமுண்டு? என்கிறார்.

உளனாகவேயெண்ணித் தன்னையொன்றாகத் தன்செல்வத்தை *
வளனாமதிக்கு மிம்மானிடத்தைக் கவிபாடியென் *
குளனார்கழனிசூழ் கண்ணன் குறுங்குடிமெய்ம்மையே *
உளனாயவெந்தை யெந்தைபெம்மானை யொழியவே. (உ)

ப ;—அநந்தரம், இந்த ஸௌலப்யாதி குணங்களோடே திருக்குறுங்குடியிலே நிற்கிற என் குலநாதனையொழிய மநுஷ்யரைக் கவிபாடி ப்ரயோஜநமென்? என்கிறார்.

குளன் ஆர்—நீர் நிலங்களால் நிறைந்த
கழனி சூழ்—கழனிசூழ்ந்து
கண்—இடமுடைத்தாய்
நல்—நன்றான
குறுங்குடியே—திருக்குறுங் குடியிலே
மெய்ம்மை—பரமார்த்தமான ஸௌலப்யாதிகுணங்களைப்ரகாசிப்பித்துக்கொண்டு
உளன் ஆய—நித்யஸந்நிதி பண்ணின
எந்தையை—உபகாரகனை
எந்தைபெம்மானை—என் குலநாதனை
ஒழிய—ஒழிய
தன்னை — (பகவத் ஜ்ஞாநமில்லாமையாலே அஸத்ஸமனாயிருக்கிற) தன்னை
உளனாகவே—ஸத்தாவானாய்க் கொண்டே

ஒன்றாக—ஒரு வஸ்துவாக
எண்ணி—நினைத்து
தன் செல்வத்தை — தனக் கின்றியே யிருக்கத் தன்னதாக அபிமாநித்த க்ஷுத்ர ஸம்பத்தை
வளவு—அத்யந்த விலக்ஷணமாக
மதிக்கும்—தானே அபிமாநித்திருக்கும்
இ மானிடத்தை—அதிக்ஷுத்ரையான இந்த மநுஷ்யஜாதியை
கவிபாடி என் — கவிபாடி என்ன ப்ரயோஜநமுண்டு?
பரமார்த்தகுண விபூதி விஶிஷ்டனை யொழிய, ஆபிமாநிககுணஸம்பத்தையுடையாரைக் கவிபாடி ப்ரயோஜநமில்லை யென்று கருத்து.

ஆறு ;—(உளனாகவே.) நிரவதிக ஸம்பத்தையுடையனாய், நித்ய நிர்த்தோஷ நிஸ்ஸீம கல்யாணகுண மஹோததியாயிருந்த எம்பெருமானை யொழிய, தன்னையும் ஒரு வஸ்துவாகப் பார்த்துத் தன் ஸம்பத்தையும் ஒரு ஸம்பத்தாக மதித்திருக்கிற இம்மநுஷ்யரைக் கவிபாடி என்ன ப்ரயோஜநமுண்டு? என்றுகொண்டு பூர்வ ப்ரக்ருதத்தை அருளிச்செய்கிறார். (உ)

ஈடு ;—அவ ; — மூன்றாம்பாட்டு. விலக்ஷணனாய் உபகாரகனாயிருக்குமவனை யொழிய, க்ஷுத்ர மநுஷ்யரைக் கவிபாடி என்ன ப்ரயோஜநமுண்டு? என்கிறார்.

ஒழிவொன்றில்லாத பல்லூழிதோறூழி நிலாவ * போம்
வழியைத்தரும் நங்கள் வானவரீசனை நிற்கப்போய் *
கழியமிகநல்ல வான்கவிகொண்டு புலவீர்காள்! *
இழியக்கருதி யோர்மானிடம்பாட லென்னாவதே?. (ந)

ப ;—அநந்தரம், நித்யஸூரிஸேவ்யனான ப்ராப்யபூதனை யொழிய, உங்களுடைய விலக்ஷணமான கவிகளைக்கொண்டு க்ஷுத்ர ஸ்தோத்ரம்பண்ணினால் ஒருநன்மையில்லை யென்கிறார்.

ஒன்று ஒழிவு இல்லாத — ஒருவிச்சேதம் இல்லாதபடி
பல் ஊழிதோறூழி—யாவதாத்ம பாவியான காலமெல்லாம்
நிலாவ—நிலைநின்று அநுபவிக்கும்படி
போம்—செல்லக்கடவதாயுள்ள
வழியை — வழிப்பாடான கைங்கர்யத்தை
தரும்—தரும்
நங்கள் வானவரீசனை—நமக்கு ஶேஷியான நித்யஸூரி ஸேவ்யனை
நிற்க—ஒழிய
போய்—புறம்பேபோய்
கழிய—அதிலோகமாம்படி
மிக நல்ல—மிக்க நன்மையை யுடைத்தான

வான் கவி கொண்டு—சீரிய கவிகளைக்	பாடல்—பாடுகையாலே
புலவீர்காள்—அறிவுடையரான நீங்கள்	என் ஆவது—என்னலாபமுண்டாம்?
இழிய கருதி — (அறிவில்லாதாரைப் போலே அதப்பதிக்க நினைத்து	ஸ்தோதாக்களான உங்களுக்கும் ஸ்துத்யானவர்களுக்கும் ஸ்துதிக்கும் ஒருநன்மையில்லை யென்று கருத்து. (௩)
ஓர் மானிடம்—ஓர் பற்றுசில்லாத மநுஷ்யஜாதியை	

ஆறு ;—(ஒழிவொன்றில்லாத) இப்படி ஸமஸ்த கல்யாண குணாத்மகனான எம்பெருமானை உங்களுடைய கழிய மிக நல்ல வான் கவிகொண்டு பாடப்பெறலாவது; பாடினால் பின்னையும் பெறும் பேறு, அநாக்ராததுஃககந்தமாய் நிரதிசய ஸுகரூபமாய் நித்ய வித்தமான பகவத் கைங்கர்ய லக்ஷண மோக்ஷமாவது; அவஸ்துபூதராய் நிஸ்ஸ்ரீகரான மநுஷ்யரையாவது கவிகளைக்கொண்டு பாடுவது; பாடினால் பின்னைப் போய் அதோகதியிலே விழுவது; ஆனபின்பு, அவனையொழிய இம்மநுஷ்யரை எதுக்காகப் பாடுகிறீர்கள்? என்கிறார் (௩)

ஈடு ;—அவ ;—நாலாம்பாட்டு. கவிபாடினார்க்குத் தன்னோடொத்த வரிசையைக் கொடுக்குமவனைக் கவிபாடுமதொழிய, மந்தாயுஸ்ஸுக்களான க்ஷுத்ரரைக் கவிபாடிப்பெறுவது என்? என்கிறார்.

என்னாவதெத்தனை நாளைக்குப்போதும் புலவீர்காள்! *
மன்னா மனிசரைப் பாடிப்படைக்கும் பெரும்பொருள் *
மின்னார்மணிமுடி விண்ணவர்தாதையைப்பாடினால் *
தன்னாகவேகொண்டு சன்மஞ்செய்யாமையுங்கொள்ளுமே. (௪)

ப ;—அநந்தரம், ஸர்வாதிகனானவனை யொழிய அஸ்திரரான மநுஷ்யர்களைக் கவிபாடி என்ன ப்ரயோஜநமுண்டு? என்கிறார்.

புலவீர்காள்—(ஸப்தார்த்தங்களில் வாசியறியும்) புலவீர்காள்!	படைக்கும்—பெறாப்பேறாகப் படைக்கும்
மன்னா—(நீங்கள் பாடிச்செல்லுந்தனையும்) நிலைநில்லாத	பெரும் பொருள் — (உங்கள் பாரிப்பாலே) பெரிய அர்த்தமானது
மனிசரை—மநுஷ்யர்களை	என் ஆவது—எது உண்டாம்? (உண்டானாலும்)
பாடி—கவிபாடி	

எத்தனை நாளைக்கு போதும்—எத்தனை நாளைக்கு விநியோகார்ஹமாம்?
மின் ஆர்—பேரொளியையுடைத்தான
மணிமுடி — ரத்நாபிஷேகத்தையுடையனாய்
விண்ணவர் தாதையை—பரமபதவாஸிகளுக்கு ஸத்தாஹேதுபூதனை ஸர்வாதிகனை
பாடினால்—பாடினால்
தன்னுகவே கொண்டு—தனக்கே அநந்யார்ஹமாக நினைத்து
சன்மம் செய்யாமையும்—இதரஸ்தோத்ர ஹேதுவான ஜந்மம் கழியும்படியும்
கொள்ளும்—அங்கீகரிக்கும்.
தன்னுகவே கொண்டென்று — ஸாம்யாபத்தியைப் பண்ணிக்கொடுக்குமென்றுமாம். (க)

ஆறு ;—(என்னுவது.) மநுஷ்யரைப்பாடிலும் சில ப்ரயோஜநங்கள் ஸித்திக்கக் காணு நின்றேமிறே என்னில், - அஸ்திரரான மநுஷ்யரைப் பாடி என்ன ப்ரயோஜநம் பெறுவது? பெற்றால்தான் எத்தனைநாளைக்குப் போதும் புலவீர்காள்! ஆனபின்பு, மின்னூர் மணிமுடி விண்ணவர் தாதையைப் பாடுங்கள்; பாடினால் வேறொரு ப்ரயோஜநமும் வேணுமோ? ஸ்வபோஷைக ரதிகளாக்கி ஸ்வவிஷய கைங்கர்ய விரோதியான ஸம்ஸாரத்தையும் போக்கும் என்கிறார். (ச)

ஈடு ;—அவ ;—அஞ்சாம்பாட்டு. உபகாரகருமன்றிக்கே, கவிபாடுகிறவர்களுக்கு அவத்யமாம்படி ஹேயருமா யிருக்கிறவர்களைக் கவிபாடாதே, ஸமஸ்தகல்யாண குணாத்மகனுமாய் ஸர்வாபேக்ஷித ப்ரதனுமான ஸர்வேஸ்வரனைக் கவிபாட வாருங்கள் என்கிறார்.

கொள்ளும்பயனில்லை குப்பைகிளர்த்தன்ன செல்வத்தை *
வள்ளல்புகழ்ந்து நும்வாய்மையிழக்கும் புலவீர்காள்! *
கொள்ளக்குறைவிலன் வேண்டிற்றெல்லாந் தரும்கோதில் * என்
வள்ளல்மணிவண்ணன் தன்னைக்கவிசொல்ல வம்மினே. (ரு)

ப ;—அநந்தரம், நிஷ்ப்ரயோஜநமான இதரஸ்தோத்ரத்தைத் தவிர்ந்து ஸர்வபலப்ரதனை மஹோதாரனைக் கவிபாட வாருங்கோள் என்கிறார்.

கொள்ளும் பயன் — கொள்ளலாவது ஒரு ப்ரயோஜநம்
இல்லை—இன்றியே
குப்பை கிளர்த்து அன்ன — குப்பையைக் கிளறினாற்போலே தோஷமே தோற்றும்படியான

செல்வத்தை — ஸம்பத்தை யுடைய க்ஷுத்ரஜாதியை
வள்ளல் — மஹோதாரனையாக
புகழ்ந்து — புகழ்ந்து
நும்வாய்மை — உங்கள் ஸத்யவாதித்வ மாகிற வாக்மித்வத்தை
இழக்கும் — இழக்கிற
புலவீர்காள் — புலவீர்காள்!
கொள்ள — (கவிபாடுகைக்கு உள்ளுறையாகக்) கொள்ளுகைக்கும் (கவிக்கு ப்ரயோஜநக்) கொள்ளுகைக்கும்
குறைவிலன் — குறைவற்ற பூர்ணனாய்
வேண்டிற்று எல்லாம் — நாம் வேண்டினவற்றையெல்லாம்
தரும் — தருமிடத்தில்
கோது இல் — (தாரதம்யம் பார்த்தல், ப்ரத்யுபகாரம் பார்த்தல், கொடுத்ததை நினைத்தல் செய்யும்) குற்றம் இல்லாதவனாய் (இதற்கு உதாஹரணமென்னலாம்படி)
என்வள்ளல் — எனக்குத் தன்னை யுபகரித்தமஹோதாரனாய், (உபகாரமில்லையேயாகிலும் விடவொண்ணுதபடி)
மணி வண்ணன் தன்னை — நீலரத்நம் போலே ஸ்லாக்யமான வடிவையுடையவனை
கவிசொல்ல — கவிசொல்லும்படி
வம்மின் — வாருங்கோள். (ஆ)

ஆறு ;—(கொள்ளும்.) ப்ரயோஜந ஸாத்யமாய் ஹேய விஷயங்களைக் கவிபாடி உங்களுடைய அழகிய கவிகளை இழவாதே, தன்னுடைய நிரவதிக நித்ய நிர்த்தோஷ கல்யாண குணங்களாலே உங்களுடைய கவிகளை க்ருதார்த்தமாக்க வல்லனாய். உங்களுக்கு வேண்டிற்றெல்லாந்தரும் பரமோதாரனாய், தந்தாலும் ஒன்றும் செய்யாதானாய் 'இவர்களுக்கு என்செய்வோம்?' என்றிருக்கும் ஸ்வபாவனாய், ஆஸ்ரிதஸுலபனாயிருந்த எம்பெருமானைக் கவிசொல்ல வல்லீர்களோ வென்கிறார். . (ஆ)

ஏழ் ;—அ: ;—ஆறு டபாட்டு. ஜீவநார்த்தமாக மநுஷ்யாதிகளைக் கவிபாடுகிறோமென்ன, 'க்ஷுத்ரரைக் கவிபாடி ஜீவிப்பதிலும் உடம்புநோவப் பணிசெய்து ஜீவிக்கை நன்று' என்கிறார்.

வம்மின்புலவீர் ! நும்மெய்வருத்திக்கை செய்துய்ம்மினோ *
இம்மன்னுலகினில் செல்வரிப்போதில்லை நோக்கினோம் *
நும்மின்கவிகொண்டு நுந்நுமிட்டாதெய்வ மேத்தினல் *
செம்மின்சுடர்முடி என்திருமாலுக்குச் சேருமே. (எ)

கல்பரான மநுஷ்யாதிகளை, மாரியனையகை மால்வரையொக்கும் திண்டோளென்று பச்சைப் பசும்பொய்கள் பேசேன் என்றுகொண்டு ஸ்வலாபத்தைப் பேசுகிறார். (௭)

ஈடு ;—அவ ;—எட்டாம்பாட்டு. 'நான் பிறரைக் கவிபாடுவேனென்னிலும், என் வாக்கானது அவனை யொழியப் பாடாது' என்கிறார்.

வேயின்மலி புரைதோளி பின்னைக்குமணாளனை *
ஆயபெரும்புக ழெல்லையிலாதன பாடிப்போய்க் *
காயங்கழித்து அவன்தாளிணைக்கீழ்ப் புகுங்காதலன் *
மாயமனிசரை என்சொல்லவல்லே னென்வாய்கொண்டே. (௮)

ப ;—அநந்தரம், பரமப்ராப்யபூதனான க்ருஷ்ணனைக் கவிபாடி அவனைப் பெற ஆசைப்பட்டிருக்கிற நான், க்ஷுத்ரரைக் கவிபாடவல்லேனோ? என்கிறார்.

வேயின் — (பசுமைக்கும் திரட்சிக்கும் செவ்வைக்கும்) வேயொப்பாமிடத்தில்
மலி—அதிலும்மிகைத்து
புரை—விளங்குவதான
தோளி—தோளையுடைய
பின்னைக்கு—பின்னைக்கு
மணாளனை — நித்யாபிமதனான க்ருஷ்ணனை
ஆய—ஸ்வரூபாநுபந்தியாய்
பெரும்—தனித்தனி அபரிச்சிந்நமாய்
எல்லையிலாதன—அஸங்க்யாதமான
புகழ்—குணங்களை
பாடி—பாடி
போய்—நெடுங்காலம்நடந்து
காயம்—சரீரத்தை
கழித்து—கழித்து
அவன் தாளிணைக்கீழ் — (பரமப்ராப்யபூதனான) அவனுடைய திருவடிகளிலே
புகும்—ஒதுங்குகையிலே
காதலன்—ஆசையையுடைய நான்
மாயம் மனிசரை—ப்ராக்ருதிவஶ்யரான மநுஷ்யரை
என்வாய்கொண்டு — (பகவத் ஸ்துதி யோக்யமான) என்வாக்கைக்கொண்டு
என் சொல்ல வல்லேன் — எத்தைச் சொல்லவல்லேன்?
போயென்றது — காயங்கழித்து ஒரு தேசவிசேஷத்தேறப் போயென்றுமாம்.

ஆறு ;—(வேயின்.) நிரஸ்த ஸமஸ்த ப்ரதிபந்தகனாய்க்கொண்டு வேயின்மலி புரைதோளி பின்னைக்கு மணாளனைக் கல்யாண நிஸ்ஸீம நிரவதிக குணங்களைப் பாடி அவன் தாளிணைக்கீழ்ப் புகுங் காதலை

யுடையவனை நான் அவனையொழிய 'இந்த ப்ராக்ருதிவஸ்யரான மநுஷ்யரைக் கவிபாடுவேன்' என்றால்தான் என்வாய் எனக்கு விதேயமோ? என்கிறார். (அ)

ஈடு ;—அவ ;—ஒன்பதாம்பாட்டு. பரமோதாரனானவன் என் கவிக்குத் தன்னை விஷயமாக்கி வைத்தபின்பு இதர ஸ்தோத்ரத்துக்கு அதிகாரியல்லேனென்கிறார்.

வாய்கொண்டு மானிடம்பாடவந்த கவியேனல்லேன் *
ஆய்கொண்ட சீர்வள்ளலாழிப்பிரானெனக்கேயுளன் *
சாய்கொண்ட விம்மையும்சாதித்து வானவர்நாட்டையும்
நீகண்டுகொள்ளென்று * வீடுந்தரும் நின்றுநின்றே. (௯)

ப ;—அநந்தரம், பரமபுருஷார்த்தப்ரதனானவன்தானே விஷயமாயிருக்க, இதரஸ்தோத்ரத்துக்கு நான் அதிக்ருதனல்லேன் என்கிறார்.

வாய்கொண்டு—(ப்ராப்தவிஷயஸ்தோத்ரகரணமான) வாகிந்த்ரியத்தைக் கொண்டு
மானிடம் — (அப்ராப்த விஷயமான) மநுஷ்யரை
பாட—பாடுகைக்கு
வந்த—வந்த
கவியேன் அல்லேன் — கவியானவன் அல்லேன் ;
ஆய்—(வேதாந்தங்களிலே) மீமாம்ஸிக்கப்பட்ட
சீர்—ஆநந்தாதிகுணங்களை
கொண்ட—உடைய
வள்ளல்—மஹோதாரனாய்
ஆழி—(கவிபாடுவார்நெஞ்சு தன் வசத்திலேயாம்படி நியமித்துக்கொடுக்கும்) திருவாழியையுடைய
பிரான்—மஹோபகாரகன்
எனக்கே உளன்—எனக்கே அஸாதாரண விஷயமாயுளன் ; (அவன்தான்)
சாய்கொண்ட—அதிஶயிதௌஜ்ஜ்வல்யத்தையுடைத்தான
இம்மையும்—ஐஹிகமான அர்ச்சாவதாராநுபவத்தையும்
சாதித்து—உண்டாக்கித்தந்து
வானவர் நாட்டையும்—நித்யஸூரிகளதான பரவிபூதியையும், (ஸேனை முதலியாரைப்போலே)
நீ கண்டுகொள் என்று—நீ ஆராய்ந்து நிர்வஹியென்று
வீடும் — (ஸ்வகைங்கர்ய ஜநிதமான) மோக்ஷாநந்தத்தையும்
நின்று நின்று — க்ரமத்திலே நின்று நின்று
தரும்—கொடுக்கும்.
சாய்கொண்ட என்றுதொடங்கி—'உஜ்ஜ்வலமான ஐஹிகைஶ்வர்யத்தையும் ஸ்வர்க்காதி லோகத்தையும் மோக்ஷத்தையும்தரும்' என்பாருமுளர்.

ஆறு ; —(வாய்கொண்டு.) மநுஷ்யரைக் கவிபாடுகைக்கு ஈடல்லாத ப்ரக்ருதியாய்ப் பிறக்கப்பெற்றேன் ; ஸமஸ்த கல்யாணகுணோததியாய் ஸங்கசக்ரதரனாயிருந்த எம்பெருமான், தன்னுடைய பரமௌதார்யத்தாலே என்னுடைய கவிகளுக்குத் தன்னை விஷயமாகத் தந்தருளப்பெற்றேன் ; இன்னமும் இப்படி இஹலோகத்திலே தன்னை எனக்கு அநுபவிக்கத் தந்தருளி, பின்னை "ஸர்வகாலமும் திருநாட்டையும் கைக்கொள்" என்று அத்திருநாட்டையும் எனக்குத் தந்தருளு மென்கிறார். (கூ)

ஈடு ;—அவ ;—பத்தாம்பாட்டு. ஸர்வேஸ்வரன் கவியான எனக்கு இதர ஸ்தோத்ரகரணம் அநநுரூபமன்று என்கிறார்.

நின்றுநின்று பலநாளுய்க்குமிவ்வுடல் நீங்கிப்போய்ச் *
சென்றுசென் றாகிலுங்கண்டுசன்மங் கழிப்பானெண்ணி *
ஒன்றியொன்றி யுலகம்படைத்தான் கவியாயினேற்கு *
என்றுமென்று மினிமற்றொருவர் கவியேற்குமே?. (கo)

ப ;—அநந்தரம், ஸ்துத்யர்த்தமான கரணகளேபரப்ரதனான அவனுக்குக் கவியான எனக்கு வேறொருவரைக் கவிபாடுகை அநநுரூபமன்று என்கிறார்.

பலநாள்—காலமுள்ளதனையும்
நின்றுநின்று—இடைவிடாதே நின்று
உய்க்கும்—(தன்வஸத்திலேசேதநனை) ஆக்கும்
இவ்வுடல்—இஸ்ஸரீரத்தை
நீங்கிப் போய்—விட்டுப்போய்
சென்று சென்றாகிலும்—நெடுங்காலங் கழித்துச் சென்றாகிலும்
கண்டு — (இச்சேதநன் தன்னை) அபரோக்ஷித்து
சன்மம் கழிப்பான்—ஜந்மத்தைக் கழிக்கைக்காக
எண்ணி — திருவுள்ளம்பற்றி
ஒன்றியொன்றி — ஸ்ருஷ்டிதோறும் நெஞ்சு பொருந்திப் பொருந்தி
உலகம் படைத்தான்—லோகத்தை ஸ்ருஷ்டித்தவனுடைய
கவியாயினேற்கு—கவியான எனக்கு
இனி— இனி
என்றுமென்றும்—காலமுள்ளதனையும்
மற்றொருவர் கவி—மற்றொருவரைக் கவிபாடுகை
ஏற்குமே—தகுதியோ ?

ஆறு :—(நின்று.) என்றேனுமாக ஒருகாலம் நம்மையறிந்து, நின்றுநின்று பலநாள் இஸ்ஸம்ஸாரத்திலே இவ்வாத்மாக்களை ப்ரவேஸிப்பிக்கும் இவ்வுடலத்தை நீங்கிப்போய் இவ்வாத்மாக்களை

ஸம்ஸாரத்தைக் கழிக்கவேணுமென்று பார்த்தருளி, ததர்த்தமாக அவஹிதனைக்கொண்டு ஜகத்ஸ்ருஷ்டி பண்ணியருளின பரம காருணிகனுடைய கவியான எனக்கு மற்றொருவரைக் கவிபாடப் போருமோ? என்கிறார். (கo)

ஈடு;—நிகமத்தில், இத்திருவாய்மொழியின் இயல்மாத்ரத்தை அப்யஸித்தவர்களுக்கு, பிறரைக் கவிபாட யோக்யமான † ஜந்மம் இல்லை யென்கிறார்

ஏற்கும்பெரும்புகழ் வானவரீசன் கண்ணன்தனக்கு *
ஏற்கும்பெரும்புகழ் வண்குருகூர்ச் சடகோபன்சொல் *
ஏற்கும்பெரும்புக ழாயிரத்துள் ளிவையுமோர்பத்து *
ஏற்கும்பெரும்புகழ் சொல்லவல்லார்க்கில்லை சன்மமே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ப;—அநந்தரம், இத்திருவாய்மொழி சொல்லவல்லார்க்கு ஜந்மமில்லை யென்று பலத்தை அருளிச்செய்கிறார்.

ஏற்கும் — (பாத்வ ஸௌலப்யங்களுக்குத்) தகுதியான
பெரும்புகழ்—குணப்ரதையை யுடையனாய்
வானவர் ஈசன் — நித்ய ஸூரிகளுக்கு நிர்வாஹகனென மேன்மையோடே
கண்ணன் தனக்கு — (ஸௌலப்யனாய் அவதரித்த) க்ருஷ்ணனுக்கு
ஏற்கும் — (ஸ்தோதாக்களாகைக்கு) அநுரூபமான
பெரும்புகழ் — ஜ்ஞாநாதிகுண ப்ரதையையுடையராய்
வண்குருகூர் சடகோபன் — அழகிய திருநகரிக்கு நிர்வாஹகரான ஆழ்வார்
சொல்—அருளிச்செய்த
ஏற்கும்—(பகவத்குணாதி ப்ரதிபாதநத்துக்கு) அநுரூபமான
பெரும்புகழ் — லக்ஷண ப்ரதையையுடைத்தாயிருக்கிற
ஆயிரத்துள்—ஆயிரந் திருவாய்மொழிக்குள்ளே
ஏற்கும்—(இதரஸ்தோத்ரத்தைத்தவிர்த்து பகவத்ஸ்தோத்ரத்தை ப்ரதிபாதிக்கையாகிற) ஸ்வரூபாநுரூபமான
பெரும்புகழ—குணப்ரதையையுடைத்தாய்க்கொண்டு
ஓர்—அத்விதீயமான
இவைபத்தும்—இவைபத்தையும்
சொல்ல வல்லார்க்கு – சொல்ல வல்லார்க்கு
சன்மம்—(இதரஸ்துதிஹேதுவான) ஜந்மம்
இல்லை—இல்லை.
இது—கலித்துறை. (கக)

---

† (பா) நீச ஜந்மம்.

ஆறு ;—(ஏற்கும்.) ஸ்வோசிதமான கல்யாணகுணங்களை யுடையனான வானவரீசன் கண்ணன் தனக்கு ஏற்கும் பெரும்புகழான வண்குருகூர்ச் சடகோபன் சொல்லான தன்மைக்கு ஸத்ருசமான அர்த்தவத்வ மதுரத்வாதி குணங்களையுடையவான ஆயிரத்துள் ஏற்கும் பெரும்புகழையுடைய இப்பத்தைச் சொல்லவல்லார்க்கு இல்லை சன்மம் என்கிறார். (௧௧)

மூன்றும்பத்து

ஒன்பதாந்திருவாய்மொழி வ்யாக்யாநங்கள் முற்றுபெற்றன.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

மூன்றும்பத்து.

பத்தாந்திருவாய்மொழி — சன்மம்பலபல ப்ரவேசம்.

ஆறு ;—(சன்மம்பலபல.) எம்பெருமானையொழிய மற்றொரு வரைக் கவிபாடுகைக்கு ஈடல்லாத ப்ரக்ருதியாகப் பெற்ற பேற்றை அநுஸந்தித்துச் சென்ற ப்ரீதி - கீழ் ; இனிமேல் எம்பெருமானைக் கவிபாடப்பெற்ற பேற்றை அநுஸந்தித்துச் செல்லுகிற ப்ரீதி.

ப ;—பத்தாந்திருவாய்மொழியில், கீழ்- இதரஸ்தோத்ரத்தினுடைய ஹேயத்வாதிகளையும் பகவத்ஸ்தோத்ரத்தினுடைய வைலக்ஷண்யத்தையும் உபதேசித்து, இப்படி விலக்ஷணமான பகவத்விஷயத்தை நாம் ஸர்வப்ரகாரத்தாலும் அநுபவிக்கப் பெறுவதே யென்று அநுப்ரீதராய், அநுபாவ்யனான ஸர்வேஶ்வரனுடைய அவதாரபலமான விரோதிநிரஸநத்தையும், அவதாரத்துக்கு மூலமான க்ஷீரார்ணவஶாயித்வத்தையும், அவதிகாதிஶயையான ஸர்வவித போக்யதையையும் போகப்ரதிஸம்பந்தி ஸமஸ்தவிரோதி நிவர்த்தகத்வத்தையும், ஆர்த்திகளுக்கு அர்த்திதார்த்த காரித்வத்தையும், அவதாரதஶையிலும் அதிமாநுஷ சேஷ்டிதத்தையும், அவதார நிர்வாஹ்யமான லீலாவிபூதியோகத்தையும், இந்த நிலையிலும் பாரவஶ்யசகமான லக்ஷ்மீபதித்வத்தையும், ஸர்வப்ரகாரரக்ஷகத்வத்தையும், ஸர்வாந்தராத்மத்வத்தையும் அநுஸந்தித்து ஏவம்விதனான ஸர்வேஶ்வரனை ஸர்வப்ரகாராநுபவம் பண்ணப்பெற்ற எனக்கு ஒரு வைகல்யம் விச்சேதம் மநப்பீடை மிறுக்கு க்லேசம் அப்ரீதி அலமாப்பு து:கம் அவஸாதம் விநாஶம் என்று சொல்லப்பட்ட ஸமஸ்த துரிதங்களும் இல்லை யென்று அநுப்ரீதராய், இப்பத்துக்குத் தாத்பர்யமான ஸ்வரூபத்தினுடைய தச்சேஷாநுபவத்வத்தையும் உபபாதித்து முடிக்கிறார். *

ஈடு ;—கீழில் திருவாய்மொழியிலே பிறரைக் கவிபாடுகிறவர்களை பகவத் விஷயத்தில் மீட்கப்பார்த்து, அவர்கள் மீளாதொழிய, இவர்களைப்போலே யாகாதே நான் முந்துறமுன்னம் இதரஸ்தோத்ரம்பண்ணுகைக்கு அநர்ஹனாகப் பெற்றேனென்றார் ; இதரஸ்தோத்ரம்பண்ண அநர்ஹனான மாத்ரமேயோ ? பகவத்ஸ்தோத்ரத்துக்கு அர்ஹனாகவும் பெற்றேனென்கிறார் - இத்திருவாய்மொழியில்.

* முடியானே யில்-தாம் அவனை அநுபவிக்கக் கோலி, அது பெருமையாலே தாமும் தம்முடைய கரணக்ராமமும் பெருவிடாய்ப்பட்டுக் கூப்பிட்டார்; தாம் இவ்விஷயத்திலே கூப்பிடுகிறப் போலே ஸம்ஸாரிகள் இதர விஷயங்களைப்பற்றிக் கூப்பிடுகிறபடியை அநுஸந்தித்து, அவர்களநர்த்தத்தைக் கண்டவாறே தக்கு * முடியானே யில் பிறந்த இழவுதானே பேறாய்த் தோற்றிற்று; அதுக்கு மேலே ஆஸ்ரிதார்த்தமாகக் கர்ம வஸ்யரைப்போலே ஸம்ஸாரிகள் நடுவே அவர்களோடொத்த வடிவைக்கொண்டு அவதரித்த திவ்யாவதாரங்களையும் அவதாரஸித்தமான திவ்ய சேஷ்டிதங்களையும் வடிவழகையும் பூஷணங்கள் சேர்ந்த சேர்த்தியையும் திவ்யாயுதங்கள் சேர்ந்த சேர்த்தியையும் அகடிதகடநா ஸாமர்த்யத்தையும் இவற்றையெல்லாம் அநுபவிக்கப் பெற்றேன்; எனக்கு ஒரு குறைகளுமில்லை யென்கிறார். *

ஈடு ;—முதற்பாட்டில் - இத்திருவாய்மொழியிற் சொல்லுகிற அர்த்தத்தை ஸங்க்ரஹேண அருளிச்செய்கிறார்; திவ்யாயுதங்களோடே அவன்வந்து அவதரிக்கும்படியை அநுஸந்திக்கப்பெற்ற எனக்கு ஒரு குறைகளும் இல்லையென்கிறார்; ஆஸ்ரிதரக்ஷணார்த்தமாக அநேகாவதாரங்களைப்பண்ணி அவர்கள் விரோதிகளை நிரஸியாநின்றுள்ள எம்பெருமானுடைய கல்யாண குணங்களைப் புகழப்பெற்ற எனக்கு ஒருகுறையில்லை யென்கிறார்

சன்மம்பலபல செய்துவெளிப்பட்டுச் சங்கொடுசக்கரம்வில் *
ஒண்மையுடைய வுலக்கையொள்வாள் தண்டு கொண்டுபுள்ளூர்ந்து *
வன்மையுடைய வரக்கரசுரரைமாளப் படைபொருத * [உலகில்
நன்மையுடையவன் சீர்பரவப்பெற்ற நானோர்குறையிலனே. (க)

ப ;—முதற்பாட்டில், அநேகாவதாரமுகத்தாலே ஆஸ்ரிதவிரோதி நிரஸநம்பண்ணினவன் குணகணங்களை ஸ்துதிக்கப்பெற்ற நான் ஒருகுறை யுடையேனல்லேன் என்கிறார்.

(க) "அஜாயமாநஃ—அஜாயமாந" என்கிறபடியே அகர்மவஸ்யனாய் வைத்து)
பல—தேவாதிஜாதிபேதத்தையும்
பபல— ஓரொன்றில் அவாந்தரபேதத்தையுமுடைத்தான

சன்மம்—ஜந்மவிசேஷங்களை
செய்து — (ஸங்கல்பமாத்ரத்தாலன்றியே இதர ஸஜாதீயனாய்க்கொண்டு)பண்ணி
வெளிப்பட்டு—(அதீந்த்ரியமான விக்ரஹம்ஸம்ஸாரிகள்கண்

(க) யஜு-ந-அஷ்டக.

ணுக்கு விஷயமாம்படி)ப்ராதுர்ப்பவித்து (அவதார ப்ரயோஜநமான ஸாதுபரித்ராண துஷ்க்ருத்விநாஸத்துக்கு உறுப்பாயுள்ள)
சங்கொடு சக்கரம்—(தன்னில்தான்பிரியாத) ஸங்கசக்ரங்கள்
வில்—ஸ்ரீசார்ங்கம்
ஒண்மையுடைய உலக்கை—விரோதிகளைபக்நாக்கும்முஸலாயுதம்
ஒள் வாள் — எதிரிகளை யழிக்குமிடத்தில் கைவிடாத நந்தகம்
தண்டு—கதை (ஆகிற இவற்றை)
கொண்டு—உபகாரணமாகக்கொண்டு
புள்—பெரியதிருவடியை
ஊர்ந்து—நடத்தி
உலகில்—(தனக்கு ரக்ஷணீயமான) லோகத்தில்
வன்மை உடைய — (இவ்வழுகுகண்டு ஈடுபடாத) வன்மையை யுடையரான
அரக்கரை—ராக்ஷஸரையும்
அசுரரை—அஸுரர்களையும்
மாள—மாண்டுபோம்படியாக
படை பொருத — எதிரெதிரே படைவகுத்துப் பொருத
நன்மை—செவ்வையாகிற நன்மையை
உடையவன்—உடையவனுடைய
சீர்—ஸௌர்யவீர்ய பராக்ரமங்களையும் ஆஸ்ரித விஷயத்தில் ஸ்வாமித்வ வாத்ஸல்யங்களையும்
பரவப்பெற்ற—பாக்கப்பேசி ஸ்துதிக்கப்பெற்ற
நான்—நான்
ஓர் குறைவு இலன்—(தேஸாந்தரத்திலும்காலாந்தரத்திலும் தேஹாந்தரத்திலும் பகவத் விஷயத்தில் இன்ன அம்ஸம் அநுபவிக்கப்பெற்றிலோமென்று) ஒருகுறையுடையேனல்லேன்.
குறைவு—வைகல்யம். (௧)

ஆறு ;—அஸங்க்யேய திவ்யாவதாரங்களைப்பண்ணி ஸகலமநுஜநயந விஷயதாங்கதனுய் ஸங்கசக்ர ஸார்ங்க முஸல கட்காதி திவ்யாயுததரனுய்க் கொண்டு இந்தலோகத்திலே அதிபல பராக்ரமரான அஸுரராக்ஷஸரை ஸஸைந்யமாக நிரஸித்த மஹாகுணத்தையுடையனுனவனுடைய அந்தக்குணங்களை இப்படி வாழ்த்தப்பெற்ற எனக்கு இனி என்னகுறையுண்டு என்கிறார். (௧)

ஈடு ;—அவ ;—இரண்டாம்பாட்டு. முதற்பாட்டில் திருவவதாரங்களைச் சொன்னார் ; இதில் திருவவதார கந்தமாகத் திருப்பாற்கடலிலே கண்வளர்ந்து, அங்குநின்றும் ஸ்ரீவஸுதேவ குமாரனுய் வந்து திருவவதாரம்பண்ணி ஆஸ்ரிதவிரோதிகளை அழியச்செய்த

க்ருஷ்ணனுடைய புகழைப் பேசப்பெற்ற எனக்கு ஒருதட்டில்லை யென்கிறார்.

குறைவில்தடங்கடல்கோளரவேறித் தன்கோலச்செந்தாமரைக்கண் *
உறைபவன்போலவோர்போகுபுணர்ந்தஒளிமணிவண்ணன்கண்ணன்
கறையணிமூக்குடைப்புள்ளைக்கடாவி அசுரரைக்காய்ந்தவம்மான் *
நிறைபுகழேத்தியும்பாடியுமாடியும் யானொருமுட்டிலனே. (௨)

ப;—அநந்தரம், இவ்விரோதி நிரஸநார்த்தமான அவதாரத்துக்கு மூலமான க்ஷீரார்ணவஶாயியினுடைய ரக்ஷணார்த்த ப்ரவ்ருத்தியால் வந்த புகழை ப்ரீதிபூர்வகமாக அநுபவிக்கப்பெற்ற நான் ஒரு விச்சேத முடையேனல்லே னென்கிறார்.

குறைவு இல்—தன்னுடையஸம்ஶ்லேஷத்தாலே பரிபூர்ணமாய்
தடம் கடல்—(கண்வளருகைக்கு) இடமுடைத்தான கடலிலே
கோள் அரவு—பெருமிடுக்கனான திருவநந்தாழ்வான்மேல்
ஏறி—ஏறி
தன் கோலம்—தன் ஐஶ்வர்யஸூசகமான அழகை யுடைத்தாய்
செந்தாமரைக்கண்ணுறைபவன் போல—சிவந்த தாமரைபோலேயிருக்கிற திருக்கண்கள் மலரும்படி உறங்குவான்போலே
ஓர் யோகு புணர்ந்த—அத்விதீயமான திவ்யாத்மஸ்வரூபாநுஸந்தாநத்திலும் ஜகத்ரக்ஷண சிந்தையிலும் பொருந்தி
மணி — தகட்டிலழுத்தின மாணிக்கம் போலே
ஒளி—பேரொளியை யுடைத்தான
வண்ணன்—வடிவை யுடையனாய்
கண்ணன்—(அக்கிடையைவிட்டு (க) "க்ஷீரோதஸாகரம் ... ஆகதோமதுராம்புரீம்" என்று)க்ருஷ்ணனாய் அவதரித்து
கறை அணி — (அண்டபக்ஷமாவதற்கு முன்னே உடைக்கையாலே அக்ரத்திலே) கருத்தலாகிற அடையாளத்தை ஆபரணமாகவுடைத்தான
மூக்குடை—திருமூக்கையுடைய
புள்ளை —பெரியதிருவடியை
கடாவி—நடத்தி
அசுரரைக் காய்ந்த—அஸுரரை ஸ்வப்ரதாபத்தாலே நசிப்பித்த
அம்மான்—ஸர்வாதிகனுடைய
நிறை புகழ்—பரிபூர்ணமான விஜயப்ரதையை
ஏத்தியும்—(ப்ரீதியுக்தனாய்க்கொண்டு) ஸ்தோத்ரம் பண்ணியும்

(க) ஹரிவம்ஶம் - ௧௧௩ - ௨௨.

பாடியும்—இசையிலே வைத்துப் பாடியும்
ஆடியும் — (ஹர்ஷத்தாலே) ந்ருத்தம் பண்ணியும் வர்த்திக்கிற
யான்—நான்
ஒரு முட்டு இலன் — ஒரு விச்சேதம் உடையேனல்லேன்.
முட்டு—விலக்கு
கறையணிமூக்கென்று — விரோதிகளைத்துண்டிக்கையாலே கறையேறின மூக்கென்றுமாம்.
கோள்—மிடுக்கு; ஒளியுமாம். (உ)

ஆறு;—(குறைவில்) இப்படி எம்பெருமானுடைய திவ்யாவதார திவ்ய சேஷ்டிதங்களைத் திரள அநுபவித்து, பின்னை அவற்றைத் தனித்தனியே அநுபவிக்கிறார். தன்னுள்ளே எம்பெருமான் கண்வளர்ந்தருளுகையாலே குறைவற்று அவாப்த காமயான தடங்கடலிலே பணமணி வ்ராத மயூகமண்டல ப்ரகாசமாநோதர திவ்ய தாமனுயிருந்த திருவநந்தாழ்வான்மேலே ஏறியருளித் தத்ஸம்ஸ்பர்சஜநித நிரதிசயஸுகாநுபவ நிரதனுயிருந்து, ஆஸ்ரிதபரித்ராணார்த்தமாக வஸுதேவக்ருஹே அவதீர்ணனுய், ஹேயப்ரத்யநீகனுய், கறையணி மூக்குடைப் புள்ளைக் கடாவி அசுரரைக்காய்ந்த அம்மான் நிறைபுகழ்களை நிரஸ்த ஸமஸ்த ப்ரதிபந்தகனுய்க்கொண்டு ஏத்தியும் பாடியும் ஆடியும் அநுபவிக்கப்பெற்றேனென்கிறார்.

ஈடு;—அவ;—மூன்றாம்பாட்டு. ஸர்வேஶ்வரனுடைய போக்யதாநுஸந்தாந ப்ரீதிபலாத்காரத்தாலே அவனுக்கு அடிமை செய்கையிலே ப்ரவ்ருத்தனுன எனக்கு, க்ஷுத்ரவிஷய ப்ராவண்யத்தால் வரும் ஹ்ருதயதுக்கம் இல்லையென்கிறார்.

முட்டில்பல்போகத் தொருதனிநாயகன் மூவுலகுக்குரிய *
கட்டியைத்தேனையமுதை நன்பாலைக்கனியைக்கரும்புதன்னை *
மட்டவிழ்தண்ணந்துழாய் முடியானைவணங்கிஅவன்திறத்துப்
பட்டபின்னை * இறையாகிலும் யானென்மனத்துப்பரிவிலனே. (௩)

ப;—அநந்தரம், நிரவதிக ஸர்வப்ரகார போக்யதையை அநுபவித்த நான் ஒரு மநःபீடையையுடையேனல்லேன் என்கிறார்.

மூவுலகுக்கு உரிய — த்ரிவித சேதநா சேதநங்களுக்கு அஸாதாரணபூதனாய்
முட்டு இல்—அவிச்சிந்நமாய்
பல்போகம் — பஹுவிதமான போக ஸம்ருத்தியை யுடைய
ஒரு—அத்வி தீயனான
தனிநாயகன் — ப்ரதாநநாயகனாய்
நல்கட்டியை—அநர்ப்பஹிம்ஸ சரஸகநமான கருப்புக்கட்டி
நல்தேனை — ஸர்வ ரஸ ஸமவாயமான தேன்
நல் அமுதை—நித்யபோக்யமான அம்ருதம்
நல் பாலை — ஸ்வாபாவிகரஸமான நன்மையையுடைய பால்
நல் கனியை — அப்போதே நுகரவேண்டும் பக்வமானகனி
நல்கரும்புதன்னை—கணுத்தோறுமினிதான கரும்பு, (என்னலாம்படி ஸர்வவித போக்யதையை யுடையனாய்
மட்டு — (இந்தபோக்யதாஸூசகமாய்) மதுஸ்யந்தியாய்
அவிழ் — விகஸிதமாய்க்கொண்டு
தண்—குளிர்ந்து
அம்—அழகியதான
துழாய்—திருத்துழாயாலே அலங்க்ருதமான
முடியானை — திருவபிஷேகத்தை யுடையவனை
வணங்கி — (இந்த போக்யத்வ ஶேஷித்வங்களுக்குத் தோற்று) வணங்கி
அவன் திறத்து—அவன் விஷயத்திலே
பட்ட பின்னை—(அநந்யார்ஹமாம்படி) உட்பட்டபின்
யான் — (பரிபூர்ணவிஷயாவகாஹியான) நான்
இறையாகிலும்—ஏகதேஶமாகிலும்
பரிவு — (இதரவிஷயஸம்பாவிதமான அலாப வைகல்ய விச்சேதது:கோத்தரத்வாதிநிபந்தநமான) பரிப்பானது
என் மனத்து—என்மநஸ்ஸில்
இலன்—உடையேனல்லேன்.
பரிவு—பரிப்பாய், மந:பீடையென்கிறபடி
மூவுலகுக்குரிய கட்டியென்று — ஶேஷித்வத்தோபாதிபோக்யதையும் ஸாதாரணமென்றுமாம்.

ஆறு ;—(முட்டில்.) நித்ய ஸித்தாஸங்க்யேயபோகனாய், நிரஸ்த ஸமாப்யதிகனாய், ஸர்வேஶ்வரனா யிருந்துவைத்து, மநுஷ்ய லோகத்திலே மநுஷ்யஸஜாதீயதயா வஸுதேவக்ருஹே அவதீர்ணனாய், ஸர்வலோகத்துக்கும் பொதுவாய்ப் பரமபோக்யபூதனான எம்பெருமானை வணங்கி அவன் திறத்துப்பட்ட பின்னை என் மநஸ்ஸில் து:க்கமெல்லாம் போயிற்றென்கிறார். (௩)

ஈடு ;—அவ ;—மூலாம்பாட்டு. தேவதாந்தரங்களைப் பற்றினார்க்கு அவர்கள் தஞ்சமல்லரென்னுமிடத்தையும், தன்னைப் பற்றி

ஞர்களைத் தான் விட்டுக்கொடா னென்னுமிடத்தையும் காட்டின இவனைப்பற்றின எனக்கு ஒருதுக்கமில்லை யென்கிறார்.

பரிவின்றிவாணனைக்காத்துமென்றன்றுபடையொடும்வந்தெதிர்ந்த *
திரிபுரஞ்செற்றவனும்மகனும்பின்னு மங்கியும்போர்தொலையப் *
பொருசிறைப்புள்ளைக்கடாவியமாயனை ஆயனைப்பொற்சக்கரத்து *
அரியினைஅச்சுதனைப்பற்றி யானிறையேனுமிடரிலனே. (ச)

ப ;—அநந்தரம், போகப்ரதிபந்தக ஸமஸ்தவிரோதி நிவர்த்தகனாய் ஆஶ்ரிதரைக் கைவிடாத அவனைப் பற்றின நான் ஒருமிறக்குடையேனல்லேன் என்கிறார்.

அன்று — (அநிருத்தனுக்காகத்தானே யெழுந்தருளின) அன்று
வாணனை—"வாணனை
பரிவு இன்றி—மிறுக்கு அற
காத்தும்—காக்கக்கடவோம்"
என்று — என்று பஹுமா நோக்தி பண்ணி
படையொடும்—ஆயுதங்களோடே
வந்து எதிர்ந்த—வந்துஎதிரேறின
திரிபுரம்செற்றவனும் — த்ரிபுரதஹந ஶக்த்யபிமாநியான ருத்ரனும்
மகனும் — அவன்மகனாய் தேவஸேநாபதியான ஏற்றத்தை யுடைய ஸுப்ரஹ்மண்யனும்
பின்னும்—அதுக்குமேலே
அங்கியும்—('ருத்ரன்தான்' என்னலாம் படி க்ரௌர்யத்தை யுடைய) அக்நியும்
போர் தொலைய — 'இனி ஒரு யுத்தம் என்று வாரோம்' என்று நிவ்ருத்தராய்ப்போம்படி
பொரு—பொருகிற
சிறை—திருச்சிறகையுடைய
புள்ளை—பெரியதிருவடியை
கடாவிய—நடத்தின
மாயனை—ஆஶ்சர்யபூதனாய்
ஆயனை—அவதாரமுகத்தாலே தன்னைத்தாழவிட்டு நிற்குமவனாய்
பொன்—தர்ஶநீயமான
சக்கரத்து—திருவாழியை யுடையனாய்க்கொண்டு
அரியினை — விரோதிகளை யழியச்செய்து
அச்சுதனை — ஆஶ்ரிதரைக்கைவிடாதவனை
பற்றி—ப்ராபித்து
யான்—(அநுபவிக்கிற) நான்
இறையேனும்—ஏகதேசமும்
இடர் இலன்—மிறுக்கை யுடையேனல்லேன்
இடர்—இடைஞ்சலாய், மிறுக்கு என்றபடி. (ச)

ஆறு;—(பரிவின்றி.) ஓரநிஷ்ட கந்தம் வாராதபடி வாணனை ரக்ஷிக்கவென்று ப்ரதிஜ்ஞை பண்ணிக்கொண்டு ஸைந்யனாய் வந்து ப்ரத்யவஸ்திதனான த்ரிபுரதஹநஜநித நிரவதிக ஸௌர்ய கர்வாதிரூடனான ருத்ரனும், அவனிலும் அதிக்ரூரனாயிருந்த அவன்மகனும், பின்னையும் அதிபல பராக்ரமனான அக்நியும் யுத்தத்திலே நிரஸ்தராம்படி அஸுரரக்ஷா விநாஸகமான திருச்சிறகை யுடையனான பெரிய திருவடியைக் கடாவிய ஆஸ்சர்யபூதனை, வாணனுடைய தோள்களைத் துணித்தருளுகைக்காகத் திருவாழியைச் சுழற்றியருளினபோதைத் திருவாழியும் கையும் இருந்த அழகாலே ஸகலஜந மனோநயநஹாரியாய், ஆஸ்ரிதஜநங்களோடு நித்ய ஸம்ஸ்லேஷஸ்வபாவனாய், நிரதிசய ஸௌஸீல்ய விஸிஷ்டனா யிருந்தவனைப் பற்றி யான் இறையேனும் இடரிலேன் என்கிறார். (௪)

ஈடு;—அவ;—அஞ்சாம்பாட்டு. வைதிகபுத்ரா நயநத்தை அநுஸந்தித்து, இவனைப்பற்றின எனக்கு ஒருதுக்கமுமில்லை யென்கிறார்.

இடரின்றியேஒருநாளொருபோழ்திலெல்லாவுலகுங்கழிய *
படர்புகழ்ப்பார்த்தனும்வைதிகனுமுடனேறத்திண்தேர்கடவி *
சுடரொளியாய்நின்றதன்னுடைச்சோதியில்வைதிகன்பிள்ளைகளை *
உடலொடுங்கொண்டுகொடுத்தவனைப்பற்றியொன்றுந்துயரிலனே. (௫)

ப;—அநந்தரம், அர்த்தியான வைதிகனுடைய அர்த்திதார்த்த காரியானவனைப் பற்றின நான் ஒருக்லேஸமுடையேனல்லேன் என்கிறார்

இடர்இன்றியே—மிறுக்கு இன்றிக்கே
ஒருநாள்—ஒருதிவஸத்திலே
ஒருபோழ்தில்—(ஒருகர்மம் சமைந்து கர்மாந்தராநுஷ்டாநத்துக்கு இடையாயிருப்பது) ஒருகாலத்திலே
எல்லாவுலகும்—ஸர்வலோகத்துக்கும்
கழிய—அவ்வருகே கழிந்து போம்படியாக
படர்புகழ்—(க்ருஷ்ணாஸ்ரயத்வாதியாலே) விஸ்தீர்ணயஸாவான
பார்த்தனும்—அர்ஜுநனும்
வைதிகனும்—ப்ராஹ்மணனும்
உடன்ஏற—கூடஏறிப்போம்படி
திண் தேர்—(காரணதத்த்வாந்வயத்திலும் கார்யரூப ஸைதில்யம் பிறவாதபடி) திண்மையை யுடைத்தான தேரை
கடவி—கடவி
சுடர் ஒளியாய் நின்ற—அத்யுஜ்ஜ்வல தேஜோமயமாய்ப் பரிணாமாதி ரஹிதமாய் நின்ற

தன்னுடைச் சோதியில் — தன்னதான பரஞ்ஜ்யோதிஶ்ஶப்த வாச்யமான தேசத்திலே
வைதிகன்பிள்ளைகளை — அந்தவைதிக புத்ரர்கள் நால்வரையும்
உடலொடும் —(காலக்ருத பரிணாமமில்லாத தேசமாகையா
(அந்தஶரீரத்தாலே) டேயும்
கொண்டு கொடுத்தவனை — கொண்டு வந்து அவனுக்குக் கொடுத்தவனை
பற்றி—கிட்டி யநுபவித்து (அத்தாலே)
ஒன்றும்—ஒரு ப்ரகாரத்தாலும்
துயர் இலன் — ஸம்ஸாரக்லேஶம் இன்றியிலே யொழிந்தேன்

ஆறு ;—(இடரின்றியே.) ஸ்வசரணாரவிந்தஶேஷதைகரதித்வமாகிற ப்ரதிதமான தேஜஸ்ஸையுடையனை பார்த்தனும் வைதிகனும் உடன் ஏற, ஒருநாள் ஒருபோதில், எல்லாவுலகும் கழிய அநாயாஸேந திண்டேர்கடவி, நிரவதிகதேஜோவிஶிஷ்டமான தன்னுடைய ஸ்ரீவைகுண்டத்திலே யிருந்த வைதிகன் பிள்ளைகளை அவ்வுடலோடுங் கொண்டு கொடுத்தவனைப் பற்றி ஒன்றுந் துயரிலேன் என்கிறார். (௫)

ஈடு ;—அவ ;—ஆறாம்பாட்டு. தன்னுடைய அப்ராக்ருத விக்ரஹத்தை இதரஸஜாதீயமாக்கி ஸம்ஸாரிகள் கண்ணுக்கு விஷயமாக்கின க்ருஷ்ணகுணங்களை அநுபவிக்கப் பெற்ற எனக்கு ஒரு து:க்ககந்தமில்லை யென்கிறார்.

துயரில்சுடரொளிதன்னுடைச்சோதிநின்றவண்ணம்நிற்கவே *
துயரின்மலியும்மனிசர்பிறவியில்தோன்றிக்கண்காணவந்து *
துயரங்கள்செய்துதன்தெய்வநிலையுலகில்புகவுய்க்குமம்மான் *
துயரமில்சீர்க்கண்ணன்மாயன்புகழ்துற்றயானோர்துன்பமிலனே. (௬

ப ;—அநந்தரம், இதரஸஜாதீயனாய் அவதரித்து நிற்கிற நிலையிலே அதிமாநுஷவ்யாபாரங்களைப் பண்ணும் க்ருஷ்ணனுடைய குணங்களைப் பூர்ணமாக அநுபவிக்கப் பெற்ற நான் ஒரு அப்ரீதியை யுடையேனல்லேன் என்கிறார்.

துயர் இல் — (அப்ராக்ருதமாகையாலே) து:காதி ப்ரதிபடமாய்
சுடர் ஒளி — (சுத்த ஸத்த்வாத்மகமாகையாலே) அத்யுஜ்ஜ்வல தேஜோரூபமாய்
தன்னுடைச் சோதி — ஸ்வாஸாதாரணமான பரஞ்ஜ்யோதிஶ்ஶப்தவாச்யமான விக்ரஹமானது

நின்றவண்ணமே — யதாபூர்வாவஸ்த்தாயியாயே
நிற்க — நிற்க (தீபாத்தீபப்ர வ்ருத்தி போலே தத்ஸஜாதீயமான அப்ராக்ருதவிக்ரஹத்தையுடையனாய்க்கொண்டு
துயரில் — துக்கத்திலே
மலியும் — வர்த்தித்து வரக்கடவதான
மனிசர் பிறவியில் — மநுஷ்யருடைய ஜந்மத்திலே
தோன்றி — ஆவிர்ப்பவித்து
கண் காணவந்து — (அதீந்த்ரிய விக்ரஹத்தை) மாநுஷ சக்ஷுஸ்ஸுக்கு விஷயமாக்கிக் கொண்டுவந்து ஸந்நிஹிதனாய்
துயரங்கள்செய்து — (ரூபௌதார்ய குணங்களாலும்ஸௌர்யவீர்யாதி குணங்களாலும் ஆஸ்ரிதாநாஸ்ரித விபாகமற) ஈடுபடுத்தி, (தூத்ய ஸாரத்யாதிகளைப் பண்ணித் தாழநிற்கிற நிலையிலே
தன் — தனக்கு அஸாதாரணமாய்
தெய்வம் நிலை — திவ்யமான பரத்வஸ்திதியை, (வைஸ்வரூப்யாத்யாவிஷ்காரத்தாலே)
உலகில் — (தன்வாசியறியாத) லோகத்திலே
புக உய்க்கும் — நிலைநிறுத்தக்கடவனான
அம்மான் — ஸர்வாதிகனாய்
துயரமில் சீர் — ஹேய ப்ரத்யநீகனாய் கல்யாண குணாத்மகனான
கண்ணன் — க்ருஷ்ணனாகிற
மாயன் — ஆஸ்சர்யவானுடைய
புகழ் — குணசேஷ்டிதாதி ப்ரதையை
துற்ற — நெருங்க அநுபவிக்கப்பெற்ற
யான் — நான்
ஓர் துன்பம் — ஒரு அப்ரீதியை
இலன் — உடையேனல்லேன்.
துன்பம் — இன்பத்துக்கு எதிர்த்தட்டான அப்ரீதி. (௬)

ஆறு ;—(துயரில்.) ஸமஸ்தஹேயப்ரத்யநீக நிரதிஸய தேஜோவிஸிஷ்ட ஸ்வாஸாதாரண திவ்ய ரூபத்தோடே கூட, ஸமஸ்தஹேயாஸ்பத மநுஷ்ய ஸஜாதீயதயா அவதீர்ணனாய், ஸகல மநுஜநயந விஷயதாங்கதனாய், அஸேஷஜநமநோநயநஹாரி திவ்யசேஷ்டிதாதி குர்வாணனாய்க்கொண்டு தன்னுடைய ஐஸ்வரமான ஸ்வபாவத்தை இந்த லோகத்திலே ஆவிஷ்கரித்தருளும் ஸ்வபாவனாய், ஆஸ்சர்ய பூதனாய், ஹேயப்ரத்யநீக கல்யாணகுண விஸிஷ்டனான கண்ணன் புகழ்துற்ற யான் ஓர் துன்பமிலேன் என்கிறார். (௬)

ஈடு ;—அவ ;—ஏழாம்பாட்டு. அகர்மவஸ்யனாகையாலே ஈஸ்வரனுக்கு இவ்விபூதியிலுள்ளது லீலாரஸமாத்ரமாகையாலே, அத்

தை யநுஸந்தித்த எனக்குக் கர்மவஶ்யதையுமில்லை; இந்த லீலா விபூதியில் அந்தர்ப்பவிக்கவும் வேண்டாமென்கிறார்.

துன்பமுமின்பமுமாகிய செய்வினையாயுலகங்களுமாய் *
இன்பமில்வெந்நரகாகி இனியநல்வான்சுவர்க்கங்களுமாய் *
மன்பல்லுயிர்களுமாகிப் பலபலமாயமயக்குக்களால் *
இன்புறுமிவ்விளையாட்டுடையானைப்பெற்றேதுமல்லலிலனே. (௭)

ப; — அநந்தரம், கர்மாநுரூபமாக லீலாவிபூதியை நிர்வஹிக்கிறவனைப் பெற்று ஏகதேஶமும் அல்லலிலேன் என்கிறார்.

துன்பமும்—(அப்ரீதிரூபமான) து:க்கமும்
இன்பமும் — (ப்ரீதிரூபமான) ஸுகமும்
ஆகிய—உண்டாம்படி
செய்—(சேதநனால்) செய்யப்பட்ட
வினை—(பாபரூபமாயும் புண்யரூபமாயுமுள்ள) கர்மங்களுக்கு
ஆய்—நிர்வாஹகனாய்
உலகங்களும்—(இவற்றை யநுஷ்டிக்கைக்கிடான) பூலோகப்ரதேஶங்களுக்கு
ஆய்—நிர்வாஹகனாய், (இக்கர்மபலங்களாய்)
இன்பம் இல் வெம் நரகு — ஸுககந்தரஹிதமான நரகத்துக்கும்
ஆகி—நிர்வாஹகனாய்
இனிய—ப்ரீதிகரமான போக்ய வஸ்துக்களாலே
நல்—நன்றாய்
வான்—சீரியதான
சுவர்க்கங்களும் — ஸ்வர்க்கப்ரதேசங்களுக்கும்
ஆய்—நிர்வாஹகனாய்
மன்—(கர்மாநுஷ்டாநதஶையோடு பலபோகதஶையோடு வாசியற அநுவர்த்த நாசையாலே) ஸ்திரராய்
பல் உயிர்களும் — அஸங்க்யாதரான ப்ராணிகளுக்கும்
ஆகி—நிர்வாஹகனாய்
பலபல—(குணபேதத்தாலும் மதிபேதத்தாலும் ருசிபேதத்தாலும்) அஸங்க்யேயமாய்
மாயம் மயக்குக்களால்—ப்ரக்ருதி கார்யமான சேதநனுடைய மோஹ விகாரங்களாலே
இன்புறும்—ரஸாவஹமான
இவ்விளையாட்டுடையானை—இவ் விபூதியில் லீலையையுடையவனை
பெற்று—உள்ளபடி அறிந்து கிட்டப்பெற்று
ஏதும்—ஏகதேசமும்
அல்லல்—(இக்கர்மவஶ்யமான ஸம்ஸாரத்தில்) அலமாப்பு
இலன்—உடையேனல்லேன்.
அல்லல்—அலமாப்பு. (௭)

ஆறு ;—(துன்பமும்.) புண்யபாபரூப கர்மங்களுக்கும் பலபோக பூமியான லோகங்களுக்கும் கர்ம பலபூதமான ஸ்வர்க்க நரகங்களுக்கும் ஸ்வர்க்கநரகாதி பலபோக்தாக்களான ஆத்மாக்களுக்கும் அந்தராத்மபூதனாய், நிகிலஜகதுதய விபவலயாதிலீலனாயிருந்தவனைப் பெற்று ஏதும் அல்லலிலேன் என்கிறார். (எ)

ஈடு ;—அவ ;—எட்டாம்பாட்டு. நித்யவிபூதியை அநுபவித்துக்கொண்டிருக்கிற மேன்மையை யுடையவன் ஜகத்ரக்ஷணம் பண்ணும் நீர்மையை அநுஸந்திக்கப்பெற்ற எனக்கு ஒரு து:க்கமில்லையென்கிறார்.

அல்லலின்பமளவிறந்தெங்கு மழகமர்சூழொளியன் *
அல்லிமலர்மகள்போகமயக்குக்களாகியும்நிற்குமம்மான் * [செய்
எல்லையில்ஞானத்தன் ஞானமஃதேகொண்டுஎல்லாக்கருமங்களுஞ்
எல்லையில்மாயனைக்கண்ணனைத்தாள்பற்றி யானோர்துக்கமிலனே. ()

ப;—அநந்தரம், ஸர்வஸ்மாத்பரனாய் ஶ்ரிய:பதியாய்க்கொண்டு ஸங்கல்பமாத்ரத்தாலே ஸகல நிர்வாஹகனானவன் திருவடிகளை ஆஶ்ரயித்த நான் ஒரு து:க்கத்தை யுடையேனல்லேன் என்கிறார்.

அல்லல் இல்—க்லேஶப்ரஸங்க ரஹிதமான
இன்பம்—ஆநந்தகுணத்துக்கு
அளவு இறந்து—அவதியின்றியே
எங்கும் அமர்—ஸர்வப்ரதேசங்களிலும் பரம்பின
அழகு — அவயவ ஸௌந்தர்யத்தோடு
சூழ்—சேர்ந்த
ஒளியன்—ஸமுதாய ரூபலாவண்ய ப்ரபையை யுடையனாய் (இவ்வாநந்தத்தோடும் வடிவழகோடும்)
அல்லிமலர் மகள்—தாமரைப்பூவை வாஸஸ்தாநமாகவுடையளாகையாலே நிரதிஶயபோக்யபூதையாய் நாரீணாமுத்தமையான பிராட்டியோட்டை
போகம்—கலவியாலே
மயக்குக்களாகியும் — (க) "அந்யோந்யாத்வைத நிஷ்டாவ நாஸஹ மஹ நாநந் - அந்யோந்யாத்வைத நிஷ்டாக நரஸகஹநாந்" என்ற ஸ்வபரவிபாகப்ரதிபத்தி மயங்கும்படியான) போகாநந்த ரூபனாய்க்கொண்டும்
நிற்கும்—நிற்கிற
அம்மான்—ஸர்வாதிகனாய்
எல்லை இல்—(கீழுக்தமான ஆநந்தமும் அழகும் போகமும் போலே) எல்லையிறந்திருக்கக்கடவதான

(க) ஶ்ரீகுணரத்ந - ௨௫.

அஃது—நிரபேக்ஷமான அந்த
ஞானமே—ஜ்ஞாநத்தையே
கொண்டு—கொண்டு
எல்லாக்கருமங்களும்—கார்யபூத ஸமஸ்தஜகத்தையும்
செய்—(ஸங்கல்பமாத்ரத்தாலே) நிர்வஹிக்குமவனாய்
எல்லை இல்—அபர்யந்தமான
ஞானத்தன் — ஜ்ஞாநவைபவத்தை யுடையனாய்
மாயனை—ஆஶ்சர்ய சேஷ்டிதங்களை யுடையனான
கண்ணனை—க்ருஷ்ணனை
தாள்பற்றி—திருவடிகளைச் சிக்கெனப் பிடித்து
யான்—நான்
ஓர் துக்கம்—ஒரு து:கத்தை
இலன்—உடையேனல்லேன்
து:க்கமாவது—அநிஷ்டாநுபவம்.

ஆறு;—(அல்லலில்.) து:க்காஸம்பிந்ந நிரவதிகாநந்த விஶிஷ்டனாய், கல்யாணதம நிரதிஶயௌஜ்ஜ்வல்ய விஶிஷ்டனாய், நிரதிஶய ஸௌகுமார்ய ஸௌந்தர்யாதி கல்யாணகுண பரிபூர்ணையாயிருக்கிற பெரியபிராட்டியாரோடு உள்ள அநவரதஸம்ஶ்லேஷ ஜநித ப்ரீதியாலே அப்ராக்ருதிகதனாய் தத்ஸம்ஶ்லேஷாநுகுண நிரதிஶய திவ்யஜ்ஞாநனாய் அந்த ஜ்ஞாநத்தையேகொண்டு பிராட்டியுடைய ப்ரீத்யர்த்தமாக ஜகத்ஸ்ருஷ்ட்யாதி லீலைகளைப் பண்ணியருளுகிற ஆஶ்சர்யபூதனான வண்துவரைப்பெருமானுடைய திருவடிகளைப் பற்றி நான் நிரஸ்தஸமஸ்த து:க்கனானேன் என்கிறார். (அ)

ஈடு ; — அவ ; — ஒன்பதாம்பாட்டு. அகடிதகடநா ஸமர்த்தனான வடதளஶாயியை அநுபவிக்கப்பெற்ற எனக்கு ஒரு தளர்வுமில்லை யென்கிறார். மஹாப்ரளய வ்ருத்தாந்தத்தை அநுஸந்திக்கிறாரென்னவுமாம்.

துக்கமில்ஞானச்சுடரொளிமூர்த்தி துழாயலங்கல்பெருமான் *
மிக்கபன்மாயங்களால்விகிருதஞ்செய்து வேண்டுமுருவுகொண்டு *
நக்கபிரானோடயன்முதலாக எல்லாருமெவையும் * தன்னுள்
ஒக்கவொடுங்கவிழுங்கவல்லானைப்பெற்று ஒன்றுந்தளர்விலனே. (௯)

ப ;—அநந்தரம், ஸர்வப்ரகார ரக்ஷகனான ஆபத்ஸகனைப்பற்றி நான்ஒரு தளர்த்தியை யுடையேனல்லேன் என்கிறார்.

துக்கம் இல்—து:கஸ்பர்ஶம்இல்லாத
ஞானம்—ஜ்ஞாநத்தையுடையனாய்
சுடரொளி—அத்யுஜ்ஜ்வல தேஜோமய ரூபமான
மூர்த்தி—விக்ரஹத்தையுடையனாய்
துழாய் அலங்கல்—திருத்துழாய் மாலையாலே அலங்க்ருதனான
பெருமான்—ஸர்வாதிகனாய்வைத்து

மிக்க—(௧) "பராஸ்ய ஶக்திர்விவிதைவ" என்கிறபடியே) அநவதிகாதிஶயையாய்

பல் மாயங்களால்—பஹுவிதைகளான ஆஶ்சர்யஶக்திகளாலே

வேண்டும் உருவு — (இச்சாக்ருஹீதமான) அபிமத விக்ரஹங்களை

கொண்டு—பரிக்ரஹித்து

விகிருதம் செய்து—இதரஸஜாதீய ப்ரதிபத்தி பண்ணலாம்படியான சேஷ்டா விகாரங்களைப் பண்ணுமவனாய் (அவ்வளவன்றியே)

நக்கபிரானோடு—திகம்பரனாய் ஈஶ்வராபிமாநியான ருத்ரனும்

அயன்—(அவனுக்கு உத்பாதகனாய்) அஜனென்று ப்ரஸித்தனான ப்ரஹ்மாவும்

முதலாக—முதலாக

எல்லாரும்—எல்லாச்சேதநரையும்

எவையும்—அசேதநங்களையும்

ஒக்க—தாரதம்யமில்லாதபடி

தன்னுள் ஒடுங்க—அகவாயில் ஏகதேசத்திலே யொதுங்கும்படியாக

விழுங்கவல்லானை—விழுங்கவல்லரக்ஷணஶக்தியுக்தனை

பெற்று—லபித்து

ஒன்றும் தளர்வு—ஒரு தளர்த்தியை

இலன்—உடையேனல்லேன்.

தளர்வு—பலஹாநி. (௯)

ஆறு ;—(துக்கமில்.) ஸமஸ்தஹேயரஹிதனாய், ஸர்வஜ்ஞனாய், நிரதிஶய தேஜோமய திவ்யரூபனாய், திருத்துழாயாலே அலங்க்ருதனாய், தன்னுடைய விசித்ர ஶக்திகளாலே ஸ்வாபிமத திவ்ய ரூபங்களைக்கொண்டு ஆஶ்சர்ய திவ்யசேஷ்டிதங்களைச் செய்து, ப்ரஹ்மாதி ஸர்வாத்மாக்களையும் ஒருகாலே திருவயிற்றிலே ஒடுங்க விழுங்கவல்லானைப்பெற்று ஒன்றுந் தளர்விலேன் என்கிறார். (௯)

ஈடு ;—அவ ;—பத்தாம்பாட்டு. ஜகச்சரீரியாய் ஸத்தையையும் நோக்குமவனாய், ஆபிமுக்யம் பண்ணினாரை அஸாதாரண விக்ரஹத்தோடே வந்து அவதரித்து ரக்ஷிக்குமவனைப் பற்றின எனக்கு ஒரு கேடில்லை என்கிறார்.

தளர்வின்றியேயென்றுமெங்கும்பரந்த தனிமுதல்ஞானமொன்றாய்*
அளவுடையைம்புலன்களறியாவகையாலருவாகிநிற்கும் *
வளரொளியீசனைமூர்த்தியைப் பூதங்களைந்தையிருசுடரை *
கிளரொளிமாயனைக்கண்ணனைத்தாள்பற்றி யானென்றுங்கேடிலனே.

---

(௧) ஶ்வேதா - ௬.

ப ;— அநந்தரம், ஸர்வாந்த ராத்மபூதனை க்ருஷ்ணனைப்பற்றி நான் ஒரு அழிவை யுடையேனல்லேன் என்கிறார்.

என்றும் — ஸர்வ காலத்திலும்
எங்கும்— ஸர்வ தேஸத்திலும்
தளர்வு இன்றியே — (தன்னுடைய நியந்த்ருத்வ ஸக்திக்குத்) தளர்த்தியில்லாத பூர்த்தியோடே
பரந்த— வ்யாபித்திருக்குமவனாய்
தனி— அத்விதீயமாய்
முதல்— ஸமஸ்தகாரணமான
ஞானம் ஒன்றாய்— ஜ்ஞானைக நிரூபணீயனாய்
அளவுடை— விஷய பரிச்சேதகங்களான
ஐம்புலன்கள் — இந்த்ரியங்களாலுக்கும்
அறியாவகை— அறியவொண்ணாதபடி
அருவாகி— நிரவயவஸ்வரூபனாய்
நிற்கும்— வர்த்திக்குமவனாய்
வளர்— (இப்படி வ்யாப்தியால்வந்த நியந்த்ருத்வத்தாலே) அபிவ்ருத்தமான
ஒளி— ஔஜ்ஜ்வல்யத்தையுடைய
ஈசனை— ஸ்வாமியாய்
மூர்த்தியை— அஸாதாரண திவ்ய விக்ரஹ யுக்தனாய்
பூதங்களைந்தை — ஸமஷ்டிரூப பூதங்களையும்
இருசுடரை— வ்யஷ்டிரூப சந்த்ராதித்யர்களையும் (ஸரீரமாகவுடைய னாகையாலே அவை தானென்று சொல்லலாம்படியாய்)
கிளர்— அவதாரப்ரயுக்தமான அபிவ்ருத்தியை யுடையவாய்
ஒளி— அத்யுஜ்ஜ்வலமான
மாயனை— ஆஸ்சர்ய குணங்களையுடைய
கண்ணனை — க்ருஷ்ணனை
தாள்பற்றி — திருவடிகளை ஆஸ்ரயித்திருக்கிற
யான்— நான்
என்றும்— ஸர்வகாலத்திலும்
கேடு இலன்— ஒரு அழிவை உடையேனல்லேன். (௧0)

ஆறு ;— (தளர்வின்றியே.) அநாயாஸேந ஸர்வதா ஸர்வத்ர நியந்த்ருதயா வ்யாப்தனாய், ஜகத்காரணபூதனாய், ஜ்ஞாநரூபனாய், ஸ்வேதர ஸமஸ்த விஸஜாதீயனாய், வ்யாப்யபூதரான ஆத்மாக்களுடைய பரிச்சிந்நவஸ்து க்ராஹகமான இந்த்ரியங்களுக்கு அபூமியாய், வ்யாப்யவஸ்துகத தோஷைர ஸம்ஸ்ப்ருஷ்டனாய், ஸ்வாஸாதாரண திவ்ய ரூபவிஸிஷ்டனாய், ப்ருதிவ்யாதி பூத சந்த்ரஸூர்யாதிகச்சரீரனாய், தன்னுடைய நிரவதிக தேஜோ விஸிஷ்ட ரூபத்தோடே கூடவந்து வஸுதேவ க்ருஹே அவதீர்ணனான எம்பெருமானுடைய திருவடிகளைப் பற்றி இனி யொருநாளும் கேடிலேன் என்கிறார். (௧0)

ஈடு ; அவ ;—நிகமத்தில், இத்திருவாய்மொழியை அப்யஸித்தாரை ஸர்வலோக ப்ரஸித்தமாம்படி ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயிலே நடத்தி, மேலே பரமபதத்திலே சென்றால் தன் ஐஸ்வர்யம் இவர்களிட்ட வழக்காக்குமென்கிறார்.

கேடில்விழுப்புகழ்க்கேசவனைக் குருகூர்ச்சடகோபன்சொன்ன *
பாடலோராயிரத்துளிவையுமொருபத்தும் பயிற்றவல்லார்கட்கு *
நாடும்நகரமும்நன்குடன்காண நலனிடையூர்திபண்ணி * [அவன்
வீடும்பெறுத்தித்தன்மூவுலகுக்குந்தருமொரு நாயகமே. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ப ;—அநந்தரம், இத்திருவாய்மொழிக்குப் பலமாக ஸ்வாராஜ்ய ப்ராப்தியை அருளிச்செய்கிறார்.

கேடில்—ஹேயப்ரத்ய நீகமாகையாலே அழிவற்ற
விழு—(கல்யாணமாகையாலே) விழுப்பத்தையுடைத்தான
புகழ்—குணப்ரதையையுடைய
கேசவனை — கேசிஹந்தாவான க்ருஷ்ணனை
குருகூர்—திருநகரிக்கு நிர்வாஹகரான
சடகோபன்—ஆழ்வார்
சொன்ன—அருளிச்செய்த
பாடல்—கீதரூபமாய்
ஓர்—அத்விதீயமான
ஆயிரத்துள்—ஆயிரத்துள்
ஒரு—பகவதநுபவப்ரதிபாதகமான
இவை பத்தும்—இவைபத்தையும்
பயிற்ற வல்லார்கட்கு—சப்தார்த்தங்களித் தெறிவுதோன்றும்படி சொல்லவல்லார்களுக்கு
அவன்—அந்தக்ருஷ்ணன்
நாடும்—(அவிசேஷஜ்ஞப்ராசுரமான) நாடும்
நகரமும் — (விசேஷஜ்ஞ ப்ராசுரமான) நகரமும்
நன்குடன்—ஶ்லாகா ரூபமான நன்மையோடே கூட
காண—காணும்படியாக
நலனிடை — பகவத் பாகவத விஷயத்திலே ஸௌஹார்த்த ஸம்பத்தோடே
ஊர்திபண்ணி—நடக்கும்படி பண்ணி
வீடு—மோக்ஷாநந்தத்தையும்
பெறுத்தி—கொடுத்து
தன் மூவுலகுக்கும்—தன்னுடைய திசேதநாசேதநங்களையும் தத்ஸம்பந்தா நு ஸந்தாநத்தாலே ஸ்வபோக்யத்வேந அபிமாநிக்கும்படி, (அவற்றுக்கு)
ஒருநாயகம்—அத்விதீய நாயகத்வத்தை
தரும்—தரும்.
இவனுக்கு அத்விதீய நாயகத்வம்—பகவத்ஸ்வரூபாந்தர்ப் பாவத்தால்வந்த ததாத்மகத்வத்தாலென்று கருத்து.
பயிற்றவல்லாரென்று — பயிலுவிக்க வல்லாரென்றுமாம்
இது—அறுசீராசிரியவிருத்தம். (கக)

ஆறு ;—(கேடில்.) நித்யஸித்த கல்யாண குணவிஶிஷ்டனான கேசவனைக் குருகூர்ச் சடகோபன்சொன்ன பாடல் ஓராயிரத்துள் இவையும் ஓர்பத்தும் பயிற்ற வல்லார்கட்கு அவன் நாடும் நகரமும் நன்கு உடன்காண நல்ல ஸம்பத்துக்களை இந்த லோகத்திலே அநுபவிப்பித்து, அவர்களை நிரஸ்த ஸமஸ்த ஸாம்ஸாரிக து:க்கராக்கி அவர்களுக்குத் தன்னுடைய ஸர்வேஶ்வரத்வத்தையும் தருமென்கிறார்.

மூன்றாம் பத்து

பத்தாம் திருவாய்மொழி வ்யாக்யாநங்கள்

முற்றுபெற்றன.

மூன்றாம்பத்து ஸம்பூர்ணம்.